ராகினி ராஜகோபாலின்

# சதங்கை நாதம்

நாட்டியாலயா 30 வது ஆண்டு



Member of
The National Association
of Goldsmiths

# PRAVIN A. PATTNI JEWELLERS

*Specialists in 22ct Gold Designer Jewellery & 18ct Gold & Platinum Diamond Jewellery*

Member of
Gemmological Association
& Gem Testing Laboratory
of Great Britain











207 Upper Tooting Road, London SW17 7TG
Tel: 020 8672 1415 · Fax: 020 8682 0053 · E-mail: mukesh@pap.gb.com

ராகினி ராஜகோபாலின்

# சதங்கை நாதம்




## புதினம் பப்ளிஷர்ஸ்

38, Moffat Road
London SW17 7EZ
United Kindom
Tel: 020 8767 8004
editor@londonputhinam.co.uk

ராகினி ராஜகோபாலின்

# சதங்கை நாதம்

## ‘புதினம்’ தொகுப்பு நூல்


| | | |
|---|---|---|
| First Edition | : | July 2008 |
| Publication Editor | : | E.K.Rajagopal |
| Published by | : | PUTHINAM PUBLISHERS<br>38, Moffat Road,<br>London SW17 7EZ<br>United Kingdom<br>Tel : 020 8767 8004<br>e-mail : editor@londonputhinam.co.uk |
| Cover Design | : | K.Krishnaraja (Artist) |
| Cover Photo | : | Santhan |
| Type Setting & Layout | : | saTyan laYout<br>39/18, Ist Floor,<br>Venkatachal Naicken Street,<br>(Near Yadhava Sattiram Kalyana Mandapam)<br>Triplicane, Chennai- 600 005.<br>Tamilnadu, India.<br>Mobile : 09444565018<br>e-mail: sathyanlayout@gmail.com<br>website : www.satyanlayout.com |

Printed by :
Sri Raghavendra Laser Printers
15, Thanappan Street, Triplicane,
Chennai -5. Tamilnadu, India.
Cell: 9884197789, 9444170450
U.K.: 07957279414
e-mail: ramesh1480@hotmail.com


தாயகத்தில் பத்து ஆண்டுகளும், புலம் பெயர்ந்த லண்டனில் இருபது ஆண்டுகளும் ராகினி ராஜகோபாலின் ‘நாட்டியாலயா’ நடனப்பள்ளி ஆற்றிய கலைப்பணியை கௌரவிக்கும் முகமாக 19.07.2008 அன்று லண்டன், குறொய்டனில் அமைந்த Fairfield Hallஇல் நடந்த ‘நாட்டியாலயா’ மாணவிகளின் நடனத் திருவிழாவில் இந்நூல் வெளியிடப்பட்டது.



# உள்ளே...


பரதநாட்டியத்தில் முப்பது ஆண்டுகள் - 4
- இளவாலை அமுது

Ragini - The Guru - 5
- S.Sivanayagam

நினைவுகளின் பாதையில் - 6
- ராகினி ராஜகோபால்

நாட்டியப் பணிக்கு கௌரவம் - 15
- ரஞ்சி திருச்செல்வம்

பெற்றோரின் பார்வையில் நாட்டியாலயா - 17
- கலா செல்வராஜா

மனம் திறந்து ராகினி பேசுகிறார் - 18
- 'ஒரு பேப்பர்' நேர்காணல்

வள்ளுவன் பள்ளியில் ராகினி - 21
- வ.யோகராஜா

Praise for Ragini Rajagopal - 22
- clare Mcdonnel

போற்றுதலுக்குரிய நடனக்கலைஞர் - 23
- கயிலை ஆர்.நாகநாதசிவம் குருக்கள்

கலையரசன் வாழ்த்துரை - 24

நாட்டியாலயா மாணவ மணிகள் - 25

அரங்கேறிய சில மாணவிகள் - 30

முப்பது அகவைகள் மேடைகளை
ஆளும் முன்னணி நாட்டிய நட்சத்திரம் - 31
- விமல் சொக்கநாதன்

தமிழ் கலைகளை வளர்ப்பவர்கள்
புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களே! - 35
- ஏ.எஸ்.கணேசன்

சதங்கையும், பேனாவும் - 37
-சரிபாரதி க.சபாரத்தினம்

கலைகளில் சிறந்தது நாட்டியக் கலையே - 39
- மாத்தளை சோமு

ஒரு நீண்ட கலைப்பயணம் - 43
- 'ஈழநாடு' கே.வி.மகாதேவா

அயராமல் இயங்கும் அபிநயக் கரங்கள் - 45

- கை.முருகபூபதி

அள்ளிச் சொரிய அழகு தமிழ் போதாது - 48
- கோவிலூர் செல்வராசன்

ராகினி மாறவில்லை - 49
- ஸ்ரீமதி குமாரசாமி

பயணங்கள் முடிவதில்லை - 52
- சரோஜினி சந்திரகோபால்

பரதமும், நவீன தொழில்நுட்பமும் - 55
- க.பாலேந்திரா

வீரமணி ஐயர் பாராட்டிய ராகினி - 57
- ஆறு திருமுருகன்

தாகமும் மோகமும் - 59
- ஸ்ரீ. ரங்கன்

பக்குவ பண்புகள் தரும் பரதநாட்டியம் - 62
- ராம் தேவலோகேஸ்வரக் குருக்கள்

நாட்டியாலயாவும் பூபாள ராகங்களும் - 64
- ம. சுதாகரன்

பரதமும் மருத்துவமும் - 66
- டாக்டர். ஞானச்செல்வன்

தனித்துவமான நடனக் கலைஞர் - 68
- பொன்.பாலசுந்தரம்

ராகினி எனக்கு அன்னை - 71
- பவானி ரவீந்திரன்

'நாட்டியக் கலையரசி' ராகினி - 73
- டாக்டர் சரசுவதி இராமநாதன்

நெஞ்சம் மறப்பதில்லை - 74
- ஏ.ரகுநாதன்

சவாலாக ஏற்ற சமுதாயப்பணி! - 75
- வ.மா.குலேந்திரன்

மனைவி அமைவதெல்லாம் - 77
- டாக்டர் ஆர். தியாகராஜன்

எனது ரசனையை மெருகூட்டியவர் - 78
- வைத்திலிங்கம் விஜயராசன்

ராகினியின் ஆளுமை - 79
- வைத்தியக் கலாநிதி எஸ்.நவரத்தினம்

பரதக்கலை வித்தகர் - 80
- எஸ்.கே. ராஜென்

அந்த நாள் ஞாபகம் - 82
- ரோகினி சிவபாலன்

நடனக் கலையில் மறுமலர்ச்சி - 85
- விஜயலட்சுமி ஆறுமுகசாமி

அற்புதமான நடன விருந்து - 86
- சி.செல்வராஜா

புனிதமான நட்பின் நாயகி - 87
- என்.சூரியகுமாரன்

பெருமைக்குரிய நடன ஆசிரியை - 89
- எஸ்.யோகநாதன்

ராகினி என்றால் அர்ப்பணிப்பு - 90
- வைத்திய கலாநிதி பி.ஆறுமுகராசா

பரதக் கலையில் ஒளிரும் ஓர் வைரக்கல் - 91
- க.செல்வநாயகம்

ராகினியின் சாதனை - 92
- இரத்தினம் சந்தசாமி

வவுனியாவும், ராகினியும் - 93
- வவுனியூர் இரா.உதயணன்

கடின உழைப்பின் அறுவடை - 95
- மாத்தளை ராஜலிங்கம்

இணைந்த கலையும் ஊடகமும் - 97
- சிவனடியான் ஸ்ரீபதி

பரதராகினி - 99
- வைத்திய கலாநிதி எஸ்.தியாகராஜா

சிறந்த குருவைப் பெற்ற ராகினி - 109
- வாசுகி தேசிங்குராஜா

ராகினியின் ரசிகை - 111
- சசிகலா சுரேஷ் கிருஷ்ணா

வர்த்தக மலர் - 113

# பரதநாட்டியத்தில் முப்பது ஆண்டுகள்

-தமிழ் கங்கை, இளவாலை அமுது.

பாட்டோடு நடனம் ஆடும்
பரதமோ கலையின் தெய்வம்
நாட்டிய நடனம் இந்த
நாட்டினில் முப்பது ஆண்டாய்
ஊட்டிய அன்னாய்! உன் பேர்
உள்ளத்தில் மறையாத் தீபம்
ஏட்டிலே வரைவார் பொன்னால்
"இராகினி இராஜகோபால்!"

ஈழமே நின்பேர் சொல்லும்
இந்நிலம் நின்பேர் சொல்லும்
வாழ்விலே நடனம் கற்ற
மங்கையர் மணிகள் சொல்லும்
நாளெல்லாம் நடனம் ஆடும்
நதியெனும் தேமிஸ் சொல்லும்
ஏழிசை நின்பேர் சொல்லும்
இணையிலாப் பரதம் சொல்லும்

கையினில் தாளம்; உந்தன்
கரங்களில் அரங்கின் பிம்பம்:
மெய்யில் பெண் மான்கள் ஆட்டம்;
வீணையின் பாடல் வாயில்!
மையிடும் கண்ணில் இந்த
வானமும் பூமி முற்றும்
தையலே அரங்கு ஏற்றம்
தமிழர்கள் தவத்தின் தோற்றம்.

புத்தகப் படிப்பில் காணோம்
பொன்மொழி எழுத்தில் காணோம்
சித்திரச் சிலையில் காணும்
சிற்பத்தின் சிறப்புப் போல
அத்தனை ஆற்றல் கூட்டி
அரங்கிலே பரத நாட்டிய
முத்திரை பதித்து வந்த
முத்தமிழ் மகளே! வாழ்க!

வள்ளுவன் குறளைப் பார்த்தால்
வடித்திடும் அடிகள் இரண்டில்
உள்ளத்தில் அறிவை யூட்டா
உவக்கமுப் பாலைச் சொன்னார்



அள்ளிடும் சுவைகள் தோயும்
ஆட்டத்தின் அடிகள் இரண்டில்
சொல்லிடும் பரத நாட்டியச்
சோலையில் மயில்கள் தோன்றும்.

மூப்பிலாத் தமிழே! கேளாய்
முப்பது ஆண்டு காலம்
காப்பியம் ஐந்து போல
கைவழி நயனம் செல்லும்
கூப்பிய கரங்க ளோடு
குளிர்மதி முகத்தைக் காட்டித்
தோப்பிலே பரத நாட்டியத்
தோப்பிலே பரத நாட்டியத்
துறையெலாம் சொன்னீர் அம்மா!

விண்ணிலே வெள்ளி பார்க்கும்
விரிகின்ற மேகம் பார்க்கும்
கண்ணெலாம் இமைகள் மூடாக்
கருத்தொடு அரங்கைப் பார்க்கும்
பண்ணொலி ஆடல் பாடல்
பாவையர் நடனம் காணீரோ
எண்ணிடும் கலையின் இராணி
இராகினி வாழ்க என்பார்.

ஆயிரம் காலம் வாழும்
அருந்தமிழ்ப் பணிகள் செய்வோன்
தாயினும் சிறந்த அன்பன்
சத்தியம் போற்றும் பேனை
ஆயநற் பரதம் வாழ
அரியதன் துணைவி யாரை
தூயநற் பணிக்கே தந்தான்
தொல் புகழ் உலகம் வாழி!

# Ragini-The Guru

-S.Sivanayagam (Journalist)





" The dancing foot, the sound of the tinkling bells,

The songs that are sung, and the varying steps...."

There is no Indian song without Raga, and there is no Indian Dance without Song. Every Indian Song is said to be in a particular Raga or Ragini, Ragini being the feminine of Raga. How wise were the parents of Ragini Rajagopal that they gave her that name at birth! Ever since, her world has been one of Song and dance, from the world of peninsula jaffna in the north of Sri Lanka, to the world of cosmopolitan londan, five thousand miles away.

Ragini was among the thousands of Tamils who fled their homeland in the wake of the anti-Tamil of 1983. She arrived as a refugee in london with hardly any material possessions, but she brought with her something more valuable -her own accomplisment as both a dancer and teacher in the classical art of Bharatha Natyam. In jaffna, she was nurtured in the art by her own Guru, Shanta Ponnuthurai. shanta, a dedicated teacher, was one who passed with first class honours in the famed dance academy of kalakshetra in Chennai, India. Ragini had the distinction of being the first student of shanta to have her Arangetram. That was at the veerasingham hall in Jaffna when she was Fifteen. She followed it up with a 2-year advanced study under the veteran Indian Guru Adyar lakshmanan in Chennai. it was on the occasion of that great national event in Eelam history- the Fourth Inter national conference of Tamil Reserch studies in 1974, when for a brief one week, jaffna became the Inter national capital of Tamil culture, that Ragini earned her plaudits as an of merit among a gathering of world scholars.

Her ten years of dancing career in homeland, both as a dancer and as a teacher in her own institution, the 'Natyalaya', was cut short not only by the fate that befell all Tamils, but also by pressures to which her journalist husband was subject to by pro-goverment lackeys. Today, in londan, Ragini is not only a dance teacher but a fulltime staff at tooting Fraciscan primary school. as dance teacher with 30 years of experience, she has nurtured a hundred students under her care. Twenty years of promoting the art of Bharatha Natyam in a western environment have howover not made her forget her emotional bond with her own native soil. She has presented her students in various cultural functions associatied with National Heros' day, the Tamil Rehabilitation organistation (Tro) and Chencholai, the home for war - affected children.

Ragini's husband Mr.E.K Rakagopal is a journalist well -known to the Tamil world both in sri lanka and in the Tamil diaspora in the west. Adding to the diverse talents in the family is their daughter Sharmini kannan, a pretty, accompolished dancer and veena artiste in her own right. ●



# நினைவுகளின் பாதையில்...

- ராகினி ராஜகோபால் (அதிபர், நாட்டியாலயா)



**வே**று வழி எங்களுக்குத் தெரியவில்லை.

1985ஆம் ஆண்டு மே முதல் வாரம் என்று நினைக்கிறேன்.

தாயையும், தாய் மண்ணையும் பிரிகின்ற வேதனையை அப்பொழுது நான் முழுமையாக அனுபவித்தேன்.

என்னைப் பெற்ற மானிப்பாயில், உயிருக்குயிரான என் அன்னையிடமும், சகோதரர்களிடமிருந்தும் விடை பெற்றேன்.

பிறந்து, தவழ்ந்து, விழுந்து, அளைந்து, விளையாடி, மகிழ்ந்த சொந்த மண்ணில் உறவுகள், உற்றவர்களுடன் உருத்தோடு பழகிய அந்தச் சுகங்களையெல்லாம் நினைத்துப் பார்த்தபோது அழுகைதான் வந்தது!

நான்கு வயது ஷர்மினியையும், ஒரு வயது ஷியாமையும் தூக்கிக் கொண்டு, எனது கணவரோடு அவரது அம்மாவைப் பார்க்க, புகுந்த இடமான வல்வெட்டிக்கு பஸ்ஸில் போனோம். அழகான அந்தக் கிராமம், சின்னாபின்னமாக்கப்பட்டிருந்தது. இரண்டு நாளைக்கு முன்னர் சிங்கள ராணுவத்தின் வெறியாட்டத்தினால், வீடுகளைச் சுற்றி அடைக்கப்பட்டிருந்த வேலிகள் எரிக்கப்பட்டுக் கருகிக் கிடந்த பசுமையான மரங்களின் கோலங்கள் பதற்றத்தை ஏற்படுத்தியது. மாமி வீட்டிலிருந்து சிறிது தூரத்தில் உள்ள வல்வெட்டித்துறை ஊறணி ஆஸ்பத்திரிக்கு முன்னால் உள்ள சுடலையில் அமைந்த சிறு மண்டபத்துக்குள் முதல் நாள் உயிரோடு பிடித்த எங்கள் சொந்தங்கள் துடிக்கத் துடிக்கக் கொன்றொழிக்கப்பட்ட செய்தி நெஞ்சை ஆயிரம் சம்மட்டி கொண்டு தாக்கியது. மாபெரும் தலைவன் பிறந்த மண்ணின் சந்தியில் வரிசையாக வைத்துக் கொல்லப்பட்ட கொடூரத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

என் குழந்தைகளை இறுக்கமாக அணைத்துக் கொண்டேன். இனி ஒரு நிமிடம் கூட அவர்களை இங்கு வைத்துக் கொண்டிருக்க முடியாது என்ற திடமான உணர்வோடு மாமி மச்சாள்மாரிடமிருந்து பிரிய மனமில்லாமல் பிரிந்தோம்.



என் கணவரைப் பார்த்தேன். இளவயதில் தனது தந்தையைப் பிரிந்து, அந்தக் குடும்பத்துக்காக இள வயதில் சந்தித்த துயரங்களையும் வல்வெட்டி என்ற தன் பிறந்த மண் மீது அவர் கொண்டிருந்த உயிரான நேசத்தையும் நான் அறிவேன்.

அவர் கண்களிலிருந்து வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டேன்.

யாழ்ப்பாணத்துக்கு போய் அங்கிருந்த வவுனியா வரை பஸ்ஸில் சென்றோம். எங்கள் பஸ்ஸைப் பணயமாக வைத்து பின்னால் ராணுவ டிரக்குள் வர, வழியில் எங்களை எல்லாம் இறக்கி சோதனை செய்ய, சின்னஞ்சிறு குழந்தைகளோடு அனுபவித்தவையெல்லாம் எனக்கு பயங்கரமாகத்தான் இருந்தது.

ராணுவத்தைக் கண்டாலே எனக்கு அப்போது எல்லாம் பயம். அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. என்னைத் திருமணம் செய்த போது, அவர் கொழும்பு 'தினகரன்' பத்திரிகையில் வேலை செய்து கொண்டிருந்தார். நீர் கொழும்பு விஜயரத்தினம் மகாவித்தியாலயத்தில்

**வா**னொலியின் மேம்பாட்டுக்கு அடிப்படை, யந்திரங்கள் அல்ல திறமையுள்ள ஒலிபரப்பாளர்களே முக்கியம். வானொலி அறிவிப்பாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய உத்திகள், கவனமாக இருக்க வேண்டிய சங்கதிகள் பற்றி - நறுக்குத் தெறித்தாற்போல விளக்கியிருக்கிறார் நூலாசிரியர் விமல். பிழையாமை நன்று பிழைசெய்யின் நிலை குலையாமை நிற்கும் நன்று என்ற பாங்கில் அறிவுரை பகிர்ந்திருப்பது உள்ளத்தை தொடுகிறது.



**சங்கரன் சங்கரமூர்த்தி**
**(சங்கர் அண்ணா)**
**BBC தமிழ் ஓசை**
**தலைவர்** (1966 - 1991)

**வி**மல் அறிவிப்பாளர் மட்டுமல்ல, படைப்பாளர், நிகழ்ச்சி அமைப்பாளர், இயக்குனர், நேர்காணலாளர், தொகுப்பாளர் என அனைத்துமானவர். அவரது வானொலிக் கலை நூல் அவர் பட்டறிவின் விளைச்சல். அவர் பதிவு செய்துள்ள வானொலி கலை நுட்பங்கள் நிறைந்தது இந்த நூல். இலங்கை வானொலியிலும் பிரித்தானியா வானொலியிலும் விமலின் பணி இருந்தாலும் அவரது குரல் தமிழ் ஈழமண்ணின் காற்றெல்லாம் சிலிர்க்கும் மணிக்குரல்.



**உணர்ச்சிக் கவிஞர்**
**காசி ஆனந்தன்**

**BBC** தமிழ் ஓசையில் ஆங்கில அரசியல் கட்டுரைகளை தமிழில் பொருள் மாறாமல் மொழிபெயர்ப்பு என்ற தோற்றம் காட்டாமல், அழகுத்தமிழிலும் இனிய தமிழிலும் அவர் கலந்து வழங்குவது விமலின் பாணி. கேட்பார் திகைக்கும் தகையவாய் கிறங்க வைத்தார். வானொலிக்கலை குறித்து நூல் எழுத இவரைத் தவிர வேறு யாருக்கு அதிகமான தகுதி இருக்க முடியும்?

**- பேராசிரியர் எஸ். சம்பத்குமார்**

Professor of Broadcast Journalism Chennai
Former Producer BBC Tamil Osai, Former Correspondent,
South India BBC World Service.

**ஒ**லிபரப்புக்கலை என்றதும் என் நெஞ்சில் நிறைந்து நிற்போர் நால்வர். பி.பி.சி. தமிழோசை சங்கர் அண்ணா, விமல் சொக்கநாதன், பி.எச்.அப்துல்ஹமீத் மற்றும் கு.வீரா. ஓசை நயத்தால், குரல் ஏற்ற இறக்கத்தால், சுருதியால், சுயத்தால் சுதர்மத்தால் குரலமுது - கருத்தமுது படைப்போர் இவர்கள். பிபிசி சங்கரண்ணாவின் கம்பீரமான குரல் ஓங்காரம், விமலின் அமைதியான குரல் ரீங்காரம்! நான் பி.பி.சி.யில் பணியாற்றிய காலத்தில் இவர்களுடன் அமர்ந்து இவர்கள் குரல்களை ரசித்திருக்கிறேன்.

ஒவ்வொரு ஊடகத்திற்கும் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற புதுக்கோலக்கடிவாளங்கள் தேவை என்று விமல் தன் நூலில் வலியுறுத்தியிருக்கிறார். தமிழ் வானொலிகளில், தமிழ்த் தொலைக்காட்சிகளில் நாம் இன்று அன்றாடம் காணும், கேட்கும் தவறுகள், உச்சரிப்புப் பிழைகள், சம்பந்தப்பட்டவர்கள் விமலின் நூலை அவரது பாடப்பிழிவுகளை முன்கூட்டியே படித்திருந்தால் ஏற்பட்டிருக்கமாட்டா!



**- ஏ.சி. தாசீசியஸ்**

**ஒ**ரு ஒலிபரப்பாளன் என்றால் தன் சொந்த உணர்ச்சிகளை வெளிக்காட்டாமல் ஒலிபரப்ப வேண்டும் என்பது நியதி. அகத்தின் அழகு முகத்தில் மட்டுமல்ல குரலிலும் தெரியும். சொந்த உணர்வுகளை ஒலிபரப்பில் குரலில் காட்டாமல் பணியாற்றுவது பற்றி நான் விமலிடம்தான் பாடம் கற்றுக் கொண்டேன். வானொலி என்ற ஊடகத்தின் மூலம் விடலைப்பருவத்தினரின் சிந்தனைகளை வடிவமைக்க முடியும் என்று சாதித்துக் காட்டியவர் விமல். அவர் ஆரம்பித்து நடத்திய ஒருமணிநேர ''வாலிப வட்டம்'' நிகழ்ச்சி பல கலைஞர்களை, கவிஞர்களை, எழுத்தாளர்களை உருவாக்கியது. விமலின் வாலிப வட்டத்தில் சிறப்பித்த இளைஞர்கள் சிலர் பிற்காலத்தில் நாடாளுமன்ற அமைச்சர்களாகவும் உயர்ந்திருக்கிறார்கள்!



**- பி.எச். அப்துல் ஹமீத்**
**உலகத் தமிழ் அறிவிப்பாளர்.**

விமல், அறிவிப்பு, செய்தி வாசிப்பு, நேர்காணல், நிகழ்ச்சித் தொகுப்பு, தயாரிப்பு, எழுத்தாக்கம் என அனைத்திலும் தனிமுத்திரை பதித்த ஒரு அருமையான கலைஞர். மிக மிக ஆழமான ஒரு விஷயத்தை, மிக இலகுவாக, அனைவரும் புரிந்து கொள்ளும் விதத்தில் விமல் இந்த நூலில் எழுதியிருக்கிறார். இந்த நூலின் சிறப்பு அம்சமே இதுதான். அறிவிப்பாளர்களாக வர விரும்புவோர் மட்டுமல்ல, ஏற்கனவே அறிவிப்பாளர்களாக கடமை ஆற்றுவோரும் - படிக்க வேண்டிய கை நூல் இது.



**- ஆனந்த ராணி பாலேந்திரா,**
**'தீபம்' தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளர்,**
**இயக்குனர் தமிழ் அவைக்காற்று கலைக்கழகம்**


# வானொலிக் கலை
## விமல் சொக்கநாதன்

தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறிந்த ஒலிபரப்பாளர் விமல் சொக்கநாதனின் வானொலிக் கலைநூல் இப்பொழுது விற்பனையாகிறது.




பிரதிகளுக்கு: 020 8689 7503 / 07971 803536



ஆசிரியையாக இடம் கிடைத்தது. ஏழு ஆண்டுகள் அங்கு இருந்திருப்போம்.

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் மூன்றாண்டு ஆசிரிய பயிற்சிக்கு நான் தேர்ந்து எடுக்கப்பட்ட போது, எனது கணவரும் 'தினகரன்' பத்திரிகையில் இருந்து விலகிக் கொண்டார். முன்னர் வேலை செய்த யாழ். 'ஈழநாடு'வில் மீண்டும் சேர்ந்து கொண்டார். மீண்டும் 1983ல் மற்றொரு பயங்கர இனக் கலவரம் நிகழ்ந்தது. இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலும் ராணுவத்தின் கெடுபிடிகள் ஏராளம்.

அதற்குப் பின்னர், 1984ம் ஆண்டு இறுதியிலோ, அல்லது 1985 ஆரம்பத்திலோ என்று சரியாக ஞாபகம் இல்லை.

**யா**ழ்ப்பாணம் முத்திரைச் சந்தியில், ஆறுமாதக் கர்ப்பிணிப் பெண் ஒருவர் ராணுவத்தினரின் விசாரணை என்ற பெயரில் கற்பழிக்கப்பட்டாள். அந்தக் கொடுமையைத் தாங்க முடியாது கொதித்து, தனது பெயரோடு செய்திக் கட்டுரையாக எனது கணவர் எழுதினார். இதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலுள்ள ராணுவ அதிகாரி 'ஈழநாடு' அலுவலகத்தில் தொலைபேசியில் தொடர்பு கொண்டு என் கணவரை விசாரித்ததாகவும், அவருடன் பேசியதாகவும், அப்படி எதுவும் நடை பெறவில்லை என்று கூறி மிரட்டியதாகவும் அறிந்தேன்.

இதன்பின்னர் ராணுவ அதிகாரியே அலுவலகத்துக்குச் சென்று இந்தக் கட்டுரை தொடர்பாக பிரதம ஆசிரியருடன் பேசியிருக்கிறார். எனது கணவர் அந்தச் சமயத்தில் அலுவலகத்தில் இல்லாததால் வீட்டு முகவரியைக் கேட்டிருக்கிறார்கள். மானிப்பாயில் தற்காலிகமாக தங்கி இருப்பதை மட்டும் கூறி, சரியான முகவரி தெரியாது என்று கூறியிருக்கிறார்கள். இதன் பின்னர் நாங்கள் மானிப்பாயில் உறவினர் வீட்டில், ஒரு அறையில் தங்கியிருந்த இல்லத்துக்கு ராணுவம் சென்றிருக்கிறது. அந்த வீட்டை ராணுவம் அக்கு வேறு ஆணி வேறாக சோதனை செய்தது.

இந்தச் சம்பவங்களுக்குப் பிறகு எனது கணவரின் நிலையும் என்னை வெகுவாகப் பாதித்தது.

**சி**று வயது முதல் படித்து, பத்தாண்டுகளுக்கு மேலாக குழந்தைகளுக்கு ஊட்டிய பரதக் கலையை நெஞ்சினிலே சுமந்து கொண்டுதான் லண்டன் வந்து சேர்ந்தேன். குழந்தைகளுக்கும், எங்களுக்கும் ஏதோ மாற்றுவதற்கு உடைகளை 'பாக்கு'க்குள் போட்டுக் கொண்டு வந்த போது கூட எங்கள் அரங்கேற்றத்தன்று எங்கள் குரு சாந்தா பொன்னுத்துரை கட்டி ஆடுவதற்காகத் தந்த அந்தச் சோடி சதங்கைகளை பாதுகாப்பாகக் கொண்டு வந்து சேர்த்தது ஒருவித ஆறுதலாக இருந்தது. ஒவ்வொரு சலங்கையாக கிலுக்கிலுக்கி, நாதத்தைக் கேட்டு துணியிலே என்னைக் கொண்டு தைக்கச் செய்து, அரங்கேற்றத்தில் 1985 மே மாதம் நான் கட்டி ஆடிய சதங்கைகள் அல்லவா.

லண்டன் 'ஹீத்றோ' விமான நிலையத்தில் வந்து இறங்கிய எங்களை 'காமன்ஸ்வேர்த்' அகதிகள் முகாமல் இருபது நாட்கள் வைத்திருந்தார்கள். எங்களை உறவினர்கள் யாரும் வந்து தமது பிணையில் கூட்டிச் செல்வதை என் கணவர் விரும்பவில்லை. விமான நிலையத்துக்கு மூன்று தடவைகள் அதிகாரிகள் கூட்டிச் சென்று, எனது கணவரையும், என்னையும் தனித்தனியாக விசாரித்தார்கள். இரண்டொரு நாளில் நாங்கள் தங்கியிருந்த முகாம் அதிகாரி எங்களை அழைத்து அரசியல் தஞ்சம் அளித்திருபதைத்

# Message from Guru



The glorious heritage of Tamil Nadu, known for it's understanding of the universal exdression - "the rhythm of life" requires an enlightened process and nurturing personnel. To witness its impact on another continent is a testimony to the hardwork and dedication of teacher and student.

It is rewarding experience to see the torch passed to a new generation and know the philosophy and ideals of the Kalakshetra tradition will continue into the new millennium. Smt. Ragini Rajagopal was one of my first students and I was proud of her then and continue to be excited about her progress and accomplishments in the field of teaching and the performing arts.





**-Shantha Ponnuthurai (Guru) Canada**

தெரிவித்து, அதனை உறுதிப்படுத்தும் கடிதத்தை எம்மிடம் தந்தார்கள். லண்டன் தெருக்களில் சுதந்திரமாக உலவ அனுமதித்தது பிரிட்டிஷ் அரசு.

சிறுமியாக நடனம் கற்க ஆரம்பித்தேன். இயற்கையாகவே ஏற்பட்ட ஆர்வத்தை வளர்க்க மானிப்பாயில் எங்களது வீட்டில் இருந்து நடந்து போகின்ற தூரத்தில் மிக நல்ல பரதநாட்டிய ஆசிரியையாக இருந்த லீலா கந்தையாவிடம் நடனம் பயில எங்கள் தாயார் எங்களைச் சேர்த்தார்கள். என்னோடு ஒட்டிப் பிறந்த வினோதினியும் நானும் அவரிடம் சில ஆண்டுகள் நடனம் பயின்றோம். அவரிடம் நடனம் பயின்ற காலத்தை நினைக்கவே



**ராகினியுன் அவரது முதலாவது நடன ஆசிரியை லீலா செல்வராஜ்**

பயமாக இருக்கிறது. நடன வகுப்பு ஆரம்பமாவது முதல், முடியும் வரை பயம். பயம். கொஞ் சம் பிழை ஏற்பட்டாலும் ஏச்சும், பேச்சும் தான். அவரிடம் பயின்ற காலங்கள் எங்களுக்கு முறையான அத்திபாரத்தை இட்டன. லீலா டீச்சர் மணம் முடித்து, திருமதி லீலா செல்வராஜாவாக மலையகத்துக்குக் கணவரோடு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்தக் காலத்தில் மானிப்பாய் மகளிர் பாடசாலையில் மட்டுமல்ல- பல நடன நிகழ்ச்சிகளில் நாங்கள் ஆடியிருக்கிறோம்.

எங்களுக்கு ஓரளவுக்கு உலகம் தெரிகிற வயசில் எங்கள் தாயார் கண்டுபிடித்த ஒரு நடன ஆசிரியை தான் சாந்தா பொன்னுதுரை. அப்பொழுதுதான் சென்னை அடையாறு ருக்மணிதேவியின் கலாக்ஷேத்திராவில் பரதநாட்டியத்தை முறையாக பயின்று, பட்டம் பெற்று ஊருக்கு வந்திருந்தார். திறமையான நடன ஆசிரியை. கள்ளியங்காடு என்ற இடத்தில் அவரது இல்லம். அங்கு எங்களை ஒவ்வொரு கிழமையும் மானிப்பாயிலிருந்து பஸ்ஸில் தாயார் கூட்டிச் செல்வார். நாங்கள் நடனம் கற்று அரங்கேற்றத்துக்கான நிலையை அடைகிற வரை ஒரு வகுப்புக்கூடத் தவறாது சாந்தா டீச்சர் வீட்டுக்குக் கூட்டிப் போய் வகுப்பு முடியும் வரை இருந்து வீட்டுக்குக் கூட்டி வருவார்.

அரங்கேற்றத்துக்கு எங்களைத் தயார்ப்படுத்துவதில் எங்களை விடக் கடினமாக உழைத்தவர் எங்கள் குரு. அலாரிப்புவில் ஒத்திகை ஆரம்பிக்கும். வர்ணம் வரும்போது களைத்தே போய் விடுவேன். ஒரு சமயம் வர்ணத்தில் அரைவாசியில் மயங்கி விழுந்து விட்டேன். தாயார் என்னைத் தாங்கிப்பிடித்து அத்தோடு ஒத்திகையை முடித்து விடலாம் என்று எண்ணினார். 'தண்ணியைக் குடிக்கக் கொடுங்கோ'' என்று சொல்லி விட்டு, மீண்டும் ஒத்திகையை ஆரம்ப அலாரிப்புவிலிருந்து ஆரம்பித்தார் சாந்தா டீச்சர். 1972ஆம் ஆண்டு பதினைந்தாவது வயதில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் எங்கள் அரங்கேற்றம் நடந்தது. எங்கள் குரு சாந்தா டீச்சரின் முதல் அரங்கேற்றம். எங்கள் அரங்கேற்றத்துக்கு சிறப்புச் சேர்த்தவர்கள் புகழ் பெற்ற கலைஞர்கள். திலகநாயகம்போல் வாய்ப்பாட்டு, ஏ.சந்தான கிருஷ்ணன் மிருதங்கம், சமீபத்தில் லண்டனுக்கு வந்து நிகழ்ச்சிகளை நடத்திச் சென்ற ஈழத்து வயலின் மேதை ஆர்.ராதாகிருஷ்ணன் வயலின். ஏ.நமசிவாயம் புல்லாங்குழல்.

எங்களது பரத நாட்டிய அரங்கேற்றம் பலராலும் பாராட்டப்பட்டது. இந்தப் பெருமை எங்கள் குரு

சாந்தா பொன்னுத்துரை அவர்களையே சாரும்.

வசதியான ஒரு குடும்பமாக என் தந்தையார் உழைப்பில் நாங்கள் வாழ்ந்த போதிலும் - எங்கள் அரங்கேற்றம் நடந்த காலப் பகுதியில் பொருளாதார நெருக்குவாரத்துக்குள் இருந்ததை உணர்வேன். அப்படியான சூழ்நிலையில் பத்தாயிரம் ரூபாய் செலவில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஒருவரை மட்டுமல்ல - இருவரையும் அரங்கேற்றி அழகு பார்த்த மங்கையர்கரசி - அரசரத்தினம் என்ற என் பெற்றோர்களுக்கு நான் எத்தனை பிறவி எடுத்தாலும் அவர்களுக்கே மீண்டும் மீண்டும் பிள்ளையாகப் பிறக்க வேண்டும். அவர்கள் மறைந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனாலும் மெளனமாக என்னுள் தெய்வங்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களோடு என் குடும்பத்தில் என்னோடு பிறந்த என் சகோதரர்கள் - குறிப்பாக சந்திரா என்ற என் அக்கா - அவர் கணவர், நடிகர், இயக்குனர் ரகுநாதன் என்போர்களெல்லாம் மறக்க முடியாதவர்கள்.

**நா**னும் என் சகோதரியும் சிறு வயது முதல் பள்ளிக்கூட நிகழ்ச்சிகளிலும் மற்றும் யாழ்ப்பாணத்தின் பல இடங்களில் நடக்கும் நிகழ்ச்சிகளிலும் நடனமாடியிருக்கிறோம். ஈழத்தின் மாபெரும் கலைஞராக வாழ்ந்து இன்றும் என்றும் கலையரசராக வாழ்ந்து கொண்டிருக்கும் மறைந்த கலையரசு சொர்ணலிங்கம் ஐயாவின் 75வது பிறந்த தின விழா மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் கோலாகலமாக நடைபெற்றது. அவ்விழாவில் சின்னஞ் சிறுமிகளான நாங்கள் நடனமாடியது இன்னும் பசுமையாக என்னுள்ளத்தில் பதிந்திருக்கிறது.

பரதநாட்டியத்தில் நட்டுவாங்கமும் மற்றும் உயர் தத்துவங்களையும் பயில தமிழ்நாட்டுக்கு பெற்றோர்கள் என்னை கூட்டிச் சென்று அடையாறு லக்ஷ்மணனின் கலாக்ஷேத்திரா பள்ளியில் சேர்த்தார்கள். நடனத்தை சொல்லிக் கொடுக்கிற பயிற்சியை அங்கு பெற்றேன். யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் நடந்த கலை நிகழ்ச்சிகளில் எங்கள் நடனமும் இடம் பெற்றது. மாநாட்டில் கலந்து கொண்ட அறிஞர்களின் பாராட்டுதல்களை பெற்றதோடு பத்திரிகைகளும் படங்களோடு சிறப்பித்து எழுதியிருந்தன.

திருமணத்துக்கு முன் நடந்த நிகழ்வுகளின் மனப் பதிவுகள் இவை. திருமணத்தின் பின்...

**தி**ருமண நிச்சயதார்த்தம் எங்கள் மானிப்பாய் இல்லத்தில் நடந்தது. அன்றுதான் எனக்கு அரசாங்க பாடசாலையில் நியமனக் கடிதமும் வந்திருந்தது. முதன்முறையாக நுண்கலைப் பிரிவில் ஐந்து நடன ஆசிரியைகள் நியமனம் பெற்றார்கள். அதில் நானும் ஒருத்தி. எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. திருமணத்தை நிச்சயிக்கின்ற நாளுமல்லவா.

அன்று கணவராகப் போகின்றவர் கேட்ட முதல் கேள்வி - 'இந்த வேலையை விடச் சொன்னால் விடுவீர்களா?' - என்னிடம் அவர் அதைக் கேட்டு இன்றோடு 30 வருடங்களாகிவிட்டன. என் வாழ்வின் பெரும்பகுதி அவரோடுதான் கழிந்து விட்டன. என்னை இத்துறையில் இயக்கிக் கொண்டிருப்பவர் அவர் தான். எல்லாமே எனக்கு அவர்தான்.!

இளவாலை கொன்வென்றில் நடன ஆசிரியையாக இருந்து என் கணவரோடு சேர்வதற்காக நீர்கொழும்பு விஜயரத்தினம் மகாவித்தியாலயத்துக்கு இடமாற்றம். அப்போது அவர் கொழும்பு தினகரன், பத்திரிகையில் உதவி ஆசிரியர். நீர்கொழும்பில் எனக்குப் புதிய அனுபவங்கள். அங்கு வாழ்பவர்கள் தமிழ் பேசுவார்கள். தமிழர்களாக இருந்து முழுச் சிங்களர்களாக மாறிக் கொண்டிருக்கிறார்கள். மனைவிமார் எங்களோடு தமிழ் ஆசிரியராக இருந்தார்கள். ஆனால் கணவன்மார்களுக்குத் தமிழ் தெரியாது. அனேகமானவர்கள் கத்தோலிக்கர்கள். சனி, ஞாயிறு எங்களுக்குப் பொழுது போவதே தெரியாது. அவர்கள் வீடுகளுக்குச் செல்வோம். நல்ல விருந்து தருவார்கள். அழகான கடற்கரை. பள்ளிக்கூட நேரம் போக எனது 'நாட்டியாலயா' நடனப் பள்ளியில் மாணவிகள் பலர் படித்தார்கள். இந்து இளைஞர் மண்டபத்திலும் 'நாட்டியாலயா' வகுப்புகள் நடத்தன.





என்னைப் பெற்ற தெய்வங்கள்



அங்கும் பாடசாலை ஊடாகவும் - தனிப்பட்ட முறையிலும் பல நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கிய நினைவுகள் நிறையவே உள்ளன.

யாழ்ப்பாணத்தவர்களும் அங்கு பல துறைகளில் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். அங்கிருந்த காலத்தில் எழுத்தாளர் முருகபூபதியும் அவரது பெற்றோர் - சகோதரர்களும் எங்கள் உறவுகளாக வாழ்ந்தார்கள். உதவியாகவும் இருந்தார்கள்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு மூன்றாண்டு நடனப் பயிற்சிக்காக தேர்ந்து எடுக்கப்பட்டேன். நீர்கொழும்பு பாடசாலையை விட்டுப் பிரிய மனமில்லாமல் பிரிந்தேன். சில வருடங்களானாலும் எங்களை நேசித்த அன்பான இதயங்களை பிரிகின்றபோது



வீரசிங்க மண்டப அரங்கேற்றத்தில்...

உறவுகளைப் பிரிகின்ற உணவு...

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயின்ற மூன்றாண்டு காலம் மற்றொரு மகிழ்ச்சியான நினைவுகள். மீண்டும் பள்ளி வாழ்க்கை. ஆடிப்பாடி கூடி மகிழ்ச்சியாக இருந்த அந்த நாள் ஞாபகங்கள் இனிமையானவை. ஆசிரியர்களான எங்களை பக்குவப்படுத்தி நல்லாசிரியர்களாக்கும் பயிற்சிக்கூடம். எனக்குப் பிரதானமான பாடம் பரதநாட்டியம். எனது பரத நாட்டிய விரிவுரையாளர் மேதை இயல் இசை வாரிதி, இணுவில் வீரமணி ஐயர். அவரது நாவிலே சரஸ்வதி நர்த்தனமாடுவதை நேரில் கண்டு சிலிர்த்திருக்கிறேன். மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நான் படித்த காலத்தில் அவர் அங்கு பகுதி நேரமாக நடன ஆசிரியராக கடமையாற்றினார். அவரிடம் சிறு வயதில் நடனம் பயின்றிருக்கிறேன். இதனால் பயிற்சிக் கலாசாலையில் மீண்டும் பரதக் கலையின் உயர் தத்துவங்களை அவரிடம் பயில்வது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தந்தது.



அங்கு பல நடன நிகழ்ச்சிகளில் பிராதான பாத்திரங்களில் பங்கு பற்றினேன். கலாசாலையில் நடக்கின்ற அத்தனை விழாக்களிலும் அந்த மூன்று வருடத்தில் எனது பங்களிப்பு இருக்கும். அங்கு நடந்த போட்டி நடனத்தின் போது வீரமணிஐயர் எழுதிய 'தாட்சாயினி கல்யாணம்' நாட்டிய நாடகத்தில் நான் தாட்சாயினியாக பாகம் ஏற்றேன். அந்த நாட்டிய நாடகம்தான் முதல் பரிசைத் தட்டிக் கொண்டது. சிறந்த நாட்டியத்தை வழங்கியதற்காக எனக்கு மிகுந்த பாராட்டு வழங்கப்பட்டது. வீரமணிஐயர் என்னை வெகுவாகப் பாராட்டியது இன்றும் நினைவில் இருக்கிறது. நான் லண்டனுக்கு வந்த பின்னர் சில தடவை வீரமணிஐயாவுடன் தொலைபேசியில் பேசியிருக்கிறேன். தான் எழுதிய நாட்டிய நாடகம் ஒன்றினை எனக்கு அனுப்பி வைத்தார். அன்போடு சில கடிதங்களை எழுதியிருக்கிறார்.

அவர் மறைந்த செய்தியை இசை அரசி சிவசக்தி தொலைபேசியில் சொன்ன போது துக்கம் தாங்க முடியவில்லை. 'கற்பகவல்லியின் பொற்பதம் பிடித்தே...' என்பது போன்ற ஆயிரம் பாடல்களையும் நாட்டிய நாடகங்களையும் ஆக்கிய ஈழத்து இசை மழை ஓய்ந்தது. அப்போது பவனில் சிவசக்தி ஏற்பாட்டில் நடந்த ஐயாவின் அஞ்சலிக் கூட்டத்தில் பேச வாய்ப்புத் தந்தார். என்னால் பேச முடியவில்லை. அழுதேன். இனி அப்படி ஒரு மேதை பிறப்பாரா?

**மா**னிப்பாய் மெம்மோறியல், வவுனியா கொன்வென்ற், என்று சில பாடசாலைகளில் நடன ஆசிரியையாக கடமையாற்றி நான் சிறுவயதில் இருந்து படித்த மானிப்பாய் மகளிர் பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றது சந்தோஷமாக இருந்தது. ஆனாலும்

ஆறு மாதங்களுக்கு மேல் அது நீடிக்கவில்லை. லண்டனுக்கு வந்து விட்டோம். அப்படிச் சொல்ல முடியாது. தப்பி வந்துவிட்டோம்.

லண்டனில் எனக்கு நடன ஆசிரியை என்ற அந்தஸ்தை தந்த அந்தத் தமிழ் பாடசாலைக்கு நன்றி சொல்ல வேண்டும். தமிழகத் தமிழர்களையும், ஈழத் தமிழர்களையும் ஒன்றிணைக்கும் உறவுப் பாலமாகத் திகழும் ஈஸ்ற்ஹாம் திருவள்ளுவர் தமிழ் பாடசாலையில் *1986*ம் ஆண்டு எனக்கு நடன ஆசிரியை நியமனம் கிடைத்தது. அப்போது அதன் அதிபராக இருந்த நாகதேவனிடம் என்னைப் பற்றிக்கூறி, எனக்கு இடம் பெற்றுத் தந்த எனது கணவரின் ஊர்க்காரரான வல்வெட்டி சகாதேவனை நன்றியுடன் நினைவு கூருகிறேன். அதற்குப் பிறகு யோகராஜா மாஸ்டர் அங்கு அதிபரானார். அப்போது எனது 'நாட்டியாலயா' நிறுவனத்தில் குறைவான மாணவர்களே இருந்ததால் திருவள்ளுவர் தமிழ் பள்ளியில் நிறைவாக படிப்பிக்க முடிந்தது. அவர்கள் நடத்தும் பொங்கல் விழாக்களில் பல நடன நிகழ்ச்சிகளை அங்கு படிக்கும் மாணவிகள் மூலமாக வழங்கினேன். நிறையப் பிள்ளைகள் விரும்பி நடன வகுப்புகளுக்கு வந்தார்கள். தமிழ் விடுதலை உணர்வுக் கவிஞர் புலவர் சிவநாதன் திருவள்ளுவர் தமிழ் பள்ளிக்காக எழுதிய 'குடி மறந்த குறள்' நாடகத்தை எமது மாணவிகளுக்குப் பழக்கி, பொங்கல் விழாவில் மேடை ஏற்றியதை மறக்க முடியாது. இசை அரசி மாதினி சிறி கந்தராசா பாடினார்.

திருவள்ளுர் பாடசாலையில் எனக்குச் சொல்லிக் கொடுப்பது மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால் 'நாட்டியாலயா'வில் மாணவிகள் எண்ணிக்கை பல மடங்கு அதிகமாகிக் கொண்டு வந்ததால், என்னால் சமாளிக்க முடியவில்லை. ரூட்டிங் நகரில் இருந்து ஈஸ்ற்ஹாம் போய் வருவதில் உள்ள கஷ்டங்களை பாடசாலை அதிபரிடம் சொன்னேன். விடமாட்டார்கள் போல் இருந்தது. அவர்களை விட்டுச் செல்ல முடியவில்லை. சில மாதங்கள் பொறுத்து பல்லைக் கடித்துக் கொண்டு உறுதியாக விலகப் போவதைச் சொல்லிவிட்டேன். பத்து ஆண்டுகள் தொடர்ச்சியாகக் கற்பித்த ஒரு பாடசாலையை விட்டு விலகுவது எனது மனதுக்குக் கஷ்டமாக இருந்தது. பிரியாவிடை நடத்தினார்கள். நல்ல மாணவர்கள் - நல்ல அதிபர் யோகராஜா - நாகதேவன் - அமரர் இராமசாமி- அமரர் வீரரத்தினம் போன்ற அருமையான நிர்வாகிகள் - அன்போடு என்னுடன் பழகிய ஆசிரியர்கள் அனைவரையும் விட்டுப் பிரிய மனமில்லை. 'இது பிரிவில்லை. எப்பொழுதும் நான் உங்களில் ஒருத்தி' என்று கரகரத்த குரலில் நன்றி கூறி கண்ணீருடன் விடை பெற்றேன்.



எனது பேரப்பிள்ளைகள்

மறைந்த மாவீரர் கிட்டு லண்டனுக்கு வந்தபின்தான் என் நடன வாழ்வில் புதிய அத்தியாயம் ஆரம்பித்தது. மிகப் பெரிய போராளி மட்டுமல்ல. அவர் கலைகள் மூலம் மக்கள் மனங்களை ஊடுருவ முடியும் என்பதில் உறுதியானவர். மாவீரர் தினம் இங்கு அவர் காலத்தில் சிறிய அளவில் கொண்டாடப்பட்டது. அவர் அழைப்பில் முதல் தடவை அவரைச் சந்தித்துப் பேசியது நன்றாக நினைவு இருக்கிறது. தமிழீழ விடுதலை உணர்வுள்ள பாடல்களுக்கு நடனங்களை வழங்கும்படி கேட்டுக் கொண்டார். அவர் பேச்சில் ஒரு பணிவு - கலைஞர்களை மதிக்கிற பண்பு - அன்பாக அணைத்துக் கொள்கிற மனித நேயம் அவருடைய வெற்றிகளின் ரகசியம். அவர் லண்டனில் பொறுப்பாளராகப் பணியாற்றிய காலத்தில் ஈழத் தமிழர்கள் வாழ்வில் ஒரு அங்கம் போன்று செயல்பட்டவர். எனது மகள் ஷர்மினியுடன் மற்றும் சில சிறுமிகளை வைத்து முதல் மாவீரர் நாளில் நடன நிகழ்ச்சிகளைத் தயாரித்தேன். எனது நண்பியும், நடன ஆசிரியையுமான பத்மினி குணசீலனும் அன்றைய மாவீரர் நிகழ்வில் தமிழ்வீரம் செறிந்த பாடல்களுக்கு குழந்தைகளை ஆடவைத்தோம்.

ஷர்மினியின் நடனத்தை கிட்டு வெகுவாக ரசித்தார். சில நாட்களில் அவர் ஜெயம் - ஜெயா என்ற இரு இளைஞர்களுடன், வீட்டுக்கு வந்து ஷர்மினி நடனம் ஆடும்போது பிடிக்கப்பட்டு - பிரேம் செய்யப்பட்ட படம் ஒன்றை அன்பளிப்பாகத் தந்து விட்டுச் சென்றார். இது எனக்கு மிகுந்த உற்சாகத்தைத் தந்தது. அன்று முதல் இன்று வரை ஒவ்வொரு ஆண்டும் நடக்கும் மாவீரர்

நிகழ்வு லண்டனில் எங்கு நடந்தாலும் ஒரு நேர்த்திக்கடனாக எனது 'நாட்டியாலயா' பிள்ளைகள் நடனம் ஆடுகிறார்கள். அத்தோடு செஞ்சோலை - தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - வெண்புறா என்று தாயத்துக்காக நடக்கும் அனைத்து நிகழ்ச்சியிலும் 'நாட்டியாலயா' பங்கு பற்றி வருகிறது. பல நிகழ்ச்சிகளில் எங்கள் குழந்தைகள் நடனமாடியாலும் - தாயகத்துக்காக நடனங்களை வழங்குவதையே பெருமையாகக் கருதுகிறேன்.

ஆகக் குறைந்தது ஆறு வருடங்களாவது தொடர்ந்து நடனம் பயின்றருந்த ஒருவரைத்தான் அரங்கேற்றம் செய்வது என்ற கொள்கையை 'நாட்டியாலயா' கொண்டுள்ளது. அதற்கமையவே



எனது நடன வாரிசு ஷர்மினி கண்ணன்

அரங்கேற்றங்களைச் செய்து வருகிறேன். 'எனது பிள்ளைக்கு ஆறு மாதம் - ஒரு வருடத்தில் பழக்கி அரங்கேற்றம் செய்ய முடியுமா? எவ்வளவு காசு வேண்டுமானாலும் தரலாம்' என்பது போன்ற கோரிக்கைகளுடன் வருகின்ற பெற்றோர்களும் உண்டு. பரத நாட்டியம் என்பதற்கு விலை பேசுவதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. தமிழ் படங்களைப் போட்டுப் பார்த்து உடனேயே அதில் வரும் பாடல்களுக்கு 'டப்பாக் கூத்து' ஆட ஐந்து வயதுக் குழந்தையால் கூட முடியும். அதற்கு குரு எதற்கு? அப்படி ஒரு அரங்கேற்றம் வேண்டுமா? நான்கு வயதில் ஆரம்பித்து பத்துப் பதினைந்து வருடங்கள் பயின்ற பின்னர் கூட என் பிள்ளைகள் அரங்கேறியிருக்கிறார்கள்.



ஆண்டுக்கு ஒரு அரங்கேற்றம் - இந்த வகையில்தான் வேலை செய்கிறேன். 2001ஆம் ஆண்டில் தான் இரண்டுமாத இடைவெளியில் மூன்று அரங்கேற்றங்களை செய்து முடிக்க வேண்டிய சூழ்நிலை. அரங்கேற்றங்களைச் செய்ய வேண்டுமென்று நான் யாரையும் வற்புறுத்துவதில்லை. அந்த நிலையை அடைந்த பிள்ளைகளின் பெற்றோர் விரும்பிக் கேட்டால் மட்டுமே அரங்கேற்றங்களைச் செய்ய இணங்குகிறேன். அரங்கேற்றங்கள் முடிவல்ல. என்னிடம் படிக்கிற பிள்ளைகள் எவராக இருந்தாலும் அரங்கேற்றத்தை மனதில் கொண்டு படிப்பிக்கிறதில்லை. நாங்கள் தமிழர்கள் - நம்மிடம் அரிய கலைப் பொக்கிஷங்கள் இருக்கின்றன. நமக்கென்று உடை உணவு பண்பாடு பழக்க வழக்கங்கள் இருக்கின்றன என்பதை எங்கள் பிள்ளைகள் அறியாது, அந்நிய நீரோடத்தோடு கலந்து விடுவார்களோ என்ற பயத்தோடு தான் எங்களிடம் அனுப்புகிறார்கள். பரத நாட்டியத்தை மட்டும் நான் சொல்லிக் கொடுக்கவில்லை. பண்பாடு - ஒழுக்கம் - கட்டுப்பாடு இவற்றையெல்லாம் நடனக் கலையோடு சேர்த்து ஊட்டுவதும் என் கடனாக எண்ணி புனித பயணத்தைத் தொடர்கிறேன். ***இவைகள் எல்லாவற்றையும் விட அந்தத் தலைவனின் தமிழீழ வேள்வியில் 'நாட்டியாலயா'வும் பங்கு கொள்கிறது. இதன் மூலம் இங்குள்ள எங்கள் பிள்ளைகளுக்கு- நமக்கென்று ஒரு நாடு இருக்கிறது - அதை மீட்டெடுக்க ஒரு போராட்டம் நடக்கிறது என்பதை உணர்த்திக் கொண்டிருக்கிறேன்.***

எனது கணவரின் பிறந்த இடமான வல்வெட்டிக்கு அயல் ஊரான கம்பர் மலை அரசினர் தமிழ் பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் நடத்தும் 'பூபாள ராகங்கள்' நிகழ்வில் கடந்த ஒன்பது ஆண்டுகளாக 'நாட்டியாலயா' பங்கு பற்றி வருகிறது. ஊரின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் புதுப் புது நாட்டியங்களை எமது பிள்ளைகள் ஊடாக வழங்கி வருகிறேன். லண்டனிலும் - தாயகம் உட்பட ஈழத்தமிழர்கள் வாழுகின்ற புலம் பெயர்ந்த நாடுகளில் எல்லாம் 'நாட்டியாலயா'வின்



பணியை பரவச் செய்தது இந்த நிகழ்வு. இந்த நிகழ்வு 'தீபம்' தொலைக்காட்சி ஊடாக ஒளிபரப்பப்படுவதாலும் - இலங்கை ஊடகங்களினால் விரிவான விமர்சனங்கள் வெளிவருவதனாலும் 'நாட்டியாலயா' உலகப் புகழ் பெறுகிறது. அந்தக் காலத்தில் என் புகுந்த வீட்டுக்குப் போகிற சமயங்களில் எல்லாம் கணவருடன் அந்த அழகான பசுமை நிறைந்த கம்பர் மலை என்ற பூமிக்கு பல தடவை போய் அந்த இயற்கை அழகை ரசித்திருக்கிறேன். அப்பாடசாலையில் இளைப்பாறியிருக்கிறேன். இதனால் அந்நிகழ்ச்சியில் இயற்கையாகவே நடனங்களை அமைக்க முடிகிறது. இச்சந்தர்ப்பத்தில் 'பூபாளராகங்கள்' அமைப்பாளர் மகாலிங்கம் சுதாகரனுக்கும் - பழைய மாணவர் சங்க நிர்வாகிகளுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டவள்.

இலங்கையில் அரசாங்க பாடசாலையில் நடன ஆசிரியையாக பத்து ஆண்டுகள் கடமையாற்றி இருக்கிறேன். சிறார்களுடன் பழகுவது போன்ற அந்த மகிழ்ச்சியான காலம் மீண்டும் வராதோ என்ற என் ஏக்கத்தை தீர்த்து வைத்த இறைவனை என் இதயத்திலேயே பூஜித்து வணங்கிக் கொண்டிருக்கிறேன். லண்டனில் என் மகள் ஷர்மினி படிக்க ஆரம்பித்தது 1985ல் ஆரம்ப அரசு பாடசாலையான ரூட்டிங் Franciscan Primary School இல். அங்கு நடன ஆசிரியையாக முழு நேரமாக கடந்த 20 வருட காலத்துக்கு மேலாக கடமையாற்றி வருவது எனக்கு ஓரளவு ஆறுதலாக இருக்கிறது. எனக்கு இந்த இடத்தை அளித்த அப்பாடசாலை அதிபராக இருக்கும் Clare McDonell என்ற ஆங்கிலமாதுவை எப்படி மறக்க முடியும்? ஆங்கிலேயர், கறுப்பர், இந்தியர், சிறு தொகையான ஈழத்தவர் என்று பல்லின மாணவர் பயிலும் இப்பாடசாலையின் விழாக்களிலும், பல பாடசாலைகள் கலந்து கொள்ளும் போட்டிகளிலும் சிறார்கள் கலந்து கொள்வார்கள். அந்தப் பாடசாலை மண்டபத்திலேயே 'நாட்டியாலயா' வகுப்புகள் சனி, ஞாயிறு நாட்களில் நடைபெறவும் அந்த அதிபரே காரணம். அவரை நன்றியோடு நினைத்துக் கொள்கிறேன்.



நூற்றுக்கு மேலான பிள்ளைகள் இப்போது என்னிடம் படிக்கிறார்கள். அவர்களது பெற்றோர்கள் எந்த நடன நிகழ்ச்சிகள் நடந்தாலும் மிக ஒத்துழைப்பு வழங்குகிறார்கள். யந்திரமயமான வாழ்வோடு போராடிக் கொண்டு, தவறாது வகுப்புகளுக்கு பிள்ளைகளை அழைத்து வருகிறார்கள். அவ்வப்போது அவர்கள் சொல்லுகின்ற ஆலோசனைகள் என்னை ஊக்குவிக்கின்றன. என்றென்றும் அவர்கள் ஒத்துழைப்புக்கு நன்றியுள்ளவள்.

கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக தமிழகத்துக்கு ஒவ்வொரு ஆண்டும் தப்பாது என் கணவரோடு போய் வருகிறேன். அங்கு மார்கழியில் நடக்கும் இசைவிழாவில், பிரபலங்களின் நடன நிகழ்ச்சிகளை பார்ப்பதில் உள்ள ஆர்வமும், பரதத்தை எப்படிக் கற்பிக்கிறார்கள் என்பதை பார்த்துக் கேட்டு அறியவும், புதுப்புது நடன குறுவெட்டுகளையும், புதிய பரத நூல்களை வாங்குவதும் எங்கள் பயணத்தின் நோக்கம். பயணம் இலகுவாகவும், வெற்றிகரமாகவும் நடந்து முடிய எம்மைத் தங்கள் விருந்தினர்களாக அணைத்துக் கொள்ளும் விநாயக மிஷன்ஸ் நிறுவனத்துக்கு எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை. நிறுவனரும், தலைவருமான ஏ.சண்முகசுந்தரம் அவர்களும், இணைவேந்தரான அவர் அன்பு மகன் டாக்டர்.ஏ.எஸ்.கணேசன் அவர்களும் எங்கள் அன்புக்குரியவர்கள். அவர்கள் பல்கலைக்கழகத்தில் 'நாட்டியாலயா' ஓர் அங்கமாக அங்கீகரிக்கப்படவுள்ளது.

திருச்சி ஹோமியோபதி டாக்டர். ஆர்.தியாகராஜனும், மஞ்சுவும் 'நாட்டியாலயா' வளர்ச்சியில் அக்கறையுள்ளவர்கள்.

'நாட்டியாலயா' நிறுவனத்தில் எனக்கு உதவியாக நடன ஆசிரியையாக இருக்கும் என் மகள் ஷர்மினி அரசாங்க சேவையில் பணியாற்றினாலும், மிகவும் ஒத்துழைப்பு நல்கி வருவது குறிப்பிடத்தக்கது. அவளுக்கு வாய்த்த கணவன் கண்ணன் உறுதுணையாக இருக்கிறார். என் பணிக்கு தன்னாலான உதவிகளைச் செய்யும் மகன் ஷியாம். இப்போது யாதவன், ராகவன் என்ற பேரப்பிள்ளைகள் இருவரைக் கண்ட பாட்டி ஆகிவிட்டாலும், என் பரதக்கலையின் பணி ஓயாது. 30 ஆண்டுகள் என்ன, எத்தனை ஆண்டுகளானாலும், உயிருள்ளவரை பரதக்கலை பணி தொடரும். அது என் ரத்தத்தோடு கலந்துவிட்டது.

அகதியாகப் புலம் பெயர்ந்த பின்னர், தாய் மண்ணுக்கு இன்றும் செல்லவில்லை என்ற வேதனை என்னை வாட்டுகின்றது. விரைவில் மலரப் போகும் அந்தத் தமிழீழத்தில், தலைவன் முன் என் குழந்தைகள் நடனமாடுவதை அவர் பார்த்து மகிழ வேண்டும்! அந்த நாள் வரை உயிரோடு நான் வாழவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

''நாங்கள் போராடுவது ஈழத்துக்காக மட்டுமல்ல, நமது பண்பாடுகளுக்காகவும்...'' என்ற அவன் கூற்றுக்கு நான் செய்வது ஒரு துளியாக இருக்கட்டும்.

என் முயற்சிகளுக்கு எல்லாம் ஆதரவு தருகின்ற அனைத்து உள்ளங்களுக்கும் நன்றி நன்றி என்று ஆயிரம் தடவை சொல்லி, விடை பெறுகின்றேன். ●



# நாட்டியப் பணிக்கு கௌரவம்

**- ரஞ்சி திருச்செல்வம் ('தமிழர் தகவல்' - கனடா)**

புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும், தாயக உணர்வினை உணர்த்தும் 'நாட்டியாலயம்' என்ற உயிர்ப்போடு பரத நாட்டியக் கலைக்குப் புகழ் சேர்க்கும் ஐரோப்பாவின் முன்னணி நடன ஆசிரியயையாகத் திகழ்பவர் ராகினி ராஜகோபால்.

தாயகத்திலும், புலம் பெயர்ந்த மண்ணிலும் நாட்டியப் பணியை நிறைவு செய்து வெள்ளி விழா ஆசிரியை என்ற பெருமைக்குரியவர் இவர்!

இருபத்தி மூன்று ஆண்டுகளுக்குமுன் சொந்த மண்ணிலிருந்து தாங்கொணாத் துயரங்களையும், வேதனைகளையும் நெஞ்சிலே சுமந்து கொண்டு, அகதியாக லண்டனைத் தஞ்சமடைந்த போது, தாம் பயின்று பயிற்றுவித்து உயிருக்குயிராக நேசித்த நாட்டியக் கலையையும் சுமந்து கொண்டு வந்த இவர் - தாயகத்தில் இவர் உருவாக்கிய 'நாட்டியாலயா' நடனப் பள்ளியின் பணியை அதே பெயருடன் லண்டனிலும் தொடர்ந்தார்.

இங்கிலாந்தில் வாழும் தமிழர்கள் அனைவருக்கும் நன்கு பரிச்சயமான நடனப் பள்ளியாகத் திகழ்கிறது 'நாட்டியாலயா'. நான்கு வயதிலிருந்து நூற்றுக்கும் மேலான சிறார்கள் பரதநாட்டியம் கற்கிறார்கள். இந்த நாட்டியப் பள்ளியிலிருந்து ராகினி ராஜகோபால் பதினான்கு மாணவிகளை இதுவரை அரங்கேற்றம் செய்துள்ளார். அத்தனை பேரும் ஏழு ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ச்சியாக இவரிடம் நடனம் பயின்றவர்கள். இரு அரங்கேற்றங்களை ஜெர்மனியிலும் நடத்தியிருக்கிறார்.

ஐரோப்பிய நாடுகளில் நடக்கும் அரங்கேற்றங்களுக்கும் நாட்டிய நிகழ்ச்சிகளுக்கும் இவர் நடன ஆற்றலையும், தாயக உணர்வு கொண்ட இவரது நாட்டியக் கலையையும் மதித்து இதுவரை பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினராகவும் அழைத்துக் கௌரவிக்கிறார்கள். தங்கள் நிகழ்ச்சிக்குப் பெருமை சேர்க்கிறார்கள்.

ராகினி ராஜகோபாலின் 'நாட்டியாலயா' நிறுவனத்தின் மாணவிகள் வழங்கும் நிகழ்ச்சிகளை லண்டனில் இப்போது மக்கள் விரும்பிச் சென்று பார்த்து ரசிக்கிறார்கள். தனித்துவம் மிக்க நிறைவான நிகழ்ச்சியாக மக்கள் மனதை நிறைவு செய்கின்றன.

மானிப்பாயில் காலஞ்சென்ற அரசரத்தினம் , மங்கையற்கரசி தம்பதியருக்கு எட்டாவது பிள்ளையாகப் பிறந்த ராகினியின் பரத நாட்டிய அரங்கேற்றம் 1972ம் ஆண்டு அவரது பதினைந்தாவது வயதில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. ஈழத்தின் பிரபல நாட்டிய ஆசிரியையும், கலாஷேத்திரத்தின் கண்டிப்போடு பரத நாட்டியத்தை பயிற்றுவித்து வரும் புகழ் மிக்கவரும், தற்போது கனடாவில் கருதி லை பைன் ஆர்ட்ஸ் அகடமியின் பரத நாட்டிய ஆசிரியையுமான சாந்தா பொன்னுத்துரையின் முதல் மாணவி என்ற பெருமையும் இவருக்கு உண்டு. தனது அரங்கேற்றத்தைத் தொடர்ந்து இரண்டு வருடங்கள் சென்னையில் பத்மஸ்ரீ அடையாறு லட்சுமணனின்

நாட்டியப் பள்ளியில் பரத நாட்டியத்தின் உயர் தத்துவங்களையும், நட்டுவாங்கத்தையும் முறைப்படி பயின்றார். தமிழீழத் தமிழர்களின் வாழ்வில் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்திய, 1974ல் யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் ராகினி நடனம் ஆடி, உலக அறிஞர்களது பாராட்டுதல்களைப் பெற்றார். யாழ்ப்பாணத்தில் இவரது நடனம் பல மேடைகளை அலங்கரித்துச் சிறப்புப் பெற்றது.

இலங்கையில் நுண்கலைப் பிரிவில் முதல் முறையாக அரசினால் 1975ம் ஆண்டு நடன ஆசிரியைகள் நியமிக்கப்பட்ட போது நியமிக்கப்பட்ட முதல் ஐவரில் ராகினியும் ஒருவர். பத்தாண்டுகள் தொடர்ந்து இளவாலை, கொழும்பு, நீர்கொழும்பு, வவுனியா, மானிப்பாய் ஆகிய பகுதிகளில் கடமையாற்றிய பின் தனது கணவருக்கு ஏற்பட்ட அரசு கைக்கூலிகளின் 'நெருக்குதல்' களினால் குடும்பத்தோடு லண்டன் வந்து சேர்ந்தார்.

லண்டனில் தனது நடனப் பள்ளி மூலமாக ஆரவாரமில்லாமல் கலைத் தாய்க்குப் பணியாற்றி வரும் ராகினிக்கு லண்டனில் உள்ள எந்த நடன ஆசிரியைகளுக்கும் இல்லாத தனிச் சிறப்பு ஒன்று உண்டு. லண்டனில் உள்ள அரச ஆங்கிலப் பாடசாலையில் நாட்டியத்தைப் பயிற்றுவிக்கும் முழுநேர ஆசிரியையாகக் கடமையாற்றுகிறார். இங்கு பயிலும் பல்லினத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஆடற் கலையை கற்பிப்பது இவருக்குக் கிடைத்த நல்ல சந்தர்ப்பம். இதனால் இங்கிலாந்தின் தேசியத் தொலைக்காட்சிகளில் கறுப்பு வெள்ளை ஆசிய ஒருங்கிணைந்த சிறார்களின் நடன நிகழ்ச்சிகளை இப்பாடசாலை மூலமாக தயாரித்து அளித்திருக்கிறார். இதுவே இவரது தனிச்சிறப்பு!

லண்டனில் மாவீரர்கள் தின விழா, புனர்வாழ்வுக்கழக விழா, செஞ்சோலைச் சிறார் விழா என்று நாட்டுப் பற்றுள்ள அனைத்து விழாக்களிலும் இவரது மாணவிகள் தவறாது மேடையேறி வருகின்றனர். ஆண்டுக்கு ஆண்டு 'நாட்டியாலயா' நடத்துகின்ற நவராத்திரி விழாக்கள் மண்டபம் நிறைந்த தமிழ்க் கலைவிழாவாக பெருமை பெறுகின்றது.

ஒரு மாதத்துக்குள் தமது மூன்று மாணவிகளை அரங்கேற்றியது இவரது கடின உழைப்புக்கு ஒரு சான்று. மூன்றாவது அரங்கேற்றமாக லண்டனில் ஆயிரம் பேர் நிறைந்த லண்டன் பல்கலைகழக லோகன் மண்டபத்தில் நடந்த சங்கீதா என்ற மாணவியின் பரத நாட்டிய அரங்கேற்றத்துக்கு இவரது குரு சாந்தா பொன்னுத்துரை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அவர் முன்னிலையில் தனது மாணவியின் அரங்கேற்றம் நடந்ததைப் பெருமையாகக் கருதுகிறார்.

தன்னை அரங்கேற்றிய குருவின் பாராட்டுதலைப் பெற்றதைக் கௌரவமாகக் கருதுகிறார்.



**கனடா, ரொறொன்ரோவில் ராகினி ராஜகோபால் அவர்களுக்கு 2002ம் ஆண்டில் இருபத்தைந்து வருடச் சேவையைக் கௌரவிக்கும் வகையில் 'தமிழர் தகவல்' கலைத்துறைச் சேவை விருதுடன், யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவர் தலைவனாகவும், கிரிக்கெட் அணித் தலைவனாகவிருந்து புகழ்பெற்ற எஸ்.தி.அகிலன் ஞாபகார்த்த தங்கப் பதக்கமும் சூட்டப் பெற்றது.**

'நாம் போராடுவது தமிழீழ மண்ணுக்காக மட்டுமல்ல. தமிழ் பண்பாடுகளுக்காகவும்...'' என்று தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் சொன்ன கருத்துக்களுக்கு உயிரூட்டும்- புலம்பெயர்ந்த நாடுகளில் நம் கலையூடாக நம் குழந்தைகளுக்கு நமது பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் ஊட்டும் ராகினி போன்றவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்களே.

நாட்டியமும், நாடகமும், ஆடலும், பாடலும் தென்னிந்தியாவில்தான் ஒரு காலத்தில் வேரூன்றி வளர்க்கப்பட்டது என்பது உண்மை என்றாலும், இன்று அதனை முறைப்படி உரிய கௌரவத்தை அளித்து வருபவர்கள் வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் ராகினி போன்ற கலைஞர்களே. அந்நிய மயமான ஐரோப்பிய வாழ்க்கைப் பின்னணியில் ஒரு போராட்டத்தையே நடத்திக் கொண்டு இவ்வித உயர்ந்த நாட்டியக் கலைக்கு உயர்ந்த அந்தஸ்தை அந்நிய தேசத்தில் தேடிக் கொடுத்துக் கொண்டிருக்கும் வெள்ளி விழா நாட்டிய ஆசிரியை விருது வழங்கிக் கௌரவிப்பதில் தமிழர் தகவல் பெருமையடைகிறது.

பிரபலமான தமிழ்ப் பத்திரிகையாளர் ராஜகோபாலின் துணைவியார் என்ற பெருமையும் 'தமிழர் தகவல் விருது' பெறும் பரத நாட்டிய ஆசிரியை ராகினிக்கு உண்டு. ●

**-தமிழர் தகவல் (கனடா) 11வது ஆண்டு மலர் 2002**

# பெற்றோரின் பார்வையில் நாட்டியாலயா...

- கலா செல்வராஜா

**நா**ட்டியாலயா என்பது வெறுமனே ஒரு நாட்டியப் பள்ளி அல்ல! அதற்கும் மேலாக ஒரு அன்னியோன்யம்- அன்பு - அரவணைப்பு என்பவற்றை ஒருங்கே சேர்த்து வழங்குகின்ற ஒரு இடமாக விளங்குகின்றது. நூறுக்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்டு இயங்குகின்ற "நாட்டியாலயா" நடனப்பள்ளி தனிநபர் தாபனமாக ஆரம்பிக்கப்பட்டாலும் அதன் தனித்துவமே பெற்றோரையும் ஒரு அங்கமாக மதித்து கூட்டு சேர்ந்து இயங்குவதுதான்! ஆசிரியர்- மாணவர்- பொற்றோர்களுக்கிடையிலான புரிந்துணர்வுகள்- தொடர்புகள்- கருத்துப்பரிமாற்றங்கள் நாட்டியாலயாவின் பண்முக வளர்ச்சிக்கு உறுதுணையாக நிற்கின்றன. இதுவே நாட்டியாலயாவை தனித்த ஒரு தாபனமாக உயர்த்திக் காட்டுகின்றது.



இதன் தாபகரான நடன ஆசிரியை திருமதி ராகினி ராஜகோபாலின் தன்னலமற்ற சேவை, அயராத உழைப்பு, நிகழ்ச்சிகளை மேடையேற்றும் நேர்த்தி, எளிமை, இனிமை இவையனைத்தையும் விட மாணவர்களையும் பெற்றோரையும் மதிக்கும் உயர்பண்பு என்பன இவரை மற்றவர்களிடம் இருந்து தனித்துவம் மிக்கவராக வேறுபடுத்திக் காட்டுகின்றன.

தன்னிடம் கற்கும் மாணவர்கள் பல மேடைகளிலும் ஜொலிக்க வேண்டும்- இலைமறை காயாக இருக்கும் அவர்களுடைய திறமைகள் மற்றவர்களால் அறியப்படவேண்டும்-மதிக்கப்பட வேண்டும் என்பதற்காக தனது சிரமத்தைக் கூட பாராது, தமக்கு கிடைக்கின்ற வாய்ப்புகளை சரிவர பயன்படுத்தி, மாணவர்களை பயனடையச் செய்வார். எந்த ஒரு நாட்டிய நிகழ்ச்சியை ஒழுங்குபடுத்தும்போதோ, மேடை நிகழ்ச்சிகளை பொறுப்பேற்கும் போதோ பங்கேற்கின்ற மாணவர்களுடைய பொருளாதார நிலைமைகளை கவனத்திற்கொள்ளத் தவறுவதில்லை. வீண் ஆடம்பர செலவுகளுக்கு இடமளிக்காமல் உள்ளதைக் கொண்டு நல்லது செய்கின்ற அவருடைய திறமைதான் பெற்றோர்களிடத்தில் அவருக்கு பெருமதிப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. 'நாட்டிய நிகழ்ச்சியா?' என்று மலைப்படைந்து, அலுத்துக் கொள்வதற்குப் பதிலாக பெற்றோர்கள் ஆர்வத்துடன் அவருக்கு உறுதுணையாக இருக்க விரும்புவதற்கும் இதுவே காரணமாகும்.

இன்று முப்பதாவது ஆண்டு நிறைவை கொண்டாடுகின்ற 'நாட்டியாலாயா'வின் பரிணாம வளர்ச்சியில் ஒரு மைல்கல்லாக அமைந்தது, அது அங்கீகரிக்கப்பட்ட ஒரு பரீட்சை நிறுவனமாக தன்னை பதிவு செய்து கொண்டமையாகும். இந்த முயற்சி பெற்றோரால் பெரிதும் வரவேற்கப்பட்டதொன்றாகும். தம் பிள்ளைகளின் நடன பரீட்சைகளுக்காக ஒரு நாள் பயணத்தை மேற்கொள்ளும் சிரமங்களில் இருந்து பெற்றோருக்கு விமோசனம் அளித்த "நாட்டியாலயா" தனது முதலாவது பரீட்சையை கடந்த வருடம் சுயமாக நடத்தி வெற்றி கண்டது.

திருமதி ராகினி ராஜகோபாலின் இந்த நாட்டியப் பயணம் தங்கு தடையின்றி தொடர- பன்மடங்காகப் பெருகி வளர நிச்சயம் எம் பெற்றோர்கள் உறுதுணையாக இருப்பார்கள்; வாழ்த்துவார்கள். ஆசிரியரின் 'நாட்டியாலயா'வின் வளர்ச்சியில் - உயர்ச்சியில் நாங்களும் ஒரு சிறு பங்காளராக இருக்கிறோம் என்று கூறிக் கொள்வதில் பெற்றோர் சார்பில் பெருமையடைகின்றேன். ●



# மனம் திறந்து ராகினி பேசுகிறார்...

- 'ஒரு பேப்பர்' நேர்காணல்

அன்னியமான ஐரோப்பிய வாழ்க்கைப் பின்னணியில் ஒரு போராட்டத்தையே நடத்திக் கொண்டு நாட்டியக் கலைக்கு உரிய அந்தஸ்தை அன்னிய மண்ணிலும் காத்துக் கொள்ள சில நாட்டிய ஆசிரியர்கள் முயன்று வருகிறார்கள். இந்த வரிசையில் மாவீரர் நிகழ்ச்சிகளிலும், வெண்புறா நிகழ்ச்சிகளிலும் தம் நடனங்களை அரங்கேற்றும் முன்னணி ஆசிரியை 'நாட்டியாலயா' நாட்டியக் கல்லூரியின் அதிபர் திருமதி ராகினி ராஜகோபால் அவர்களுடனான நேர்காணல்.



***? வருடா வருடம் நினைவெழுச்சி நாள் நிகழ்வில் தொடர்ந்து நிகழ்ச்சிகளை நடத்துகிறீர்கள். இது கலைஞர் என்ற முறையில் மாவீரர்களுக்கு நீங்கள் செலுத்தும் வணக்கமா? அல்லது தொழில்முறை சார்ந்த விஷயமா?***

நினைவெழுச்சி நாள்களுக்காக மட்டுமல்ல, மாவீரர் நிகழ்ச்சிகளாக, புனர்வாழ்வுக்கழக விழாக்களாக,. செஞ் சோலை சிறார்கள் நினைவுகளாக, வெண்புறா நிதி உதவியாக இருந்தால் என்ன, தாயக உயிர்ப்போடு கலந்த ஈழ விடுதலை உணர்வுள்ள நிகழ்ச்சிகளை கடந்த 20 ஆண்டுகளாக நடத்தி வருகிறேன். மறைந்த மாவீரர் கிட்டு அவர்கள் வீட்டுக்கு வந்து எமது நடன நிகழ்ச்சிகளை பாராட்டி அங்கு எடுக்கப்பட்ட விடுதலை நடனத்துக்கு அபிநயம் பிடித்த எங்கள் மாணவியரின் படமொன்றை பிரேம் செய்து கொண்டு வந்து தந்ததையும் இன்று பெருமையாய்க் கருதுகிறேன்.

விடுதலைப் புலிகளின் நிகழ்வுகளில் கலந்து கொண்டால் தாயகத்திற்குச் செல்ல முடியாது என்ற காரணத்தைச் சொல்லி சில பெற்றோர்கள் ஆரம்பத்தில் மறுத்தார்கள். மிகக் கஷ்டப்பட்டு சில பிள்ளைகளை இந்நிகழ்ச்சிகளில் பங்கு



கொள்ள வைத்தேன். இன்று இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதைப் பெருமதியாக கருதுமளவுக்கு நிலைமை மாறி இருக்கிறது.

இவ்விதமான நிகழ்ச்சிகளுக்குப் பெற்றோர்கள் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்குகிறார்கள். லண்டனில் இவ்வாண்டு நடைபெற்ற நினைவெழுச்சி நாளுக்காக இரண்டு நாட்டிய நிகழ்ச்சிகளை வழங்கினேன். முப்பது பெரிய சிறிய பிள்ளைகள் பங்கு கொண்டார்கள். நான்கு கிழமைகளாக ஒவ்வொரு நாளும் இரவு பதினோரு மணி வரை பயிற்சி அளித்தேன். ஈழத்து கவிஞர்களின் விடுதலை உணர்வான பாடல்களிலுள்ள வரிகளை நன்கு புரியவைத்து அபிநயங்களைச் சொல்லிக் கொடுத்தேன். எங்கள் தலைவரின் மகத்துவத்தை அவர்களுக்குச் சொன்ன போது வியந்தார்கள். மகிழ்ந்தார்கள். உணர்வோடு ஆடினார்கள்.

இந்த வருடத்தில் மட்டும் பல பொது நிகழ்ச்சிகளில் எனது 'நாட்டியாலயா' மாணவிகள் பங்கு கொண்டிருக்கிறார்கள். தாயகத்தில் காலிழந்த வெண்புறா நிதிக்கு பல விடுதலை உணர்வுள்ள பாடல்களுக்கு நடனங்களை வழங்கினார்கள். அன்று தியாகி திலீபன் பிறந்த நாள். பாடலுக்கு நடனமாடினார்கள். இவற்றை எல்லாம் பல நாட்கள் பல மணி நேரம் பயிற்றுவித்துத்தான் மேடை ஏற்றுகிறேன். இதுமட்டும் அல்ல. எனது 'நாட்டியாலயா' மாணவிகள் சார்பில் சேர்க்கப்பட்ட நிதி ஒன்றையும் வழங்கினோம்.

எனது நேரத்தில் பெரும்பகுதியை இவ்வகையாகச் செலவு செய்வதற்காக நான் எந்தவிதமான கைமாறோ பிரதிபலனோ எதிர்பார்க்கவில்லை. இவ்விதமான நிகழ்ச்சிகளை நடத்துகிறவர்கள் இதனை அறிவார்கள். நீங்களே இப்போது சொல்லுங்கள் மாவீரர்களுக்கு வணக்கமா? அல்லது தொழில்முறை சார்ந்த விஷயமா?

**? பரத நாட்டியம் ஈழத்தமிழர்களின் பாரம்பரிய கலையாக இல்லாவிட்டாலும், இன்று நம்மவர்களால் குறிப்பாக இளைய தலைமுறையினரால் ஆர்வத்துடன் பயிலப்படுகிறது. இந்தத் துறையில் ஈழத்தவர் குறிப்பிடும் படியாக ஏதாவது முத்திரை பதித்து உள்ளார்களா? இல்லாவிடில் எதிர்காலத்தில் அப்படி ஏற்படக்கூடிய சாத்தியமிருக்கிறதா?**

ஒரு காலத்தில் தென் இந்தியாவில் தான் பரத நாட்டியம் வேரூன்றி வளர்க்கப்பட்டது. உண்மை என்றாலும் இன்று முறைப்படி உரிய கௌரவத்தை வெளிநாடுகளில் வாழும் புலம் பெயர்ந்த தமிழர்கள் அளித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

பரத நாட்டியம் இல்லாத ஒரு நிகழ்ச்சியே இல்லை என்ற அளவுக்கு இன்று நிலைமை இருக்கிறது. நடன ஆசிரியைகளை மதிக்கிறார்கள். டாக்டர் ஆகவோ, உயர்கல்வி பயில்பவராகவோ இருப்பவர்கள் கூட தாம் நடனம் பயின்று அரங்கேற்றம் செய்ததை பெருமையாகக் கருதுகிறார்கள். சுவிஸ் நாட்டில் விடுதலைப் பாடல்களுக்கு நடனமாடும் நாட்டிய மயில் போட்டிகள் பார்த்துச் சிலிர்த்துப் போனேன். நிறைய மாணவர்களும். ஆசிரியைகளும் கலந்து கொள்ளுகிறார்கள். இலங்கை மற்றும் வெளிநாடுகளில் இருந்து மத்தியஸ்தம் செய்ய நடன ஆசிரியர்கள் வருகிறார்கள். ஆர்வத்துடன் ஆடுகிறார்கள். இதெல்லாம் முத்திரை பதித்துக் கொண்டிருப்பதாகவே உணர்கின்றேன்.

**? பரதம் போன்று முறைப்படி ஆடப்படும் நடனங்களை விட எந்த முறைமையும் இல்லாத திரைப்பட நடனங்களை பரந்துபட்ட மக்கள் அதிகம் ரசிப்பதாக தெரிகிறது. இது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

நீங்கள் சொல்கிற 'பரந்துபட்ட மக்கள்' ரசனையைப் பற்றி யோசித்துப் பார்க்கிறேன். ஏன் பெற்றோர்களே தமது பிள்ளைகள் அப்படி ஆடுவதை முன்வரிசையில் இருந்து ரசிப்பதாக ஒரு முறை யாரோ நகைச்சுவையாய் சொன்னார்கள். இங்கு நடக்கும் பல்கலைக்கழக நிகழ்ச்சிகளில் கூட இப்படியான கவர்ச்சி நடனங்கள் ஆடப்படுகின்றன. சரி நீங்கள் சொல்லுகிறபடி 'பரந்துபட்ட மக்கள்' என்று வைத்துக் கொண்டாலும், எக்சல் மண்டபத்தில் 20 ஆயிரம் மக்கள் கூடியிருந்து ஈழ விடுதலை உணர்வோடு கூடிய ஆடல் பாடல்களை ரசிக்கவில்லையா? இவர்கள்

'பரந்துபட்ட மக்கள்' இல்லையா?

***? மேலைத் தேச - கீழைத்தேச நடன முறைகளை இணைத்து ஒரு Fusion ஆக சிலர் பரீட்சிக்கிறார்கள்! நீங்கள் இப்படி முயற்சித்தது உண்டா?***

பாரம்பரிய நடனத்தை முறைப்படி பயிற்றுவிப்பதிலேயே எனது முழுக்கவனமும் இருப்பதால் இந்த Fusion பற்றி எல்லாம் நான் இன்னும் சிந்திக்கவில்லை.

***? எங்களுடைய கலாச்சாரமோ, மொழியோ சரியாகத் தெரியாத இங்கு வாழும் எமது பிள்ளைகளால் எப்படி சம்பவங்களை புரிந்து கொண்டு பாவங்களைக் காட்டி அபிநயிக்க முடிகிறது? அல்லது இப்படிப்பட்ட அறிவு அவசியமில்லையா?***

நான் இங்குள்ள அரசாங்க ஆரம்ப பாடசாலை ஒன்றில் முழுநேர ஆசிரியையாகக் கடமையாற்றுகின்றேன். எமது மொழியோ, கலாச்சாரமோ புரியாத ஆங்கில - கறுப்பின, குஜராத்தியப் பிள்ளைகளுக்கு பரத நாட்டியம் பயிற்றுவித்து பாடசாலை நிகழ்ச்சிகளிலும் ஆங்கில தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் நடனங்களை வழங்கி வருகிறேன்.

தமிழ்ப் பாடல்களுக்கு நடனம் ஆடும்போது அவர்களே சம்பவங்களைப் புரிந்து பாவங்களைக் காட்டும்போது, தமிழ்ப் பெற்றோர்களுக்கு பிள்ளைகளாக பிறந்தவர்களுக்கு இது ஒரு பிரச்சினை என்று நினைக்கிறீர்களா?

ஆசிரியர் சரியாக இருந்தால் ஆர்வம் இருக்கிற ஆப்பிரிக்கப் பிள்ளைகளுக்கும் பரத நாட்டியம் பயிற்றுவிக்கலாம். அதற்காக நாட்டியம், கலாச்சாரம் மொழிஅறிவு முற்றுமுழுதாகத் தேவை என்றில்லை.

***? தாயகத்தில் கூட ஆண்கள் பரதநாட்டியம் ஆடியிருக்கிறார்கள். பரதநாட்டிய விற்பன்னர்களாக இருந்திருக்கிறார்கள். இங்கே இது தனிய பெண்கள் சம்பந்தப்பட்ட விடயமாக மட்டுத்தப்பட்டுள்ளது. ஏன் இந்த நிலை?***

நீங்கள் சொன்னது போல தாயகத்தில் நடன ஆசிரியர்களாக பெருமை வாய்ந்த சிலர் இருந்திருக்கிறார்கள். இங்கும் இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால் உழைத்து குடும்பத்தை பார்ப்பதற்கு இம்மாதிரியான துறைகள் அவ்வளவாக உதவாது என்பதனால் இங்கு அரிதாகவே உள்ளனர். பாரிஸில் இருவர் பரத நாட்டியம் பயிற்றுவிக்கிறார்கள். கனடாவிலும் ஓரிருவர் இருக்கிறார்கள்.



***? இங்கு பலராலும் பேசப்படுகின்ற, கேலியாக என்று கூடச் சொல்லலாம். அரங்கேற்ற நிகழ்வுகள். பெரும் செலவில் சில நேரம் தமது வசதியையும் மீறி நடத்தப்படுவது அவசியமா?***

எனது பரதநாட்டிய அரங்கேற்றம் நடந்த போது ஆடம்பரச் செலவில்லாமல் மிகச்சிக்கனமாக நடந்தது. எனது நடன ஆசிரியை சாந்தா பொன்னுத்துரை நடனத்தில் மட்டும்தான் கவனம் செலுத்துவார்.

ஆடைகள் கூட இரண்டு மூன்றுக்கு மேல் மாற்றக்கூடாது என்பதில் கண்டிப்பானவர். அப்போது எனது தந்தையாரின் வருமானத்தில் இப்படியொரு அரங்கேற்றம் நடத்துவதென்பது கஷ்டமாக இருந்தது. இங்கே நிலமை வேறு. வசதிகள் உள்ளது. லோகன் மண்டபத்தில் செலவாகிற தொகை 3500 பவுண்கள். கொஸ்ரியும் ஆறு ஏழு என்று மாற்றி அழகு பார்க்கப் பெற்றோர் விரும்புகிறார்கள். மற்றவர்களைப் பாதிக்காத வகையில் நடத்தப்படுகிற ஒரு அரங்கேற்றம் அவசியமா? இல்லையா, என்று பேசுவது அவசியமில்லை என்று நினைக்கிறேன்.

***? தமிழில் திரு, திருமதி, செல்வி என பெயர்கள் விழிக்கப்படும் போது, இசை நாட்டிய கலைஞர்களை மாத்திரம் சிறி, சிறிமதி, குமாரி என வடமொழி சொற்களால் அழைக்கப்படுவது ஏன்?***

இது நடன ஆசிரியை சம்பந்தப்பட்ட விடயம் இல்லை. அரங்கேற்றப் புத்தகம் அடிப்பதோ அறிவிப்புச் செய்வதோ நாங்கள் சம்பந்தப்பட்ட விடயம் அல்ல. இதில் நான் கவனம் எடுப்பதும் இல்லை. நீங்கள் இந்த விடயத்தைச் சொல்லுகிறபோதுதான் யோசிக்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் திருமதி என்று போட்டுக் கொள்வதையே விரும்புகிறேன்.

***? இறுதியாக பரதக் கலையில் நாட்டியமாடுபவராக மற்றும் பயிற்றுவிப்பவராக செயல்படும் நீங்கள் ஒரு இலக்கு வைத்து செயல்படுகிறீர்களா? அந்த இலக்கை அடைந்து விட்டீர்களா?***

மன்னிக்கவும். இப்போது நாட்டி யமாடுபவராக இல்லை. பயிற்றுவிப்பவராக இருக்கிறேன். நடனம் பயில்கின்றபோது நடன நிகழ்ச்சிகளில் பங்கு பற்றி புகழ் பெற வேண்டும். நடன ஆசிரியையாக வரவேண்டும் என்ற இலக்கெல்லாம் எனக்கு இருந்தது. நடன ஆசிரியை ஆக வேண்டும் என்ற இலக்கும் நிறைவேறியது. நடன உணர்வுகளைத் தாயக உணர்வோடு நடத்தி வருகிறேன்.

நான் எப்போதுமே ஏதோ ஒரு அர்த்தத்தோடு தான் எந்தக் காரியத்தையும் செய்து கொண்டு வருகிறேன். இலக்கை நோக்கியதுதான் அப் பயணம். ●





# வள்ளுவன் பள்ளியில் ராகினி

-வ.யோகராஜா, தலைமை ஆசிரியர்
திருவள்ளுவர் தமிழ்ப் பாடசாலை

**க**லைப் பணியில் தனக்கென்று தனியிடத்தைப் பிடித்து மூன்று சகாப்தங்களைத் தாண்டி, தொடர்ந்தும் கலையுடன் இணைந்திருக்கும் திருமதி ராகினி ராஜகோபால், நம் திருவள்ளுவர் தமிழ்ப் பாடசாலையின் முன்னைய நடன ஆசிரியை மட்டுமின்றி, நம் பள்ளியின் முதலாவது நடன ஆசிரியை என்ற பெருமைக்கும் உரியவர்.

இன்றைய தமிழர் முன்னேற்றச் சங்கத் தலைவரும், பள்ளியின் முன்னைய தலைமை ஆசிரியர்களில் ஒருவருமான திரு.நாகதேவன்-காலம் சென்ற தமிழர் முன்னேற்ற கழக அங்கத்தவர் திரு.இராமசாமி ஆகியோர் வாயிலாக 1986ல் வள்ளுவன் பள்ளிக்கு அறிமுகமானார் ராகினி. வள்ளுவன் பள்ளிக்கு முதல் நடன ஆசிரியை ராகினி. அவ்வாறே ராகினி பிரித்தானியாவில் தன்முதல் நடன வகுப்புக்களை ஆரம்பிக்கத் தளம் அமைத்துக் கொடுத்தது வள்ளுவன் பள்ளி. பத்து வருடங்கள் நம் பள்ளியோடு தொடர்ந்து இணைந்திருந்த ஒரே நடன ஆசிரியையும் ராகினியே என்றால் மிகையாகாது.

நடன வகுப்புகளுக்கு மாணவர்கள் கட்டணம் செலுத்தாத காலம் அது. முப்பத்தைந்துக்கும் மேற்பட்ட மாணவிகளோடு ஆரம்பமானது அவரது பணி. மூன்றரை சகாப்தங்களைத் தாண்டி, கிழக்கிலங்கையில் தலை நிமிர்ந்து நிற்கும் எம் தமிழ் பள்ளியோடு ஒரு சகாப்தம் வாழ்ந்து, பள்ளி மாணவர்களின் நடனத்துறை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த ராகினியை அவரது மாணவர்கள் மறக்க முடியாது.

ராகினி மிகவும் சுறுசுறுப்பானவர். மாணவர்களோடு அன்பாக நடந்து, பெற்றோர்களை அனுசரித்துப் போகும் பண்புள்ளவர். 'நடனமும் நானும்' என்று இருந்துவிடாமல் மற்றைய ஆசிரியர்களோடும் பேசிப் பழகும் சிறப்பான குணம் கொண்டவர்.

பாடசாலை ஆண்டு விழா, தமிழர் முன்னேற்றக் கழகப் பொங்கல் விழா நடைபெறும் நாட்களில் ராகினியின் மாணவர்கள் எல்லோரையும் மேடையில் காணலாம். புலவர் சிவநாதனின் 'குடி மறந்த குறள்', அமரர் வீரமணி ஐயரின் 'நந்தலாலா' போன்ற நாட்டிய நாடகங்களை திறம்பட மேடையில் ஏற்றியமை பாராட்டுக்குரியவை. பின்னல் கோலாட்டம், மயில், பாம்பு, மான்குட்டி என்று பல ரக நடனங்களை சிறாருக்குப் பயிற்றுவித்து, அவர்கள் ஆர்வத்தை வளர்த்து பலரும் போற்றும் வண்ணம் அவர்களை மேடை ஏற்றிப் பாராட்டுக்களை பெற்றவர் ராகினி என்பது குறிப்பிடத்தக்கது.

ரூட்டிங்கில் இருந்து சனிக்கிழமை தோறும் ஈஸ்ற்காம் வரும் பிரயாணக் கஷ்டங்கள், குடும்பப் பொறுப்புகள் போன்ற சொந்தக் காரணங்களை முன்னிட்டு, ராகினி பள்ளியில் இருந்து விலக முடிவு செய்தபோது, அவரது மாணவர்களும், பெற்றோர்களும் மிகவும் கவலைப்பட்டார்கள். மாணவர்களின் நடன வகுப்புகள் தடையின்றி தொடர வேண்டுமெனும் எண்ணத்தில், ராகினி தனக்குத் தெரிந்த ஓர் ஆசிரியையை மாணவர்கட்கு அறிமுகப்படுத்திவிட்டுத்தான் தன் பணியை நிறுத்தினார்.

வள்ளுவன் பள்ளி தம் நடன ஆசிரியைக்குப் பிரியாவிடை கொடுத்தபோது, ஆசிரியை திருமதி மனோகரன் மிகவும் பிரியமுடன் பேசிக் கொண்டிருந்த வேளையில், ராகினி உணர்ச்சி வசப்பட்டுக் கண் கலங்கியதை மறக்க முடியாது. ராகினி திருவள்ளுவர் தமிழ்ப் பாடசாலையில் பணி புரிந்த காலத்தில், பள்ளி மாணவர்களின் கலை வளர்ச்சியில் அவர் காட்டிய ஆர்வம், அக்கறை, அவரது கடின உழைப்பு, பள்ளியின் பதிவுகளில் மறக்க முடியாதவை.பள்ளியும் அதனை வழி நடத்தும் தமிழர் முன்னேற்றக் கழகமும், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவ, மாணவிகளும் ராகினி ராஜகோபாலின் வளர்ச்சி கண்டு பூரிப்படைகின்றனர். அவரது கலைப் பணி தொடர வாழ்த்தி நிற்கின்றனர்.●

Headteacher: Clare McDonnell MA
Deputy Headteacher: Ruby Farooqi-Patel BSc

Franciscan
Primary School



2nd May 2008

221Franciscan Road, london SW17 8HQ
Tel: 0208672 3048 Fax: 020 8672 9452
Email: head@franciscan.wandsworth.sch.uk

## Praise for Ragini Rajagopal

It is a great honour to be contribute to the celebration of Mrs . Rajagopal's anniversary.

Ragini Rajagopal brought her young child sharmini to Franciscan school in 1986. A few months later Ragini offered to help us to prepare for a Diwali assembly and it was at that moment that I discovered the extraodinary talents and skills that she possesses. Ragini told the pupils all about Diwali and she performed a most graceful dance for them.

following this, Ragini was appointed to work at Franciscan combining her skills as a dance teacher with general support for pupils in their every day lessons and activities. In this role Ragini has consistently demonstrated qualities of care, consideration and intergrity.



however, without doubt, it is Ragini's skills as a dance teacher and choreographer which have made her presence at Franciscan absolutely invaluble. Early on in her career at Francican she helped us to participatein the huge Ramayana festival in Battersea Park. It was here that her daughter's skills (learnt of course from her mother) caught the eye of a televison producer. As a result of this Ragini was invited to organise an item for the TV programme "watch". This item featured sharmini in a central role, but also included other pupils from our school and was a resounding success.

In 1988 Ragini brought her son shayamaraj to the school and he proved to be an excellent hard-working pupil and a credit to his parents.

During the subsequent years Ragini has presented countless items at events such as the Wandsworth borough show and the south of England Artsmark gold celebration at the Fairfield halls. All her productions are of a high quality and she has instilled a love for Indian dance in pupils from a wide diversity of cultures and back grounds.

Ragini Rajagopal is valued colleague, an inspripational teacher, a Wonderful parent (and grand-parent) and a true ambassador for Indian dance.

Clare McDonnell

Clare McDonnell
Head teacher

# போற்றுதலுக்குரிய நடனக்கலைஞர்



- கயிலை ஆர்.நாகநாதசிவம் குருக்கள் (பிரதம குரு, லண்டன் ஸ்ரீ முருகன் கோயில்)



எல்லாம் வல்ல இறைவன் ஆன்மாக்களிடையே ஈடேற்றத்துக்காக நடத்துகின்ற படைத்தல், காத்தல், அழித்தல், மறைதல், அருளல் இவைளை சூட்சுமமாக உணர்த்துகின்ற, அரும் திரு உருவம், ஆடவல்லானின் வடிவமாகும்.

உலக இயக்கத்தில், முக்கிய பங்கு பெறும் பஞ்ச பூதங்களை தன் உருவில் தாங்கி, தனது திருவடிவே உனக்கு இளைப்பாறும் இடமென்று ஆன்மாவிற்கு அபயமளித்து, அருள் தரும் நடராஜப் பெருமானின் தத்துவத் திருநடனத்தைப் போற்றாத அருளாளர்களே இல்லை எனலாம்.

அண்டத்தை மேடையாக்கி, தண்டையைக் கால்களில் அணிந்து, நந்தி மத்தளம் கொட்ட, நாராயணன் பாலம் போட, வாணியின் வீணை நாதத்துடன் சபாநாதன் ஆடிய அந்தத் தாண்டவம், உலகம் உய்ய வழி செய்தது.



கண்களோடு கைகளும், கால்களும் உறவாடி வெளிப்படுத்தும் பாவம், ஏழு சுரங்களினால் ஏராளமான சங்கதிகளை அள்ளித்தரும் ராகம், பேரருவியாய் வாழும் இசையை பக்குவமாய்க் கேட்க வைக்கும் தாளம் - இவற்றின் முறையான கலவைகளோடு உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அபிநயங்களால், பரத நாட்டியம் உலகப் புகழ் பெற்றுத் திகழ்கிறது.

ஆன்மாக்களுக்கு அருளுவதற்காக அன்று ஆண்டவன் ஆடிய நடனம், அவனின் வாரிசுகளாக விளங்கும் நாட்டியக் கலைஞர்களால் இன்று உலகம் முழுவதும் விஸ்தரிக்கப்பட்ட, பார் போற்றும் பெரும் கலையாகப் பிரகாசிக்கின்றது.

உலக மக்கள் அனைவராலும் பார்த்து, ரசித்து பாராட்டப்படும் பரத நாட்டியக் கலையை உலகறியச் செய்வதற்கு அரும்பாடுபட்ட நடனக் கலைஞர்கள் மிகவும் போற்றுதலுக்குரியவர்கள். அந்த வரிசையில் மேலை நாடுகளில், இங்கிலாந்து நாட்டின் முதன்மையான நாட்டியக் கலைஞராகத் திகழ்பவர் நாட்டியக் கலாமணி ராகினி ராஜகோபால் அவர்கள்.

தமிழீழத்தில் பிறந்து, ஈழத்திலும், தமிழகத்திலும் முறையாக நடனம் கற்று, தில்லைக் கூத்தனின் திருவருளால், திறமையாக அரங்கேறி, தரமான நாட்டியக் கலைஞர்களின் உளமார்ந்த பாராட்டுதல்களைப் பெற்று, பெருமையடைந்த ராகினி ராஜகோபால் அவர்கள், பரத நாட்டியக் கலை உலகில் 30 ஆண்டுகாலம் அயராது பாடுபட்டு, அளவில்லாத நடன நிகழ்ச்சிகளை நடத்தியும், ஏராளமான குழந்தைகளுக்கு முறையாக நடனம் பயிற்றுவித்தும், தேர்ந்த மாணவர்களுக்கு, அனைவரும் போற்றும் வண்ணம் அரங்கேற்றங்கள் செய்தும் புகழ் பெற்று இருக்கிறார்கள்.

நடனக் கலை உலகுக்கு 30 ஆண்டுகாலம் அவர் ஆற்றிய சேவைகளைப் பாராட்டும் வண்ணமாக நடைபெறும் ராகினியின் இந்தப் 'பரதசங்கமம்' பெருமை தரும் விழா என்றால், அது மிகையாகாது.

இறைவனிடத்தில் பக்தியும், பெரியோர்களிடம் பணிவும், அவையில் அடக்கமும், குழந்தைகளிடத்தில்

# கலையரசன்

# அளித்த வாழ்த்துரை



1964-ம் ஆண்டு மார்ச் மாதம் 30ம் தேதி அன்று தான் எனது 75வது வயது பூர்த்தியான தினம். கலா ரசிகர்கள் சார்பில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. மாலை 5 மணியிலிருந்து இரவு 2 மணி வரை கலை நிகழ்ச்சிகளைச் சங்கிலித் தொடராக அமைத்து எம்மை உற்சாகமூட்டினார்கள். அன்று ஒரே உயரம் தோற்றமுள்ள இரு சிறுமிகள் லயந்தவறாமல் துரிதகதியில் பரத நாட்டியம் ஆடி எம்மையும், சபையோரையும் மெய்மறக்கச் செய்தார்கள். அவர்கள் முகங்களிலே ஒளிர்ந்த பாவம், கைகளிலே தெரிந்த நளினம் - நடனத்தின் போது பம்பரம்போல் சுழன்ற உடல்வாகு இத்தனையும் கண்ட நானும் எனது மனைவியும் அன்றே 'யார் இந்தக் குழந்தைகள்' என விசாரித்தோம்.

''எனது பிள்ளைகள் நடனக்கலையை ஓரளவு கற்றுள்ளார்கள். அவர்களை அரங்கேற்ற எண்ணுகிறோம். உங்கள் ஆசி அவர்களுக்கு வேண்டும்'' என்று அவர்களது தந்தை அரசரத்தினம் கேட்டபோதே அன்றே அப்படி அழகாக ஆடிய குழந்தைகள் இன்று எப்படி ஆடுவார்கள் என்று என்னால் உணரக்கூடியதாக இருக்கிறது. அதுவும் சென்னை கலாசேத்திரா மாணவியான சாந்தா பொன்னுத்துரையின் மாணவிகள்.

உலகம் முழுக்கச் சென்று நம் கலைச் சிறப்பையும் திறனையும் காட்டி நமக்கும் நாட்டிற்கும் பெருமை தேடித் தருவார்கள் என்று பூரணமாக உறுதி கூறுகிறேன். நடன வகுப்புக்குப் போன மறுநாளே 'எப்போ அரங்கேற்றம்' என்று கேட்கும் பெற்றோர்கள் மத்தியில் கலையை உருப்படியாய்க் கற்று இன்று அரங்கேறும் இச்சகோதரிகள் ராகினி அரசரத்தினமும் விநோதினி அரசரததினமும் தாம் கற்ற கலையை பிறருக்கும் கற்பித்து கலைச்செல்வம் நாடெல்லாம் செழிக்கப் பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அவர்கள் எல்லாச் செல்வமும் பெற்று வாழ கலாதேவியை வேண்டிக்கொள்கிறேன்.

**- அமரர் கலையரசு க.சொர்ணலிங்கம், மானிப்பாய்.**

**■ ராகினி - விநோதினி பரதநாட்டிய அரங்கேற்ற மலரில் (1972) இடம் பெற்ற வாழ்த்து.**

---

அன்பும், தாய்நாட்டில் பற்றும், தமிழ் மொழியில் நேசமும், நாட்டியத்தில் ஈடுபாடும், நாயகனிடத்தில் பெரு விருப்பமும் கொண்ட ராகினி அவர்கள், வகுப்பு என்று வந்து விட்டால் கண்டிப்பும், கறாரும் மிக்கவர். ஆலயங்களின் சமய நிகழ்ச்சிகளிலும் தாய் நாட்டு உதவிகளுக்கான சமூகக் கலை விழாக்களிலும், பாடசாலை பழைய மாணவர் சங்க நிகழ்வுகளிலும் நிறைய நிகழ்ச்சிகளை ராகினி வழங்கியுள்ளார். ராகினியின் பெரு வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்குபவர் அவரது கணவர் பத்திரிகையாளர் ராஜகோபால் அவர்கள்.

தமிழுலகம் போற்றும் ஒப்பற்ற பத்திரிகையாளராக விளங்கும் அவர், ஒரு அடக்கமான ஆன்மீகவாதி; பேனா தாங்கிய போராளி.

தமிழைப் போற்றும் தவஞானி. மனிதனை மதிக்கும் மனித நேயம் நிறைந்தவர். இவரைத் துணைவனாகக் கொண்டது ராகினியின் பேறு எனலாம்.

நாட்டியத் தாரகையாக விளங்கும் மகள் ஷர்மினி கண்ணன், அன்பும், பண்பும் பாசமிக்கவர். நடனத்துறையில் தாயாருக்குப் பக்கபலமாக உள்ளவர். மகன் ஷியாம் - பெற்றோருக்கு உதவியானவர்.

தன்னுடைய வாழ்வின் பெரும் பகுதியை நாட்டியக் கலைக்காகச் செலவிட்டு தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் நடனத்துக்காகவே அர்ப்பணித்து ஏராளமான நாட்டிய மணிகளை உருவாக்கி, கலைச்சேவை புரிந்து பெருமை பெறும் நாட்டியக் கலை அரசி ராகினி அவர்கள் தில்லையில் உறையும் சிவகாமி அம்மை உடனாய சிற்சபேசப் பெருமானின் திருவருளால் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து நாட்டியக் கலை உலகில் என்றென்றும் பிரகாசிக்க வேண்டி, எல்லாம் வல்ல லண்டன் ஸ்ரீ முருகப் பெருமானைப் போற்றிப் பணிந்து வாழ்த்தி மகிழ்கின்றோம். ●

# நாட்டியாலயா மாணவ-மணிகள்


































































1. R.Thushani
2. N.Priya
3. S.Arani
4. Y.Mithulla
5. Y.Varshini
6. M.Gayathri
7. J.Jeyathakshy
8. G.Denusa
9. Jeevana
10. Dharshini
11. Ramiya
12. J.Abheeluksheiyaa
13. A.Sophe
14. A.Anna
15. J.Deepa
16. Tharani
17. K.Vigashini
18. Abbria
19. Diveya
20 K.Dellaky
21. R.Nelaa
22. J.Aishwarya
23. J.Jaishwini
24. M.Abishana
25. P.Disana
26. K.Delluxana
27. R.Accshana
28. V.Thusha
29. R.Ramjeni
30. N.Abbi
31. J.Pavithera
32. P.Kajanni
33. Sinthuga
34. Abarna
35. Aditi
36. J.Kaythiri
37. V.Christel
38. V.Thulasi
39. V.Vithushi
40. R.Thamini
41. P.Pavithera
42. G.Vanthana
43. A.Swathee
44. R.Tharshiga
45. S.Sambavi
46. Shamelee
47. V.Thuriga
48. N.Vanathy
49. Jananee
50. S.Sainthavi
51. S.Lakshini
52. V.Abbinaya
53. S.Abiramy
54. R.Tharani
55. G.Archana
56. J.Jevana
57. Y.Thievya
58. Y.Vyshnavi
59. S.Kumuthini
60. S.Jayalini
61. S.Sinthiya
62. K.Sage











63. S.Amrutha
64. T.Diluxshana
65. A.Nilargini
66. S.Kavineya
67. Nirupa
68. Rasica
69. S.Siobhan canya
70. Sophana
71. Saranya
72. R.Sinthiya
73. Ilanga
74. V.Samelee
75. S.Mayura
76. K.Lakshagi
77. G.Kasthuri
78. N.Reenaa
79. Jashiga
80. R.Srivithya
81. G.Anu
82. S.Thanu
83. Suganya
84. K.Ramiya
85. T.Janani
86. Lavanya
87. C.Sangeetha
88. T.Mini
89. Narmatha
90. S.Suba
91. Y.Mary
92. Naveela
93. C.Abiramy
94. M.Thushi Thavathy
95. C.Archana
96. S.Suganya
97. R.Yavnasri
98. Y.Julia
99. A.Aura
100. Tivani
101. V.Jassica
102. V.Tharani
103. S.Theepika
104. R.Divani
105. S.Lakshini
106. Suganya
107. N.Abbitha
108. Vyshnavi
109. R.Mugi
110. Dhanushiyaa
111. N.Sajane
112. M.Abitha
113. S. Nevetha
114. A.kayathri
115. P.Priayl
116. R.Thivane
117. Padma
118. Shayini
119. S.Abiramy
120. V.Clemeira
121. V.Sharanga
122. Dharshini
123. Deepika
124. Divani

# அரங்கேறிய சில மாணவிகள்



கவிதா

பிருந்தா

காமல் கிறிஸ்டா

சங்கீதா

தாரணி

சுபாஷினி

நீனா

ரயோ

ஜனனி

சங்கீதா

ஷர்மினி

# முப்பது அகவைகள் மேடைகளை ஆளும் முன்னணி நாட்டிய நட்சத்திரம்



-விமல் சொக்கநாதன், (வழக்கறிஞர் - ஒலிபரப்பாளர் - ஊடகர்)



சட்டம் படித்து முப்பது ஆண்டுகளுக்கு மேல் லண்டனில் வழக்கறிஞர் நிறுவனம் நடத்தி வரும் விமல், ஒலிபரப்புத் துறையில் முதிர்ச்சி பெற்றவர். இலங்கை வானொலியில் ஆரம்பித்து, இலண்டன் பி.பி.சி.யில் பயிற்சி பெற்று, இன்று பன்னாட்டு வானொலிகளிலும் அவரது குரல் ஒலிக்கிறது. வானொலி அறிவிப்பு - செய்தி வாசிப்பு - நிகழ்ச்சித் தயாரிப்பு இவற்றோடு உலக விவகாரங்கள் பற்றி இவர் வானொலியிலும் பத்திரிகைகளிலும் வழங்கும் விமர்சனங்கள் பெரிதும் வரவேற்கப்படுகின்றன.

நகைச்சுவை நிறையக் கலந்து இவர் வழங்கிய ''களம் பல காண்போம்'' என்ற உலக அரசியல் ஆய்வு நிகழ்ச்சி அரசியல் தலைவர்களையே கவர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ராகினி ராஜகோபால் அவர்களின் மாணவியரின் அரங்கேற்றங்களில் நிகழ்ச்சி முன்னிலையாளராக சிறப்பித்த விமல் இங்கு தனது நினைவுகளை மீட்கிறார்

நேரம் மாலை 6.30ஐ அண்மித்துக் கொண்டிருக்கிறது. அரங்கேற்றம் 6 மணிக்கு ஆரம்பமாகும் என்று அழைப்பிதழ் தெரிவித்தாலும் அவையோர் வந்து சேரவில்லை. 6.30 அளவில் அவை விளக்குகள் மங்கி அணைகின்றன. சபா மண்டபம் நிசப்தம் கொள்ள அதி பிரகாச விளக்குகள் திரையை நோக்கி ஒளிவெள்ளத்தை உமிழ்ந்து தள்ளுகின்றன.

இலண்டனில், எத்தனையோ தசாப்தங்களாக நான் நேரில் கண்டு அனுபவித்த அதே காட்சிகள் லண்டன் நகரின் லோகன் மண்டபமாகட்டும், பெக் தியேட்டராகட்டும், குறோய்டன் பெயர்பீல்ட் ஆஷ்குரொப்ட் அரங்கமாகட்டும். அதே பிரகாச விளக்குகள், அதே தாமத ஆரம்பம். நான் கலந்து கொண்டு பணியாற்றிய அரங்கேற்றங்களில் திரையின் மறுபக்கத்தில் அமர்ந்து கொண்டு மேடையில் நடக்கும் சம்பவங்களை சுவாரஸ்யமாக பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

திரைச்சேலை விலக சில நொடிகளே இருக்கும் அந்த வேளையில், ''மொபைலில் பேசிக் கொண்டிருக்கும்'' அந்தப் பக்கவாத்திய வித்வான். தன் புத்தம் புது பட்டுப் புடவை சரசரக்க குழம்பிப் போய் மேடையில் ஓடித் திரியும் (அரங்கேறும் பெண்ணின்) தாயார். 'இனி விட்டால் இவரைப் பிடிக்க முடியாது' என்று கருதியோ அரங்கேறும் பெண்ணை கடைசி நிமிடத்தில் 'தகத்திமிதா போஸில்' படம் பிடித்துக் கொண்டிருக்கும் படப்பிடிப்பாளர். அரங்கேற்ற நாயகியை பயிற்றுவித்து ஆட்டுவிக்கத் தயாராகிக் கொண்டிருக்கும் நாட்டிய மணியை,



மகள் ஷர்மினியுடன் ராகினி

# A Trusted name in Jewellers

Member of
The National Association
of Goldsmiths

Member of
Gemmological Association
& Gem Testing Laboratory
of Great Britain





MINAR
*jewellers*

181, Upper Tooting Road, London SW17 7TG
Tel: 020 8767 7547 Fax: 020 8767 3631
email: pravin@minar jewellers.co.uk

குருவை கவனிக்கத் தவறியதில்லை. நான் கவனித்த குருமணிகள்தான் எத்தனை ரகம்!

''ப்பூ... இதென்ன அரங்கேற்றம். ஊதித்தள்ளி விடுவேன் நான்!'' என்ற போக்கில் மிக அலட்சியமாக அமர்ந்திருபார்கள் சிலர். தமிழ்நாட்டு சன் டி.வி. மொழியில் சொல்வது போல ''ரொம்ப டென்சனாக'' வீற்றிருப்பார்கள் சில ஆசிரியைகள். மிகவும் கலகலப்பாக கடைசி நிமிடம் வரை பேசிக் கொண்டு மகிழ்ச்சி ததும்ப அமர்ந்திருப்பார்கள் சில ஆசிரியைகள்.

இன்றைய விழாவின் நாயகி ஸ்ரீமதி ராகினி அவர்கள்- இவற்றில் எந்த ரகம்? நான் முன் சொன்ன மூன்று ரகங்களையும் சேராமல், தனித்து நிற்கும் நான்காவது ரகத்தைச் சேர்ந்தவர் அவர்.

''**வா**னொலி'' என்ற தலைப்பில் இளம் தமிழ் ஒலிபரப்பாளர்களுக்கான கைநூல் ஒன்றை நான் எழுதி வெளியிட்டிருக்கிறேன். ''எந்த ஒரு ஒலிபரப்பாளன் ஒலி வாங்கியின் முன்னால் அமர்ந்து ஒலிபரப்ப ஆரம்பிக்கும் நேரத்தில் தனது முதல் நாள், முதல் ஒலிபரப்பில் காட்டிய அச்சம், மரியாதை, பக்தியை தொடர்ந்தும் காட்டுகிறானோ அதுவே அவனது வெற்றிப் பாதையின் முதற்படி'' என்று அதில் எழுதியிருக்கிறேன்.

அறிவிப்பாளர்களுக்கான நூலில் நான் எழுதியதை தனது அரங்கேற்றங்களின் போது ராகினி கடைப்பிடித்துக் காட்டுவதை நான் நேரில் கண்டு மகிழ்ந்திருக்கிறேன்; வியந்திருக்கிறேன்.

அவரது மாணவியர் இளம் நாட்டிய நர்த்தகிகள் பலரின் அரங்கேற்றங்களில் நிகழ்ச்சித் தொகுப்பாளராக நான் சேவையாற்றியுள்ளேன்.

மாலை ஆறரை அளவில் அவை மண்டபச் சந்தடி ஓய்ந்து அனைவரது கவனமும் மேடையின் பக்கம் திரும்பும் போது ஒளி வெள்ளத்தின் நடுவே அரங்கேற்ற நங்கை குருவணக்கம், இறை வணக்கம் ஆகியவற்றுடன் கூப்பிய கரங்களுடன் அரங்கப் பிரவேசம் செய்வார்.



பல மாணவியரை அரங்கேற்றிய பின்னர் கூட அந்த நேரத்தில் குரு ராகினி அவர்களை நான் கவனிக்கத் தவறுவதில்லை.

''இது எனது முதலாவது அரங்கேற்றம். எல்லாம் சுமூகமாக நடக்க அருள் புரிவாய் ஆடல் நாயகனே!'' என்று மனதால் ஜெபிப்பது போல அவரது முகம் காட்டும். அந்த உணர்வுகளின் நடுவில் ஒரு பயபக்தி, தன் குரு பக்தி. யாழ் மண்ணில் தன் குருவின் முன் தனது சொந்த அரங்கேற்றம் பற்றிய பரவசம் இவை அந்த அம்மையாரின் முகத்தில் மின்னல் வேகத்தில் தோன்றி மறையும்!

ராகினி அவர்களின் ஒவ்வொரு அரங்கேற்ற நிகழ்ச்சியும், மாவீரர் நாள் போன்ற நிகழ்வுகளில் அவர் நடத்தும் ஆடல் நிகழ்ச்சிகளும் முன்பை விடச் சிறப்பாக ஜொலிப்பதை நான் கவனித்து வியந்திருக்கிறேன்.

**ரா**கினி ராஜகோபால் தம்பதிகளின் ஒரே புதல்வி ஷர்மினி. பத்து வயது பச்சிளம் சிறுமியாக தனது அரங்கேற்றத்தை நடத்திய நாள் தொடக்கம் - 'நாட்டியாலயா'வின் பல மாணவியர் சங்கீதா, வழக்கறிஞர் றீனா மற்றும் ரம்யா போன்ற திறமையான பலரை மேடையேற்றிய நிகழ்ச்சிகளில் நான் தொகுப்பாளராக கலந்து மகிழ்ந்திருக்கிறேன்.

அந்த குட்டி நட்சத்திரங்களின் அபிநய சாதுர்யங்களை நான் மேடையில் நின்றே ரசிக்கும் வேளைகளில் என் சிந்தனையில் ஓடிய மற்றோர் கருத்தையும் இங்கு குறிப்பிட வேண்டும். தமிழ்நாட்டிலும், தமிழ் ஈழத்திலும் பரதம் பயிலும் மாணவியரிடம் கடின உழைப்பு மட்டுமே எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் இங்கு பிரிட்டன் போன்ற மேனாடுகளில் முற்றிலும் மாறுபட்ட ஒரு கலாச்சாரத்தின் நடுவில் குழந்தைகள் வளர்கின்றன. பள்ளிக்கூடம், பஸ் பயணம், தொலைக்காட்சி அனைத்துமே இந்த அன்னிய கலாச்சாரத்தை அள்ளி வார்த்தபடி இருக்கின்றன. வாரத்தில் ஒரு நாளோ இருநாட்களோ

வரும் தமிழ் மாணவிக்கு ராகினி போன்ற ஆசிரியைகள் பரதத்தை மட்டுமல்ல; எமது பழம்பெரும் புராணங்களையும், இலக்கியங்களையும் பரதத்தின் மூலம் புகட்ட வேண்டியிருக்கிறது.

உதாரணமாக:- ''தாயே யசோதா' பாடலுக்கு அபிநயம் பயிற்றுவிக்கும்போது கண்ணனுக்கு யசோதை தாயல்ல. தேவகிதான் தாய். கொலைகார மாமன் ஹம்சனுக்கு அஞ்சி கண்ணன் ஆயர் குலத்தில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று மாணவிக்கு புகட்டும் பொறுப்பு ஆசிரியை ராகினியைச் சார்ந்தது.

இதே போல மகாபாரதத்தில் சகுனி மாமாவின் சூதாட்டமாகட்டும்; திரௌபதி துகிலுரி அபிநயமாகட்டும், கதைப் பின்னணியைப் புரிந்து கொள்ளும் மாணவியர் மேடையில் ஜொலிக்கும்போது நான் இரண்டு தடவை 'சபாஷ்' போடுவது வழக்கம். ஒன்று மாணவிக்கு மற்றது, முக்கியமாக மாணவியை பயிற்றுவித்து புடமிட்டு எடுத்த குரு ராகினிக்கு. தாம் எந்த உயரத்தை தொட்டாலும் தமக்கு கலையை பயிற்றுவித்த குருவை மறக்காமல் தொழுது வரும் சிலர் மேலும் மேலும் உயரத்திற்குச் செல்வதை எனது கலைப் பயணத்தில் நான் நிறையக் கண்டிருக்கிறேன். உதாரணங்கள் பத்மஸ்ரீ யேசுதாஸ், அமரர் சீர்காழி கோவிந்தராஜன், சுதா ரகுநாதன், நம் நாட்டில் மிருதங்க நாதமணி முத்து சிவராஜா, ராகினி ராஜகோபால் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்

தனது ஆரம்ப கால நாட்டியக் கல்வி போதனா குருக்கள் லீலா கந்தையா, சாந்தா பொன்னுத்துரை ஆகியோரை ராகினி அவர்கள் போற்றத் தவறுவதில்லை.

தமது குருவை அவமதிக்கும் சிலர் பிற்காலத்தில் குப்புற விழுவதை மட்டுமல்ல, கற்ற வித்தையைக் கூட மறந்து பரிகாசத்துக்குரிய நிலையில் நிற்பதை இலண்டன் தமிழர்கள் நிறையவே கண்டிருக்கிறார்கள்.

ராகினி அவர்கள், செல்வி ராகினி அரசரத்தினமாக தன் இரட்டைச் சகோதரி வினோதினியுடன் வீரசிங்கம் மண்டபத்தில் அரங்கேற்றம் நடத்தி சுமார் 35 ஆண்டுகள் ஆகின்றன. படத் தயாரிப்பாளர் திரு.வி.எஸ்.துரைராஜா அவர்கள் தலைமையில் இந்த அரங்கேற்ற விழா நடைபெற்றது.

செல்வி ராகினி - 'ஈழநாடு', தினகரன், பத்திரிகையாளர் ஈ.கே.ராஜகோபால் அவர்களைக் கரம் பற்றி - அரசாங்க கல்வித் திணைக்கள ஆசிரியையாக இளவாலை, நீர்கொழும்பு, வவுனியா, மானிப்பாய் போன்ற இடங்களில் பணியாற்றி 1985ல் லண்டன் வந்து சேர்ந்தார்.

1988ல் தமிழீழத் தளபதி மாவீரன் கிட்டு லண்டனில் மாவீரர் தினத்தை நடத்தியபோது ராகினியின் 'நாட்டியாலயா' மாணவியர் நடன நிகழ்ச்சிகளும் அங்கு இடம் பெற்றன.

அன்று முதல் இன்று வரை மாவீரர் திருநாள் மட்டுமல்ல, வெண்புறா நிகழ்ச்சிகள், செஞ் சோலை நிகழ்ச்சிகள் மற்றும் எமது உறவுகளுக்கு எந்த நிகழ்ச்சியாகட்டும், ஏற்பாட்டாளர்கள் முதலில் பேசுவது ஸ்ரீமதி ராகினியுடன்தான்.

''இல்லை முடியாது... எனக்கு வசதியில்லை... அடுத்த தடவை பார்ப்போம்...'' போன்ற வார்த்தைகள் ராகினியின் மனதில் இல்லாத வார்த்தைகள். அவரது வாய்க்குள் வராத வார்த்தைகள்!

இப்படியாக தன் சிரமம் பாராமல், எந்தவித பிரதிபலனும் எதிர்பாராமல் சேவை மனப்பான்மையுடன் இயங்கி வரும் இந்த நாட்டிய வித்தகி தற்போது தென் மேற்கு லண்டன் பிரான்சிஸ்கன் பாடசாலையில் நாட்டிய ஆசிரியையாக பணியாற்றுகிறார்.

ஒரு நல்ல கலைஞன், ஒரு சேவையாளன் இறந்த பின் வண்ண மலர்கள் அச்சிடுவதை விட அவன் வாழும் காலத்திலேயே கௌரவிக்கப்பட வேண்டும் என்ற கருத்துடையவன் நான்.

எனவே மூத்த கலைஞரான ராகினி அவர்களின் முப்பதாண்டு கால கலைச் சேவையை கௌரவிக்கும் இந்த பரத நாட்டிய விழாவில், இந்தக் கருத்துக்களை கட்டுரை வடிவில் சமர்ப்பிப்பதில் நான் முட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

அவரது கலைப்பயணம் தொடர ஆடல் நாயகன் அருள் பாலிக்கட்டும். ●

# தமிழ் கலைகளை வளர்ப்பவர்கள் புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களே!



-ஏ.எஸ்.கணேசன், (இணைவேந்தர் - விநாயக மிஷன்ஸ் பல்கலைக்கழகம்)



ஆடல், பாடல், நாடகம் என்ற முத்தமிழ் கலைகளின் பிறப்பிடம் தமிழகம் என்று நாம் பெருமைப்பட்டாலும், அதை இன்று பேணிப் போற்றி வளர்ப்பவர்கள் புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்கள் என்பதை நான் ஆணித்தரமாகக் கூறுவேன்.

லண்டனுக்கு அடிக்கடி போய் வருவதால், இதனை நேரில் கண்டுகளிக்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

வார இறுதி நாட்களில், லண்டனைச் சுற்றியுள்ள பெரிய மண்டபங்களில், ஏதாவது ஒரு தமிழ்க்கலை நிகழ்ச்சி நடைபெறும். நான் அங்கு தங்கியிருந்த ஒரு சனிக்கிழமை அன்று மட்டும் ஏழு இடங்களில் பரதநாட்டிய அரங்கேற்றம், மிருதங்க அரங்கேற்றம், இசை விழா', சைவ மாநாடு என்பது போன்ற பல விதமான நிகழ்ச்சிகள் நடைபெறுவதாக அறிந்தேன். இவற்றையெல்லாம் ஏற்பாடு செய்து நடத்துபவர்கள் ஈழத் தமிழர்கள் என்பதை அறிந்து பிரமித்துப்போனேன்.

*1985*ம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் ஏற்பட்ட பல பாதிப்புகளினால் கனடா, லண்டன் உட்பட ஐரோப்பிய நாடுகளுக்கு அகதியாக சென்ற ஈழத் தமிழர்கள் லட்சக் கணக்கானோர். அவ்வாறு லண்டனில் இன்று அகதியாக வந்து தமது தாயக மண்ணுக்குப் பெருமை சேர்க்கின்றவர்கள் சிலரோடு நெருங்கிப் பழகுகின்ற சந்தர்ப்பம் எனக்கு வரப்பிரசாதம்.

தாமும் வளர்ந்து, தமது பிள்ளைகளையும் உயர்ந்த நிலைக்குப் கொண்டு வருவதில் ஊக்கமுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

டாக்டர்களாக, இன்ஜினியர்களாக, கம்பியூட்டர் நிபுணர்களாக, கணக்காளர்களாக - வழக்கறிஞர்களாக - இன்று பல்கழைக்கழகங்களில் இருந்து வெளிவரும் புகழ்பூத்த ஈழத்தின் இளம் சந்ததி ஒன்று லண்டனில் உருவாகிக் கொண்டிருக்கிறது.

அதே நேரத்தில், இசையும் நாட்டியமும் இன்னும் பல்வேறு கலைகளையும், பயில்வதையும், கற்ற வித்தையை மக்கள் முன் அரங்கம் ஏறி வெளிப்படுத்துவதும் லண்டனில் தரிசிக்கக்கூடிய நிகழ்வுகள்.

தமிழ்நாட்டில், தமிழ் மண்ணில், குழந்தைகள் ஆங்கிலத்தில் தான் பேசுகின்றனர். மேல்நாட்டு நாகரீகம் ஆக்கிரமித்துக் கொண்டு வருகிறது. ஆனால் - லண்டனிலும், கனடாவிலும் ஈழத்தவர்களுடன் பழகுவது பல வித புதிய அனுபவங்களை எனக்குத் தந்திருக்கிறது. ஆங்கில நாட்டில் வாழ்ந்தாலும் தமிழோடு வாழுகின்ற அவர்கள் உணர்வுகள் என்னை மெய் சிலிர்க்க வைத்திருக்கிறது.



இப்படி எனக்கு லண்டனில் தமிழோடு வாழுகின்ற ஈழத்தவர்களான ராஜகோபால் குடும்பத்திரை மிகவும் பிடித்திருந்தது. இதயத்தால் நேசிக்கின்ற இனியவர்கள்.

இலங்கையில் பத்திரிக்கையாளராக இருந்த ராஜகோபால் லண்டனிலும் அதே தொழிலை முழு நேரமாகச் செய்து கொண்டிருப்பதும், நடன ஆசிரியையாக இருந்த அவரது துணைவியார் ராகினி லண்டனிலும் அதே பணியைச் செய்வதும் அவர்கள் மீது மிகுந்த பற்றுதலை ஏற்படுத்தியது.

லண்டனுக்கு போகிறபோது எல்லாம், அவர்களைச் சந்திக்க தவறுவதில்லை. தமிழகத்துக்கு வருடம் ஒரு முறை மார்கழி இசை விழாக் காலங்களில் வருவார்கள். எங்கள் விநாயக மிஷன் விருந்தினர்களாக வரவேற்போம். எங்கள் வீட்டுக்கு வருவார்கள். குடும்ப நிகழ்வுகளில் உரிமையோடு கலந்து கொள்வார்கள். எங்களது குடும்பத்தில் ஒருவரானார்கள்.

எங்கள் தந்தையாருக்கும் அவர்களை நன்கு பிடித்தது. தவறாது சேலத்துக்குப் போய் விநாயக மிஷன் ஆலயங்களில் வழிபட்டு வருவதை வழக்கமாக்கிக் கொண்டார்கள்.

கடந்த வருடத்துக்கு முந்தைய வருடம் என்று நினைக்கிறேன். லண்டனில் நடந்த ராகினி ராஜகோபாலின் மாணவி ரம்யாவின் பரதநாட்டிய அரங்கேற்றத்திற்கு பிரத விருந்தினராக அழைத்திருந்தார்கள்.

பிரமாண்டமான ஆயிரம் பேர் கூடியிருந்து ASHCROFT தியேட்டரில் முன் வரிசையில் நான்கு மணி நேரம் அமர்ந்திருந்து நாட்டியத்தைப் பார்த்தேன். என் வாழ்வில், எனது நினைவுக்குத் தெரிந்தவரை, அந்தளவு நேரம் ஒரே இடத்தில் இருந்து பார்த்த முதலாவது நிகழ்ச்சி அது ஒன்றாகத்தான் இருக்கும். எனக்கே ஆச்சரியமாக இருந்தது.

சலிப்புத் தட்டவே இல்லை.


இணைவேந்தர் தம்பதியுடன் ராகினி


விநாயக மிஷன்ஸ் தலைவர் ஏ.சண்முகசுந்தமும், ஜூனியர் சண்முகசுந்தரமும். படப்பிடிப்பு: ராகினி

ஒரு நல்ல குருவிடம் பரத நாட்டியத்தை அம்மாணவி பயின்றதால் மிகச் சிறப்பாக ஆட முடிந்தது என்ற உண்மையைத் தெரிந்து கொண்டேன். குருவின் கடின உழைப்பை அம்மாணவியிடம் கண்டேன். பதினைந்து வருடங்களாகத் தொடர்ந்து கற்றபின்னர்தான் அரங்கேறியிருக்கிறார் என்பதை அறிந்தபோது வியப்பாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது.

நாட்டியம் முடிவடைவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்னர் பிரதம விருந்தினர் சிறப்புரை, மேடையில் பேசிக் கொண்டிருந்த போது தான் கூட்டத்தை முழுமையாகப் பார்த்தேன். ஒரு ஆசனம் கூடப் பாக்கியில்லாமல் நிறைந்திருந்திருந்தது. அதுவரை ஒருவராவது எழுந்து செல்லாதது அவர்கள் ரசிப்புத் தன்மையைக் காட்டியது. குரு ராகினியின் சுத்தமான பயிற்சியில் நடனம் வெகு அற்புதமாக இருந்ததைப் பாராட்டிப் பேசினேன். எங்கள் விநாயக மிஷன் பல்கலைக் கழகத்தினால் அவரது 'நாட்டியாலயா' நிறுவனத்தை அங்கீகரிப்பதற்கான முடிவுகளை விரைவில் மேற்கொள்வதாகவும் குறிப்பிட்டேன்.

இப்போது ராகினி ராஜகோபாலின் நாட்டியாலயா நடனப் பள்ளியின் 30வது ஆண்டு விழா லண்டனிலுள்ள பிரம்மாண்டமான மண்டபத்தில் கொண்டாடுவது மகிழ்ச்சியைத் தருகிறது. இலங்கையில் 10 வருடங்களும், லண்டனில் 20 வருடங்களும் ராகினி ராஜகோபாலின் நாட்டியாலயா நிறுவனம் ஆற்றிய கலைச் சேவை மதிக்கப்பட வேண்டியது இவ்விழாவை நூற்றுக்கும் மேலான 'நாட்டியாலயா' நிறுவன மாணவிகள் பங்கு பற்றி பல நிகழ்ச்சிகளை அளிக்கின்றனர்.

வேற்று மண்ணில் தமிழ் குழந்தைகளுக்கு மட்டுமல்ல, ஆங்கில மற்றும் கறுப்பு இன பிள்ளைகளுக்கும் நமது நடனத்தைச் சொல்லிக் கொடுக்கிற அவர் பணி அறிந்து உள்ளம் நெகிழ்கிறது.

ராகினி ராஜகோபாலின் பணி தொடர்ந்து சிறக்க விநாயக மிஷன் சார்பில் இதயத்தால் வாழ்த்துகிறேன். ●




# சதங்கையும், பேனாவும்



-சசிபாரதி சு.சபாரத்தினம் (ஆசிரியர், ஈழநாடு வாரமலர்)



தமிழ்நாட்டிலுள்ள தமிழ்ப்பற்றாளர்கள், ஆர்வலர்களின் மதிப்பீட்டின் படி, ஐரோப்பிய நாடுகளிலும், மற்றும் பிற நாடுகளிலும் தான் இன்று தமிழ் வாழ்கிறது என்பர். பல மேடைகளில் தமிழ் அறிஞர்கள் இவ்வாறு பேசிப் பெருமைப்பட்டுக் கொண்டதை நேரிலும், பத்திரிகைகள் வாயிலாகவும் நான் அறிந்துள்ளேன். கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் நிலவும் அசாதாரண நிலைமை காரணமாகப் புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்களை வைத்தே அவர்கள் இவ்வாறு கணித்திருக்கிறார்கள் என்பதே உண்மை.

ஈழத்திலிருந்த புலம் பெயர்ந்த தமிழர்களின் அடுத்த மூத்த சந்ததிகளின் நிலைப்பற்றி இப்போது என்னால் எதுவும் கூற முடியாது. எனினும் இன்றைய நிலையில் மேற்சொன்ன அறிஞர்களின் கூற்று யாவராலும் அங்கீகரிக்கப்பட வேண்டியதே.

புலம்பெயர்ந்த நாடுகளில் ஈழத் தமிழர்களின் குரல் இன்று ஓங்கி ஒலிக்கிறது. தமிழ் அறிஞர்களும், இலக்கியவாதிகளும் அங்கெல்லாம் தமிழ் மொழியையே முன்னெடுத்துச் செல்கின்றனர். சிங்களப் பேரினவாத ஆட்சியின் கொடுமைகள் தாளாமல் நாட்டை விட்டு வெளியேறிய பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களில் அறிஞர்களும் இலக்கியவாதிகளும் மட்டுமின்றித் தமிழர் கலைகளைப் பற்றிக் கொண்டவர்களும் பத்திரிகையாளர்களும் அடங்குவர். இவர்கள் வெளியேற்றத்தின் பயனாக வெளியுலகெங்கும் தமிழ்ப் பத்திரிகைகள் மலிந்திருப்பதையும், சங்கீதமும் சதங்கையும் ஓயாது ஒலிப்பதையும் பார்க்கவும், கேட்கவும் முடிகிறது.

ஈழம் நன்கு அறிந்த பத்திரிகையாளரான என் அன்புத் தம்பியும் (உறவுரிமை குறித்து டாக்டர். ஆர்.தியாகராஜன் மன்னிக்க வேண்டும்.) 'புதினம்' பத்திரிகை ஆசிரியருமான ஈ.கே.ராஜகோபால் அவர்களும், ஆடலரசி ராகினியும் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

இக்காதல் தம்பதி, தமிழுக்கும் கலைக்கும் ஆற்றும் தொண்டு பெரிது.

ராஜகோபால் பத்திரிகையை கையில் எடுத்துக் கொண்டாரென்றால், ராகினி ராஜகோபால் மூத்த தமிழினத்தின் முதுசொமான பரதக் கலையைச் சிரம் மேற்கொண்டார். ஈழத்திலே, புயல் கிளப்பிய இருவரும் இப்போது



திருமண வெள்ளிவிழாவில் சதங்கையும், பேனாவும்

லண்டனில்–

ஈழத்தில் ஆரம்பிக்கப் பெற்று நூற்றுக்கணக்கான ஆடற்கலைஞர்களை உருவாக்கிய 'நாட்டியாலயா'வை லண்டனுக்கு மீட்டெடுத்துத் தனது சேவையை லண்டனிலும் தொடர்ந்து ஏராளமான கலைஞர்களை உருவாக்கி, பெருமைக்கு மேல் பெருமையும் புகழும் சேர்த்துக் கொண்டுள்ளார் ராகினி ராஜகோபால். இத்தனை மேன்மைக்கும் காரணம் ராகினியின் தூய்மையுடனான சேவைதான் என்றால் மிகையாகாது.

ராகினியின் புகழ் ஈழத்திலும் லண்டனிலும் மட்டுமின்றி உலகின் பிறபகுதிகளிலும் பரவியுள்ளது. கனடா முதலான சில நாடுகளில் அவர் பாதம் பதித்துள்ளார். போன திசையெல்லாம் நீட்டிய தன் பொற்கரங்களால் பார்வையாளர்களின் நெஞ்சங்களை வாரிக் கொள்வது அவரது தனித்துவம். அப்படியே ராஜகோபாலும் தன் மந்திரப் பேனாவால் வாசகர்களை வளைத்துக் கொண்டவர். தன் நடனத்தின் மூலம் கணவர் ராஜகோபால் புகழை உயர்த்தியவர் ராகினி என்றால், தனது பேனா மூலம் மனைவி ராகினியின் புகழை மேலும் உயர்த்தியவர் ராஜகோபால். இந்த ஒற்றுமை லேசில் யாருக்கும் கிடைத்து விடுவதில்லை. இவர்களுக்குள் ஒரு முரண்பட்ட ஒற்றுமையையும் பார்க்க முடிகிறது.



ஒன்று, ஓசையின்றி ஒலியெழுப்பும் பேனா; மற்றது, ஒலியெழுப்பிக் கூத்தடிக்கும் பாதங்கள். இவை யாழ்ப்பாணம் தந்த அற்புத வித்தைகள்!

ராஜகோபாலின் வித்தைகளுக்கு வித்திட்டு வளர்த்தது யாழ்ப்பாணத்தின் விடிவெள்ளியாய்த் திகழ்ந்த 'ஈழநாடு' பத்திரிகை. இங்கு ராஜகோபால் பணியாற்றிய காலத்தில், வாரமலரின் ஒரு பக்கத்தைக் குத்தகையாக எடுத்துக் கொண்டு உள்ளூர்க் கலைகளையும், கலைஞர்களையும் வெளியுலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டினார். 'தினகரன்' நாளிதழிலும் சில காலம் இப்பணித் தொடர்ந்தது. இப்போது சொந்தமாய் 'புதினம்' பத்திரிகை.

இவ்வாறே ராகினியும் பரதக்கலைக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர். அவரது குடும்பம் கலைக்குடும்பம். ராகினி பிறந்த மண் யாழ்ப்பாணத்து மானிப்பாய். பல கல்விமான்களையும் பெருவணிகர்களையும் தந்த மண். சாஸ்திரிய நடனத்திற்கு ஆதர்சமான நடராஜமூர்த்தியை வைத்து 'நடராஜ தத்துவம்' என்ற மிகப்பெரிய ஆய்வு நூலை எழுதிய மேதை ஸி.ஆனந்தகுமாரஸ்வாமி அவர்களின் பூர்வீகம் மானிப்பாய் என்கிறபோது இதற்கு மேலும் மானிப்பாய்க்கு என்ன பெருமை வேண்டும்?



ராகினி மானிப்பாய் தந்த மரகதம்.

ராகினி ராஜகோபாலின் நாட்டியாலயாவின் முப்பதாண்டு நிறைவு 19.7.08 தேதி மிகப்பிரம்மாண்டமாய்க் கொண்டாடப்படும் செய்தி அறிந்து எமது நெஞ்சங்களும் (நானும் எனது அன்பான மனைவியும்) நிறைந்த நிலையில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.



'பூமிக்கு முகவரி பெண்ணாலே' - யுகபாரதி.



# கலைகளில் சிறந்தது நாட்டியக் கலையே



- மத்தளைசோமு (எழுத்தாளர் - அவுஸ்திரேலியா)



அறுபத்து நான்கு கலைகளில் ஒன்றான ஓவியக்கலையை 'கலைகளிலே ஓவியம்' என்று எழுதினார் கவிஞர் கண்ணதாசன். ஆனால் அதற்கு முன்னால் பழம் பெரும் பாடலாசிரியர் ஒருவர் 'கலைகளில் சிறந்தது நாட்டியக் கலையே' என்று எழுத அதைப் பாடியவர் ஏழிசை மன்னர் எம்.கே. தியாகராஜ பாகவதர். இவற்றில் எது சரி? இரண்டுமே சரியானது. ஆனால் பாடல் வரிகளை உற்றுப் பார்த்தால் உண்மை புரியும். கவிஞர் கண்ணதாசன் 'கலைகளில் அவள் ஓவியம்' என்று மட்டுமே சொல்லியிருக்கிறார். ஆனால் மற்ற பாடலில் 'கலைகளில் சிறந்தது நாட்டியக் கலையே' என்று சொல்லியிருக்கிறார். ஆக, இரண்டு பாடலுக்குமான வேறுபாடும் விடையும் நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. ஓவியக் கலையை விட, நாட்டியக் கலை வேறொரு பரிமாணத்தில் சிறந்தது...

ஓவியம் பார்க்க, ரசிக்க, புரிந்து கொள்ள, அமைதி, அறிவு, ஞானம் வேண்டும். ஓவியம் தனி ஒரு மனிதன் கலைஞனாக பரிணமித்து வெளிக்காட்டுகிற படைப்பு. அது இலக்கியம் சார்ந்தது. ஒரு கலைஞன் உள்ளத்தில் எழுகிற எண்ண வரிகளின் வெளிப்பாடே ஓவியமாகிறது. ஆனால் நாட்டியம் அல்லது ஆடல் உருவாக பல கலைஞர்களின் கரங்களின் ஒருங்கிணைப்பு ஒத்துழைப்பு தேவை. அது ஒரு கூட்டு உருவாக்கம். இதில் ஒருவர் பிசகினாலும் எல்லாமே பிசகும். ஆக, நாட்டியக்கலை கூட்டு முயற்சி. அதனை ரசிக்க கண்கள் மட்டும் போதாது. கண்களின் ஊடே உணர்கிற புலனும் உச்சமாயிருக்க வேண்டும். கண்களும் ஏனைய புலன்களும் இணைந்து ரசிக்கிற ஒரு கலை நாட்டியக் கலை.



காற்றின் அசைவில் மரங்கள் அசைகின்றன. மரக்கிளைகள் அசைகின்றன. இலைகள் அசைகன்றன. கரையைத் தேடி ஓடி வரும் கடலின் அலைகளிலே அசைவுகள் தெரிகின்றன. இவற்றை உற்றுப் பார்த்தால் ஆடல் புரியும். இவற்றையெல்லாம் வெறும் கண்களால் மட்டுமே உணர முடியாது. அவற்றை உணர்கிற அறிவு தேவை. அந்த அறிவால் மட்டுமே ஆடலை அறியவும், புரியவும் முடியும். அறியவும் அறிவே கலை பரிமாற்றத்தை விரிவுபடுத்தும்.

அறிவை அறியாத காலத்தில் மனிதன் ஆடினான்; பாடினான். அவற்றையெல்லாம் உணர்வை வெளிக்காட்டு பவைகளாக மட்டுமே இருந்தன. ஆனால் பிற்பாடு அறிவை அறிந்த பிறகு,

அறிவின் எல்லையைத் தொட முயன்ற போது ஆடல் கலைகளும் அகலமாகின.

தமிழரின் தொன்மைக் கலைகளில் ஒன்றே பரதநாட்டியக்கலை. பரத நாட்டியமான ஆடற்கலையை கூத்துக்கலை என்றனர் பழந்தமிழ் மக்கள். கூத்துக்கலை மிக மிகப் பழமையானது. அந்தக் காலத்தில் ஆடற்கலை செம்மையாக இருந்தது. அவற்றைப் பற்றி பழந்தமிழ் நூல்களில் குறிப்புகள் காணப்படுகின்றன. அவற்றில் பல கலைகள் மறைந்து விட்டன. அவ்வாறு மறைந்தவற்றில் மிக முக்கியமானது; பதினோராடல். மனிதர் ஆடிய இந்த ஆடல்கள் ஆதிகாலத்தில் தெய்வங்கள் ஆடியதாகக் கருதப்படுகின்றன. இவற்றில் ஆறு ஆடல்கள் நின்று ஆடுவது. மற்ற ஐந்தும் வீழ்ந்தாடுவது. இவற்றில் பல ஆடல்களைப் பற்றி சிலப்பதிகாரத்தில் குறிப்புகள் காணப்படுகின்றன.

கடலுக்கடியில் மூழ்கிக் கிடக்கிற காவிரி பூமி பட்டினத்தில் இந்திர விழா நடந்தபோது அந்நகரத்தின் பலவீதிகளில் பலப் பல காட்சிகள் காணப்பட்டன என்றும், அவற்றில் பேடிக் கூத்தும் ஒன்று என்றும் மணிமேகலை காப்பியத்தில்,

நீள் நிலம் அளந்தோன் மகன் முன்னாடிய

பேடிக் கோலத்து பேடுகாண் குநரும்

என்ற வரிகள் விளக்குகின்றது. சிலப்பதிகாரம்,

ஆண்மை திரிந்து பெண்மைக் கோலத்துக்



சிறுவயதில் மிருதங்கம் வாசிக்கும் ரா.ரா.வின் புதல்வன் ஷியாம்

காமன் ஆடிய போடி யாடல்

என்று சொல்கிறது. பதினொரு வகையான ஆடல்களையும் அந்தந்த பாத்திரத்தின் உடை அணிந்து அணிகலன்கள் பூட்டி மாதவி ஆடினாள் என்பதை சிலப்பதிகாரம் அற்புதமாய்ச் செப்புகிறது.

ஏழு வயதில் ஆடற்கலை பயிலச் சென்ற மாதவி பன்னிரண்டாவது வயதில் பல ஆடல் கற்று அரங்கேற்றினாள். அவளின் ஆசான், பல்கலை வித்தகன்; ஆடற்கலை ஆசான். அதனை,

இருவகைக் கத்தினி இலக்கணம் அறிந்து

பலவகைக் கூத்தும் விலக்கினிற் புணர்த்துப்

பதினோர் ஆடலும் பாட்டும் கொட்டும்

விதிமாண் கொள்கையின் விளங்கு அறிந்து ஆங்கு

**(சிலம்பு -அரங்கேற்று காதை; 12-15)**

என்ற பாடல் விளக்குகிறது. அகம் - புறம் என்னும் இரு வகையான நாட்டியத்தின் விதிமுறைகளையும் சாந்திக் கூத்து, வசைக் கூத்து என்னும் பல வகைக் கூத்து முறைகளையும் நன்கு அறிந்தவன். பதினோரு வகைக் கூத்து முறைகளையும் அதற்கென்று அமைந்த, பண்முறைகளையும், தாளங்களையும் அவற்றிற்கு ஏற்ற இசைக் கருவிகளையும் இயக்கும் வல்லமை பெற்றவன். ஆடலும், பாடலும், ஆடலுக்கேற்ற பாடலும், பாடலுக்கேற்ற இசையும் இசைக்கேற்ற தாளமும், தாளத்துக்கேற்ற கருவிகளும் இயக்க வல்ல புலமை பெற்றவன் அவன். இதிலிருந்து பண்டைக் காலத்தில் ஆடற்கலையில் வல்லவர்களாகவும், ஆசான்களாகவும் ஆண்களே இருந்தனர் என்பது உறுதியாகிறது.

சங்க காலத்தில் நடனமாடிய ஆடவன் 'ஆடுமகன்' எனவும், ஆடுமகள் 'விறலி' என்றும் பெயர் பெற்றனர். தொடக்கத்தில் ஆண்களே கூத்துக்களை ஆடியிருக்கிறார்கள். அதை உறுதி செய்வதுபோல் சிதம்பரத்தில் இருக்கிற சிவனுக்கு தில்லைகூத்தன் எனப்பெயர் வைத்தனர். மணிவாசகர். சிவபுராணத்தில் தில்லைக் கூத்தனே, 'தென்பாண்டி நாட்டானே' எனப்பாடுகிறார். இந்தக் கூத்தே இன்றைக்கு பரதநாட்டியமாக மாறி நிற்கிறது.

தமிழ்நாடு, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் மேற்கத்திய நாடுகள் பலவற்றிலும் பரத நாட்டியம் இக்காலத்தில் இருந்தாலும் இக்கலையை உண்டாக்கி வளர்த்தவர்கள் தமிழர்கள். இதன் மூல வேர்கள் தமிழ் மண்ணுக்கே உரியது. இக்கலையை நட்டுவர் என்னும் தலைக்கோல் ஆசான்கள் கற்றும் கற்பித்தார்கள். மாதவிக்கு நாட்டியம்



*புலம் பெயர்ந்த தமிழர்களால் தமிழ்மொழி மேற்றிசை நாடுகளில் ஒலிப்பது போல் பரதநாட்டியமும் பரவியுள்ளது. இதனைச் சாதித்தவர்களில் பெரும்பாலானவர்கள் போர்க் காரணமாக இலங்கையை விட்டு புலம் பெயர்ந்த நாட்டிய ஆசான்கள்.*



சொல்லிக் கொடுத்தவனும் ஒரு ஆசானே. ஆனால் இன்றைக்குப் பெண்கள் குருவாக இருந்து இக்கலையை கற்பித்து வருகிறார்கள்.

புலம் பெயர்ந்த தமிழர்களால் தமிழ்மொழி மேற்றிசை நாடுகளில் ஒலிப்பது போல் பரதநாட்டியமும் பரவியுள்ளது. இதனைச் சாதித்தவர்களில் பெரும்பாலானவர்கள் போர்க் காரணமாக இலங்கையை விட்டு புலம் பெயர்ந்த நாட்டிய ஆசான்கள். அவர்களில் முக்கியமானவர் பிரிட்டனிலும் அதனைச் சுற்றிய அயல்நாடுகளிலும், ஜெர்மனியிலும் பரத மாணவிகளை உருவாக்கி அரங்கேற்றம் செய்வித்தவர். பிரிட்டனைச் சேர்ந்த பிரபல பத்திரிகையாளர், புதினம் இதழ் ஆசிரியர் திரு.ஈ.கே.ராஜகோபால் அவர்களின் துணைவியார் ராகினி ராஜகோபால் ஆவார். இவர் புலம் பெயரும் முன்பே யாழ்ப்பாணத்திலும் சென்னையிலும் பரதம் கற்று பரதம் கற்றுக் கொடுக்கிற குருவாக அனுபவம் பெற்று பல பரத மாணவர்களை உருவாக்கியிருக்கிறார். பரத நாட்டியத்திற்கு, ராகம், தாளம், பல்லவி என்பன முக்கியமானது. இவரிடம் கற்ற மாணவர்களுக்கு ராகம், தாளம், பல்லவி என்றால் ராகினி ராஜகோபால் என்ற நாட்டியக் குருதான் நினைவுக்கு வரும். தன்னிடம் பரதம் பயில வரும் மாணவர்களை விடாத நாட்டியப்பயிற்சி மூலம் சிறந்த பரத நாட்டிய மாணவர்களாக உருவாக்கியிருக்கிறார். இவரிடம் பல ஆண்டுகள் நாட்டியப் பயிற்சி பெற்ற செல்வி சிவித்ராவின் பரதநாட்டிய அரங்கேற்றம் ஜெர்மனியில் நடந்தது. இதில் கலந்து உரையாற்றுகிற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஆகவே நேரில் பார்த்த அனுபவத்தின் மூலம் இதனை எழுத முடிகிறது. பிரிட்டனில் பல மாணவர்களை பரதத்தில் உருவாக்கி அரங்கேற்றம் செய்வித்த ராகினி ராஜகோபால், ஜெர்மனி, பிரான்ஸ், கனடா போன்ற மேற்றிசை நாடுகளிலும் தனது முத்திரையைப் பதித்திருக்கிறார். இனப்பிரச்சினை காரணமாக உருவான யுத்தத்தின் அகோர பக்கங்களை பரத நாட்டிய வடிவத்தில் பதித்த பெரும் பங்கும் இவருக்குண்டு. புலம் பெயர்ந்த பிறகு இவரின் கணவர் ராஜகோபால். இதழியல் துறையில் முத்திரை பதிக்க, இவரோ பரத நாட்டியத்தில் முத்திரை பதித்திருக்கிறார். இவரின் கணவருக்கு இதழ் துறை மூச்சாக இருந்தால் - இவருக்கு பரத நாட்டியம் மூச்சாக இருந்தது. ஐரோப்பாவின் முதல் தமிழ் செய்தி இதழை உருவாக்கியதில் பெருமை பெற்ற ராஜகோபாலின் இதழ் பணிகளுக்கு ஒரு பரத நாட்டிய குருவாக அரவணைத்த ராகினி ராஜகோபால் ஒரு சிறந்த இல்லத்தரசியாகவும், இல்லத்திற்கு வரும் மனிதர்களை விருந்திட்டு உபசரிக்கிற உயரிய பண்பு நிறைந்தவர். லண்டனுக்கு முதன் முதலாகப் போனபோது ராஜகோபாலின் இல்லத்தில் தங்குகிற பாக்கியம் கிடைத்தது.





முன்பின் அறியாத என்னை, ஒரு எழுத்தாளன் என்று மட்டுமே அறிந்து இல்லத்தில் உபசரித்து விருந்திட்டு குறள் வழியில் சொன்ன உயரிய பண்பை நேரில் அனுபவித்தவன். இலங்கையில் ஈழநாட்டில் தொடங்கிய எழுத்துப் பணி, கொழும்பு லேக்ஹவுஸ் 'தினகரன்' வரை நீடித்து பிரிட்டனில் 'தமிழன்', 'ஈழகேசரி' எனப் பரிணமித்து, இன்றைக்கு 'புதினம்' என்றால் ராஜகோபாலின் 'புதினம்' என்று சொல்கிற இதழை நடத்துகிற முயற்சிகளுக்கு பக்கபலமாக, அரவணைப்பாக இவர் இருப்பதே குறிப்பிடத்தக்கது. அதே போன்று ராகினி ராஜகோபாலின் பரத நாட்டிய முயற்சிகளுக்கு உறுதுணையாகவும், உற்சாகத்துடன் ஆதரிப்பவருமாகவும் இருப்பவர் ராஜகோபால்.

கணவரின் ஆதரவினால் இந்த ஆண்டு பரத நாட்டியப் பணியில் முப்பது ஆண்டுகளைத் தொட்ட அனுபவம் தொடரும் வாய்ப்பும் ராகினிக்கு இருக்கிறது. 'தெய்வம் தொழாமல் கொழுநனைத் தொழுது' உயர்ந்து நிற்கிற பண்பே இவரின் வெற்றிக்கும், இவரின் கணவரின் வெற்றிக்கும் உறுதுணையாக இருக்கிறது. பரத நாட்டியப் பணியில் முப்பது ஆண்டுகள் என்பது முடிந்தவர்களால் மட்டுமே முடிந்தது. இதனைச் சாதித்த ராகினி ராஜகோபால் அவர்களுக்கு உலகெங்கும் வாழும் தமிழ்க் கலை நேய அன்பர்களின் வாழ்த்து என்றும் உண்டு. மேலும் அவரை பன்னாட்டு அறிஞர்களும், பரத நாட்டியக் கலைஞர்களும் பாராட்ட முன் வந்திருப்பது முக்கியமானது. குறிப்பாக ஜெர்மனியில் பரத நாட்டிய வகுப்புக்களை நடத்தி பல நாட்டிய மாணவர்களை உருவாக்கிய வானதி தேசிங்குராஜாவும் ஒருவர்.

இவர் ஜெர்மனியில் புகழ் பெற்ற நாட்டிய குருவாக இருந்த போதும், பிரிட்டனைச் சேர்ந்த இன்னொரு நாட்டியக் குருவான ராகினி ராஜகோபாலைப் பாராட்டுவது ஆரோக்கியமானது. இந்த ஆரோக்கியம்தான் பரத நாட்டியத்தைப் புலம் பெயர்ந்த நாடுகளில் உச்ச நிலைக்கு கொண்டு போயுள்ளது.

புலம் பெயர்ந்த தமிழர்களால் தமிழ் மொழி உலகம் எல்லாம் பரவும் வகை செய்த பெருமை உருவாக்கப்பட்டுள்ளது. அதனோடு பரத நாட்டியத்தையும், உலகமெல்லாம் பரவும் வகை செய்த பெருமையும் புலம் பெயர்ந்த தமிழர்களுக்கே உண்டு. அந்த் பெருமையில் பிரிட்டனில் இருந்து பரதம் பயிற்றுவித்த ராகினி ராஜகோபால் அவர்களுக்கு முக்கிய பங்கு உண்டு. அவருடைய கலைப்பணி தொடரட்டும். ●



*கணவரின் ஆதரவினால் இந்த ஆண்டு பரத நாட்டியப் பணியில் முப்பது ஆண்டுகளைத் தொட்ட அனுபவம் தொடரும் வாய்ப்பும் ராகினிக்கு இருக்கிறது.*

# ஒரு நீண்ட கலைப்பயணம்



- 'ஈழநாடு' கே.ஜி.மகாதேவா



பரதத்தின் பாரம்பரியத்தை, யாழ்ப்பாணம் மானிப்பாயிலிருந்து ஐரோப்பாவுக்கு பத்திரமாக உயிரோட்டத்துடன் கொண்டு சென்று, தமிழர்கள் எந்தெந்த மண்ணில் எல்லாம் வாழ்ந்து கொண்டிருக்கிறார்களோ, அங்கெல்லாம் அரங்கேற்றங்களை மேடையேற்றி, பலரின் பாராட்டுதல்களைப் பெற்று மிகப்பெரிய நாட்டிய பள்ளி உருவாகக் காரணமான 'வெள்ளி விழா நர்த்தகி' ராகினி ராஜகோபாலின் 'நாட்டியாலயா'வுக்கு இன்று வயது முப்பதாகிறது என்றதும், முப்பத்து ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் 'பிள்ளையார் சுழி' போட்ட அந்த இனிய நிகழ்ச்சி எனக்கு மலரும் நினைவுகளாக முதலில் முகிழ்கிறது.

1972-ம் ஆண்டு. மாதம் சித்திரை என்று நினைக்கின்றேன். யாழ் நகரின் மத்தியில் கம்பீரமாக எழுந்து நின்ற வீரசிங்கம் மண்டபம் விழாக்கோலம் பூண்டு மக்கள் கூட்டம் நிரம்பியிருக்கிறது. இரண்டு சகோதரிகளின் பரத நாட்டியம் அங்கு மேடையேறுகிறது என்பதுதான் செய்தி. அன்று அரங்கேற்றத்தை நிறைவு செய்தவர்கள் வேறு யாருமல்ல; இன்றைய 'நாட்டியாலயா' ராகினியும் இவரது சகோதரி வினோதினியும்தான். அன்றைய இனிய ஆரம்பம், ஒரு நீண்ட கலைப்பயணமாகத் தொடர்கிறது என்றால், ராகினியின் நாட்டிய வாழ்க்கையை எப்படி வர்ணிப்பது? யாழ்ப்பாணத்தில் அரங்கேற்றத்தை முடித்த கையுடன் கலைப்பயணத்தை ராகினி நிறுத்திக் கொள்ளவில்லை. பல மேடைகளில் நடன நிகழ்ச்சிகளை நடத்தி, யாழ்ப்பாணத்திலேயே இக் கலையில் சிறந்து விளங்கினார். இதனைத் தொடர்ந்து



சென்னை அடையாறு லட்சுமணன் அவர்களிடமும் நடனக் கலையை முறைப்படி கற்று முத்திரை பதித்துக் கொண்டார்.

பரதம் ஒரு தெய்வீகக் கலை. இதனை சாஸ்திர ரீதியாகப் பயின்று அரங்கேறி, அதன் புனிதத்தை பக்தி சிரத்தையுடன் போற்றி வளர்ப்பவர்கள் தெய்வீக அம்சம் நிறைந்த, கடவுளின் குழந்தைகள் என்று சொல்லலாம், இன்றைய இயந்திரவேக உலகில்- கணினி யுகத்தில், பரதக் கலையின் வேர்களும் விழுதுகளும் அங்கொன்றும் இங்கொன்றுமாக ம(ை)றந்து கொண்டிருக்கும் காலக்கட்டத்தில், புனிதமான இப்பணிக்கு ராகினி முப்பது ஆண்டுகளாகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து, நாட்டியமே வாழ்க்கை- உயிர் மூச்சு என்று வெளிநாட்டிலேயே தனது சாதனையை நிலைநாட்டியிருப்பது ஒரு மைல்கல்!

ஆண்டுகள் பல கழிந்த நிலையிலும், சில சம்பவங்கள் மறக்க முடியாமல் நிழலாடத்தான் செய்கின்றன. யாழ்ப்பாணம் 'ஈழநாடு' பத்திரிகையில் 1961ல் நான் சேர்ந்தேன். மூன்று ஆண்டுகள் கழித்து நண்பர் ராஜகோபால் என்னுடன் ஆசிரியர் பகுதியில் இணைந்தார். நட்பும் எழுத்தும் நாற்பத்து நான்கு ஆண்டுகளாக இன்றும் வளருகிறது. சம்பவக்கோர்வையில், இன்றும் பசுமையாக இருக்கும் மூன்று சம்பவங்கள் பற்றி நான் இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

**1974ம்** ஆண்டு யாழ் நகரில் உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு நடந்தது. மாநாட்டில் இடம் பெற்ற கலைநிகழ்ச்சிகளில், ராகினியின் நடனப் பங்களிப்பும் இருந்தது. 'ஈழநாடு' ஆசிரியர் பகுதியில் வேலை பார்த்த ராஜகோபால், 'கலையரங்கம்' பகுதிக்கு பொறுப்பாக இருந்தார். ஒருநாள், மகாநாட்டு நிகழ்ச்சிக்கு சென்றிருந்த

நிருபர் மகாலிங்க சிவம் (மாலி); ராகினியின் நடன நிகழ்ச்சி பற்றி விரிவாக எழுதித் தலைப்பிட்டு, போதுமான அளவு முக்கியத்துவம் கொடுக்குமாறு ராஜகோபாலிடம் விமர்சனக் கட்டுரையை கையளித்தார். எப்படியோ அதிகம் வெட்டுக்கொத்து போடாமல் அச்சாகிவிட்டது அந்த விமர்சனம். ஆனால் இந்த ராகினி கழுத்தில்தான் ராஜகோபால் மூன்று முடிச்சு போடப்போகிறார் என்பது அன்றே எழுதியாகிவிட்டது!

**அ**டுத்த சம்பவம்; 1978ல் மணவாழ்க்கையை ஆரம்பித்த ராகினி 1980-83 காலப் பகுதியில் கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் மாணவியாக சேர்ந்தபொழுது ஓர் பெண் குழந்தைக்குத் தயானார். குழந்தைக்கு மூன்று மாத நிலையில் 'லீவு' எடுக்க விரும்பாமல் கலாசாலை போய் வந்தார். ராகினியின் தாயின் அரவணைப்பில் குழந்தை இருந்தாலும், கலாசாலை ஓய்வு நேரத்தில் வீடு சென்று பாலூட்டிவிட்டு திரும்பிவிடுவார். பரீட்சைக்காலம். வழக்கம்போல குழந்தைக்கு பசியாற்ற கலாசாலை அதிபரிடம் 'லீவு' கேட்டபோது மறுக்கப்பட்டது. நிலைமையை ராகினி தெளிவுபடுத்தியபோதும், செவிடன் காதில் ஊதிய சங்காகிவிட்டது. அடுத்த நாளும் இதே நிலை. அதிபர் பெண்ணாக இருந்தும் தாய்மை செத்துவிட்டது! சில நாட்கள் இது தொடரவே, குழந்தை பல தடவைகள் பசியால் துடித்து ஒருநாள் நிரந்தரமாகக் கண்களை மூடிக் கொண்டது! இந்தக் கொடுமையை, 'ஈழநாடு'வில் நான் தினமும் எழுதும் 'இப்படியும் நடக்கிறது' பத்தியில் (கலம்) கண்டித்திருந்தேன். விளைவு? அடுத்தநாள், கலாசாலை அதிபரின் தாய்மை செத்த விஷயம், கலாசாலை சுவர்களை பெரிய சுவரொட்டி வடிவில் அலங்கரித்திருந்தன!

**ச**ம்பவம் மூன்று; ஆண்டு 1985. முதல்தடவையாக தம்பதிகள் சகிதமாக எங்களது கோண்டாவில் வீட்டுக்கு வந்திருந்த 'ரா-ரா'க்களை உபசரித்து மதிய போசனம் அளித்தது. இது, இன்று 2008 திருச்சி வரை நீடிக்கிறது எங்கள் பந்தம்.

ஈழத்தில் தாம் கற்ற பரதக்கலையை இங்கிலாந்து வரை முதலில் எடுத்துச் சென்ற ராகினி அங்கு பல மாணவிகளை உருவாக்கி 'நாட்டியாலயா' நாட்டியப் பள்ளியை ஆரம்பித்து விரிவாக்கினார். பல மாணவிகளை அரங்கேற்றினார். அரங்கேறிய மாணவிகளில் இவரது மகள் ஷர்மினி (பதினோராவது வயதில்)யும் ஒருவர் என்பது பாராட்டக்குரியது. இங்கிலாந்து மட்டுமின்றி ஜெர்மனி சென்று அரங்கேற்றங்களை மேடையேற்றிய ராகினியின் மாணவிகள் சிலர், அங்கேயே நாட்டியப் பள்ளிகளை ஆரம்பித்து குருவுக்கு சமர்ப்பணம் செய்திருப்பது ராகினியின் நாட்டிய வாழ்க்கையில் ஒரு பதிவாகும்.

'ஈழநாடு' தினசரியில் தனது எழுத்துத் தொழிலை ஆரம்பித்த நண்பர் ராஜகோபாலுக்கு (இன்றும்) பத்திரிகை தொழில்தான் 'தாய்' என்றால், பரதம் அவரது தாரமாக இருக்கிறது. கலைக்கும் எழுத்துக்கும் எத்தனை பொருத்தம். "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்பார்கள். ராகினியோ கலை பரப்ப, தான் பெற்ற கலைப் பொக்கிஷத்தை தமிழ் மாணவிகளிடம் பகிர்ந்தளிக்க திரைகடல் சென்றிருக்கிறார்.

விரல் விட்டு எண்ணக் கூடிய நம்மவர்களில் ராகினி நிமிர்ந்து நிற்கிறார். தமிழுக்கு- தமிழன்னைக்கு தொண்டு செய்வோன் சாவதில்லை என்று எழுதினார் பாரதிதாசன். முப்பது வருட சாதனைக்கு ராகினிக்கும், தோள் கொடுக்கும் ராஜகோபாலுக்கும் தமிழ் வாழ்த்துக்கள்- ஆசிகள். ●





# அயராமல் இயங்கும் அபிநயக் கரங்கள்



- லெ.முருகபூபதி (எழுத்தாளர்- அவுஸ்திரேலியா)



அவுஸ்திரேயியாவுக்கு புலம் பெயர்ந்த நாள் முதலாக அடிக்கடி நான் எழுதியும் பேசியும் வந்துள்ள வசனம் இதுவாகும்.

“உள்ளார்ந்த கலை, இலக்கிய ஆற்றல் மிக்கவர்கள்- உலகின் எந்தப்பாகத்தில் வாழ நேரிட்டாலும்-தமது ஆற்றலை வெளிப்படுத்திக் கொண்டேயிருப்பார்கள்.

சகோதரி திருமதி ராகினி ராஜகோபால் அவர்களைப் பற்றி எனது சிந்தனைகளை இங்கே பதிவு செய்யும்பொழுதும் மேற்குறித்த வசனம்தான் நினைவுக்கு வந்தது.

ராகினியை முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக அறிந்தவன் என்ற வகையில் அவரது கலைப் பயணம் தொடர்பாக எனது நினைவுகளில் தங்கியுள்ளவற்றை இங்கு பகிர்ந்தளிக்கலாம்.

பரதமுனிவர் முதல்- இன்று புதிதாக அரங்கேற்றம் காணும் ஒருவர் வரையில் - பரகத் தலையின் மகிமை பற்றி அறிந்தே வைத்திருக்கினர். நாட்டிய சாஸ்திரத்தை ஐந்தாவது வேதம் எனச் சொல்லப்பட்ட காலம்- எம்மைக் கடந்து சென்ற பின்னரும்- காலத்தால் அழியாத கலையாக பரதம் என்றும் விளங்கும்.

மரணங்கள் மலிந்த யுத்த பூமியாகியுள்ள இலங்கையிலிருந்து இங்கிலாந்திற்கு புலம் பெயர்ந்த பின்னரும் - பரதக் கலையின் மகிமையை -தமது நடனப் பள்ளியினூடாக வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் ராகினியின் வாழ்வும் பணியும் அர்த்தமுள்ளது. முன்மாதிரியானது.

பூமிப்பந்தின் எப்பாகத்தில் சென்று வாழ நேரிட்டாலும் தமிழர்-தமது இன அடையாளத்தை பேணிப்பாதுகாப்பதில் முதன்மையாக நிற்பது இயல்பு. தமிழ் மக்களின் பண்பாட்டினை அடையாளம் காண்பிக்கும் பரதக் கலையை - காலம்காலமாக பேணி- தலைமுறை தலைமுறையாக - எடுத்துச் சொல்பவர்களின் வரிசையில் ராகினி ராஜகோபாலும் இடம் பெற்றுள்ளார்.

ராகினியை முதல் முதலில் கொழும்பில் -பம்பலப்பிட்டியில் சந்தித்த காலப்பகுதி பசுமையாக நினைவில் நிற்கிறது.

1976 ஆம் ஆண்டென நினைக்கின்றேன். அடையாறு லக்ஷ்மணனின் மாணவியாக



தமிழ்நாட்டில் பரதம் பயின்று - அரங்கேற்றம் கண்ட பின்பு வட பகுதியில் அரச பாடசாலையொன்றில் நடன ஆசிரியையாக பணிபுரிந்து - நீர் கொழும்புக்கு இடமாற்றம் பெற்றிருந்த காலப்பகுதி.

எழுத்துலகில் பிரவேசித்திருந்த நானும் -தினகரனில் பணியாற்றிய ராஜகோபாலும் நண்பர்களாகியிருந்தோம். சரஸ்வதி மண்டபத்தில் கலைஞர் ரகுநாதனுக்கு பாராட்டு விழாவொன்று நடந்தது. அங்கே ராஜகோபாலை சந்தித்தபோதுதான் - எனக்குத் தெரியும்- இவரது மனைவி ராகினியின் சகோதரிதான் ரகுநாதனின் மனைவி என்று.

ராகினிக்கு நீர்கொழும்பு விஜயரத்தினம் கல்லூரியில் சேவையாற்ற மாற்றம் கிடைத்திருப்பதாகவும் - அங்கே தங்களுக்கு ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துத் தரும்படியும் நண்பர் சொன்னார்.

விரைவிலேயே- நீர்கொழும்பில் எமது வீட்டுக்கு அருகாமையிலேயே இந்த இளம் தம்பதியருக்கு வீடு கிடைத்தது. பின்னர் நாங்கள் குடும்ப நண்பர்களாகிவிட்டோம்.

நீர்கொழும்பு பிரதேசத்தில் தமிழ் மாணவர்களுக்கு கலங்கரை விளக்கமாகவிருக்கும் விஜயரத்தினம் கல்லூரியில் ராகினி நடன ஆசிரியர் பொறுப்பை ஏற்றார்.

அச்சமயம்-அக்கல்லூரியுடன் இணைந்த கட்டிடத்தில் இயங்கிய இந்து இளைஞர் மன்றத்தின் பொதுச் செயலாளராக நான் இயங்கிக் கொண்டிருந்தேன்.

1978 ஆம் ஆண்டு நாம் -எமது மன்றத்தில் "சர்வதேச சிறுவர்" ஆண்டை முன்னிட்டு முழுநாள் விழாவொன்றை கொண்டாடியபொழுது- இரவு கலைநிகழ்ச்சியாக ராகினி ராஜகோபால் தயாரித்து அளித்த விஜயரத்தினம் கல்லூரி மாணவர்களின் பல நடன நிகழ்ச்சிகள் மேடையேறின.

மண்டபம் நிறைந்த மக்கள் திரள்- பார்த்து, ரசித்து பரவசமடைந்திருந்தது. நீர்கொழும்பு தமிழ் மாணவர்கள் தமது நடன ஆற்றலை மிகச் சிறப்பாக பதிவு செய்த முக்கியத்துவத்துவமான நிகழ்வாக- அன்றைய விழா திகழ்ந்தது.

மன்ற நிர்வாகிகளும்- பொதுமக்களும் - நடனமாடிய மாணவர்களின் பெற்றோரும்-மனம் திறந்து ராகினியை பாராட்டினார்கள். இந்த நிகழ்வு இந்து இளைஞர் மன்றத்தின் "பொன்விழா" ஆண்டு மலரிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

"வந்தோரை வாழ வைக்கும் சிங்கார நீர்கொழும்பு" எனப் பெயர்பெற்ற எமது ஊருக்கு வெளியூரிலிருந்து உழைப்புக்காக வந்தவர்களாயினும் சரி- நிகழ்ச்சி நடத்த வந்த கலைஞர்களாயினும் சரி - சொற்பொழிவாற்றவந்த அறிஞர்- கல்விமான்களாயினும் சரி -அவர்கள் வெகு விரைவில் புகழ் பெற்றுவிடுவார்கள். அப்படி ஒரு ராசி அந்த ஊருக்குண்டு என்பார்கள்.

பெங்களூர் ரமணி அம்மாள், தவில் வித்வான் தட்சிணாமூர்த்தி, ட்ரம் வாத்தியக் கலைஞர் நேசம் தியாகராஜன் முதலானோர் அங்கு வந்து தமது ஆற்றல்களை வெளிப்படுத்திய பின்னர் தேசிய ரீதியாக, சர்வதேச ரீதியாக புகழ் பெற்றனர்.

பேராசிரியர் கைலாசபதி அவர்கள் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தேசிய ஒருமைப்பாட்டு மகாநாட்டிற்கான பிரசாரக்கூட்டத்துக்கு இந்த ஊருக்கு வந்து திரும்பி சில நாட்களிலேயே யாழ்ப்பாணத்தில் உதயமான முதலாவது தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்துக்கு தலைவரானார்.

இந்த வரிசையில் - நீர்கொழும்புக்கு வந்த ராகினி ராஜகோபாலும்- பின்னாளில்

புகழ் பெற்றார். இங்கிலாந்துக்கு புலம் பெயர்ந்த பின்பும் - தனது ஆற்றலை மூட்டை கட்டி வைக்காமல் அடுத்தடுத்து வரும் தலைமுறையிடமும் கொண்டு சேர்த்தார்.

தாம் கற்றதை - தமக்கு பின் வருபவர்களும் கற்றுத் தேற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன்தான் பெரும்பாலான நடன ஆசிரியர்கள் - தாம் செல்லும் இடங்கள் தோறும் நடனப்பள்ளிகளை ஆரம்பிக்கின்றனர்.

ராகினி ராஜகோபால் அவர்களும்- ஐரோப்பாவில் பல மாணவர்களுக்கு இக்கலையை பயிற்றுவித்து- தமது நீண்ட பயணத்தில் ஒரு மைல்கல்லை வந்தடைந்துள்ளார்.

**நா**ட்டியப் பேரொளி பத்மினி அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் ராகினியின் மாணவர் ஒருவரின் அரங்கேற்றத்திற்கு பிரதம விருந்தினராக வருகை தந்ததாகவும், ஊடகச் செய்தியின் வாயிலாக அறிந்தேன். நாட்டியப் பேரொளிக்கு - ராகினியிடத்தில் மிகுந்த பாசம் இருக்க வேண்டும். அதனால்தான் மற்றுமொரு சந்தர்ப்பத்தில் ராகினியை சந்தித்தபொழுது கட்டி அணைத்துக் கொண்டார்.

நாட்டியப் பேரொளிக்கு 'ராகினி' என்றொரு தங்கையும் இருந்தார் என்பது பிரபலமான செய்தி. அந்தத் தங்கையை ஏற்கனவே இழந்துவிட்ட நாட்டியப் பேரொளி- தன்னை - பிரதம விருந்தினராக அழைத்த இந்த 'ராகினி' மீது பாசம் பொழிந்தது இயல்பானதுதான்.

காலம் காலமாகவே - பரத நாட்டியத்தில் - கிருஷ்ணரையும், ராதையையும், நடராஜரையும், முருகனையும், சக்தியையும் மற்றும் தெய்வங்களையுமே காண்பித்துக் கொண்டிருக்கின்றனர் என்ற விமர்சனம் நடன ஆசிரியர்களை நோக்கி எழுப்பப்படுகிறது.

மக்களின் அன்றாட வாழ்வுக்கோலங்கள், போரின் உக்கிரத்தினால் பாதிப்புற்ற மக்களின் துயரங்கள்- நடனக் கலையில் உரிய முறையில் பிரதிபலிக்கப்படவில்லை என்பதுதான் அந்த விமர்சனத்தின் உள்ளுரை. "மானுடம் வெல்லும்" - என்ற மகத்தான மந்திரச் சொல்- நடனக் கலையிலும் பிரதிபலிக்க வேண்டும் ராகினி ராஜகோபால் போன்ற ஆற்றல் மிக்கவர்கள், பரதக்கலையை - மானுடத்தின் மகோன்னதங்களை நோக்கி திசை திருப்ப வேண்டியதும் காலத்தின் தேவையாகும்.

பரதக்கலை - மக்களின் கலை. அக்கலையை முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக தன்னாலியன்றவாறு உயிரூட்டிக் கொண்டிருக்கும் ராகினி ராஜகோபால் மேலும் பல சாதனைகளை நிறைவேற்ற வாழ்த்துகின்றேன்.

"மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்" என்றுதான் கவிஞர் சொன்னார். ஒரு ஆணின் வெற்றிக்கு பின்னால் ஒரு பெண் இருக்கிறாள் என்று வாய்ப்பாடாக காலம் காலமாக சொல்லி வருகிறார்கள்.

ஆனால் - எத்தனையோ பெண்களின் முன்னேற்றத்திற்குப் பின்னால் ஒரு தந்தையோ, சகோதரனோ, கணவனோ இருந்தாலும் வெளியே தெரிவதில்லை.

ராகினியின் வாழ்வுக்கும், பணிக்கும் உற்ற துணையாக அவரது "அபிநயக்கரம்" பற்றிய நாள் முதலாக இயங்குகிறார்- திரு.ராஜகோபால் அவர்கள். இச்சந்தர்ப்பத்தில் அவருக்கும் எனது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

ராகினி ராஜகோபாலின் "நாட்டியாலயா" மேலும் பல்லாண்டு வாழ்ந்து நடனக் கலையை வளர்த்துப் பேண வேண்டும் என்று - இப்பள்ளிக்கும் இங்கு பயிலும் மாணவர்களுக்கும் வாழ்த்துக் கூறுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். ●



# அள்ளிச் சொரிய அழகு தமிழ் போதாது



- கோவிலூர் செல்வராசன்

பரத முனிவர் இந்த பாருக்கு அருளிய
பரதக் கலையை
பாங்குடன் பயின்று
பாண்டித்தியம் அடைந்தவர்
புலத்தில் வாழ்ந்த போதும்
புடம்போட்ட தங்கமாய்
தடம் பதித்தவர் - நிறை
குடமாக நிலைத்து நின்றவர்
புலம்பெயர்ந்து வந்தபின்பும்
தமிழ்மணம் மாறாத தமிழச்சியாக
அமிழ்தினும் இனிய அரும்பெரும் கலையை
முனைப்புடன் முன்னெடுக்கும் மூத்த கலைஞர்.
பாவம், ராகம், தாளம்,
நிருத்தம் நிருத்தியம் அபிநயம் என்ற
ஆடற்கலையின் இலக்கணங்களை - ஒரு
வேகத்துடன் கற்றுத் தேர்ந்தவர்
நர்த்தனம் பயின்ற வித்தகியாக
நித்தமும் பரதத்தை நினைப்பவராக
ஒப்பிலா உயரத்தில் இருக்கின்ற
ஓர்உயர்வான நடன ஆசிரியை
கற்றதை கற்றபடி கற்போருக்கு
கற்றுத்தரும் கச்சிதமும் ஆற்றலும்
முற்று முழுதாக தன்னகத்தே கொண்ட
அற்புதமான ஆடற்கலையரசி...

போட்டிகள் பொறாமைகள் புழுக்கங்கள் - இன்றி
நாட்டியாலயா, நர்தனத் தேரினை
ஓட்டி வருகின்ற போற்றுதற்குரிய
கெட்டியும் மிக்க சாரதி.
கொண்டவன் குணமறிந்து
தொண்டு பல செய்து வரும் இவரை
கண்டுபலர் அதிசயிப்பர்
கண்டவர் விண்டிலர்
விண்டவர் கண்டிலர்- என்ற
கற்பிதத்தை துணை கொண்டு
வென்றவர் இவரென்பேன்
வெள்ளி விழா கண்ட வித்தகிராகினிக்கு
அள்ளிச்சொரிய அழகு தமிழ் போதாது என்று
சொல்லி முடிக்கின்றேன் இவரின்
பள்ளியினையும், பணியினையும் பாரெல்லாம் பேசட்டும்.





# ராகினி மாறவில்லை



- திருமதி.ஸ்ரீமதி குமாரசாமி



**இளைப்பாறிய முன்னாள் அதிபர் யா.இராமநாதன் கல்லூரி, சுண்ணாகம், உதவி அதிகாரி, கல்வி நூல் வெளியீட்டுப் பகுதி கல்வித் திணைக்களம்**

''**தோ**ன்றிற் புகழோடு தோன்றுக'' என்றார் வள்ளுவப் பெருந்தகை. ''முயற்சி திருவினையாக்கும்'' - இரண்டிற்கும் எடுத்துக்காட்டாக நடன அரங்கத்தின் நட்சத்திர ஆசானாகத் திகழ்கின்றார் ராகினி ராஜகோபால்.

சிறு வயதில் அம்மாவின் கரங்களைப் பற்றிக் கொண்டு மானிப்பாய் கல்லூரி ஒழுங்கையில் தத்தி தத்தி நடைபோட்ட சிறுமி, இன்று நடன நட்சத்திரமாகப் புகழ் பெற்று, நடன ஆசானாக லண்டனில் தனது நடனப் பள்ளியின் 30வது நிறைவினை காண்கின்றாள்.

நான் அறிந்த சிறுமி ராகினி எனது வீட்டிலிருந்து மூன்றாவது வீட்டில் வசித்து வந்தார். அரசரத்தினம் தம்பதியினரின் ஜோடிக் குழந்தைகளுள் ஒருவர், வினோதினி அவரது உடன்பிறப்பு என்றால், பத்துமாதமும் பலதும் பேசி மகிழ்ந்து ஒரே வேளையில் முன் பின்னால் பூமியில் இறங்கியவர்கள், அம்மாவின் அரவணைப்போடு அக்கம்பக்கமாக நடைபோட்டவர்கள். இவர்களது வயதில் எனக்கும் பிள்ளைகள் இருந்தபடியாலும், மானிப்பாய் மகளிர் கல்லூரியில் இவர்கள் கல்வி பயின்றதாலும், அயல்வீடு ஆனதாலும் இவர்களை நன்கு அறிய வாய்ப்பிருந்தது.

அமைதியான சுபாவம், மற்றவர்களுக்கு மதிப்பும், மரியாதையும் கொடுப்பவரும், அடக்கமான முறையில் வாழ்ந்தவர் திரு.அரசரத்தினம். அவரிடம் காணப்பட்ட அதே புன்னகை, தலையசைப்பு, வரவேற்கும் மனப்பான்மை, அடக்கம் ராகினியிலும் காணப்பட்டது. ராகினியின் சிறந்த மேம்பாட்டிற்கு ஊக்கமும், ஆக்கமும் கொடுத்து தனது முழுமையான ஆற்றலையும், கவனிப்பையும் நல்கி, தனக்கென வாழாது உற்ற துணையாக விளங்கியவர் 'அம்மா'. இரு பிள்ளைகளைக் கலைத்துறையில் மேம்படச் செய்வதென்றால், இலகுவான காரியமல்ல. அதுவும் நடனக் கலை மிகவும் கடினமானது. ஒன்று பெருளாதாரம். பணத்தைப் பார்த்தும், பாராமலும் தண்ணீர் போல் இறைக்க வேண்டும். குரு தட்சணை முதல் ஆடை, அலங்காரப் பொருள், நேரம் ஒதுக்கீடு மற்றும் குருவிடம் கற்கும் போது அவதானம், முயற்சி இவை அனைத்தும் பெரிதாகவே வேண்டப்படுகிறது. மற்றும் கலைகள் இருந்த இடத்தில் இருந்து திறமையைக் காட்டுவது. நடனம், உடல் அசைவை, உடல் உள்ள ரீதியான வெளிப்பாட்டைப் பிரதிபலிப்பது, அதற்குத் திடமான உடம்பு, உறுதியான மனம், காயம், செயல் மூன்றினாலும் இசைவு இரசனை, அனுபவம், வெளிப்பாடு, இவற்றிற்கு அப்பால் ஒரு தனித்துவம் வேண்டியிருக்கிறது. ராகினி சிறு பிள்ளையாக இருக்கும் போதே இந்த உறுதிப்பாட்டின் சாயல் பெரிதளவு இருந்தது. ஊக்கமுள்ள பிள்ளையாகவும் இருந்தார்.





இவர் சிறுமியாக பாடசாலை மேடைகளிலும், மற்றும் பொது அரங்குகளிலும் ஆடியதும் கண்டிருக்கிறேன். இள நங்கையாக மிளிரும் கலைஞராக விளங்குவதையும் கண்டிருக்கிறேன். நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியாகவும் அவரது உடல் வள வளர்ச்சி போல நடனக் கலையும் களைகட்டி முருகு பெற்றது. தனது ஆற்றலை மேடையில் வெளிப்படுத்தியபோது தோன்றியது இரசனை, அனுபவித்து ஆடும் தன்மை முன்னேற வேண்டுமென்ற ஊக்கம் அனைத்தையும் காணமுடிந்தது.

''தாரமும், குருவும் விதிப் பலன்'' என்பர். நல்ல குரு கிடைப்பது ஒருவரது தவப்பயன். மாணவரை நெறிப்படுத்த குரு கடுமையாக இருக்கலாம். கல்வியெனும் பயிருக்குத் தண்ணீர் ஊற்றி வளர்க்க வேண்டும் என்பார்கள். கஷ்டங்கள் மனக் குழப்பங்கள் நிச்சயம் ஏற்படும். மாணவன் தனது குருவின் கோபதாபங்களையும், ஏச்சுப் பேச்சுக்களையும் தாங்கி, அவரிடமுள்ள சூட்சமமான நுட்பங்களைத் தந்திரமாகத் தெரிந்து கொள்ளவேண்டும். அதற்கும் ஒரு அறிவுத் திறன், கைங்கரியம், உன்னிப்பு, பொறுமை வேண்டும். ராகினியிடம் இப்பண்புகள் காணப்பட்டதால், அவை கலையைக் கற்க நன்கு அனுசரணையாக இருந்தது.

ராகினியின் ஆரம்ப நடன ஆசிரியர் திருமதி லீலாம்பிகை செல்வராஜா. யாழ் நகரில் மட்டுமல்ல, இலங்கை முழுவதிலுமே மிக்க புகழ்பெற்ற நடனக் கலைஞர். அவரது ஆக்கங்கள் தனித்துவம் பெற்றவை. இன்றும் நடனக் கல்வித்துறையில் உயர் பதவியை வகிக்கின்றார். சிறந்த ஆசிரியர் அவரது அபிமான மாணவியாக ராகினி விளங்கியவர்.

ராகினியின் நடனக் கலைப் பட்டங்கள், நடன அறிவு பற்றிப் பலர் வெளிப்படுத்துவார்கள். நான் குறிப்பிடத் தேவையில்லை. ஆனால் அவரது வளர்ச்சியை, உள ரீதியான பண்பாட்டை ஏறத்தாழ 40 ஆண்டுகள் கண்டுள்ளேன். அதைப்பற்றிச் சில துணுக்குகள்.

இவர் ஆசிரிய தராதரப் பரீட்சையில் அதிசிறப்புப் பிரிவில் சித்திப் பெற்றபின், அவரது இல்லத்தில் தட்டுகளின் சத்தம் கேட்க ஆரம்பித்தது. 'தெய்யாத் தெய்'' என மெல்லிய குரலில் ஆரம்பித்து வர்ணம், பதம், தில்லானா என வளர்ந்தது. தனது குருவினுடைய வழிகாட்டலிலும், தனது புதிய ஆக்கங்களிலும் தனது திறமையைக் காட்ட முற்பட்டார். வருடாவருடம் தனது மாணவர்களைப் பயிற்றுவித்து, ஆண்டு இறுதி கலை நிகழ்ச்சியைப் படைப்பார். பரதம், கிராமிய நடனம், காவடி, பாம்பு நடனம், மயில் நடனம் இவை போன்ற படைப்புகளைக் காண முடிந்தது. இத்தகைய நிகழ்ச்சிகளால் பிள்ளைகளுக்கு உற்சாகம், தன்னம்பிக்கை, சந்தோஷமும் பெற்றோருக்கு மகிழ்ச்சியும் பெருமையும். அவருக்கு ஆற்றல், திறமை, மதிப்பும் ஏற்பட்டன.

**ரா**கினி திருமணம் முடிந்து வெளிநாடு வந்ததும் யாழ் மண்ணில் ஒலித்த சலங்கை ஒலி லண்டன் மேடைகளில் ஒலிக்க ஆரம்பித்தது. பல ஆண்டுகளுக்குப் பின்னர் சந்தித்த போது, அதே ராகினி தனது லண்டன் அனுபவங்களைக் கூறினார்.



நெல்லிக்காய் மூட்டை அவிழ்த்து விடப்பட்டது போல சிறு பொழுதில் மடமடவென்று லண்டன் ''நடனப்பள்ளி''. அதன் சிறப்பு, மாணவர்கள், தனது மாணவர்களது அரங்கேற்றங்கள் எனப் பலவும் கூறினார். அன்றிருந்த அதே பண்பு, அதே சிரிப்பு, அடக்கம், ராகினி மாறவில்லை. அவர் சொல்லச் சொல்ல நான் லண்டனில் அவரது நடனக் கலையின் மதிப்பை வியந்து கொண்டிருந்தேன். அன்றும் இன்றும் என ஒரே சுழற்சியாக சிந்தனை ஓடிக் கொண்டிருந்தது. வேற்று நாட்டிலே, வேற்று மொழி பேசும் மண்ணிலே, தமிழ் இனம் கூட மொழியை, கலாச்சாரத்தை மறந்து ஆங்கில மோகத்தில் தவழும் கட்டத்திலே, தமிழ் மொழியை அறியாது, பாடல்களின் தாற்பரியங்களைப் புரிந்து கொள்ள இயலாத மாணவ வட்டத்திற்கு, அவர்களை நெறிப்படுத்தி, அமைதி காத்து, ஒருமைப்படுத்தி, பரத நாட்டியத்தின் நுட்பங்களை விளக்கி, பதங்களின் பொருளை விளக்கியும் உணர்த்தியும், உணர்ச்சிகளை வெளிகாட்டப் பழக்கி, தனது குரு தனக்கு எப்படியெல்லாம் அரங்கேற்றத்திற்கு ஆயுத்தம் பண்ணினாரோ அந்த அனுபவத்தையும், தனது ஆராய்வால் மிளிர்ந்த அனுபவத்தையும் கூட்டி, எத்தனையோ பிள்ளைகளை மேடையேற்றி, அதில் பலரை அரங்கேற்றம் பண்ணவும் முடிந்தது என்றால் இது ஒரு சாதனையாகும். தனது படைப்புகளைப் பலரும் பெரிதும் மெச்சக் கூடியதாகப் படைத்துள்ளார். மெச்சுதற்கு உரிய விஷயம்.

நடனத்தைப் படிப்பித்தல் மட்டும் போதாது. கூடவே ஒப்பனைக் கலையும் வேண்டியுள்ளது. ராகினி நல்ல கைவண்ணம் மிக்கவர். என்னால் மறக்கமுடியாத சம்பவம். இவர் ஒரு நாள் மானிப்பாயில் இருந்த போது தனது தம்பியை அலங்கரித்து மற்றும் சிறுமியர் புடைசூழ எம் இல்லத்திற்கு வந்து ''ஒரு புது ஆளைக்கூட்டி வந்தேன். யார் சொல்லுங்கள் பார்ப்போம்'' என்றார். நித்தமும் கண்ட பிள்ளையை அடையாளம் தெரியவில்லை. இவளை தெரியாதா? இவ என் தங்கச்சி'' என்று கூறி விழுந்து விழுந்து சிரித்தது என் மனக்கண்முன் நிற்கிறது. அழகுக்கலை ராகினிக் இயல்பிலே வந்ததொன்றாகும். ஒப்பனை செய்வதில் சிறந்து விளங்கினார்.

ராகினியின் ஹாசியத்தை மறக்க முடியாது. ஒரு சந்திப்பின் போது ''நான் பாட்டியாகப் போகிறேன்'' என்று அதே சிரிப்பு, தலை அசைவு, துள்ளல், சந்தோஷம், தன்னை மறந்து சொன்னார். நடனக்கலை மூன்றாவது சந்ததியைக் காணுகின்றது என நான் மனதார வாழ்த்தினேன். கண்பட்டு விடக்கூடாது. கடவுளை வேண்டிக் கொண்டேன். ராகினி தன்னைப் போலத் தன் மகளையும் அரங்கு ஏற்றினார் அடுத்து வந்த வரவையும் அரங்கேற்ற இறைவன் ஆசி புரிய வேண்டும். இறைவன் அருளும், குருவின் ஆசியும், பெற்றோரின் ஆர்வமும், பிள்ளையின் ஊக்கமும், யாவற்றிற்கும் மேலான முற்பிறப்பின் செய்த புண்ணியமும் ஒன்று கூடி இன்று ராகினி நடன அரங்கில் சிறந்த நட்சத்திர ஆசானாகத் திகழ்கின்றார். இவரது கலை மேலும் மேலும் வளர்ந்து, செழித்து, வாழை அடி வாழையாக நிலைத்து நிற்கவேண்டுமென எல்லாம் வல்ல ஸ்ரீ நடராஜப் பெருமானையும், அம்மையையும் வேண்டிக் கொள்கிறேன். ●



# பயணங்கள் முடிவதில்லை



- சறோஜினி சந்திரகோபால்



**ரா**கத்தின் இனிமையைத் தன் நாமத்தில் கொண்ட ராகினி, கலை எனும் வலையினில் தன்னைப் பிணைத்து முப்பது அகவைகள் பறந்து விட்டன. தன் உளம் கவர்ந்த கலையினை மன நிறைவோடு கற்று, தேறி, பின் அரங்கேறி-இன்று அரங்கேற்றும் ஆசானாக வெற்றி நடைபோடுகின்றார்.

ஒரே வீட்டைப் புகுந்த வீடாகக் கொண்டவர்கள் நானும் ராகினியும். இன்று ராகினிக்குக் கிடைக்கும் வாழ்த்துக்களும், பாராட்டுக்களும் ராகினிக்கு மட்டுமின்றி, எம் புகுந்த வீட்டையும் அங்கீகரிக்கும் தோரணங்கள். நடனக் கலையுடன் இரண்டறக் கலந்த ராகினியின் கழுத்தில் விழும் அத்தனை பூமாலைகளும், நிச்சயமாக ராகினியின் தோளில் சேர வேண்டிய பாமாலைகளே. இன்று ராகினிக்கு கிடைக்கும் வாழ்த்துக்கள் அவரது அயராத உழைப்புக்கும், ஆறாத கலைப்பற்றுக்கும் தரப்படும் கௌரவம்.

புலம் பெயர்ந்த மண்ணில் நின்று தாயக மண்ணை நோக்கி என் எண்ணப் பறவை சிறகடிக்கின்றது. அங்கே... தாயகத்தில்-எம் புகுந்த வீட்டில் வல்வெட்டி 'கைலாய வாசா'வில் கலகலப்பாக வாழ்ந்த நாட்கள் அவை. புகுந்த வீட்டில் பெண்கள் எப்பொழுதும் அமைதியாக இருக்க வேண்டும் என்பது பொதுவான எதிர்பார்ப்பு 'கைலாய வாசா'வில் எங்களால் ரத்து செய்யப்பட்டுவிட்டது. ராஜனின் ராகினியும், சந்திரனின் சறோஜினியும் 'கைலாயத்தில்' ஒன்றாக இருந்தால் - வெண்கலக் கடையில் யானை புகுந்த ஆரவாரம். அப்படியொன்றும் பயங்கரமான அட்டகாசம் அல்ல. ஆட்டமும், ஓட்டமும், பாட்டும், கேலியும், சிரிப்பொலிகளும்தான். எங்களுக்குப் பக்க பலமாக இருந்த மச்சாள்மார் நளினியும் மாலினியும் பாவம்.



இரவு வேளைகளில் கலாட்டா கூடிவிட்டால் எங்கள் மாமியார் விடும் எறிகணைகள் நளினி, மாலினி இருவரையும் குறி வைத்திருக்கும். "இந்த வீட்டில எத்தனை மணி வரையும் 'லைட்' எரியப்போகுதெண்டு நான் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன்" - இது மாமியாரின் அதிரடி ஸ்டேட்மேண்ட். சில வேளைகளில் நாங்கள் மெதுவாகப் பேசிக்கொண்டால், "என்ன இரகசியம் பேசிக் கொள்கிறார்களோ" என்ற சந்தேகமும் எழுந்த காலமும் உண்டு. ராஜன் அண்ணா 'லேக் ஹவுசில்' பணி புரிந்த காலம் அது. எனது கணவர் லண்டனில். ராஜன் அண்ணா விடுமுறையில் வந்தால், சொந்த பந்தங்கள் கூடி, மாலை முதல் நடுநிசி வரை பாடல் கச்சேரி. அது ஒரு பொற்காலம். இன்றும், ராகினியும் நானும் அடிக்கடி இவற்றை ஞாபகப் படுத்திக் கொள்வோம்.

**கி**ழக்கு லண்டனில் திருவள்ளுவர் தமிழ்ப் பாடசாலையில், ராகினி நடன ஆசிரியையாக 1986ல் இணைந்தார். 1992ல் நான் தமிழ் ஆசிரியையாக அதே பாடசாலையில் பணி சேர்ந்தேன். கிட்டத்தட்ட ஐந்து வருடங்கள் ஒரே பாடசாலையில் பணி புரிந்தோம். பொங்கல் விழா, பாடசாலைப் பரிசளிப்பு விழா என்று வந்துவிட்டால்-'ராக்கி' ராட்டினமாகச் சுழல்வார். விழா தொடங்கி நிகழ்ச்சிகள் நிறைவு



பெறும் வரை ஓயமாட்டார். பள்ளி மாணவர்களுடன் பாசத்துடன் பழகும் ராகினியுடன் குழந்தைகள் விரைவில் ஒட்டிக் கொள்வார்கள். பரதநாட்டியம் தவிர்த்த ஏனைய நிகழ்ச்சிகளை நாங்கள் தயார் செய்யும்போது- "அப்படிச் செய்தால் நன்றாக இருக்கும், இப்படி மாற்றி அமைத்தால் எப்படி இருக்கும்?" என்று ஆலோசனைகள் சொல்லும் நல்ல பண்பு ராகினியிடம் உண்டு. சொந்தக் காரணங்களின் நிமித்தம் ராகினி தமிழ்ப் பாடசாலையில் இருந்து விலகப் போவதாகக் கூறியபோது, நான் மட்டுமல்ல- சக ஆசிரியைகளும் கவலைப்பட்டோம்.



**29-09-2001ல்** எங்கள் மகள் சங்கீதாவின் நடன அரங்கேற்றம் நடைபெற்றது. குரு அவள் பெரியம்மா ராகினிதான். திருவள்ளுவர் பாடசாலையில் நடன ஆசிரியையாக இருந்த காலத்தில் "இல்பேர்ட்"டில் எங்கள் வீட்டிலேயே சங்கீதாவிற்கு நடனம் கற்றுக் கொடுத்தார் ராகினி.

அக்கா ஷர்மினியின் (ராகினியின் மகள்) நடனத்தைப் பார்த்து அவளைப் போல தானும் ஆட வேண்டும் என்ற ஆவலில் பெரியம்மாவையே சுற்றிச் சுற்றி வந்த சங்கீதாவின் ஆசைக்கு பிள்ளையார் சுழி போட்டார் ராகினி. ஷர்மினியின் சலங்கையை அடிக்கடி தட்டிப் பார்த்து, தொட்டுப் பார்த்து தன் ஆசையை வெளிப்படுத்திக் கொண்டிருந்த சங்கீதாவின் கால்களில் சலங்கை கட்டினார் ராகினி. எங்கள் வீட்டிலும் "கலீர், கலீர்" எனக் கொஞ்சியது சலங்கை ஒலி.

சங்கீதா அரங்கேறும் நாள் அண்மித்துக் கொண்டிருந்த வேளை- ராகினி பம்பரமாகச் சுழன்ற அந்த நாட்களை நினைத்துப் பார்க்கிறேன். அதிகாலையில் கண் விழிப்பதும், சாமக் கோழி கூவி சில மணிகளுக்குப் பின் நித்திரைக்குப் போவதும், குறிப்புகள் எழுதுவதும், முத்திரைகள் சரி பார்ப்பதும், உடைகள், அலங்காரப் பொருட்கள் பற்றி பேசுவதும், பக்கவாத்தியக் குழுவினரோடு தொலைபேசியில் உரையாடுவதும் இப்படிப் பல தரப்பட்ட ஆரவாரங்கள், ராகினியின் அந்தச் சுறுசுறுப்பு, பரபரப்பு, உற்சாகம், சோர்வு, சிரிப்பு, கவலை, ஆத்திரம். நவரசங்களும் ராகினியிடம் நடம் பயின்ற காலம் அது.

ராகினி தன் குரு பற்றியும், சலங்கையின் மகிமை பற்றியும் சங்கீதாவிற்கு கதை கதையாகச் சொல்வதைக் கேட்டிருக்கின்றேன். SRUTI-LAYA FINE ARTS ACADEEMY (CANADA) அதிபரும், கலாசேத்திராவின் புகழ் பெற்ற வாரிசுகளில் ஒருவருமான செல்வி. சாந்தா பொன்னுத்துரை அவர்கள் ராகினியின் குரு. நடனக் கலையின் பாரம்பரியத்தை மதித்து, சாத்திர சம்பிரதாயங்களுக்குக் கட்டுப்பட்டு, கலைக்காக தன்னை அர்ப்பணித்து வாழும் தன் குருவைப் பற்றி அடிக்கடி பெருமையுடன் பேசிக் கொள்வார். தன் அரங்கேற்றச் சலங்கையை, பூஜை அறையில் வைத்திருப்பதாக சங்கீதாவிடம் பல தடவை கூறியதை நான் கேட்டுள்ளேன்.

சங்கீதாவின் சங்கீத ஆசிரியை திருமதி மாதினி சிறீகந்தராசா. வீணை ஆசிரியை திருமதி மாலினி தனபாலசிங்கம். நடன ஆசிரியை, திருமதி ராகினி, ராஜகோபால் இந்த மூவரும் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்தவர்கள். சங்கீதாவின் அரங்கேற்றத்தில் ராகினியின் நடன அமைப்புக்கு மாதினியின் இசையும், மாலினியின் வீணை ஓசையும் சுருதி கூட்டின. இந்த அரங்கேற்றத்திற்கு ராகினியின் குருவான செல்வி. சாந்தா பொன்னுத்துரை அவர்கள் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டார். இதில் இன்னுமொரு சிறப்பு செல்வி சாந்தா பொன்னுத்துரை அவர்களது அரங்கேற்றத்தில் மிருதங்கம் வாசித்த அதே ஸ்ரீ. காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி அவர்களே மிருதங்கம் வாசித்தார். இத்தனை வித்துவான்களினதும் சங்கமத்தை பிபிசி இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனம் புகழ் திரு. விமல் சொக்கநாதன் மிக அழகாகத் தொகுத்தளித்தார்.

ராகினி சங்கீதாவிற்கு குருவாக இருந்த போதும் தன் குரு சாந்தா அவர்கள் முன்னிலையில் ராகினி காட்டிய குருபக்தியும், மரியாதையும் சங்கீதாவின் மனதில் இன்றும் பசுமரத்தாணிப்போல பதிந்திருப்பதை என்னால் அவதானிக் முடிகிறது. காரணம் பெரியம்மா, பெரியம்மா என்று செல்லமாகச் சுற்றிவரும் சங்கீதா, நடன பயிற்சியின் போது குரு பக்தியோடு நடந்து கொள்கின்றாள்.இது ராகினி காட்டிய வழி. பாடசாலை முடிந்த பின் சங்கீதா ரூட்டிங் வர மாலை 6 மணி ஆகிவிடும். இரவு 12 அல்லது ஒரு மணிக்கே நாங்கள் வீடு திரும்புவோம். வாரத்தில் மூன்று நாட்கள் இதே பயணம்.

இந்த நாட்களில் சங்கீதாவிற்கு ஆசிரியையாக அல்ல ஒரு தாயாகவே ராகினி நடந்து கொள்வார். இரவில் பயிற்சி முடிந்தும் சங்கீதாவிற்கு சாப்பாடு ஊட்டியும் விடுவார். கால் நோகின்றதா? கை நோகின்றதா? எனக் கேட்டு தடவி விடுவார். ராகினி, மாதினி, மாலினி, ஒன்று கூடலில் தேனீர் தயாரிப்பதும், கார் ஓட்டுவதும், சறோஜினியின் வேலை. அரங்கேற்றம் என்றால் தலையிடி என்று சொல்லக் கேட்டிருக்கிறேன்.

என்னைப் பொறுத்தமட்டில் அது சுகமான மகிழ்ச்சியான அனுபவமாக இருந்தது. எல்லோரையும் அனுசரித்து போகும் பண்பு ராகினியிலும் மற்றைய கலைஞர்களிலும் இருந்தும் இதற்கு முக்கிய காரணம். அரங்கேற்றிய பின் தான் படித்த பாடசாலையிலும் தொடர்ந்து தமிழ்ப் பாடசாலை, பல்கழைக்கழகத்திலும் சங்கீதா பல நடனங்களைஅமைத்து மேடையேற்றி வருகிறாள். அவளது இந்த முன்னேற்றத்துக்கு முதல் காரணம் ராகினியே, சங்கீதாவில் உள்ள திறமைக்குப் பயிற்சிப் பட்டறை ராகினி.

ராகினியைச் சுற்றிய என் நினைவுகளைப் பகிர்வதில் முக்கியமான ஒரு விடயத்தை மறந்துவிட்டேன். ஒவ்வொரு ஆணின் வெற்றிக்கு பின்னாலும் ஒரு பெண் இருப்பதாக கூறுவார்கள். ஆனால் இங்கு ராகினியின் விஷயத்தில் ராகினியின் ஒவவொரு வெற்றிக்கு பின்னாலும், இலை மறை காயாக இருப்பவர் ராஜன் அண்ணா தான். ஒவ்வொரு விடயங்களையும் மிக நுட்பமாக யோசித்துச் செய்வார். நித்திரையை மறந்து சில வேளைகளில் அறையை விட்டு வெளியில் வராமல் இருந்து தொடர்ந்து ஆக வேண்டியதைக் கவனிப்பார். கடின உழைப்பும் எடுத்த காரியத்தை செவ்வனே முடிக்க வேண்டும் என்ற கொள்கையும் உடையவர். ராகினியின் முன்னேற்றத்தில் மிக அக்கறை கொண்டவர். சிறந்த குணாதிசயங்களைக் கொண்ட ராஜன் அண்ணாவுடன் நெருங்கிப் பழகுபவர்கட்கு அவரில் தன் தந்தையாரின் பிரிவுக்குப் பின்னர் உள்ள விசேட இன்னுமொரு குணம் பற்றியும் நன்றாகவே தெரியும். அது அவரது முன் கோபம். இந்தக் கோபம் திடீர் பிரவேசம் எப்போ செய்யும்? எந்த வடிவத்தில் வரும்? எவ்வளவு நிமிடங்கள் நீடிக்கும்? இது யாருக்கும் தெரியாது - ராகினியைத் தவிர. குடும்பப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர் மூத்தவர் என்பதால், வீட்டில் அவருக்கு தனி ராஜமரியாதை உண்டு. ராஜாவிற்குக் கொடுக்கும் கௌரவம் அந்த வீட்டில் அவரது ராகினிக்கும் உண்டு. இருவருமே ஒரே பயணம் தான். கணவர் பத்திரிக்கையோடு பயணம் - மனைவி கலையோடு பயணம். ''பயணங்கள் முடிவதில்லை'' என்றவரிகள் இவர்கள் இருவருக்காகவே எழுதப்பட்டிருக்கலாம்.

ஆரம்ப காலத்தில் 'கைலாய வாசா'விலும், பின்னர் திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளியிலும், அதைத் தொடர்ந்து சங்கீதாவின் அரங்கேற்ற காலத்திலும் நானும் ராகினியும் ஒரே கூரையின் கீழ் நாட்கணக்கில், மாதக் கணக்கில் வாழ்திருக்கிறோம்.

சிறந்த சினேகிதிகளாகப் பேசியிருக்கின்றோம். அந்த நாட்களை இன்று மீண்டும் ஞாபகப்படுத்த ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததில் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. இதைப் படிக்கும்போது ராகினியின் நினைவுகளும் கடந்த காலத்தை நோக்கிச் சிறகடிக்கும்.

ராகினி! உங்கள் மைத்துனர் சந்திரனும் மகள் சங்கீதாவும் என்னுடன் இணைந்து உங்களைப் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறார்கள். ●





# பரதமும், நவீன தொழில்நுட்பமும்



-க.பாலேந்திரா, (நாடக நெறியாளர்)



தற்போது ஈழத்தமிழர் வாழும் புலம் பெயர் நாடுகளில் பல்வேறு நடன ஆசிரியைகள் இளம் சமூகத்தினரை நடனத்துறையில் பயிற்றுவித்து வருகிறார்கள். தாயகத்தில் வாழும் குழந்தைகளை விட புகலிடங்களில் வளரும் பிள்ளைகளுக்கு இந்த அருங்கலையை முறையாகக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பும், பார்க்கும் வாய்ப்பும் பரவலாக கிட்டியிருக்கிறது. நடன நிகழ்ச்சிகளை ஆசிரியர்கள் சீரமைத்து, நவீன வசதிகளுடன், நவீன மேடைகளில் அளிக்கும் வாய்ப்பும், பொருளாதாரமும் புகலிடத்தில் உண்டு. இந்த ரீதியில், நவீன தொழில்நுட்ப சாதனங்களின் உதவியோடு, தரமான நடனக்கலை நிகழ்ச்சிகளை லண்டனில் தொடர்ச்சியாக பல வருடங்கள் தயாரித்து வழங்கும் முன்னணி நடன ஆசிரியை ராகினி ராஜகோபால். எண்பதுகளின் ஆரம்பத்தில் லண்டனுக்கு தொகையாக தமிழ் மக்கள் புலம் பெயர ஆரம்பித்த வேளையில், அவரது மகள் ஷர்மினியின் அரங்கேற்றத்தை கணவர் ராஜகோபால் அவர்களுடன் நல்ல முறையில் திட்டமிட்டு, மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டம் மத்தியில் மிகச்சிறப்பாக நடத்தினார். அக்காலத்தில் அரங்கேற்றங்களும் குறைவு. நவீன தொழில்நுட்பத்தினை பயன்படுத்தும் நடன ஆசிரியைகளும் குறைவு. அன்றிலிருந்து இன்று வரை இவரது பல நடன நிகழ்ச்சிகளில் நானும் எனது மனைவி ஆனந்தராணியும் பார்த்தும் பங்கு பெற்றும் வருகிறோம். ராகினி ராஜகோபால் அவர்களது நாட்டியாலயா 30வது ஆண்டு நிறைவு வைபவத்தில் இக்கட்டுரையை எழுதுவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

பரதம் கோவில் மண்டபங்களில் ஆடப்பட்டு வந்த மரபுக் கலை வடிவம். இந்த நடனக் கலை வடிவம் காலத்துக்கு ஏற்றவாறு எப்போதும் மாற்றம் அடைந்து வந்திருக்கிறது. இந்தக் கலை நவீன உலகத்தில் நவீன தொழில்நுட்ப வளங்களான ஒலி, ஒளி ஆகியவற்றை எவ்வாறு உள்வாங்கி வளர்ந்து வருகிறது என்பதனை குறிப்பாக ஒளி அமைப்பை லண்டன் சூழலில் கோடிட்டு காட்டுவதே நோக்கம். இப்படியான தொழில்நுட்பத் தேடலை மேற்கொள்ளும் நடன ஆசிரியர்கள் மிகச் சொற்பமே. அந்த வகையில் இது ஒரு பார்வைக்கலை என்ற ரீதியில், நடனம் ஏற்படுத்தும் மனச்சூழலுக்கு ஏற்ப உடைவண்ணத் தேர்வுகளையும், இசைத் தேர்வுகளையும் ஒலி, ஒளித் தேர்வுகளையும் நேர்த்தியாக செய்து வருபவர் ராகினி ராஜகோபால். தொழில் ரீதியாக உலகெங்கும் பவனி வரும் நடனக் குழுக்களில் கூட

*நடனம் ஏற்படுத்தும் மனச்சூழலுக்கு ஏற்ப உடைவண்ணத் தேர்வுகளையும், இசைத் தேர்வுகளையும் ஒலி, ஒளித் தேர்வுகளையும் நேர்த்தியாக செய்து வருபவர் ராகினி ராஜகோபால்.*



ஒளியமைப்புக்கு என்று ஒருவரைத் தமது குழுவில் இணைத்துக் கொண்டு செல்பவர்கள் இந்தியாவில் மிகச் சொற்பம்.

ஒரு நடன நிகழ்ச்சிக்கு ஒளியமைப்பு செய்து நிர்வாகிப்போருக்கு தகுந்த தொழில்நுட்ப அறிவும் கலை உணர்வும் இருக்க வேண்டும். நடனம் வெளிப்படுத்தும் உணர்வுச் சூழலுக்கு உகந்த, நடனமாதுக்கள் அணிந்திருக்கும் உடை வண்ணத்தை அறிந்து, பின்னணி மேடை அலங்காரங்களையும், அறிந்து சரியான ஒளி வண்ணக் கலவையை சரியான கணத்தில் கொடுக்க தெரிந்திருக்க வேண்டும். நடனத்தின்போது மேடையில், எந்தப் பகுதியில் என்ன எந்த நேரத்தில் நிகழும் என்ற மேடை வெளி பற்றிய பிரக்ஞையும், இசையும் மனப்பாடமாக இருக்க வேண்டும். அப்போது தான் சரியான தருணத்தில் சரியான உணர்வுச் சூழலை ஒளியில் கொணர்ந்து, நடனத்துக்கு மெருகூட்டலாம். லண்டனில் எல்லா அரங்குகளிலும் நல்ல மேடை ஒளியமைப்புக்கான வசதிகள் கிடைப்பதில்லை. நல்ல அரங்குகளில், நவீன கணினி வசதிகளுடன், மேடையில் தேவையான இடங்களில், தேவையான ஒளி விளக்குகளைப் பொருத்தி அவற்றை ஒரு சீராக நடனத்தின் மனச்சூழல், உணர்வுச் சூழல் மாறுபடும் போது ஒளியையும் மாற்றுவது சாத்தியம். அதற்கு அந்த அரங்குகளில் தொழில்புரியும் தொழில்நுட்ப வல்லுனர்களின் உதவியுடன் எமக்கு வேண்டியதை செயல்படுத்தலாம்.

அப்படிச் செய்வதற்கு, அவர்களது தொழில்நுட்ப மொழியில் அவர்களிடம் தொடர்பு கொள்வதற்கு ஒரு பயிற்சியும் அறிவும் தேவை.

எம்மவர் நிகழ்ச்சிகளில் ஒளிப்பதிவு மிக முக்கியமாகக் கருதப்படுகிறது. நவீன அரங்குகளில் ஒளியமைப்பு, அரங்கில் அமர்ந்து இருக்கும் பார்வையாளர்களின் கண்களுக்கு இதமாக அமையும். வீடியோ கேமராக்களுக்கு சில வேளை போதாமல் போய் விடும். ஒளிப்பதிவு செய்பவர்கள், உயர்தர நவீன கருவிகளை சரியாகப் பயன்படுத்தினால் இந்தக் குறையை நிவர்த்தி செய்து கொள்ள முடியும்.

நடனத்தை வடிவமைக்கும் போதே, அதற்குரிய ஒளியையும், சூழலையும் பார்வைப்படுத்தி, அதற்கான சரியான சூழலை ஏற்படுத்த வேண்டும். நடனத்தின் லயம், உணர்வுச் சூழல், நடனத்திற்கு இடையில் வரும் (Pauses) கூட்டியே திட்டமிடப்பட்டு இருக்க வேண்டும். எமது சூழலில் தொழில்நுட்ப ஒத்திகை என்று பார்ப்பது கிடையாது. மேற்கத்தைய குழுக்கள், இறுதி நிகழ்ச்சிக்கு முன்னரே, சகல ஒளி, ஒலி அமைப்புகளுடன் தொழில்நுட்ப ஒத்திகை பார்ப்பது வழக்கம். எம்மவர்கள் அதற்குரிய செலவை வீண் செலவாக எண்ணுவதும் உண்டு. எம்மவர்களது மேடை நிகழ்ச்சிகள் பொதுவாக பார்வையாளர்கள் மத்தியில் நிகழும் இறுதி ஒத்திகையாகத்தான் இருந்து வருகிறது. அது மாற வேண்டும்.

நவீன அரங்குகளில் லண்டனில் தொழில்நுட்பவியலாளர்களாக, மேற்கத்தியர் நவீன தொழில் புரிகிறார்கள். அவர்களது, நடனத்துறையும், அதற்கான ஒளியமைப்பும் வேறானது. மேற்கத்திய பாலே (Ballet) போன்ற நடனங்களில் அபிநயம் அல்லது முகபாவம் என்ற அம்சம் குறைவாக இருக்கும். உடலின் அசைவுகளால் மட்டுமே உணர்வுச் சூழலை ஏற்படுத்துவார்கள். இந்த நடனத்துக்கு பிரகாசமான ஒளியமைப்பு பல இடங்களில் தேவைப்படுவதில்லை. பரதம், அபிநயம் என்ற அம்சத்தை முக்கியப்படுத்துகிறது. எனவே, நடனமாடுபவர்களது முகங்கள் தெளிவாக, அரங்கில் இருக்கும் பார்வையாளர்களுக்கு தெரியும் வகையில் ஒளி பிரகாசமாக இருக்க வேண்டும். பிரகாசமான ஒளியில் சில சந்தர்ப்பங்களில் சரியான உணர்வுச்சூழலை ஏற்படுத்த முடியாது. இந்தத் தொல்லை எல்லாம் விட்டு பலர் பளிச்சென்ற வெளிச்சத்தில், ஒரு பரிமாண ஒளியமைப்பில் அல்லது வீடியோ ஒளியில் நிகழ்ச்சிகளை நடத்துகிறார்கள்.



இப்படியான சூழலிலும், ராகினி ராஜகோபால் நடனத் துறையில் புதிதாக செய்யும் உந்துதலில், மிகவும் பிரயாசைப்பட்டு நடன நிகழ்ச்சிகளை அமைத்து வெற்றி கண்டிருக்கிறார். இதய சுத்தியுடன் பலரது நிகழ்ச்சிகளையும் எமது நாடக நிகழ்வுகள் உட்பட பார்வையிட்டு, கலைத்தேடலில் 30 ஆண்டுகள் கடந்தும் தொடர்ந்தும் ஆரம்பமுனைப்புடன் ஈடுபட்டு வருகிறார். இவரது கலைப்பணி மேலும் பல்லாண்டு தொடர எனது இதயப்பூர்வமான



# வீரமணி ஐயர் பாராட்டிய ராகினி



- செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன்

(அதிபர், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுண்ணாகம் தலைவர், சிவபூமி அறக்கட்டளை இணைச் செயலாளர், துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

ஈழத்திரு நாட்டில் பரதக்கலை பண்டு தொட்டு வளர்ச்சி பெற்று வந்துள்ளது. இக்கலையை நேசித்தவர்கள் நன்றிக்குரியவர்கள். ஆடலரசன் நடராஜப் பெருமானது திருக்கூத்தை மையமாகக் கொண்டு உருவாக்கிய கலை வடிவமே பரதக் கலையாகும். பரதக் கலை பிரபஞ்ச தத்துவத்தை இவ்வுலகுக்கு உணர்த்துவது. இத்தகைய வடிவம் இந்து தத்துவத்தின் இணையில்லாத பொக்கிஷம். பரத சாஸ்திரம் என்ற அரிய நூலை இவ்வுலகுக்குப் படைத்தவர் பரத முனிவர். இப்புனித சாஸ்திரத்துக்கு அமைய பாரதத்திலும், ஈழத்திலும் பேணிக் காத்த பரதக்கலை இன்று உலகம் முழுவதும் வியாபித்துள்ளது.

ஈழத்திரு நாட்டில், மானிப்பாய் என்ற கிராமத்தில் கல்வியிலும், கலையார்வத்திலும் சிறந்து விளங்கிய குடும்பத்தில் தோன்றிய ராகினி ராஜகோபால் அவர்கள் சிறுபராயத்திலேயே பரதக் கலை பயின்றவர். இவர் மட்டுமல்ல. இவரது இரட்டைச் சகோதரி வினோதினி, இவரது தாயாரின் தங்கை மகள் எல்லோரும் இக்கலையைத் தெய்வீகமாகக் கற்றவர்கள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நடனத் துறை தலைவராக விளங்கி முத்திரை பதித்தவர், ராகினியின் சகோதரி கிருஷாந்தி ரவீந்திரா.

எழுபதுகளில் யாழ்.குடா நாட்டில் ஆற்றல் மிகு பரதக்கலை வித்தகர்களாக இளைய தலைமுறையில் முன்னின்றவர்களில் ராகினி (அரசரத்தினம்)யும் ஒருவர். மிக இளம் வயதில் நடன ஆசிரியையாக இணைந்து, கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடனத்துறையில் சிறப்புப் பயிற்சி பெற்று, மகா வித்துவான் இயல், இசை வாரிதி வீரமணி ஐயரிடம் இக்கலையைக் கலாசாலையில் பயில்கின்ற வாய்ப்புப் பெற்றவர்.



வீரமணி ஐயர் ஆசிரிய கலாசாலையில், முத்தமிழ் விழாவில் அரங்கேற்றிய நாட்டிய நாடகங்களில் முதன்மைப் பாத்திரத்தை ஏற்று ஆற்றலை வெளிப்படுத்தியவர் ராகினி. இறக்கும் வரை வீரமணி ஐயர் அவர்கள் ராகினியின் நாட்டியப் பாத்திரச் சிறப்பை உணர்வுப்பூர்வமாக எடுத்து உரைத்ததை யான் அறிவேன்.



நடனத்துறையில் நல்ல ஆசிரியராகப் பணிபுரிந்த ராகினி, புலம் பெயர்ந்த சூழலில் தாயகத்தை விட்டு லண்டனில் குடியேறியதும், தான் உயிராக நேசித்த நடனக்கலையை இன்று வரை காத்துவருவது போற்றுதலுக்குரியது.

இன்று இங்கிலாந்தில், பிரான்சில், ஜெர்மனியில், கனடாவில், சுவிட்சர்லாந்தில், டென்மார்க்கில், நோர்வேயில், ராகினியின் நாட்டியக் கலைப் பற்றி சிறப்பாக முதன்மைப்படுத்தி,



இயல் இசைவாரி
வீரமணிஐயர்

தமது அரங்கேற்ற மற்றும் நடன நிகழ்ச்சிகளுக்கு பிரதம விருந்தினராக அழைத்துக் கௌரவிக்கிறார்கள்.

இங்கிலாந்தில் பிறந்த ஏராளமான குழந்தைகளுக்கு இப்புனிதக் கலையை பயிற்றுவித்து, பல்வேறு மேடைகளில் அவர்களது ஆற்றலை வெளிப்படுத்தி, அவர்களைப் பெற்றவர்களுக்கும், புலம் பெயர்ந்து வாழும் மக்களுக்கும் ஆத்ம திருப்தியை ஏற்படுத்தி வருபவர்.

எல்லாக் கலைஞர்களோடும் அன்பாகவும், பண்பாகவும் பழகும் இயல்பு கொண்ட இவரை அனைவரும் சிறந்த ஆளுமை உள்ள கலைஞராக மதித்து வருவதை நான் லண்டனில் நேரில் பார்த்தும், கேட்டும் இருக்கிறேன். இவரது கலை வளர்ச்சிக்கு ஆரம்பத்தில் பெற்றோரும், பின்னர் இவரது கணவரும் பெரும் துணை புரிந்து வருவதை யான் அறிவேன்.

ஈழத்திலும், புலம் பெயர்ந்த பிரித்தானியாவிலும் மக்கள் அறிந்த ஊடகவியலாளராக விளங்குபவர் ராகினியின கணவர் ராஜகோபால். அவர் பாரம்பரியமான கலைகள் மீது மிகவும் பற்றுக் கொண்டவர். ஈழத்தில் 'ஈழநாடு' பத்திரிகையில் பணியாற்றிய காலத்தில் பல கலைஞர்களைச் செவ்வி கண்டு, அவர்களது மேன்மையை வெளிப்படுத்தியவர். சிலம்புச் செல்வர் ம.பொ.சி. யாழ்ப்பாணம் வந்த போது, வயதில் அப்போது மிகமிகக் குறைந்தவராக இருந்தும், அருமையான பேட்டி கண்டு எழுதியது எனக்கு இன்னமும் நினைவிருக்கிறது.



எந்த ஒரு கலை நிகழ்ச்சியையும் வாசகர் மனதைத் தொடும் வகையில் உணர்வுப்பூர்வமாக வெளிப்படுத்தும் ஆற்றல் இவரது தனித்தன்மைகள் ஆகும்.

1999ம் ஆண்டு லண்டனுக்கு யான் முதல் வருகை தந்த போது, 'புதினம்' ராஜகோபால் அவர்களையும், நடனக்கலை வித்தகராக விளங்கும் ராகினியையும் சந்திக்கும் வாய்ப்புப் பெற்றேன். ராகினியின் நடனப்பள்ளி 'நாட்டியாலயா' பற்றி பலரும் மெச்சினார்கள்.

எனது சகோதரர் திரு.கனகசுந்தரம் (பொறியியலாளர்) ராகினி ராஜகோபாலின் நடன நிகழ்ச்சிகளின் சிறப்பை எனக்கு எடுத்துரைத்தார்.

அதனால், அவரது மாணவிகள் நடன நிகழ்ச்சிகள் சிலவற்றை நேரில் பார்த்து மகிழ்ந்தேன். மிகவும் சிறப்பாக அமைந்திருந்தன.

இப்பெரும் கலைஞர் கலைத் துறைக்கு ஆற்றியுள்ள உன்னத சேவையைக் கௌரவிக்கும் முகமாக வெளியிடப்படும் சிறப்பு நூலில் அவரை வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகின்றேன்.

கலைஞர்கள் கௌரவிக்கப்படும் போது கலைத்துவம் மேலும் எழுச்சி பெறும் என்பது எனது நம்பிக்கை. கலை இன்பமே நிலை இன்பமாகக் கொள்ளும் இத்தகைய கலைஞர்களைக் கௌரவிப்பது சமுதாயத்தின் கடமையாகும். உலகை மகிழ்விப்பது கலை. கலைக்கு உயிர் கொடுக்கும் கலைஞர்களைப் போற்றுதல் கலாரசிகர்களின் நன்றிக் கடனாகும். ●

*எல்லாக் கலைஞர்களோடும் அன்பாகவும், பண்பாகவும் பழகும் இயல்பு கொண்ட இவரை அனைவரும் சிறந்த ஆளுமை உள்ள கலைஞராக மதித்து வருவதை யான் லண்டனில் நேரில் பார்த்தும், கேட்டும் இருக்கிறேன்.*



# வீரமணி ஐயர் பாராட்டிய ராகினி



- செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன்

(அதிபர், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுண்ணாகம் தலைவர், சிவபூமி அறக்கட்டளை இணைச் செயலாளர், துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

ஈழத்திரு நாட்டில் பரதக்கலை பண்டு தொட்டு வளர்ச்சி பெற்று வந்துள்ளது. இக்கலையை நேசித்தவர்கள் நன்றிக்குரியவர்கள். ஆடலரசன் நடராஜப் பெருமானது திருக்கூத்தை மையமாகக் கொண்டு உருவாக்கிய கலை வடிவமே பரதக் கலையாகும். பரதக் கலை பிரபஞ்ச தத்துவத்தை இவ்வுலகுக்கு உணர்த்துவது. இத்தகைய வடிவம் இந்து தத்துவத்தின் இணையில்லாத பொக்கிஷம். பரத சாஸ்திரம் என்ற அரிய நூலை இவ்வுலகுக்குப் படைத்தவர் பரத முனிவர். இப்புனித சாஸ்திரத்துக்கு அமைய பாரதத்திலும், ஈழத்திலும் பேணிக் காத்த பரதக்கலை இன்று உலகம் முழுவதும் வியாபித்துள்ளது.



ஈழத்திரு நாட்டில், மானிப்பாய் என்ற கிராமத்தில் கல்வியிலும், கலையார்வத்திலும் சிறந்து விளங்கிய குடும்பத்தில் தோன்றிய ராகினி ராஜகோபால் அவர்கள் சிறுபராயத்திலேயே பரதக் கலை பயின்றவர். இவர் மட்டுமல்ல. இவரது இரட்டைச் சகோதரி வினோதினி, இவரது தாயாரின் தங்கை மகள் எல்லோரும் இக்கலையைத் தெய்வீகமாகக் கற்றவர்கள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நடனத் துறை தலைவராக விளங்கி முத்திரை பதித்தவர், ராகினியின் சகோதரி கிருஷாந்தி ரவீந்திரா.

எழுபதுகளில் யாழ். குடா நாட்டில் ஆற்றல் மிகு பரதக்கலை வித்தகர்களாக இளைய தலைமுறையில் முன்னின்றவர்களில் ராகினி (அரசரத்தினம்)யும் ஒருவர். மிக இளம் வயதில் நடன ஆசிரியையாக இணைந்து, கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடனத்துறையில் சிறப்புப் பயிற்சி பெற்று, மகா வித்துவான் இயல், இசை வாரிதி வீரமணி ஐயரிடம் இக்கலையைக் கலாசாலையில் பயில்கின்ற வாய்ப்புப் பெற்றவர்.



வீரமணி ஐயர் ஆசிரிய கலாசாலையில், முத்தமிழ் விழாவில் அரங்கேற்றிய நாட்டிய நாடகங்களில் முதன்மைப் பாத்திரத்தை ஏற்று ஆற்றலை வெளிப்படுத்தியவர் ராகினி. இறக்கும் வரை வீரமணி ஐயர் அவர்கள் ராகினியின் நாட்டியப் பாத்திரச் சிறப்பை உணர்வுப்பூர்வமாக எடுத்து உரைத்ததை யான் அறிவேன்.

நடனத்துறையில் நல்ல ஆசிரியராகப் பணிபுரிந்த ராகினி, புலம் பெயர்ந்த சூழலில் தாயகத்தை விட்டு லண்டனில் குடியேறியதும், தான் உயிராக நேசித்த நடனக்கலையை இன்று வரை காத்துவருவது போற்றுதலுக்குரியது.

இன்று இங்கிலாந்தில், பிரான்சில், ஜெர்மனியில், கனடாவில், சுவிட்சர்லாந்தில், டென்மார்க்கில், நோர்வேயில், ராகினியின் நாட்டியக் கலைப் பற்றி சிறப்பாக முதன்மைப்படுத்தி,



**இயல் இசைவாரி வீரமணிஐயர்**

தமது அரங்கேற்ற மற்றும் நடன நிகழ்ச்சிகளுக்கு பிரதம விருந்தினராக அழைத்துக் கௌரவிக்கிறார்கள்.

இங்கிலாந்தில் பிறந்த ஏராளமான குழந்தைகளுக்கு இப்புனிதக் கலையை பயிற்றுவித்து, பல்வேறு மேடைகளில் அவர்களது ஆற்றலை வெளிப்படுத்தி, அவர்களைப் பெற்றவர்களுக்கும், புலம் பெயர்ந்து வாழும் மக்களுக்கும் ஆத்ம திருப்தியை ஏற்படுத்தி வருபவர்.

எல்லாக் கலைஞர்களோடும் அன்பாகவும், பண்பாகவும் பழகும் இயல்பு கொண்ட இவரை அனைவரும் சிறந்த ஆளுமை உள்ள கலைஞராக மதித்து வருவதை நான் லண்டனில் நேரில் பார்த்தும், கேட்டும் இருக்கிறேன். இவரது கலை வளர்ச்சிக்கு ஆரம்பத்தில் பெற்றோரும், பின்னர் இவரது கணவரும் பெரும் துணை புரிந்து வருவதை யான் அறிவேன்.

ஈழத்திலும், புலம் பெயர்ந்த பிரித்தானியாவிலும் மக்கள் அறிந்த ஊடகவியலாளராக விளங்குபவர் ராகினியின கணவர் ராஜகோபால். அவர் பாரம்பரியமான கலைகள் மீது மிகவும் பற்றுக் கொண்டவர். ஈழத்தில் 'ஈழநாடு' பத்திரிகையில் பணியாற்றிய காலத்தில் பல கலைஞர்களைச் செவ்வி கண்டு, அவர்களது மேன்மையை வெளிப்படுத்தியவர். சிலம்புச் செல்வர் ம.பொ.சி. யாழ்ப்பாணம் வந்த போது, வயதில் அப்போது மிகமிகக் குறைந்தவராக இருந்தும், அருமையான பேட்டி கண்டு எழுதியது எனக்கு இன்னமும் நினைவிருக்கிறது.

எந்த ஒரு கலை நிகழ்ச்சியையும் வாசகர் மனதைத் தொடும் வகையில் உணர்வுப்பூர்வமாக வெளிப்படுத்தும் ஆற்றல் இவரது தனித்தன்மைகள் ஆகும்.

1999ம் ஆண்டு லண்டனுக்கு யான் முதல் வருகை தந்த போது, 'புதினம்' ராஜகோபால் அவர்களையும், நடனக்கலை வித்தகராக விளங்கும் ராகினியையும் சந்திக்கும் வாய்ப்புப் பெற்றேன். ராகினியின் நடனப்பள்ளி 'நாட்டியாலயா' பற்றி பலரும் மெச்சினார்கள்.

எனது சகோதரர் திரு.கனகசுந்தரம் (பொறியியலாளர்) ராகினி ராஜகோபாலின் நடன நிகழ்ச்சிகளின் சிறப்பை எனக்கு எடுத்துரைத்தார்.

அதனால், அவரது மாணவிகள் நடன நிகழ்ச்சிகள் சிலவற்றை நேரில் பார்த்து மகிழ்ந்தேன். மிகவும் சிறப்பாக அமைந்திருந்தன.

இப்பெரும் கலைஞர் கலைத் துறைக்கு ஆற்றியுள்ள உன்னத சேவையைக் கௌரவிக்கும் முகமாக வெளியிடப்படும் சிறப்பு நூலில் அவரை வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகின்றேன்.

கலைஞர்கள் கௌரவிக்கப்படும் போது கலைத்துவம் மேலும் எழுச்சி பெறும் என்பது எனது நம்பிக்கை. கலை இன்பமே நிலை இன்பமாகக் கொள்ளும் இத்தகைய கலைஞர்களைக் கௌரவிப்பது சமுதாயத்தின் கடமையாகும். உலகை மகிழ்விப்பது கலை. கலைக்கு உயிர் கொடுக்கும் கலைஞர்களைப் போற்றுதல் கலாரசிகர்களின் நன்றிக் கடனாகும். ●



*எல்லாக் கலைஞர்களோடும் அன்பாகவும், பண்பாகவும் பழகும் இயல்பு கொண்ட இவரை அனைவரும் சிறந்த ஆளுமை உள்ள கலைஞராக மதித்து வருவதை யான் லண்டனில் நேரில் பார்த்தும், கேட்டும் இருக்கிறேன்.*



# தாகமும், மோகமும்



- இணுவை, ச ஸ்ரீரங்கன்(ஒலிபரப்பாளர், எழுத்தாளர்)





இருபத்திமூன்று வருடங்களுக்கு முன்னர், இந்நாட்டிற்கு அதிதியாய் இல்லாது, அகதியாய் புலம்பெயர்ந்தோம். ''கீத்ரோ'' விமான நிலையத்திலிருந்து அதன்அண்மையில் உள்ள ''காமன்ஸ்வேர்த்'' என்ற தடுப்பு முகாமில் தங்கியிருந்த வேளை, ஒருவர் தனது மனைவி, பிள்ளைகளுடன், அங்கு அழைத்து வரப்படுவதைக் கண்ணுற்றேன். தெரிந்த முகமாக இருந்தது. கண்களை அகல விரித்தேன். 'அட, எங்கடை ராஜகோபால் போல் கிடக்குதே...' - என் மனம் சிந்தனைக் குதிரையில் தாவியது. கிட்ட நெருங்கினேன்.

''காமன்ஸ்வேர்த்'' தடுப்பு முகாம், அப்போது ஓர் நட்சத்திர அந்தஸ்துடைய விடுதி போல் இருந்தது. வேளா, வேளைக்குச் சாப்பாடு. பொழுதுபோக்க தொலைக்காட்சி பெட்டியோடு, விளையாட்டு உபகரணங்கள். குடும்பமாகத் தங்குவதற்குத் தனித்தனி அறைகள்.

''நீங்களும் உங்களது வங்கித் தொழிலை கைவிட்டு, இங்கு வந்துவிட்டீர்களா?'' ராஜகோபால் கேட்டார். அவர் தொடர்ந்து கூறினார்.

''அங்கு சுதந்திரம் இல்லை... சோதனை என்ற பேரில் கெடுபிடிகள். இங்கு வந்து விட்டோம்...'' என்றார். நானும் எனது சிக்கலைக் கூறினேன். எந்நேரமும் சிங்களப் பகுதிக்கு, இடமாற்றம் செய்யப்படலாமென்ற பயம். இரத்தப்பலி கொண்ட வெலிக்கடைப்பயம், எப்போதுமே மனதில் பயம்...''

''வந்துவிட்டோம்... இங்கு என்ன செய்யப் போகிறோம்?...'' என்று ராஜ் விடுத்த வினாவையே, நானும் திருப்பிக் கேட்டேன். இரண்டு சிறுபிள்ளைகளும் ராகினியின் கைகளைப் பிடித்தபடி நின்றிருந்தனர்.

இடையில் சிலகாலம் தொடர்பின்றி இருந்தது. பதினாறு வருடங்களுக்கு முன்னர் நண்பர் ஒருவர், அரங்கேற்றம் பார்ப்பதற்கு என்னை அழைத்தார். மேடையில் சின்னஞ் சிறுமியொருத்தி, வளைந்து, வளைந்து, ஆடிக் கொண்டிருந்தாள். அப்போதெல்லாம், லண்டனில் அரங்கேற்றங்களே நடைபெறாத காலமென்றே கூறலாம். ஆடிக்கொண்டிருப்பது, நண்பரின் மகள் ஷர்மினி ராஜகோபால் என்பதை அறிந்து, மனம் புளகாங்கிதப்பட்டது. மேடையில், அன்னையே குருவாக இருந்து, 'ஜதி' சொல்லிக் கொண்டிருந்தார். 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்', 'மீன் குட்டிக்கு நீந்தக் கற்றுக் கொடுக்க வேண்டுமா?' என்றெல்லாம் அனைவருமே பேச்சுப் பல்லக்கை சுமக்கலாம். அன்னையே குருவாகி, தன் பிள்ளையை நெறிப்படுத்தி, உருவாக்குவது கண்டேன்.

தமிழில் மூன்றெழுத்து வலிமையை எப்போதுமே சிந்திக்கலாம். அதுபோல் மூன்று சொற்களின் வலிமையும் மிகமிக அதிகம். 'முத்தமிழ்', 'மூவேந்தர்', 'முக்கனி' என்ற



நாட்டியப் பேரொளி பத்மினி - அரங்கேறிய பிருந்தா - குரு ராகினி.

சொற்பதம் போல், 'தமிழ்', 'தாகம்', 'மோகம்', 'அன்பு' என்ற இவ்வரிசையில் ராகினி என்ற எழுத்துக்களும் சக்திமிக்கதே!

இளமைக் காலத்தில், யாழ்ப்பாணத்ணதில் நடனத்துறையில் ராகினி- வினோதினி சகோதரிகள் மிகவும் பிரபலம் பெற்றிருந்தனர். அப்போதெல்லாம் எனக்கு அவர்களிடம் பரிச்சயமில்லை. நண்பர் ராஜகோபாலின் கரம்பற்றியதும்தான், திருமதி.ராகினியைப் பற்றி அறியும் வாய்ப்பு, எனக்குக் கிடைத்தது. கணவனும், மனைவியும் இரண்டு கலைஞர்கள். பத்திரிகை கலையில் கைதேர்ந்தவர் கணவர்; நடனக்கலை வல்லுனர் மனைவி. கலையும், கலையும் சங்கமித்தது போல் இவர்கள் வாழ்க்கையும் சங்கமம். அதுவும் கந்தர்வச் சங்கமம். ஓர் ஆணின் வெற்றிக்கு, அவருடன் இணைந்த பெண்தான் காரணம் என்று பொதுவாகக் கூறுவார்கள். இங்கே பெண்ணின் வெற்றிக்கு ஆணும், ஆணின் வெற்றிக்குப் பின் பெண்ணும், பின்னிப் பிணைந்திருப்பதைக் காணலாம். அன்னார்க்கு இன்னார் என்று எழுதி, வைத்தானே தேவன் அன்று' - வழிவழியாய் நாம் கூறிவந்தாலும், இது ஓர் அபூர்வமான இணைப்பும், பிணைப்புமேயாகும். குடும்பப் பந்த உறவோடு, இந்த இரு கலைஞர்களிடையே எஞ்சி நிற்பது மொழிப்பற்றும், மண் பற்றும் என்றால் மிகையல்ல.

ராகினி எமது தாயகத்தின் மீது சுதந்திர தாகம் கொண்டவர். அது ஓர் தணியாத தாகமே! நாட்டிலிருந்து, தாயகத்தின் தொப்புழ் கொடி உறவுகளுக்காக இவர் செய்த அர்ப்பணிப்புகள் எண்ணில் அடங்கா. குறிப்பாக, மாவீரர்கள் அஞ்சலிக்காக, தனது மாணவிகளுடன், ராகினி செய்த பங்களிப்பு மிகவும் அபரிமிதமானது. இவரது 'நாட்டியாலயா' குழுவினர் பங்கெடுக்காத மாவீரர் நாட்கள் மிக அரிதானவை. மண்ணின் முத்துக்களாகவும், எமது முத்துக்களாகவும் உள்ள இந்த மாவீரர்களுக்காக, திருமதி ராகினியும், அவரின் குழுவும் செய்தது புலம் பெயர்ந்த மக்கள் மனங்களை விட்டு அகலாது. நடனக்கலை மீது திருமதி ராகினி கொண்டுள்ள மோகத்தை லண்டனில் எல்லோருமே அறிவர். ஏறத்தாழ இருபது வரையான அரங்கப்பிரவேசங்களை, இவர் குருவாக இருந்து நிறைவு செய்திருக்கிறார். நடன அரங்கேற்றங்களிலும், ஏனைய நடன நிகழ்வுகளிலும், ஈழத்துப் பாடல்களையும், ஈழத்துப் பாடகிகளையும் பாடவைக்குமளவுக்கு, தமிழ் மீது இவருக்கு மோகம் நிறையவே உண்டு. கலைத்துறையில் இவர் பிரகாசம் பெறுவதற்கு இவரது தாகமும், மோகமும் காரணிகளாகின்றன.

மண்ணையும், மக்களையும் சத்திய விசுவாசத்துடன் நேசித்து வரும், மங்கை நல்லாள் ராகினியின் உளப்பாங்கைப் பார்க்கும் போது,

ஆடுதல், பாடுதல், சித்திரம், கலை ஆகிய கலைகளில் உள்ளம் ஈடுபாட்டோடு நடப்பவர், பிறர் ஈன நிலை கண்டு துள்ளுவார்...' என்ற புரட்சிக் கவி பாரதியின் பாடல், விசுவரூபமெடுப்பதை நடனம் போற்றும் அபிமானிகள், இது 'வழுவூர் பாணி' என்றும், இது 'கலாசேத்திரப்பாணி' என்றும் தரம்பிரித்து, ஒப்பீடு செய்வர். ஆனால் இத்தரம் எதுவுமில்லாது, தனக்கென்று ஓர் பாணியை உருவாக்கி எதிர்கால, நடனமணிகளுக்கு, ஒரு புதிய பாதையை இவர் காட்டி

வருகிறார். உதாரணத்துக்காக ஒன்றினை இங்கு சுட்டிக் காட்டலாம். ஆலயங்களிலே சுவாமி எழுந்தருளி, வீதியுலா வரும் போது வாசிக்கப்படுவது 'மல்லாரி' உருப்படியாகும். தெற்கு லண்டனில் நடைபெற்ற, மக்கள் கூடிய பெருவிழா ஒன்றில், கூத்தும் இசையும் கூடிய மல்லாரி உருப்படியை வைத்து, தனது மாணவிகள் மூலமாக நடனமாடச் செய்த, சகோதரி ராகினியின் புதிய பரிசோதனை முயற்சி பெருவரவேற்பை, சுவைஞர்களிடையே தோற்றுவித்ததை, மறக்கவோ, அல்லது மறைக்கவோ முடியாது.

வருடா வருடம் தன் கணவருடன், தமிழக இசைவிழாவுக்குச் சென்று, பல கலைநுணுக்கங்களை அவதானித்து, இங்கு வந்து, அவற்றை தன் நடனத்துறையில் இழையோடச் செய்யும் இவரது மதிநுட்பம் மெச்சத்தக்கதாகும். நடனத்துறையில் இவர் இரண்டறக் கலந்துள்ளார் என்பதற்கு, ஓர் உதாரணத்தையும் குறிப்பிடுதல் இங்கு அவசியமாகின்றது. இரண்டு வருடங்களுக்கு முன்பாக, லண்டனில் நடைபெற்ற பிரபலமான 'பூபாளராக' விழாவில், ராகினி தனது மாணவிகளுடன் இணைந்து, நடனமாடியமையானது, தெய்வீகக் கலைக்கு வயது கிடையாதென்பதை அறிவுறுத்தியது.

**ல**ண்டன் லோகன் மண்டபத்தில் நடைபெற்ற, செல்வி பிருந்தா குகபாலாவின் அரங்கப் பிரவேச நிகழ்வுக்கு, பிரதம விருந்தினராக வந்திருந்த அமரர் நாட்டியப் பேரொளி பத்மினி இராமச்சந்திரன் உரையாற்றுகையில், ''செல்வி பிருந்தா குகபாலாவின் சிறந்த நடனத்துக்கு, அவரின் குரு ராகினி ராஜகோபால் அவர்களின் கடின உழைப்பு காரணமாக அமைந்திருக்கின்றது. செல்வி குகபாபாலாவின் அபாரத் திறமைக்கு, அவரது குரு ராகினிதான் காரணம்...'' என்று குறிப்பிட்டமை, இங்கு மனங்கொள்ளத்தக்கதாகும்.

ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் நடைபெற்ற நடன அரங்கேற்றங்களுக்கு பிரதம விருந்தினராகவும், நடனப் போட்டிகள் பலவற்றுக்கு நடுவராகவும் திருமதி ராகினி அழைக்கப்பட்டு, சிறப்பிக்கப்பட்டிருக்கின்றார்.

*செல்வி குகபாலாவின் சிறந்த நடனத்துக்கு, அவரின் குரு ராகினி ராஜகோபால் அவர்களின் கடின உழைப்பு காரணமாக அமைந்திருக்கின்றது. செல்வி குகபாபாலாவின் அபாரத் திறமைக்கு, அவரது குரு ராகினிதான் காரணம்...*



மகன் ஷியாம் - மகள் ஷர்மினி, நாட்டியப் பேரொளி பத்மினி, நடன ஆசிரியை ராகினி.

கலைத்துறையில் இவர் முப்பது ஆண்டுகளைக் கடந்திருக்கிறார். கால் நூற்றாண்டு சாதனை. அதுவும் சோதனைகள் கடந்த ஓர் சாதனை!

இவரது சேவைகளைத் தொடர, எத்தனையோ மாணவிகள் குழாத்தை, இவர் தன் வாரிசுகளாக உருவாக்கியிருக்கிறார்.

காலவிரைவில், இவரது சேவை அரை நூற்றாண்டுகளையும் தாண்டி, எந்த மண்ணில் இது உருவானதோ, அந்த மண்ணிலும் தொடரும் என்று எதிர்பார்க்கலாம்; எதிர்பார்க்கிறோம்!

வாழ்க! வளர்க!! ●

# பக்குவப் பண்புகள் தரும் பரதநாட்டியம்



- துன்னையூர் - கலாநிதி ராம் தேவலோகேஸ்வரக்குருக்கள்-
(அதிபர் - சாராதாபீடம் ஜோதிட நிலையம்.)



### :பரத நாட்டியம் என்றால் என்ன?

**அ**பிநயம், அசைவு, ஆடல், அழகு, அவையடக்கம் இந்த ஐவகை சேர்க்கையும் தமக்குள்ளே வழத்தி, பேசும் மொழியை தமது பாவனையில் வெளிப்படுத்துகின்ற ஆற்றல் கொண்ட அற்புதக்கலையே பாரதநாட்டியம். ஒரு சிறிய அசைவையும் நாம் லயத்தோடும், நயத்தோடும் செயற்படுத்துகின்ற போது அது நாட்டியம் எனப்படுகின்றது. வேதத்திலே ஒரு வாக்கியம் உண்டு. பரத நாட்டியம் பற்றி-

ஜதோ வார்தஸ் ஸதோ சிருஷ்டி

ஜதோ சிருஷ்டி ஸதோ மனஸா

ஜதோ மனஸ் ததோ பாவகா

ஜதோ பாவோ ஸதோ தஸா

கண், மனம், பாவம் என்ற மூன்று நிலையும் செய்கின்ற கலையோடு ஒட்டிக் கலந்து இருக்க வேண்டும். அப்போது தான் இந்தக் கலை பூரணமடைகின்றது. எனவே வார்த்தைகளால் கேட்க வேண்டிய விஷயங்களை பாவனையால், அபிநயத்தால், அசைவுகள் தந்து ஆடல் என்கின்ற ஆற்றல் மூலம், அழகாய் அரங்கத்திலே மிளிர விடும் ஒப்பாரும், மிக்காரும், இல்லாத தெய்வீகக் கலை பரதம்.

### பாரத நாட்டியமும், பக்குவ பண்புகளும்

**ப**க்குவமும், பண்பு நிலையும் வெறும் நடைமுறையிலே ஒரு மனிதனுக்கு இருக்கக் கூடிய நிலை இல்லை! என்பதை ஆணித்தரமாக கூறலாம். ஏனெனில் ஒரு மனிதனுடைய மனதை மயக்கி இழக்கக் கூடிய ஆற்றல். இசைக்கலைகளை தவிர, வேறு எதற்கும் கிடையாது. இந்த 'இசைக் கலைகள்' என்கின்ற போது பரதம், பாடல், வீணை, மிருதங்கம், வயலின் என்கின்ற ஐவகை இசையுமே முதலிடம் பெறுகின்றன. இவற்றிலே பரதத்திற்கு மட்டும் தனிச்சிறப்பு உண்டு. காரணம் மற்றய இசைகள், செவி வழியாக இதயத்தை தொடுவன. பரத நாட்டியமோ, விழியால் கண்டு செவியால் கேட்டு, இதயத்தை மகிழ்வித்து எம்மையும் ஆட அசைய வைக்கும் திறன் உடையது. இதிலே, இதைக் கற்றுக் கொண்ட கலைஞர்கள் அனைவரும் தெய்வ நிலை பொருந்தியவர்களாவார்கள். ஒரு நாட்டியத்தை அமைக்கின்ற பொழுது, அதனுடைய கருவை மனதிலே வாங்கிக் கொள்கின்றோம். பின்னர் அதனை உருவகப்படுத்தி அபிநயத்தாடு, அரங்கத்திலேயே மிளிர விடுகின்ற போது, மிகவும் உயரிய பக்குவ நிலை மனதிலே தடம் பதித்து கொள்கிறது. தெய்வீக உருவக தன்மைகளை உள்வாங்கும் போது, பக்குவ நிலை பரிபூரணமாக அமைந்து விடுகின்றது. அது மட்டுமின்றி, குருபக்தி மிகவும் சிறப்பான நிலையைப் பெறுகின்றது. பரதநாட்டியம் கற்றுக் கொள்கின்றபோது குருபக்தி மிகவும் உன்னதமாக போற்றப்படுகின்றது. அந்தக் குரு நிலையை வணங்கும் போது, பக்குவம், பண்பு என்பன அக்கலைஞரை சூழ்ந்து கொள்கின்றது. மற்றைய கலைகளை விட ஒரு பங்கு மேலாக பரதநாட்டியம் மேன்மை நிலை பெறுகின்றது என்பதை தெளிவாகும்.

### ஆலய கிரியை மரபில் நாட்டியம்

**ந**மது நான்கு வேதங்களான இருக்கு, யசுர், சாம, அதர்வனம் இவற்றுள் சாம, அதர்வன வேதங்களிலே நாட்டியம் பற்றிய குறிப்புகள் உண்டு. சிற்ப சாஸ்திரங்களின் படி அமைக்கப்படுகின்ற விக்கிரங்களின் எழில்வதன தோற்றம், வேத, ஆகம, கிரியா நெறிகளில் கூறப்பட்டுள்ள காரணங்கள், நாட்டிய சிற்பங்கள், அதன் அடிப்படையிலேயே அமைக்கப்பட்டுள்ளன. மஹா கும்பாபிஷேக காலங்களில் யாகசாலையில் சர்வாஞ்சலி சமர்ப்பணத்தில் நாட்டியம், ஒரு அங்கமாக அமைகின்றது. அத்தோடு ''கலாஹர்சனம்'' எனப்படுகின்ற

கிரியையிலும், நாட்டியத்திற்கு இடமுண்டு அதேபோல ஆலயத்தின் மஹோற்சவ காலங்களில் துவஜா ஆரோகணம் (கொடி ஏற்றம்) துவஜா அவரோகணம் (கொடி இறக்கம்) போன்ற கிரியைகளில் ''பூதநாட்டியம்'' எனும் கிரியை மரபு இன்றும் நடைமுறையில் உண்டு. எனவே நமது சமயத்தோடு பின்னிப் பிணைந்திருப்பது இந்த ''பரதநாட்டியம்''. நவசந்திகளில் உற்சவ காலங்களில் வரும் வேத பந்தத்திலேயே, கிரியைகளிலே இடம் பெறவேண்டிய பண், இராகம், தாளம், நித்தம், வாத்தியம் என்கிற ஐவகை மரபு கொண்ட கிரியா நெறிகள் இன்றும் ஏற்றிப் போற்றப்படுகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக ''ஆடற் கலையானாக'' எம்பெருமான் ''நடராஜர்'' வடிவாகி நடனக் கலையின் பிதாமகனாக காட்சிதரும், ''ஆனந்தத் தாண்டம்'' உலக இயக்கத்தையே அழகுற ஆடவைக்கும் அற்புதக் கோலமாக அமைகின்றது. இந்தத் திருத் தாண்டவநிலை, இந்த உலகின் ஒவ்வொரு அசைவுகளுக்கும் மூலகாரணியாய் இறைவனின் திருக்கூத்தின் மூலமாக உலகமே அசைந்தாடுகின்றது என்பதை மிகவும் அழகாகக் கூறுகின்றார் திருமூலர் பெருமாள்.

ஒன்றில் இரண்டு ஆட, ஓரொன்று உடன் ஆட
ஒன்றினில் மூன்று ஆட ஓரேழும் ஒத்து ஆட
ஒன்றினில்ஆட, ஓர் என்பதும் உடனாட
மன்றினில் ஆடினான் மாணிக்கக் கூத்தே

இந்த அழகான திருமந்திர பாடல், உலக இயக்கமே இறைவனின் தாண்டவ கூத்தில் அமைந்திருக்கின்றது என்பதை அழகாக வெளிப்படுத்துகின்றது. எனவே வேதங்களிலும், புராண, இதிகாசங்களிலும், தேவார, தோத்திரங்களிலும், நாட்டியம் தவிர்க்க முடியாத ஒன்றாய் அமைந்திருக்கின்றது. எனவே மனிதப் பண்புகளின் பூரணமும் பக்குவ நிலையில் ஒட்டிக் கொள்ளும் பண்பு பரதநாட்டியத்திற்கே உரிய தனிச்சிறப்பாகும்.

### நாட்டியாலயாவும், ராகினி ராஜகோபாலும்

ஈழ மண்ணிற்கு பெருமை சேர்த்து தருகின்ற கலைஞர்கள் பலர் இருக்கின்றனர். அந்த வரிசையில் தவிர்க்க முடியாத முன் வரிசையில் ராகினி ராஜகோபாலும் இருக்கின்றார் என்பது, எங்கள் எல்லோருக்கும் பெருமை. ''நாட்டியாலயா'' எனும் பெயரைக் கேட்டவுடனேயே மனதிலே ஜதி சொல்லும் சத்தமும், சலங்கை ஒலியும், ரீங்காரமிடுகின்றன. அந்த அளவிற்கு தனது கலையை முன்னிலையில் நிறுத்தி வெற்றி பெற்றிருக்கின்றார் என்றால் அது மிகையல்ல. நமது கலாச்சாரத்தோடு சேர்ந்து இருக்கின்ற இந்த மொழி, கலை, நிகழ்வுகள் அந்த மண்ணிலே கற்றுக் கொள்வதும், கற்றுக் கொடுப்பதும் மிகவும் சுலபமான காரியம். ஆனால் அந்த இங்கே புலம் பெயர்ந்த நாடுகளில் வாழுகின்ற எமது இளம் சமூகம். எமது தாய் மொழி வளம், பூரணமாக இல்லாத நிலையில் வேற்று மொழிச் சூழலில் இதைக் கற்றுக் கொடுப்பது, மிகவும் சிரமமான ஒரு காரியம். அதை அற்புதமாக, ஆனந்தமாக, செயற்படுத்திக் கொண்டிருக்கும். நாட்டியதாரகை ராகினி ராஜகோபால் அவர்களின் கலைச்சேவை இன்று முப்பதாவது ஆண்டை அடைந்திருக்கின்றது என்பது விழி உயர ஆச்சரியப்பட வைக்கிறது. ஒரு கலைஞன் தான் கற்ற கலையை தன்னோடு வைத்துக் கொள்ளக் கூடாது. தன் சமூகத்திற்கும், இனத்திற்கும், பெருமிதம் தரும் வகையிலே அக்கலையை வளர்த்தெடுக்க வேண்டும். அதை பரிபூரணமாக, செயற்படுத்தி இருக்கின்றார். ராகினி வெறும் சாஸ்திரோதயமான பரதநாட்டியத்தோடு மட்டும் இல்லாமல், நமது ஈழ மண்ணின் உணர்வுகளையும், வீரத்தையும் வெளிப்படுத்துகின்ற ஆற்றல் மிகு நாட்டியங்களை உருவாக்கி அரங்கம் ஏற்றி வெற்றிவாகை சூடிய பெருமைகள் இலண்டனில் மட்டுமல்லாது, பல உலக நாடுகளிலும், செயற்படுத்தி இருக்கின்றார். இதற்கு உறுதுணையாக இருப்பவர் அவரின் அன்புத் துணைவர், எழுத்துல பேனா வீரர் ஈ.கே.ராஜகோபால் என்பதும் குறிப்பிடத்தக்கதொன்றாகும். நாட்டியாலயா மூலமாகக் கலைப் பொக்கிஷம் எனும் நாட்டியத்தை ராகினி வெளிப்படுத்த, 'புதினம்' பத்திரிகை மூலமாக எழுத்துலகில் தனது ஆணித்தரமான கருத்துக்களை ராஜகோபால் கொடுத்து வருகின்றார். வீரம், விவேகம், வித்துவம் எனும் முப்பரிமாண நிலைகளையும் ஒருங்கே பெற்ற 'வடமராட்சி' மண்ணின் மைந்தர் என்பது இன்னுமொரு சிறப்பாகும்.

''நாட்டியாலயா''வின் முப்பதாவது ஆண்டு நிறைவின் பெருமை, பெருமிதம், மகிழ்ச்சி, அனைத்து நிலைகளிலும், நாமும் பங்கு கொண்டு, இந்த 'நாட்டியாலயா'இன்னும் நெடிது வாழ வேண்டி ஆடற்கலையான் அம்பலவாணன் பாகம் நின்று பரிபூரண அருள்தரும் அன்னை பராசக்தியைப் பிரார்த்தித்து, ராகினிராஜகோபால் அவர்கட்கு நிறைவான நல் ஆசிகள் வழங்குகின்றோம்.

''நாட்டியமே நானிலமும் ஆளும்''. ●





# நாட்டியாலயாவும் பூபாள ராகங்களும்



- மகாலிங்கம் சுதாகரன் (அமைப்பாளர்)



லண்டனில் ஒன்பது ஆண்டுகள் ''பூபாள ராகங்கள்'' நிகழ்வை அமைப்பாளராய், இருந்து நடத்தி முடித்துள்ளேன். ஒன்பது 'பூபாள ராகங்கள், நிகழ்வுகளும் மிகவும் சிறப்பாநடந்து முடிந்துள்ளது. ஒன்பது ஆண்டுகளில் முதல் ஆண்டு நிலைத்து நிற்கும் நிலையான நினைவு நிரம்பிய ஆண்டு. ஆம், அது 2000ஆம் ஆண்டு. நான் படித்த பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் ஒரு கலை விழா நடத்த எண்ணினேன். அது சம்மந்தமான அலுவல்களை ஆரம்பித்தபோது, நடன நிகழ்வுகளை வழங்குமாறு ராகினி ராஜகோபாலிடம் கேட்டபோது, எதுவித எதிர்ப்போ, எதிர்பார்ப்போ இல்லாமல் 'நடன நிகழ்வுகளை வழங்குவேன்' என்று உறுதியாக கூறிய வார்த்தை விளக்க முடியாத ஒரு மனத்தெம்மை தந்தது. பெருமையில்லா, பெரு மனிதர்களைத் தலை சாய்த்து வணங்கும் பண்பை கொண்ட எனக்கு, ராகினி ஆசிரியை ஒரு பெரு மனிதராக தெரிந்தார். அவர் அதை மெய்ப்பித்தும் விட்டார். அவர் அன்று கூறிய 'ஆம்' என்ற வார்த்தை இன்று 'பூபாள ராகங்கள்' நிகழ்வை 'ஓகோ' என்னும் அளவுக்கு வளர்த்துவிட்டுள்ளது.

'பூபாள ராகங்கள்' நிகழ்வில் தரமான நிகழ்வுகளே இடம் பெற வேண்டும் என்பது என் ஆசை. அந்த வகையில் தரமான ஆசிரியையின் மூலமே தரமான நடனங்கள் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்போடு 'நாட்டியக் கலையரங்கம்' என்ற மகுடமிட்டு அவருக்கு குறிப்பிட்ட நேரத்தை வழங்கி வந்தேன். கொடுக்கும் நேரத்தில், அவர் தயாரித்து வழங்கும் நடனங்கள் அற்புதம். அதை நான் சொல்லவில்லை. ஈழத்தின் சிறந்த விமர்சகர் அமரர் சொக்கன் உள்ளிட்ட பல விமர்சகர்களும், வீரகேசரி, தினக்குரல், சுடர் ஒளி உள்ளிட்ட பல பத்திரிகைகள் சொல்கின்றன. இப்போது சொல்கிறேன், என் எண்ணம் வீண் போகவில்லை. பூபாள ராகங்கள் புதுப்பொலிவுடன் மெருகேறி வருகிறது.



இங்கே ஒரு விடயத்தை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆசிரியை ராகினி சொல்கிறார்: **நான் புகுந்த வல்வெட்டி கிராமத்தின் அயற் கிராமமான கொம்மந்துறையில் அமைந்திருக்கிறது. கம்பர் மலை வித்தியாலயா நிகழ்வுக்கு நடன நிகர்வுகளை வழங்கியதற்கு மகிழ்கிறேன். உரிமையோடு நிகழ்வுகளை வழங்குகிறேன்.**

சில ஆண்டுகள் கழித்து பின் சொல்கிறார்: **பூபாள ராகங்கள் நிகழ்வுக்கு நான் பெருமை சேர்த்திருக்கிறேனோ? இல்லையோ? ஆனால் 'பூபாள ராகங்கள்' என்னையும், என் 'நாட்டியாலயா' குழந்தைகளையும் பெருமைப்படுத்தியுள்ளது.**

இது தான் ஐயா! ஒரு உண்மையான உணர்வுபூர்வமான கலைஞரின் பெருமையில்லாத பெருந்தன்மை.

இவ்வாறு, இந்த நடனக் கலைஞர் பற்றி சொல்லிக்கொண்டே போகலாம். 'பூபாள ராகங்கள்' நிகழ்வின் வெற்றியின் பங்காளிகள் பலர். அவர்களில் முக்கியமானவர் திருமதி. ராகினி ராஜகோபால், மாசற்ற நடனங்களை மங்கையர் மங்களமாய் வழங்கும் போது அவரும் ஒரு இள நங்கையராய் மேடையில் மாறி விடுவதை அமைப்பாளராய் அனுமானித்தேன். புலம் பெயர் இயந்திர வாழ்வில் மாணவியர்களை ஒருங்கிணைத்து பயிற்றுவித்து, நடன நிகழ்வுகளை வழங்குவது என்பது எவ்வளவு கஷ்டமான விடயம் என்பது நல்ல கலைஞர்களுக்கும் தெரியும். சிறந்த அமைப்பாளர்களுக்கும்



நன்கு புரியும். ஆனால் அவ்வளவு கஷ்டத்தின் மத்தியிலும் அவர்கள் மேடையேற்றம் கண்ட பின் வரும் ஆனந்தம் கஷ்டத்திற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்து விடும் என்று இந்த நல்ல கலைஞர் பலமுறை என்னிடம் சொல்லியுள்ளார்.

கட்டுப்பாடு, கடப்பாடு, கருத்தொருமிப்பு இந்த மூன்றுமே பூபாள ராகங்களையும், 'நாட்டியாலயா'வையும் ஒன்றிணைத்தது என்று என்னால் உறுதியாகக் கூறமுடியும். தாயக உணர்வுகளைப் பிரதிபலிக்கும் பல வகையான நடனங்களை ஒவ்வோர் ஆண்டும் மிக அழகாக வழங்கி வருகிறார். இன்றைய யதார்த்தமான சூழ்நிலையில் இதுவே ஈழத்தமிழுக்கு மிக முக்கியமானது. உணர்வுகள் கலைவடிவம் எடுக்கும்போது தாயகப் பற்று, தார்மீக கடமை என்பது ரசிகர்களுக்கு புலப்படும். அவற்றை ராகினி ஊடாக நாட்டியாலயாவும், நாட்டியாலயா ஊடாக பூபாளராகங்களும் செய்து வருகிறது என்பதையிட்டு அமைப்பாளர் என்ற வகையில் பெருமிதமடைகிறேன்.

தான் நடந்து ஊசலாடும் வரை கம்பர் மலை வித்தியாலயாத்திற்காக நடன நிகழ்வுகளை வழங்குவேன் என்றும், தாயத்தில் பாடசாலையில் தன் 'நாட்டியாலயா' ஊடாக நடன நிகழ்வுகளை வழங்க ஆசையாய் இருப்பதாகவும் ''பூபாள ராகங்கள்'' மலர்களில் பல முறை குறிப்பிட்டிருக்கிறார். நான் அமைப்பாளராக இருக்கும் வரை பூபாள ராகங்கள் நிகழ்வில் இவரது நடனங்கள் இடம் பெறும் என்றும், வீரத் தமிழர்களின் ஆட்சியில்



***உணர்வுகள் கலைவடிவம் எடுக்கும்போது தாயகப் பற்று, தார்மீக கடமை என்பது, ரசிகர்களுக்கு புலப்படும். அவற்றை ராகினி ஊடாக நாட்டியாலயாவும், நாட்டியாலயா ஊடாக பூபாளராகங்களும் செய்து வருகிறது***

அவரது நடனங்கள் எமது தாயகப் பாடசாலையில் அரங்கேறும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்பதையும் கூறி, அந்த நாளை நானும் எங்கள் பாடசாலை சமூகத்துடன் இணைந்து எதிர்பார்த்து நிறைவு செய்கிறேன்.

ராகினி ராஜகோபாலின் நாட்டியாலயா 30வது ஆண்டு விழா வெற்றி பெற கம்பர்மலை வித்தியாலயா பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சிய கிளை சார்பாக வாழ்த்துகிறேன்.

வாழ்க திருமதி ராகினி ராஜகோபால்! வளர்க நாட்டியாலயா!! ஒளிர்க நாட்டியக்கலை!! ●



# பரதமும் மருத்துவமும்



- வைத்திய கலாநிதிகள் திரு.திருமதி ஞானச்செல்வன்



இன்று விழா கொண்டாடும் ராகினி ராஜகோபால் அவர்களைப் பாராட்டுவதில் நானும் எனது பாரியாரும் மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.

தாம் கற்று, பயின்ற கலையை, ஈழத்தில் இருந்து வருகைத்தந்து, புலம் பெயர்ந்த மேலைநாட்டில், அறிமுகப்படுத்தி, எமது பிள்ளைகளுக்குக் கற்பித்தது மட்டுமல்லாமல், எமது தமிழ் கலச்சாரத்தின் பண்பாட்டிற்கு வித்திட்டார் என்று கூறலாம். இவரது சேவை, நம் பிள்ளைகளுக்கு மிகவும் அவசியமானது. நாம் வாழ்கின்ற மேலைநாட்டின் சூழ்நிலையில், நாம் எமது மொழி, கலாச்சாரம் பண்பாடு ஆகியவற்றை, எமது சந்ததிகளுக்கு, வழங்குவதில் ஆர்வம் காட்ட வேண்டும். இத்தகைய நிலைப்பாட்டில், ராகினி அவர்களது சேவை அத்தியாவசியம் என்பதை உறுதியுடன் கூறலாம். நானும் எனது பாரியாரும், இவருடைய அளப்பரிய கலைத்துறைச் சேவையை எண்ணி மிகவும் பெருமிதம் அடைகிறோம். பாராட்டின் மத்தியில், மருத்துவக் கலைக்கும், பரதக் கலைக்கும் உள்ள இணைப்பாட்டை உற்றுநோக்கி, நுண்கலைகள் (Fine Arts) குறித்து, சிறிது பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம்.



நுண்கலைகள் (Fine Arts) மனிதனுக்கு மிக இன்பம் தரவல்லதும், பொழுதுபோக்கும் சாதனம் என்றும் பலர் சொல்வார்கள். ஆனால் பரதக் கலையின் வேறு சில பயன்களை, பெரும்பாலான மக்கள் அறிந்திருக்கவில்லை. முகபாவம்(Bhaavam), இராகம் (Raagam), தாளம்(Thaalam) இவை மூன்றும் இணைந்ததே பரதம் (Bharatham). எந்த ஒரு நடனமானாலும் இவை மூன்றும் ஒருங்கு இணைந்தால்தான் அழகு. புலங்களின் ஒரு மனப்பட்ட தன்மை நடனத்துக்கு, மிக அவசியம். மனம், எதனை நினைக்கின்றதோ, அதை முகம் அபிநயம் பிரபதிபலிக்க, கைகள், முத்திரைகள் காட்ட, கால்கள் தாளமிட இந்த மூன்றின் இணைவு சங்கமம் தானே நடனம். ஆக, எந்த வேலைக்கும் அவதானம் (Concentration) அத்தியாவசியம்.

அடுத்ததாக, கால்கள் (பாதம்), இதயம் இவை இரண்டிற்கும் தொடர்பு உண்டு. இதயத்துடன் மட்டுமல்ல. எல்லா அவயங்களுடனும், கால்களுக்கு இணைப்பு (Connection) உண்டு; தொடர்பு உண்டு. நடனமிடும் கால்கள் அனைத்து உறுப்புக்களையும் சுறுசுறுப்பாக்கும். பிரமிப்பாக இருக்கின்றதல்லவா?

கால் கட்டை விரல் - மூளை, தண்டுவடம் இவற்றோடும்,

அடுத்த விரல் - பல்லுடனும்,

மூன்றாவது விரல் - கண்ணுடனும்,

நான்காவது விரல் - காதுடனும்,

கடைசி விரல் - நுரையீரலுடனும் இணைந்துள்ளன.

கால் விரல்களின் அடுத்த பகுதி "Accu Pressure Point" என்பார்கள். நுரையீரல், தோள் இவற்றுடனும், பாதத்தின் நடுப்பகுதி, ஈரலுடனும் (Liver), சிறுநீரகத்துடனும் (Kidney), Gall Balaoder உடனும், குதிகால், குடல் வால்வுடனும் (Appendix) சூலம் (Ovaries) உடனும் தொடர்பு கொண்டவை.



கால்களை அழுத்தி நடனமாடுகின்ற போது, இந்த உறுப்புக்களின் பணிகள் சீராகும். இது கலையை,



நன்கு புரியும். ஆனால் அவ்வளவு கஷ்டத்தின் மத்தியிலும் அவர்கள் மேடையேற்றம் கண்ட பின் வரும் ஆனந்தம் கஷ்டத்திற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்து விடும் என்று இந்த நல்ல கலைஞர் பலமுறை என்னிடம் சொல்லியுள்ளார்.

கட்டுப்பாடு, கடப்பாடு, கருத்தொருமிப்பு இந்த மூன்றுமே பூபாள ராகங்களையும், 'நாட்டியாலயா'வையும் ஒன்றிணைத்தது என்று என்னால் உறுதியாகக் கூறமுடியும். தாயக உணர்வுகளைப் பிரதிபலிக்கும் பல வகையான நடனங்களை ஒவ்வோர் ஆண்டும் மிக அழகாக வழங்கி வருகிறார். இன்றைய யதார்த்தமான சூழ்நிலையில் இதுவே ஈழத்தமிழுக்கு மிக முக்கியமானது. உணர்வுகள் கலைவடிவம் எடுக்கும்போது தாயகப் பற்று, தார்மீக கடமை என்பது ரசிகர்களுக்கு புலப்படும். அவற்றை ராகினி ஊடாக நாட்டியாலயாவும், நாட்டியாலயா ஊடாக பூபாளராகங்களும் செய்து வருகிறது என்பதையிட்டு அமைப்பாளர் என்ற வகையில் பெருமிதமடைகிறேன்.

தான் நடந்து ஊசலாடும் வரை கம்பர் மலை வித்தியாலயாத்திற்காக நடன நிகழ்வுகளை வழங்குவேன் என்றும், தாயத்தில் பாடசாலையில் தன் 'நாட்டியாலயா' ஊடாக நடன நிகழ்வுகளை வழங்க ஆசையாய் இருப்பதாகவும் "பூபாள ராகங்கள்" மலர்களில் பல முறை குறிப்பிட்டிருக்கிறார். நான் அமைப்பாளராக இருக்கும் வரை பூபாள ராகங்கள் நிகழ்வில் இவரது நடனங்கள் இடம் பெறும் என்றும், வீரத் தமிழர்களின் ஆட்சியில்



***உணர்வுகள் கலைவடிவம் எடுக்கும்போது தாயகப் பற்று, தார்மீக கடமை என்பது, ரசிகர்களுக்கு புலப்படும். அவற்றை ராகினி ஊடாக நாட்டியாலயாவும், நாட்டியாலயா ஊடாக பூபாளராகங்களும் செய்து வருகிறது***

அவரது நடனங்கள் எமது தாயகப் பாடசாலையில் அரங்கேறும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்பதையும் கூறி, அந்த நாளை நானும் எங்கள் பாடசாலை சமூகத்துடன் இணைந்து எதிர்பார்த்து நிறைவு செய்கிறேன்.

ராகினி ராஜகோபாலின் நாட்டியாலயா 30வது ஆண்டு விழா வெற்றி பெற கம்பர்மலை வித்தியாலயா பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சிய கிளை சார்பாக வாழ்த்துகிறேன்.

வாழ்க திருமதி ராகினி ராஜகோபால்! வளர்க நாட்டியாலயா!! ஒளிர்க நாட்டியக்கலை!! ●



# பரதமும் மருத்துவமும்



- வைத்திய கலாநிதிகள் திரு.திருமதி ஞானச்செல்வன்



இன்று விழா கொண்டாடும் ராகினி ராஜகோபால் அவர்களைப் பாராட்டுவதில் நானும் எனது பாரியாரும் மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.

தாம் கற்று, பயின்ற கலையை, ஈழத்தில் இருந்து வருகைத்தந்து, புலம் பெயர்ந்த மேலைநாட்டில், அறிமுகப்படுத்தி, எமது பிள்ளைகளுக்குக் கற்பித்தது மட்டுமல்லாமல், எமது தமிழ் கலச்சாரத்தின் பண்பாட்டிற்கு வித்திட்டார் என்று கூறலாம். இவரது சேவை, நம் பிள்ளைகளுக்கு மிகவும் அவசியமானது. நாம் வாழ்கின்ற மேலைநாட்டின் சூழ்நிலையில், நாம் எமது மொழி, கலாச்சாரம் பண்பாடு ஆகியவற்றை, எமது சந்ததிகளுக்கு, வழங்குவதில் ஆர்வம் காட்ட வேண்டும். இத்தகைய நிலைப்பாட்டில், ராகினி அவர்களது சேவை அத்தியாவசியம் என்பதை உறுதியுடன் கூறலாம். நானும் எனது பாரியாரும், இவருடைய அளப்பரிய கலைத்துறைச் சேவையை எண்ணி மிகவும் பெருமிதம் அடைகிறோம். பாராட்டின் மத்தியில், மருத்துவக் கலைக்கும், பரதக் கலைக்கும் உள்ள இணைப்பாட்டை உற்றுநோக்கி, நுண்கலைகள் (Fine Arts) குறித்து, சிறிது பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம்.



நுண்கலைகள் (Fine Arts) மனிதனுக்கு மிக இன்பம் தரவல்லதும், பொழுதுபோக்கும் சாதனம் என்றும் பலர் சொல்வார்கள். ஆனால் பரதக் கலையின் வேறு சில பயன்களை, பெரும்பாலான மக்கள் அறிந்திருக்கவில்லை. முகபாவம் (Bhaavam), இராகம் (Raagam), தாளம் (Thaalam) இவை மூன்றும் இணைந்ததே பரதம் (Bharatham). எந்த ஒரு நடனமானாலும் இவை மூன்றும் ஒருங்கு இணைந்தால்தான் அழகு. புலங்களின் ஒரு மனப்பட்ட தன்மை நடனத்துக்கு, மிக அவசியம். மனம், எதனை நினைக்கின்றதோ, அதை முகம் அபிநயம் பிரபதிபலிக்க, கைகள், முத்திரைகள் காட்ட, கால்கள் தாளமிட இந்த மூன்றின் இணைவு சங்கமம் தானே நடனம். ஆக, எந்த வேலைக்கும் அவதானம் (Concentration) அத்தியாவசியம்.

அடுத்ததாக, கால்கள் (பாதம்), இதயம் இவை இரண்டிற்கும் தொடர்பு உண்டு. இதயத்துடன் மட்டுமல்ல. எல்லா அவயங்களுடனும், கால்களுக்கு இணைப்பு (Connection) உண்டு; தொடர்பு உண்டு. நடனமிடும் கால்கள் அனைத்து உறுப்புக்களையும் சுறுசுறுப்பாக்கும். பிரமிப்பாக இருக்கின்றதல்லவா?

கால் கட்டை விரல் - மூளை, தண்டுவடம் இவற்றோடும்,

அடுத்த விரல் - பல்லுடனும்,

மூன்றாவது விரல் - கண்ணுடனும்,

நான்காவது விரல் - காதுடனும்,

கடைசி விரல் - நுரையீரலுடனும் இணைந்துள்ளன.

கால் விரல்களின் அடுத்த பகுதி "Accu Pressure Point" என்பார்கள். நுரையீரல், தோள் இவற்றுடனும், பாதத்தின் நடுப்பகுதி, ஈரலுடனும் (Liver), சிறுநீரகத்துடனும் (Kidney), Gall Balaoder உடனும், குதிகால், குடல் வால்வுடனும் (Appendix) சூலம் (Ovaries) உடனும் தொடர்பு கொண்டவை.

கால்களை அழுத்தி நடனமாடுகின்ற போது, இந்த உறுப்புக்களின் பணிகள் சீராகும். இது கலையை,





மருத்துவத்துடன் இணைத்துப் பார்க்கின்ற பார்வை. கைகளின் ஒவ்வொரு பகுதியும், உடலின் ஒவ்வொரு உறுப்புடனும் தொடர்பு கொண்டதே. உடலுக்கு நல்ல பயிற்சி- சீரான சுவாசப் பயிற்சி. நரம்பு, எலும்புகளுக்குப் பயிற்சி, கழுத்து, முகம், கண், தலை- அசைவு கொடுக்கும் பயிற்சி எல்லாம் இணைந்ததே நடனம்.

இந்த நடனம் அழகுக் கலை மட்டுமல்ல, உடல் ஆரோக்கியத்திற்கும் உகந்த யோகக்கலை. உடல் எடையை சீராக்கும் கலை. அதிகப்படியான சதை, கொழுப்பு, சர்க்கரை, உப்புச்சத்து, சேராமல், சரிப்படுத்தும், சீர்ப்படுத்தும். இத்தகைய அற்புதமான ஆடற்கலை தேவனால் அருளப்பட்டுள்ளது.



நாம் ஜாதி, இனம், மதம், மொழி என்கின்ற, பலவேறுபாடுகளை கொண்ட போதிலும், நம்மை ஒருமைப்படுத்தும் மகத்தான கருவி, கலையென்று நிச்சயமாகச் சொல்லலாம். கலை, பொழுதுபோக்கல்ல, நம் உணர்வுகளையும், உடலுறுப்புகளையும் சீராக்கும் ஓர் உன்னத சாதனம்.

நாம் இதனை உணர்ந்து கொண்டவர்களாய், நமது கலாச்சாரத்துக்கு உரம் போடும் வகையில், கலையையும், கலைஞர்களையும் என்றும் வளர்க்க முன்வர வேண்டும்.

இறைவன் பெயரால் தமிழன்னை சார்பில், ராகினி இராஜகோபால் அவர்களையும் அவரது கணவர் ராஜகோபால் அவர்களையும் வாழ்த்துகின்றோம். ●





## 'நாட்டியாலயா' பணியின் சிறப்பு

நீங்கள் எப்பொழுதாவது பசும்புல் தரையில் படுத்துக் கொண்டு மேகங்கள் வானத்தில் மிதந்து செல்வதைப் பார்த்திருக்கிறீர்களா? எப்பொழுதாவது கடற்கரைக்குச் சென்று சமுத்திர அலைகள் வெள்ளை நுரையை வீசி விளையாடுவதைக் கண்டு மகிழ்ந்திருக்கிறீர்களா? தென்றல் காற்றில் பசுமையான இலைகள் அசைந்து ஆடுவதைக் கண்டு மகிழ்ந்திருக்கிறீர்களா? ஆம், கட்டாயம் உங்களுக்கு இந்த அனுபவங்கள் ஏற்பட்டிருக்கும். இதே போன்று தான் எனக்கும்.

அந்த அனுபவங்களின் பிரதிபலிப்புகளை முதன் முதலாக லண்டனில் ராகினி ராஜகோபாலின் நடன நிகழ்ச்சிகளைப் பார்க்கின்ற போது அனுபவித்தேன்.

அந்தக் காலத்தில் சங்கீதமும், நாட்டியமும் தெய்வங்களை மகிழ்விக்கும் என்று மக்கள் நம்பினார்கள். ஆனால், கடவுளை மட்டுமல்ல, எங்களைப் போன்றவர்களையும் மகிழ்விக்கும், நல்வழி காட்டும் என்பதை 'நாட்டியாலயா' நிறுவனம் நிரூபித்து வருகிறது. மேற்கில் எமது பிள்ளைகளின் பண்பாடு ஒழுக்கத்தைப் பயிற்றுவிக்கும் பள்ளியாகவும் 'நாட்டியாலயா' திகழ்கிறது.

லண்டனில் பரதக்கலை வாழ்க! ரகானியின் 'நாட்டியாலயா' பணி வளர்க என்று 'மதுர கானசபா'வின் சார்பில் வாழ்த்துகிறேன்.

**- டாக்டர். (திருமதி) ரதி முரளிதரன்**

**(செயலாளர், மதுர கானசபா)**

# தனித்துவமான நடனக் கலைஞர்



-பொன்.பாலசுந்தரம் (மூத்த பத்திரிகையாளர்)



"நடனக் கலை அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பேறுகளையும் நல்க வல்லது. மன உறுதி, உடல் நலம், இன்ப உணர்வு முதலிய நற்பண்புகளைத் தரவல்லது. இக்கலை தரும் இன்பம் தவத்தினர் தரும் இன்பத்திற்கு இணையானது'' என்று தமிழறிஞர் டாக்டர்.மா.இராசமாணிக்கனார் கூறியிருக்கிறார்.

பரதக்கலை படித்தவர்கள், படிக்காதவர்கள் அனைவரையும் ஈர்த்து அவர்களுக்குக் கதைத் தொடர்புகளைக் காட்டி உணர்ச்சி அடையச் செய்வது. நாட்டியத்தைப் பார்ப்பதால் நற்கீர்த்தி, முதிர்ந்த அனுபவம், அழகு, சாதுர்யம் ஆகிய நான்கும் அதிகரிக்கின்றன என்று நாட்டிய சாத்திரங்கள் பகர்கின்றன.

மேலும் எடுத்த காரியத்தில் திடசித்தம், சுகதுக்கச் சமபங்கீடு ஆகிய குணங்கள் நாட்டியத்தைப் பார்ப்பவர்களுக்கு கிடைக்கக் கூடிய பேறுகளாகும்.

ஆண்களாக இருந்தாலென்ன, பெண்களாக இருந்தாலென்ன அறிவு, ஆற்றல், திறமை, அர்ப்பணிப்பு, தியாகம், இன்னும் முக்கியமான உடல் வலிமை நன்கு அமையப் பெற்றவர்களாக இருந்தாலன்றி நடனமாடுவது கடினமாகிவிடும்.



கடவுள் மீது அன்பையும், அதனால் பெறும் பெரும் பேற்றையும் பெறுவதற்கு நடனக் கலை உதவுகிறது. இறைவனை அமைத்து ஆடப்படும் நடனங்களாகிய நாயக நாயகி பாவங்கள், மக்களை உணர்ச்சிவசப்படுத்தி விடுகின்றன. கடவுள் வழிபாட்டின் அம்சமாகவும் காலந்தோறும் இருந்து வந்திருக்கிறது.

தமிழர்களுடைய வைபவங்களில் நடனக் கலைக்கு உன்னத அந்தஸ்து வழங்கப்பட்டு வருவதும், இக்கலை இன்றும் வளர்ச்சிகாணக் காரணமாக இருந்து வருகிறது.

இப்படியான தொன்மைச் சிறப்பு வாய்ந்த நாட்டியக் கலையின் வளர்ச்சிக்கு, இக்கலையின் அர்ப்பணிப்புக்கு வெள்ளிவிழாக் கண்ட நடன ஆசிரியை ராகினி ராஜகோபால் அவர்களின் சேவைப்பற்றி நேயர்களுடன் பகிர்ந்து கொள்வதே எனது நோக்கமாகும்.

நாம் நமது சொந்த மண்ணில் -ஈழத்தில் - நிம்மதியாக வாழ்ந்த காலத்தில், நடனக் கலையில் சிறுவயதிலேயே சிறந்த நர்த்தகி என முத்திரை பதிக்கப்பட்டவர் ராகினி. பிரபலமான யாழ் வீரசிங்கம் மண்டபமும், பெரும்பாலான யாழ்க் கல்லூரிகளின் மண்டபங்களும், மக்கள் நலன்புரிச் சங்க மண்டபங்களும் இவரது நடனங்களை மேடை ஏற்றிய பெருமைக்கு உரியவைகள் எனலாம்.

முக்கலைகளுக்கும், முக்கியத்துவ மளிக்கும் பாரம்பரிய மண் ஈழ மண். காலத்தால் மாசுபடாமலும், அழிந்து போகாமலும் கலைகளைக் காப் பாற்றி அவைகளை வளர்த்த பெருமைக் குரிய மண்.

பிஞ்சு வயதினில் சலங்கையின் நாதத்துடன் கொஞ்சி விளையாடியது, நடனக்

கலைக்கு ராகினி தம்மை அர்ப்பணிப்புச் செய்த வித்தியாரம்பமாகும். அன்றிலிருந்து இன்று வரை - அதாவது சின்னம் சிறிய வயது, கன்னிப் பருவம், பாடசாலைப் படிப்புக் காலம், பின்னர் விவாகம், தொடர்ந்து குடும்ப வாழ்க்கை - இப்படியான வாழ்க்கைக் காலங்களில் தாம் தம்மை அர்ப்பணிப்புச் செய்த நடனக் கலையின் வளர்ச்சிப் பாதையில் இருந்து தம்மை ஒரங்கட்டியது கிடையாது எனலாம். ஈழத்திலிருந்து கொழும்புக்கு இடம் பெயர்ந்து வந்த காலத்திலும் இவரது நடன நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வந்தன.

ராகினி அவர்கள் தமது நடன நிகழ்ச்சிகளுக்காக மேடை ஏறிய காலத்தில் இருந்தே பாவ, ராக, தாளம் உட்பட அபிநயம் வரையிலும், நடனத்துடன், சம்பந்தமுடைய நட்டுவாங்கத்துடனும் மிகவும் நெருங்கிய கவனம் செலுத்தி வந்திருப்பது தான் ஒரு முதல் தர நாட்டியக்கலை ஆசிரியையாக வருவதற்கு உதவியாக அமைந்திருக்கிறது என்று கூறலாம். தமது நடன நிகழ்ச்சிகள்



முழுநேரமாக கற்பிக்கும் லண்டன் அரச பாடசாலையில் ராகினியின் பல இன மாணவர் பங்கேற்ற நடனத்தின் பின்...

பொதுமக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற, தான் கடைப்பிடித்த யுத்திகளை தமது மாணவிகளுக்கு சொல்லிக் கொடுத்து முன்னணிக்கு கொண்டுவர வேண்டுமென்ற ஆசைதான் இப்போதெல்லாம் நடன உலகில் பெயரும், புகழும் பெற அடித்தளமாக அமைந்திருப்பதை அவதானிக்கலாம்.

இன்று நடனக் கலை உலகளாவிய ரீதியில் வளர்ச்சிகண்டு வருகிறது. இதில் ராகினி அவர்களின் பங்களிப்பு பல முனைப்பட்டதாகும். பிரித்தானியாவில் மட்டும் தமது நடனப் பயிற்சிப் பணியையும், அரங்கேற்றங்களையும் முடக்கிவிடாமல், கடல் கடந்த ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளிலும் நடனக் கலையில் ஆர்வமுடையவர்களுக்கு ஊக்கமளித்தும் வருகிறார்.

மரபு தவறாத நடனக் கலை பாதுகாக்கப்பட வேண்டுமென்ற ஆர்வமுடையவர். இதனால் இவருடைய நடனப் பயிற்சிகளில் இடைச் செருகல்களை ராகினி அவர்கள் ஆதரிப்பதில்லை. ஈழப் போராளிகளுக்காக சில தனித்துவம் வாய்ந்த நடன நிகழ்ச்சிகளில் காலத்தின் தேவைக்கமைய உணர்ச்சிபூர்வமான நடனங்களுக்கு மட்டும் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதையும் அவதானிக்க முடிகிறது.

எங்கள் கிராமங்களில் எல்லாம் சாதாரண மக்கள் மத்தியில் சில உவமைகள் தம்மை அறியாமல் வாழ்தொலி எழுப்புவதைக் கேட்கலாம். சிலர் இவற்றிற்கு செவி கொடுப்பார்கள்; மதிப்பளிப்பார்கள். வேறு சிலர் மற்றும் சிலர் உள்வாங்கி மௌனமாக ரசிப்பார்கள். இதில் ஒரு படாடோபமற்ற உவமை ஒன்றை இங்கு உங்களுடன் பகிர்ந்து கொள்வது பொருத்தமாக இருக்குமென நம்புகிறேன். அதுதான் ''ஜாடிக்குப் பொருத்தமான மூடி'' என்பது. பொருத்தமான ஒரு குடும்பத்தைப் பார்த்துப் பெருமையாக இப்படிக் கூறுவதுண்டு.

சோதிடர் ஒருவரின் கணிப்பிலும் பார்க்க இப்படிச் சொல்லுபவர்களின் வாக்கு மெய்வாக்காகவே இருக்கும். ராகினிக்கும், ராஜகோபாலுக்கும் உள்ள பொருத்தத்திற்கு இந்த வாக்கு மிகப் பொருத்தமானது.

இயல், இசை, நாடகம் மூன்றும் சேர்ந்தவைகளே முத்தமிழ். இவற்றுள் ராகினி அவர்களின் நடனக் கலை சேர்ந்திருக்கிறது. நடனக் கலையின் ஒரு கூற்று நாடகக் கலையாகும். இயல் கலையோடு வாழ்பவர் நண்பர் ராஜகோபால் அவர்கள். சிறந்த எழுத்தாளர். படைப்பாளி, விமர்சகர், பத்திரிகையாளர், பத்திரிகை ஆசிரியர், சிறந்த நண்பர், பண்பாளர், இவற்றிற்கெல்லாம் மேலாக மனிதநேயம் கொண்டவர் - இப்படி ராஜகோபால் அவர்களைப் பற்றி தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கலாம்.

பத்திரிகை உலகத்துடன் நாற்பது ஆண்டுகள் சங்கமம். பல தியாகங்களின் மத்தியில் பத்திரிகைத் தொழிலை கைவிடாமல் அதோடு வளர்ந்து வந்ததுடன், மற்ற எழுத்தாளர்களை வளர்த்தெடுத்த பெருமை நண்பர் ராஜகோபால் அவர்களுக்கு உண்டு. நிருபர், உதவி ஆசிரியர், ஆசிரியர், பாராளுமன்ற செய்தி தயாரிப்பாளர் இப்படி பத்திரிகை உலகில் பழுத்த பழம்.

தமக்குரிய துறைகளில் இருவரும் ''சூப்பர் ஸ்டார்கள்'' என்றால் மிகையாகாது. இப்போது கவனியுங்கள். எமது மக்களின் வாய் மதிப்பீடு ''ஜாடிக்குப் பொருத்தமான மூடி'' என்பது எவ்வளவு பொருத்தமானதென்று. மனம் நிறைந்த மக்கள் வாழும் நமது மண்ணின் பெருமைக்கு ஒரு

எந்த ஒரு துறையிலும் முப்பது ஆண்டுகள் ஒரு பெரிய தூரம். வாழ்க்கையின் பாதிக்காலம் முடிந்து விட்ட நிலை. இப்படி தமது வாழ்க்கையை ஒரு கலையின் வளர்ச்சிக்காக அர்ப்பணித்திருக்கும் ராகினி ராஜகோபால் அவர்களின் சேவை நமது வருங்காலச் சந்ததியினர் எமது கலை, கலாசாரப் பெருமைகளை முன்னெடுத்துச் செல்ல அவசியமாகத் தேவையாகிறது.

உதாரணம் இது.

ராகினி அவர்கள் துணிவுள்ளம் கொண்டவர். இதற்கு அவரது வாழ்க்கை ஒரு எடுத்துக்காட்டாகும். சுமார் முப்பது வருடங்களுக்கு முன்னரெல்லாம் பத்திரிகைத்துறையில் கடமையாற்றுபவர்களுக்கு 'மௌசு' கிடையாது. ஒரு சில இலக்கியவாதிகளின் மத்தியிலும், அரசியல்வாதிகளின் மத்தியிலும், சிறுகதை, கவிதை, கட்டுரை எழுதுபவர்கள் மத்தியிலும்தான் மதிப்பிருந்தது. காலப்போக்கில் பத்திரிகைகள் பெருகப், பத்திரிகைகளில் வேலை செய்பவர்களுக்கு கிராக்கியாகிவிட்டது. அந்தக்காலத்தில் அரசாங்க ஊழியர்களிலும் பார்க்க அதிக சம்பளத்தை ஒரு பத்திரிகையாளர் பெற்றாலும் கல்யாண, மார்க்கட்டில் 'இறக்கமாக'வே இருந்தென்பதை மறைப்பதற்கில்லை.



லண்டனில் கன்னடத்து பைங்கிளியுடன், ஈழத்து நாட்டிய நட்சத்திரம்

அந்தக் கால கட்டத்தில் நான் ஒரு முன்னணிப் பத்திரிகையாளனாக இருந்தும், இப்படியான அனுபவங்களுக்கு முகம் கொடுக்கும் நிலையில் இருந்தேன் என்பதை இங்கே குறிப்பிடலாம். ஆனாலும் சில பெண்களுக்கு பத்திரிஙகையாளன் மீது கவனம் இருந்தமையால் நல்லபடி பெண் கிடைத்துவிட்டதெனலாம். ராஜகோபாலா, ராகினியா அதிர்ஷ்டசாலி?

எந்த ஒரு துறையிலும் முப்பது ஆண்டுகள் ஒரு பெரிய தூரம். வாழ்க்கையின் பாதிக்காலம் முடிந்து விட்ட நிலை. இப்படி தமது வாழ்க்கையை ஒரு கலையின் வளர்ச்சிக்காக அர்ப்பணித்திருக்கும் ராகினி ராஜகோபால் அவர்களின் சேவை நமது வருங்காலச் சந்ததியினர் எமது கலை, கலாசாரப் பெருமைகளை முன்னெடுத்துச் செல்ல அவசியமாகத் தேவையாகிறது.

அதிகமான மாணவிகளை நடனக் கலையில் மேடை ஏற்றிய பெருமைக்குரியவராக இருந்தாலும், இன்னும் ஏராளமானவர்களை நாட்டியக் கலையில் பயிற்றுவித்து இக்கலைக்கும், தமிழ் மக்களுக்கும் பெருமைதர முன்னிற்க வேண்டும்.

புலம் பெயர்ந்து வாழும் மக்கள் வாழ்க்கையில் எமது கலைகள் சாகாவரம் பெற்றவையாக வளர ராகினி ராஜகோபால் போன்றோரின் சேவை என்றும், எப்போதும் தேவை.

வாழ்க, வளர்க ராகினியின் கலைத் தொண்டு! ●



# ராகினி எனக்கு அண்ணி



- பவானி ரவீந்திரன்



இன்றைய விழாவின் நாயகி நடன ஆசிரியை ராகினி ராஜகோபால். அவரைப்பற்றி எத்தனை, எத்தனையோ எழுதலாம். பிரித்தானிய பரத நடன உலகில் ஒரு முக்கியமான அத்தியாயத்தை உண்டாக்கியவர், உண்டாக்கிக் கொண்டிருப்பவர். கலையைத் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் எல்லோரையும் நடனத்தை ரசிக்க வைத்தவர்.

அவரின் புகழை எழுதவா? அவரின் ஆற்றலை எழுதவா?

ராகினியும், பரதமும் இரட்டைக் குழந்தைகள் என்பதை எழுதவா?- அவரைப்பற்றி எழுத எனக்கு என்ன தகுதி இருக்கிறது. நான் அவரது ரசிகை. அது மட்டும் போதுமா அவரைப்பற்றி எழுத - இவ்வாறு பலவிதமான எண்ணங்கள் தோன்றுகின்றன என் மனதில். எனக்கு ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது. ராகினி எனது அண்ணாவின் மனைவி. ராகினி எனது அண்ணி. எனக்கு பெரிய கலை ஞானம் இல்லாவிட்டாலும், அவரைப்பற்றி எழுத 'மச்சாள்' என்ற ஒரு தகுதி நிச்சயமாக உள்ளது.



மருமகளுக்குப் பிடித்த மாமியார்

ராகினியை புகழ்பெற்ற ஆசிரியையாகத்தான் பலருக்குத் தெரியும். ஒரு அண்ணியாகவோ, மருமகளாகவோ வெளியுலகத்திற்குத் தெரியாது. எங்கள் அம்மாவிற்கு மருமகள் ராகினி மீது பெரும் பாசம். அதேபோல ராகினிக்கும் மாமியார் மீது பாசம். ராகினியின் மாணவர்களின் நடன நிகழ்ச்சியோ அல்லது ராகினி பங்கேற்கும் வேறு நிகழ்ச்சிகளுக்கோ தனது மாமியார் முன்வரிசையில் இருந்து பார்க்க வேண்டும் என்று விரும்புவார். அம்மா வயது போனவர். அவ்வளவு சுகபலம் உள்ளவருமில்லை. ஆனால் மருமகளின் நிகழ்ச்சிகளுக்குப் போவதென்றால் அம்மாவுக்குப் பெருமையும் பெரிது விருப்பமும். அம்மாவுக்கென்று இந்தியாவிலிருந்து வாங்கி வந்த சேலைகளை அழகாக உடுத்திக் கூட்டிக் கொண்டு போவார்கள். அம்மாவுக்கு சேலை உடுத்தத் தெரியாது என்பதல்ல. மருமகள் உடுத்தினால்தான் அழகாக இருக்கிறது என்ற திருப்தி அம்மாவுக்கு.



அதே போல அவரின் மச்சாள்மாரான நாங்களும் எங்களுக்கும் உடுத்திவிடும்படி நிற்போம். எனது மகள் கல்யாணம் முடித்தபோது தனக்கு ராகினி மாமிதான் உடுத்தி அலங்கரிக்க வேண்டுமென்று

*மருமகளின் நிகழ்ச்சிகளுக்குப் போவதென்றால் அம்மாவுக்குப் பெருமையும் பெரிது விருப்பமும். அம்மாவுக்கென்று இந்தியாவிலிருந்து வாங்கி வந்த சேலைகளை அழகாக உடுத்திக் கூட்டிக் கொண்டு போவார்கள். அம்மாவுக்கு சேலை உடுத்தத் தெரியாது என்பதல்ல. மருமகள் உடுத்தினால்தான் அழகாக இருக்கிறது என்ற திருப்தி அம்மாவுக்கு.*



உறுதியாக இருந்தாள். ராகினி மாமி என்று மருமக்களும், பெரியம்மா என்று பெறாமகளும் கூப்பிட்டால், காணும் அவர்களுக்காக எதையும் செய்வார்.

ராகினி எதையுமே சுலபமாக எடுத்துக் கொள்பவர். எந்தக் கோபதாபங்களையும் மனதில் வைத்துக் கொள்ள மாட்டார். மச்சாள்மாராகிய நாங்கள் அவரின் மீது பல பாரங்களை சுமத்தியுள்ளோம்- எவ்வளவு வேலைப்பளு இருந்தாலும், எதையுமே சுலபமாக செய்து முடித்து விடுவார். எப்படி செய்தார் என்று நாங்கள் பல தடவை வியந்துள்ளோம்.

ராகினியின் இன்னுமொரு சிறந்த குணம், தான் வாழ்க்கைப் பட்ட குடும்பத்தில் தனது மூத்த மருமகள் என்ற நிலையை ஒரு போதும் விட்டுக் கொடுக்க மாட்டார். தனது கணவருடைய (எமது அண்ணா) நிலையையும் ஒரு போதும் குடும்பத்தில் ஒரு சிறிதளவும் குறைய விடமாட்டார்.

பிரித்தானியாவின் வடகிழக்குப் பகுதியில் ரீசைட் (Teeside) உள்ளது. அங்கே மிகவும் குறைவாகவே தமிழர்கள் வாழ்கிறார்கள். அவர்கள் அங்குள்ள சில குழந்தைகளுக்காக தமிழ் பள்ளிக்கூடத்தை நடத்தினார்கள். 87ல் பள்ளிக்கூட விழா ஒன்றை நடத்தினார்கள். லண்டனில் இருந்து ரீ சைட் 250 மைல் தொலைவில் உள்ளது. ராகினி தனது சகோதரி வினோதினியோடு வருகை தந்து, சில நாட்கள் தங்கியிருந்து குழந்தைகளுக்கும் நடனம் பழக்கி, மழலை மாறாத குழந்தைகளை மேடை ஏற்றி எல்லோரையும் மகிழ்வித்தார். பள்ளிக்கூடத்தின் அழைப்பை ஏற்று, விழாவில் திருமணத்தின் பிறகு, முதன்முறையாக தனியாகவும், தனது இரட்டைச் சகோதரி வினோதியுடனும் மேடையில் நடனம் ஆடினார். பல இன மக்கள் பார்வையாளர்களாக இருந்தார்கள். நடனத்தினால் விழாவைச் சிறப்பித்தது மட்டுமல்ல, பலத்த கரகோசத்தையும் பெற்றுக் கொண்டார்.

மேற்கில் தமிழ் கலாச்சாரம் தடுமாறும் போது, இவர் மரபுகளை உடைக்காமல், பல நடன நாட்டியங்களை உலகுக்கு தந்திருக்கிறார். தமிழை தாய்மொழியாக கொள்ளாத மாணவர்கட்கும், பாரம்பரியம் மாறாமல், தமிழ் உணர்வோடு படிப்பித்து புதிய கலாச்சாரத்தை அவர்கட்கு அழகாகக் காண்பித்துள்ளார். பலரால் சாதிக்க முடியாததையெல்லாம் சாதித்து விட்டார்.

ராகினியின் கலைத்தொண்டை இன்று கொண்டாடுகிறோம். கலைகள் அழியாமல் இருக்க வேண்டுமென்றால் கலைஞர்களை பாராட்ட வேண்டும், போற்ற வேண்டும்.

பலரை தனது நாட்டியக் கலைப்பக்கம் இழுத்த ராகினி தனது கடைசி மூச்சு இருக்கும் வரை நடனக் கலையை வளர்த்துக் கொண்டே இருப்பார்; புதுமைகளைப் படைப்பார். அவர் எங்கள் அண்ணி என்பதில் எங்கள் எல்லோருக்கும் பெருமை. அவர் நூற்றாண்டு ஆண்டுகள் வாழ நெஞ்சார வாழ்த்துகிறேன். அவரது கலைப்பணி தொடரட்டும். ●

# 'நாட்டியக் கலையரசி' ராகினி



- டாக்டர் சரசுவதி இராமநாதன்

*தரம் குறையாத நிகழ்ச்சிகள், ஜதி மாறாமல் ஆடும் பாதங்கள், இவையெல்லாம் இணைந்து, உடல் அசைவும் பொருத்தமாக இருந்தால் அந்தப் பரதம் உன்னதமானது.*

**அ**ர்த்தமுள்ள இந்து மதம் - கலைகளை இறைவனோடு இணைத்தே பார்த்து மகிழ்ந்தது.

குழலைக் கண்ணனோடும், யாழைக் கலைமகளோடும், மத்தளத்தை நந்தி தேவரோடும்- நடனக்கலை ஆடலரசன் நடராசனோடும் சேர்த்தே கண்டது. கவின் கலைகள்- நுண்கலைகள் (FINE ARTS) பலவற்றிலும் பரதம் என்ற நடனக் கலை ஒப்பற்றது.

பரத முனிவரின் நாட்டிய சாஸ்திரம் நடனத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளது. சிலப்பதிகாரமும் - நடன மங்கை எப்படி இருக்க வேண்டும்? மேடை எவ்வாறு திகழ வேண்டும்? ஒளி விளக்குகள் எப்படி அமைய வேண்டும்? பாடுபவன்- தாளம் போடுபவன் எவ்வாறு இருக்க வேண்டும்? என்றெல்லாம் 'அரங்கேற்றக் காதை'யில் விளக்கியுள்ளது.

ஆடல் - பாடல் - அழகு மூன்றிலும் சிறந்தவள் நடனம் ஆடினால் சிறப்பு. பாவம் - ராகம் - தாளம் மூன்றிலும் இணைவதே பரதம்.

தாயகத்தில் நடனக் கலையை முறையாக பயின்றார். ஆரம்பத்தில் அவருக்கு நடனம் சொல்லிக் கொடுத்தவர் லீலா. பின்னர் கலாஷேத்திரத்தில் பயின்று பட்டம் பெற்ற சாந்தா பொன்னுத்துரையிடம் பயின்றார். அவரே யாழ்ப்பாணத்தில் பதினைந்தாவது வயதில் அரங்கேற்றத்தையும் நடத்தி வைத்தார். இதன் பின்னர் நடனக் கலையின் உயர் தத்துவங்களையும், நட்டுவாங்கத்தையும் பயிலத் தமிழகம் வந்தார். தமிழகம் கலைகளின் தாயகம். கலாஷேத்திரப் பாணியில் இரண்டாண்டுகள் பயின்று ஈழம் திரும்பியவர் நடனம் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தார். தாயகத்தில் 10 ஆண்டுகளும் புலம் பெயர்ந்த இலண்டனில் இருபது வருடங்களுமாக முப்பது ஆண்டுகளைப் பூர்த்தி செய்து விட்டார் ராகினி.



பல ஆண்டுகளாக லண்டனுக்கு வந்து போகிறேன். அப்போது எல்லாம் நான் சொற்பொழிவாற்றுகிற நிகழ்வுகளுக்குத் தன் கணவரோடு வந்து அமைதியாக அமர்ந்து கேட்டு ரசித்து என்னைக் கண்டு பேசிவிட்டுச் செல்வார்கள். மனம் விட்டு பேசுகிற பெரிய பண்பு இந்தத் தம்பதியரிடம் நிறையவே உள்ளத்தைக் கண்டிருக்கிறேன்.

**நூ**ற்றுக்கும் மேலான மாணவியர் ராகினியிடம் படிக்கிறார்கள். லண்டனுக்கு வந்த சமயம் இவரது மாணவியர் சிலரது அரங்கேற்ற நிகழ்வுகளைக் கண்டு களித்திருக்கிறேன்.

தரம் குறையாத நிகழ்ச்சிகள், ஜதி மாறாமல் ஆடும் பாதங்கள், இவையெல்லாம் இணைந்து, உடல் அசைவும் பொருத்தமாக இருந்தால் அந்தப் பரதம் உன்னதமானது.

'ஆடற் கலையே தேவன் தந்தது'- அதை அர்ப்பணிப்பு உணர்வுடன் மாணவியருக்குப் பயிற்றுவித்து, தேர்ந்த நடனமணிகளாக ஆக்கி வரும் அன்புச் சகோதரி ராகினி ராஜகோபால் அவர்களின் கலைப்பணி போற்றுதற்குரியது.

ராகினியின் வெற்றிக்கு அவர் கணவர் பெரிதும் துணை நிற்கிறார்.

ராகினியின் 'நாட்டியாலயா'வின் 30வது ஆண்டு, பிரமாண்டமானதாக நடைபெற ஏற்பாடுகள் நடந்து கொண்டிருப்பது மிகிழ்ச்சியை அளிக்கிறது.

விழா சிறப்புறவும், புலம் பெயர்ந்துள்ள தமிழர் குடும்பத்துக் குழந்தைகள் கலைப் பயிற்சி பெற்று சிறந்த நடன மணிகளாகத் திகழவும், ராகினியின் கலைப்பணிகள் மேன்மேலும் சிறக்கவும் உளமார வாழ்த்துகிறேன்.

'ஆடும் அருட் சோதியே அருள்வாய்'!. ●



# நெஞ்சம் மறப்பதில்லை

- ஏ.ரகுநாதன் (இயக்குனர் - நடிகர்)



**1963** ஜூலை 15ம் திகதி, என் வாழ்வில் ஒரு புதிய அத்தியாயம்.

புது மனைவியைப் பார்க்க தினம் அவர்கள் வீட்டுக்குப் போவேன். அப்படி ஒருநாள். தன் கடைசித் தம்பி ரவியை மகிழ்விக்க என் மனைவி ஒரு பாடல் பாடிக் கொண்டிருந்தார். என்னை முதலில் கண்டவுடன், என் மனைவியின் இரட்டைச் சகோதரிகள் ராகினி - விநோதினியில் ஒருவரான ராகினி 'சத்தம் போட வேண்டாம்' எனச் சைகை காட்டியபடியே என் மனைவியின் பாடல் ரசனையை எனக்குக் காட்டினார்.

'நெஞ்சம் மறப்பதில்லை' - பாடல் அது. நெஞ்சம் எதையும் மறப்பதில்லை. எங்கள் மணவிழாவின்போது, சின்னக்குழந்தைகளாக வந்து பக்கத்தே நின்ற ராகினி -விநோதினியை மறக்க முடியுமா? அவர்கள் இருவரும் இணைந்து 'where are you going to my little Maid?'டுக்கு பள்ளிக்கூடத்தில் அபிநயம் பிடிக்க இருவருக்கும் ஆங்கில பாணி உடை நான் தயாரித்துக் கொடுத்ததை மறந்து விடுமா?

பின்னர் - சாந்தா பொன்னுத்துரையின் மாணவிகளாக யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் அரங்கேற்றத்துக்கு 'சிலோன் தியேட்டர்ஸ்' ஆர்ட் டைரக்டர் வின்சென்ட் மூலம் வடிவமைத்த அட்டையுடன் கூடிய மலர் தயாரித்ததை மறந்து விடுமா?

எழுத்தாளர் செங்கை ஆழியானின் 'வாடைக்காற்று', நாவலை வாசித்து விட்டு ''அத்தான் படமாக்க நல்ல கதை'' என முன்மொழிந்த ராகினியை மறந்து விடுமா? பள்ளி, மாணவனாக இருந்த காலத்திலேயே எங்கள் 'நெஞ்சில் ஓர் ஆலயம்' நாடகத்துக்கு சிற்பியின் 'கலைச்செல்வி' இதழில் விமர்சனம் எழுதியவரும், எங்கள் 'நிர்மலா' திரைப்பட அறிமுகவிழாவில் கலந்து கொண்டவரும் - என் சகலையுமான, என் மைத்துனிகளில் ஒருவரான ராகினியைத் திருமணம் செய்து கொண்ட ராஜகோபாலை மறந்து விடுமா?

ராகினி - விநோதினி இருவருக்கும் ஆசிரியை பணிக்கு உதவிய காலங்கள் மறந்து விடுமா? அடையார் லட்சுமணனிடம் அவர்கள் நடனம் பயின்ற காலங்கள் மறந்து விடுமா? எங்கள் கலைமேதை வீரமணி ஐயரிடம் கலை பயின்ற காலங்கள் மறந்து விடுமா? காலத்தின் கட்டாயமாக புலம் பெயர்ந்தாலும், அவர்கள் கற்ற கலையை நசுங்கவிடாமல் மற்றவர்களுக்கும் கற்பித்து வாழ்வில் சிறக்க உதவிய அவர்கள் கணவர்களை மறந்து விடுமா?



ராகினி இன்று உலகமெலாம் தெரிந்த நடன ஆசிரியை. அவர் கணவர் உலகமெலாம் அறிந்த மூத்த பத்திரிகை ஆசிரியர். ராகினியின் 30 ஆண்டுக்கு மேற்பட்ட கலைவாழ்க்கையை சிறப்பிக்க - அவரை உற்சாகப்படுத்த எடுக்கும் விழாவில் நானும் என் மனைவி சந்திராதேவியும் வாழ்த்தக் கடமையும் உரிமையும் உடையவர்களாதலில், இச்சிறு மடல் ராகினிக்கு வாழ்த்தாக அமையட்டும். நெஞ்சம் மறப்பதில்லை... வாழ்க வளமுடன். ●

# சவாலாக ஏற்ற சமுதாயப்பணி!



- வ.மா. குலேந்திரன்



பரத நாட்டிக் கலை என்ற நாட்டியக்கலை, தமிழர் கலைகளில் ஒன்று. ஆடல், பாடல், கூத்து, சிற்பம், ஓவியம், இலக்கியம், கவிதை போன்றவை பண்டைய கால சமுதாய அமைப்பினை நிலைநாட்டுபவதற்கான பயன்பாட்டுக் கலைகளாகப் பயன்படுத்தப்பட்டன.

கலைகளைக் கற்பவர்கள் அக்கலைகளின் மரபை மட்டும் அறிந்தால் போதாது. அக்கலைக்கும், சமுதாயத்துக்குமிடையே நிலவ வேண்டிய உறவையும், கலையினால் சமுதாயத்துக்கு ஏற்படக்கூடிய பணியினையும் சரிவர அறிந்து கொள்ளுதல் வேண்டும். மனித குல வரலாற்றில் எல்லாக் கால கட்டத்திலும் நாட்டியத்துக்கு என்று ஒரு முக்கிய தேவை இருந்தது. அது தொடர்ந்து கொண்டும் இருப்பதுடன் அதனால் ஏற்படக்கூடிய பலாபலன்கள் இன்றைய அவசர உலகில் மிக மிக தேவையாகவும் உள்ளது.

நாட்டியத்தின் இயல்புகள் அதனைக் கண்டு களிப்பவர்களுக்கு முழுமையாக விளங்குவதில்லை. அதனால் நாட்டிய ஆசிரியர் எனும்போது, கற்பவர்களுக்கு அதனை கற்பிப்பதை மட்டும் அறிந்து செய்வதால் பயனேதுமில்லை. அதில் தத்துவார்த்தம், மரபுகளின் தொன்மை - பன்மை பண்பாட்டு இணைப்பு, சார்பு, வளர்ச்சி, வளம், நோக்கம், நுணுக்கம், அமைப்பு, நளினம், நெளிவு சுழிவு அழகு ஆகியவற்றை அறியச் செய்வதும் அதனைக் கையாளும் முறையை அறியச் செய்வதும் மிகமிக அவசியமாகும்.

இந்த நாட்டியமானது பரமசிவானல் தேவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டது. சிவன் ஆடிய போது அண்டசாகரங்கள் அசைந்தன, கடல்களும் கோள்களும் அவர் ஆட்டத்தில் ஆட்டம் கண்டன.



சிவசக்தி நாட்டியத்தை பார்த்து ரசித்த தேவர்கள் சிவனிடம் இந்நாட்டியத்தை உலகெங்கும் பரவ அருள் வேண்டினார்கள்.

அதனால் பரமசிவன் தான் ஆடிய ஆடலைத் ''தாண்டவம்'' என்றும், தனது மனைவி பார்வதிக்கு கற்பித்த நடனத்தை ''லாஸ்யம்'' என்றும் கூறி, பரத மகரிஷிக்கு ஆடல்கலையின் நுட்பங்களை விவரித்தார்.

இவ்வாறு ஆரம்பித்த நாட்டியக் கலையானது பார்வதி தேவியால் தனது தோழியான உஷை என்பவளுக்கு கற்றுத்தர, அவள் தேவலோக மனிதர்களுக்கும் கந்தர்வ யோக மாதர்களுக்கும், உத்தரதேச மாதர்களுக்கும் சொல்லித் தருகிறாள்.

இன்று பெண்களால் ஆடப்படுகின்ற நாட்டியம் ''லாஸ்யம்''. இது மென்மையும் நளினமும் நிறைந்தது என்றும் முரட்டுத்தனம் நிறைந்த தாண்டவம் ஆடவர்களுக்கு மட்டும் ஏற்றது என்றும் பரதரிஷி கூறுகின்றார்.

இவ்வாறு பெருமையும், பண்பாடும் பெற்ற நாட்டியக் கலையை பண்பாடு, கலாச்சாரம் மாறுபட்ட இந்த இங்கிலாந்து நாட்டில் பிறந்து வளர்ந்து வருகின்ற குழந்தைகளுக்கு பயிற்றுவிப்பது என்பது போன்ற கடினமான தொழில் ஏதுமில்லை.

ஆனால் அந்தத் தொழிலை ஒரு சவாலாக ஏற்று சமுதாயப் பணி செய்ய வேண்டும் என்ற ஒரே ஒரு நோக்கில் தனது கணவர் ராஜகோபால் ஆதரவுடன் பனியிலும், குளிரிலும் கிடைக்கின்ற ஓய்வு வேளைகளைப் பயன்படுத்தி நிறைவேற்றி வருபவர் ராகினி ராஜகோபால்.

பத்து ஆண்டுகள் இலங்கையிலும், தற்போது இருபது ஆண்டுகள் இங்கிலாந்திலும் 'நாட்டியாலயா' மூலம் சேவையாற்றி வருகின்றார்.

நாட்டியாலா அதிபர் ராகினி ராஜகோபால் அவர்களின் முப்பதாவது ஆண்டு நிறைவு விழா ஆண்டு இது. 1985ம் ஆண்டு இங்கிலாந்து வந்து சேர்ந்த இவர், 1987ஆம் ஆண்டு முதல் அமரர் கிட்டுவின் வேண்டுதலின் பேரில் மாவீரர் தின மேடைகளின் தொடர்ச்சியாகத் தனது 'நாட்டியாலயா' மாணவிகளை மேடையேற்றி வருகின்றார்.

விடுதலை வேண்டி நிற்கும் போராளிகளுக்கு ஆதரவாக மேடையேறுவதே பயம் என்று எண்ணிய அந்தக் காலத்தில் துணிந்து நின்று தனது 'நாட்டியாலயா' நிறுவனத்தின் மூலம் பங்களிப்பைச் செய்தவர் ராகினி ராஜகோபால்.

மாவீரர் தின விழாக்களில் மட்டுமல்ல ''செஞ் சோலை'', ''வெண்புறா'' ஆகிய நிறுவனங்கள் நடத்தும் விழாக்களில் கூட இவர் பங்களிப்புச் செய்யத் தவறவில்லை. இலக்கிய விழாக்கள், நூல் வெளியீடுகள் போன்ற நிகழ்ச்சிகளின் போதும் இவர் தனது கலைச் சேவையை வழங்கத் தவறியதில்லை.

இவருடைய கலைச் சேவைக்கு கிடைத்த மிகப்பெரிய அங்கிகாரம், அமரர் கிட்டு இவருடைய இல்லத்துக்கே சென்று இவருடைய நாட்டியம் பழக்கும் திறமையை மெச்சி சில விடுதலைப் பாடல்களை கொடுத்து அவற்றை நடனமாடப் பழக்குமாறு கேட்டதும், அதனைத் தொடர்ந்து நடனம் மேடையேற்றப்பட்ட பின்னர் ராகினி ராஜகோபாலை மனம் திறந்து பாராட்டினார்.

இவர் நடனமைத்த பாடல்கள் ''வன்னி மண்ணிலே மயில் ஆடுமா? போராடுமா?'', ''நாளை பிறக்கும் தமிழீழம்'', ''முருகனுக்கு நிகரானவன் பிரபாகரன்'' ஆகியவை சிலவாகும். இன்று வெளிநாடுகளில் டப்பாங்கூத்து நடனம் பரதக் கலையின் மகத்துவத்தை சீரழிக்கும் இந்நேரத்தில் பரதக்கலையின் மகத்துவத்தை அட்சரம் பிசகாமல் கலை நயத்துடன், பாவத்துடன் பழக்கிக் கொண்டிருப்பவர் ராகினி ராஜகோபால் என்றால் மிகையாகாது.

எனது மகள் தமிழினி இவரிடம் நடனம் பயின்றதனால் எனக்கு நேரடியாக இவர் பழக்கும் விதத்தை, அப்போது அவர் கடைப்பிடித்த பொறுமை, வளைவுகளை நெழிவுகளை, புருவ அசைவுள்ள விழிகளின் பார்வை, புன்முறுவல், விரல்களின் நளினம், உருவ அசைவுகளை ஆங்கிலத்திலும், தமிழிலும் விளங்கப்படுத்தியதை கவனிக்கும் வாய்ப்புகள் கிடைத்தன.



'வெண்புறா' பொறுப்பாளர் டாக்டர்
என்.எஸ்.மூர்த்தி - நடன ஆசிரியை ராகினி ராஜகோபால்



இதைவிட மாணவிகளை நிகழ்ச்சிகளுக்கு அழைத்துச் செல்லும் வேளையில் எல்லாம், எல்லோர் மீதும் இவர் கண்கள் இருக்கும். ஒரு மாணவி கூட இவர் பார்வையில் இருந்து நழுவவே முடியாது. அவர்களுக்கு உணவு, தண்ணீர் வழங்குவது முதல் எல்லாவற்றையுமே மிக கவனமாக ஒழுங்கு செய்வார்.

சில பிள்ளைகள், வசதி குறைந்தவர்களாக இருப்பார்கள். அவர்களுக்கு இலவசமாகவே நடனம் சொல்லிக் கொடுப்பதுடன், பிள்ளைகளின் கல்விக்கு இடைஞ்சல் விளைவிக்காத வகையில் நேரங்களை மாற்றி அமைத்து வசதி செய்து கொடுத்து, சேவையே நோக்கமாகச் செயற்பட்டு வருபவர் ராகினி ராஜகோபால்.

நடனம் பழக்க ஆரம்பித்தவுடனேயே வெளிநாடுகளில் எப்போது அரங்கேற்றம் என்று அங்கலாய்க்கும் பெற்றோருக்கு மிக நிதானமாக எப்போது முழுநிறைவு காண்கிறார்களோ அப்போதே அரங்கேற்றம் என்பதை ஆணித்தரமாக கூறிவிடும் வழக்கம் இவருடையது. இவரிடம் அரங்கேற்றம் கண்டவர்கள் அனைவருமே நிறைகுடமாக விளங்குவதே இதற்கு காரணமாகும்.

இந்தியாவில் - இலங்கையில் பயின்ற இவர் இலங்கையிலும் இங்கிலாந்திலும் அரச பாடசாலையில் நடன ஆசிரியராக பணியாற்றி வருவதே இவரின் நடனத் திறமைக்குச் சான்றாகும்.

எனது சர்வதேச அகதிகள் நிறுவனத்தின் விருது, 'தமிழினி மஞ்சரி' விருது என்பவற்றை இவர் பெற்றிருக்கின்றார்.

இலங்கையில் ஒரே ஒரு தடவை அகில இலங்கை ரீதியிலே பரதநாட்டியப் போட்டியை 1974ல் நடாத்தியவன் என்ற முறையில், ராகினி ராஜகோபாலின் நாட்டியத் திறன் பற்றிய எழுதும் அருகதை எனக்கு உண்டென்று எண்ணுகிறேன்.

30 ஆண்டு நிறைவு பெறும் அவரை வாழ்த்துகிறேன். ●



# மனைவி அமைவதெல்லாம்...



- டாக்டர் ஆர்.தியாகராஜன்



இலண்டன் மாநகரின் முன்னணி நடன ஆசிரியையும், எனது அண்ணாவின் துணைவியுமான திருமதி ராகினி ராஜகோபால் அவர்கள் லண்டனில் நடத்தி வரும் ''நாட்டியாலயா நடனப் பள்ளி'' யின் 30வது ஆண்டு விழா சிறப்பாக நடைபெறவும் மேன்மேலும் வளர்ச்சி பெறவும் பிரார்த்திக்கிறேன்.

அண்ணாவோடு நான் பத்தாண்டுகள் தொடர்பு கொண்டுள்ளேன். இந்தப் பத்தாண்டுகளில் இவர்களின் அன்பும், நட்பும், விருந்தோம்பலும் என்னை பிரமிக்கவைக்கிறது.

'' ஊனை வருத்திடு நோய்
வரும்போதினில்
உற்ற மருந்து சொல்வான்- நெஞ்சம்
ஈனக் கவலைக ளெய்திடும் போதில்
இதஞ் சொல்லி மாற்றிடுவான்:
பிழைக்கும் வழி சொல்ல
வேண்டுமென் றாலொரு
பேச்சினிலே சொல்லுவான்;
உழைக்கும் வழியுரைப்பான்;
மழைக்குக் குடை பசிநேரத்
துணைவென்றன்
வாழ்வினுக் கெங்கள் (க) அண்ணன்''

என பாரதியார் கண்ணனை தோழனாய்க் கொண்டு கவிதை படைத்த இந்த வரிகள் என் அண்ணாவை நினைவூட்டுகிறது என்பதில் ஐயமில்லை.

**''நல்ல ஒரு நண்பனைக் கண்டடைந்தவன் சிறந்த ஒரு புதையலைக் கண்டு பிடித்தவனுக்குச் சமமாகிறான்''** என்பது சீனப் பழமொழி. எனக்கும் ஓர் மாபெரும் புதையல் கிடைத்தது. -என் அண்ணா மற்றும் அவர் துணைவியார் மூலமாக.

விருந்தோம்பலுக்கும் இவர்கள் எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றனர்.

''இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்துஓம்பி
வேளாண்மை செய்தல் பொருட்டு'' எனும்

வள்ளுவர் வாய்மொழிக் கேற்ப மனைவியோடு இருந்து பொருளைச் சேர்த்து இல்வாழ்க்கை நடத்துவது எல்லாம், தன்னிடம் வந்த விருந்தினரை உபசரித்து அவர்களுக்கு உதவி செய்தற் பொருட்டாம் என்பது இவர்களுக்காகவே வள்ளுவர் எழுதி இருப்பாரோ எனத் தோன்றுகிறது.

பத்திரிக்கைத் துறையும், கலைத் துறையும் இணைந்து நம் தமிழ்ப் பெருமையையும் பண்பாட்டையும் நிமிர்ந்து நிற்கச் செய்கிறது என்பதில் ஐயமில்லை.

தன்பால் வந்தவரை
அன்பால் கவர்ந்து
பண்பால் உயர்த்
வெண்பால் கொண்ட உள்ளத்தோடு
உன்பால் ஈர்க்க
என்பால் உரைக்க சொல்வது?

ஒவ்வொரு மனிதனின் வெற்றிக்குபின்னால் ஒரு பெண் இருக்கிறாள் என்பது அண்ணாவின் வாழ்வில் முற்றிலும் உண்மையாகும்.

மனைவி அமைவதெல்லாம்
இறைவன் கொடுத்தவரம்
நல்லமனைவி, நல்ல குழந்தை
நல்ல குடும்பம், தெய்வீகம்

- இவை எல்லாமே அமையப்பெற்ற அண்ணாவின் குடும்பத்திற்கே என் வாழ்த்துகள்.

ஐரோப்பிய நகரங்களின் மேடைகளில் பிரகாசித்து வரும் நாட்டிய தாரகை திருமதி. ராகினி ராஜகோபாலின் பெயரை உயர்த்திக் கொண்டிருப்பது அவரது போதனா சக்தியைக் காட்டுகிறது. நாணலைப் போல் நெளிவு சுளிவுவோடு புதினமும் - நாட்டியாலயாவும் இணைந்து தமிழை வளர்க்கும் என்பதில் ஐயமில்லை.

பாசம், அன்பு, உறவு, நட்பு இவைகளிடமிருந்து கிடைக்கும் சக்தி, நமது ஆக்க சக்திக்கே என்றுணர்ந்து பிறருக்காகவும், சமுதாய வளர்ச்சிக்காகவும் பாடுபடும் எனது அண்ணாவின் துணைவியாரின் பணி சிறக்கவும், புகழ் பெருகவும் நெஞ்சாரப் பிராத்திக்கிறேன். ●



# எனது ரசனையை மெருகூட்டியவர்



- வைத்திலிங்கம் விஜயராசன்



தமிழர்களுடைய கலை. கலாச்சாரம், பண்பாடு ஆகியவைகளில் பரதக் கலையும் மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஈழத்தமிழர்கள் ஆகிய நாங்கள் நாட்டின் நிலைமை காரணமாக பெயர்ந்து வாழ்ந்தாலும் முக்கியமாக பிரித்தானியாவில் வாழும் ஈழத்தமிழர்கள் கலை கலாச்சாரம் தாய் மொழி இவைகளைப் பேணி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களில் திருமதி ராகினி ராஜகோபால் அவர்களுக்கு மிகவும் முக்கிய பங்கு உண்டு.

இவரின் நாட்டிய அரங்கேற்றங்களை நான் ஒரு சாதாரண பார்வையாளனாக பல மேடைகளில் பார்த்து இருக்கின்றேன். இவரது மாணவர்களின் பரத நாட்டியத்தை பார்த்து வியந்துள்ளேன். இவர் சிறு வயதில் தன்னுடன் ஒட்டிப் பிறந்த சகோதரியுடன் பரதம் கற்றவர். இருவராக அரங்கேறியவர். எங்கள் மக்களுக்கு என்ன சொல்ல வேண்டுமோ அல்லது எது போய்ச் சேர வேண்டுமோ அதை தனது மாணவர்களைக் கொண்டு நடனத்தில் வெளிக் கொண்டு வரக்கூடிய ஆசிரியை ராகினி ராஜகோபால் அவர்கள்.

புலம் பெயர்ந்து வாழும் எங்களுக்கு இங்கு நேரம் கிடைப்பது அரிது. இங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளில் இவரது மாணவர்களின் நாட்டிய நிகழ்ச்சிதான் அநேகமாக முக்கிய அம்சமாக அமையும். இதை இவர் சமூக நலனுக்காக சமர்ப்பிப்பது வழமை. சமூக நலனுக்கு வெளிநாடுகளில் வாழ்பவர்கள் பங்காற்றுவது கடினம். பல சிரமங்கள் மத்தியில் தனது புனித பரதத்தை கற்பிப்பதை ஒரு ஈழ தமிழ் மகள் செய்து கொண்டிருக்கிறாள் என்பதை நினைத்து மிகவும் பெருமைப்படுகின்றேன். எனது பள்ளிக்கூட பருவத்திலே இருந்து இவரது துணைவர், 'புதினம்' ஆசிரியரை நன்கு தெரியும். அப்படியிருந்தும் நெருங்கிப் பழகக் கூடிய வாய்ப்பு இருவரும் புலம் பெயர்ந்த பிறகுதான் கிடைத்தது.

ஆசிரியரின் எழுத்து வன்மையை 'ஈழநாடு', 'தினகரன்' பத்திரிகைகளிலும் 'கப்பலோட்டிய தமிழன்' 'ஆழிக்குமரன்' உள்ளிட்ட நூல்களிலும், இன்னும் அவரின் பல படைப்புக்களிலும் இருந்து அறிந்து எனது தமிழ் அறிவை வளர்க்க முயற்சித்துள்ளேன். எங்கள் ஈழத் தமிழ் எழுத்தாளர்கள் பட்டியலில் முக்கிய இடம் எங்கள் 'புதினம்' ஆசிரியருக்கு உண்டு.

தாய் மொழி தமிழுக்கும் பரதத்திற்கும் முக்கிய பங்கு வழங்கும் கலைத் தம்பதிகள் ராகினி - ராஜகோபால் அண்ணாவிற்கும் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள். தமிழக நாட்டிய ஆசிரியர்களுடன் போட்டி போட்டுத் தானும் சளைத்தவர் இல்லை என்பதை நிரூபித்துக் காட்டிக் கொண்டிருப்பவர் எங்கள் 'நாட்டியாலயா' ராகினி ராஜகோபால்.

இந்த மாபெரும் கலைஞரின் மாணவிகளின் தமிழீழ விடுதலை உணர்வு நடனங்கள் பல அரங்குகளில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் கலாச்சாரத்தையும், பரத நாட்டியத்தையும் புலம் பெயர் நாடுகளில் வளர்க்க வேண்டும் என்பது 'நாட்டியாலயா'வின் ஆதங்கம். எதிர்காலத் தமிழ் சந்ததியினர் பரதம் பயில்வதற்கு வித்துப் போட்டவர் இவர். ஒருவர் வாழும்போது கௌரவிக்கப்பட வேண்டும்.

ஈழத்தமிழராகிய நாங்கள் இதைச் செய்வது குறைவு. ஆதலால் இந்த ஈழத்தின் மயில் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து குறையொன்றும் இல்லாமல் நீடூழி வாழ்வதற்கு, இவருக்கு நீண்ட ஆயுளைக் கொடுக்க வேண்டும் என்று இறைவனை வேண்டுவதோடு, மன நிறைவோடு வாழ்த்துகின்றேன். ●

# ராகினியின் ஆளுமை

- வைத்தியக் கலாநிதி எஸ். நவரத்தினம்





கர்நாடக சங்கீதம், பரதநாட்டியம் என்று பல்வேறு கலைத்துறைகளில் பாண்டித்தியம் பெற்று, ஆசிரியர்களாகப் பலர் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் அனைவருமே சிறந்த ஆசிரியர்களாக விளங்குவதில்லை. குழந்தைகளுக்குக் கலையைச் சொல்லிக் கொடுப்பதிலும், அவர்களை நல்ல முறையில் மேடை நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளச் செய்வதிலும், மக்கள் முன் தமது முழுத்திறமையையும் காட்டி வெற்றி பெறுவதற்கு ஒரு சிலரால் தான் முடிகிறது. அதற்கு என்று ஓர் ஆளுமை வேண்டும்.

இந்த வகையில் லண்டனில் 'நாட்டியாலயா' நடனப் பள்ளியின் அதிபர் நடன ஆசிரியை ராகினி ராஜகோபால் குறிப்பிடக் கூடிய ஒருவர்.

சுமார் 17 ஆண்டுகளுக்கு மேலாக அவரையும், அவர் கணவரையும் எனக்கு நன்கு தெரியும். அவரது பல நடன அரங்கேற்றங்களையும் பார்த்திருக்கின்றேன். அவரது மாணவியும், மகளுமான ஷர்மினியின் தனி நடன நிகழ்ச்சி எமது அமைப்பான SCOT ஏற்பாட்டில் நடைபெற்றபோது, தாயாரின் கடுமையான பயிற்சியை அவரது நடனத்தில் கண்டேன்.

இன்று ராகினி நாட்டியத்துறையில், மிகப் பெரும் வளர்ச்சியை லண்டனில் கண்டிருக்கிறார். நூற்றுக்கு மேலான பிள்ளைகள் அவரது 'நாட்டியாலயா' நிறுவனத்தில் படிக்கிறார்கள் என்றால் இலகுவான விஷயமல்ல. அவர் இந்த நாட்டுக்கு வந்தபோது நடன ஆசிரியை என்று யாருக்கும் தெரியாது. ஒரு வருடம் சும்மா இருந்திருக்கிறார். அது அவருக்கு எவ்வளவு வேதனையை அளித்திருக்கும். ஒரு திறமையான நடன ஆசிரியை, அந்தக் கலையுடன் தொடர்பில்லாமல் இருப்பது முடியாத காரியம். 'ஏன்தான் வந்தோம்!' என்று கூட இருந்திருக்கும்.

1986, 87ல் ஒன்று, இரண்டு, மூன்று என்று பிள்ளைகளைச் சேர்த்துப் படிப்படியாக நூறு பிள்ளைகளைக் கொண்ட நிறுவனமாக இப்போது திகழ்கின்றது. தாயகத்தில் பத்து வருடத்துக்கு மேல், இங்கு இருபது வருடங்களில் இத்தனை பெரிய வளர்ச்சியைக் கண்டிருக்கிறது. பெற்றோர்களுக்கு ராகினி மீது ஏற்பட்டுள்ள நம்பிக்கையும் மற்றொரு காரணம்.

கடினமாக உழைப்பவர் ராகினி. இருந்தபடி நடனம் பயிற்றுவிப்பவரல்ல. அல்லது யாரையாவது ஆடச் சொல்லி விளக்குபவரல்ல. தானே ஆடிக்காட்டி, பிள்ளைகளை ஆடச் செய்வார்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் ராகினிக்கு கடுமையான Back pain ஏற்பட்டு, ஒரு கட்டத்தில் தரையில் அமர்ந்து நடனம் பழக்க முடியாத நிலையில், அவரது கணவர் ராஜகோபால் என்னைச் சந்தித்து தனது மனைவியின் சுகவீனத்தைச் கூறினார். நடனம் கற்பிப்பவர்கள், தரையில் அமர்ந்து, தட்டுக்கழியில் தட்டித்தான் பிள்ளைகளுக்கு படிப்பிப்பார்கள். சங்கீதமும் மற்றும் கலைப்பாடங்களும் இந்த முறையில்தான் நடக்கும்.

"அரங்கேற்றம் ஒன்று வருகிறது டாக்டர்!. ராகினிக்குச் சரியாகக் கீழே அமர்ந்து படிப்பிக்க முடியவில்லை" என்று ராஜகோபால் கவலையோடு கூறினார்.

குறுகிய காலத்தில் அவரின் சுகவீனத்தை குணப்படுத்துவதற்கு ஓரளவு உதவினேன் என்று பெருமையாகக் கூறவில்லை. அந்த அரங்கேற்றத்தில் எனது ஆலோசனைகளை ஏற்று, மூன்று மணி நேரத்துக்கு மேலாக அமர்ந்து, வெற்றிகரமாக முடித்தார்.

தான் எடுத்த காரியத்தை உயிர் போனாலும் பரவாயில்லை, முடித்தே தீருவேன் என்ற ராகினியின் பிடிவாதமும், தன்னம்பிக்கையும் பாராட்டப்பட வேண்டியது.

ராகினியிடம் பாராட்டப்பட வேண்டிய ஒரு விஷயத்தை சொல்லி விடுகிறேன். லண்டனில் நடக்கும் சங்கீத, நடன, நாடக நிகழ்ச்சிகளில் கூடுதலானவற்றில் தனது பங்களிப்பை, ஆதரவை வழங்கும் நடனக் கலைஞர்களில் ஒரே ஒருவர் இவராகத்தான் இருக்க முடியும். அதிகமான கலைஞர்கள் தாங்கள் கலந்து கொள்கின்ற நிகழ்ச்சிகளுக்கு மட்டும் வந்து விட்டுப் போய்விடுவார்கள்.

'நாட்டியாலயா' நிறுவனத்தின் 30 ஆண்டுகள் நிறைவு- பிரமாண்டமான மண்டபத்தில் கொண்டாடுவது எல்லாம் பரத நாட்டியத்துக்கு கொடுக்கப்படும் மதிப்பு. வாழ்க பரதக்கலை! அதனை போற்றி வளர்க்கும் ராகினி ராஜகோபால் பணி வெல்க!. ●



# பரதக்கலை வித்தகர்

- எஸ்.கே.ராஜென் (ஒலிபரப்பாளர்)





**மொ**ழிகள் தோன்றும் முன்பே ஆடல்கலை தோற்றம் பெற்றது. மிகவும் பழமை வாய்ந்ததாக, காலத்தால் மிக முந்தியதாக விளங்கும் ஆடல் கலை, அவ்வப்பொழுது புனரமைக்கப்பட்டு, புத்தொளி பெற்று இன்றும், 21ம் நூற்றாண்டு காலகட்டத்திலும் எழில்மிகு கலைவடிவமாக உலகெங்கும் வியாபித்திருக்கின்றது.

ஒவ்வொரு நாட்டின் சமய, சமூக, பண்பாட்டு நிலைகளுக்கு ஏற்ப நடனக் கலை வளர்ச்சி பெற்று வருகின்றது.

அழகியலும், ஆன்மீகமும் ஒன்றிணைந்த கலைவடிவம்.

இக்கலை சமய நிழலிலேயே வளர்ச்சி கண்டுள்ளது.

சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளாகிய, சிவன், சக்தியாகிய பார்வதி, பிள்ளைகளாகிய விநாயகர், முருகன், பார்வதி தேவி சகோதரரான திருமால் ஆகியோர் நடனக் கலை மீது மிகுந்த ஈடுபாடுடையவர்களாக விளங்கியதை நாம் கவனத்தில் கொள்ளலாம்.

ஆயகலைகள் 64 என்று கவிச்சக் கரவர்த்தி கம்பர் கூறியதில் இசையும், நடனமும் முதன்மையானவை.

கலையறிவு என்பது மக்களுக்கு மனிதப் பண்பை வளர்க்க உதவுவது. மனிதம் - மனிதாபிமானம் - மனிதப் பண்பியல் என்றெல்லாம் இன்று நாளாந்தம் பேசப்படுகின்றது. இதற்கு ஆதார சுருதியாக விளங்கக் கூடியது ஆடல் கலை என்பது, வரலாற்று ரீதியாக உணர்த்தப்பட்டு வருகின்றது.

உடல் ஆரோக்கியம், மன அமைதி, மனதை ஒரு நிலைப்படுத்துதல் போன்ற வற்றிற்கு ஆடல் கலை அருமையான ஔடதமாக விளங்குகின்றது.

கீழைத்தேசத்தில் தோற்றம் பெற்ற ஒரு கலைவடிவம், மேலைத் தேசத் தவர்களையும் இன்றைய விஞ் ஞானயுகத்தில் கவர்ந்திழுக்கிறது என்றால் - அது ஆடல் கலையாகிய பரதக் கலை என்றே கூறமுடியும்.

இவ்வாறு பழமை வாய்ந்த பரதக்கலையோடு தன்னை ஈடுபடுத்திக் கொண்டவரான பரதக் கலைஞர் ராகினி ராஜகோபால் அவர்கள், தாயகம் முதல் பிரித்தானியா வரை தனது பரதக்கலை பணியைப் புரிந்து வருகின்றார்.

நூற்றுக்கணக்கான மாணவ-மாணவி களின் ஆசிரியையாக விளங்கும் இவர் தனது மாணவிகளை அரங்கேற்றி




அவர்கள் தொடர்ந்தும் பரதக்கலையில் ஈடுபட்டு வருவதற்கு வழிவகுத்து வருகின்றார்.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக ராகினி ராஜகோபால் அவர்கள், பரதக்கலைக்கு ஆற்றிய சேவையின் பிரதிபலிப்பாக ஒரு பரத யாகமே இன்று நடைபெறுகின்றது.

இதில், 'நாட்டியாலயா' நடனக் கல்லூரி பெருமை பெறுகின்றது. ராகினி ராஜகோபால் அவர்களின் மாணவ மணிகள் மதிப்புப் பெறுகின்றார்கள்.

பரதக் கலைஞர் 'நாட்டியக் கலைமாமணி' ராகினி ராஜகோபால் அவர்கள் பாராட்டுப் பெறுகின்றார்.

கலைத்துறையில் ஈடுபடும் ஈழத்துப் பெண்களில் பெரும்பாலானவர்கள், குடும்ப பந்தம் ஏற்படுகின்றபொழுது கலையுலகிலிருந்து விடுபட்டு விலகிச் சென்றுவிடுகின்றார்கள். விதிவிலக்காக ஒரு சில பெண்மணிகள் கலைத்துறையில் நின்று நிலைத்து சாதனைபுரிகிறார்கள். அதிலே, 'நாட்டியக்கலைமாமணி' ராகினி ராஜகோபால் அவர்கள், ஒரு ''கலைமாணிக்கம்'' என்றே கூறத் தோன்றுகின்றது.

தாயகத்தில் மானிப்பாயில் கலை மணம் பரப்பப் புறப்பட்டவர். பிரித்தானியாவில் லண்டன் மாநகரில் 'நாட்டியாலயா' நடனப் பள்ளியை ஆரம்பித்து அதன் மூலமாக தன்னுடைய நாட்டியக் கலைப்பணியை கலையுலகிற்கு வழங்கி வருகின்றார்.



உலகெங்கும் பரவி உயர்ந்து விளங்கும் உன்னத கலை வடிவமான பரதக் கலையில் உள்ள நுணுக்கங்களையெல்லாம் அறிந்து அவற்றை தனது மாணவச் செல்வங்களுக்கு பயிற்றுவித்து, அந்த இளங்கலைமணிகளை அரங்கங்களில் ஆடவைத்து, அவர்களை நெறிப்படுத்தி நிறைவான கலைஞராக வளர்த்தெடுக்கும் ராகினி ராஜகோபால் அவர்களின் பாங்கு உண்மையிலேயே மிகவும் மெச்சத்தக்கது.

பரதக்கலைக்கு, ஈழத்துக் கலைத்துறைக்கு, புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுக்கு கிடைத்திருக்கும் ஒரு கலைச் செல்வம் ''நாட்டியக் கலைமணி'' ராகினி ராஜகோபால் அவர்கள்.

இந்த நாட்டியக் கலைஞரின் தொடர்ச்சியான கலைப்பணிக்கு இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.

தனது துணைவியாரின் கலைப்பணிக்கு பக்கத்துணையாக, அவரின் எல்லாச் செயல்படுகளுக்கும் உதவி, ஒத்தாசையையாய் விளங்கி வரும் 'புதினம்' ஆசிரியர் திரு.ஈ.கே. ராஜகோபால் அவர்கள் போற்றுதலுக்குரியவர். உண்மையில் அவரும் இந்த சந்தர்ப்பத்திலே பாராட்டுதலுக்கு உரியவராகுவது மிக மிகப் பொருத்தமானதாகும். ●



# அந்தநாள் ஞாபகம்



- எரோகினி சிவபாலன் (நண்பி)

*ராகினியும் நானும் ஆறுவயதிலிருந்து பதினாறு வயது வரை ஒரே வகுப்பிலே மானிப்பாய் மகளிர் கல்லூரியில் கல்வி பயின்றது மட்டுமின்றி இருவருமே தாய்வழி உறவினர்கள் கூட. இந்த ஆடற்கலை ராகினியும் பாடற்கலை ரோகினியும் இருவருமே 'கல்லூரி ஒழுங்கை, மானிப்பாய்' என்ற ஒரே முகவரியைக் கொண்டிருந்து, கொண்டாடி மகிழ்ந்தோம்.*

**வா**னம் பாடிகளென நாம் கானம் பாடிக்களித்து மகிழ்ந்து வாழ்ந்த அந்த நாட்கள் நெஞ்சிலே ஞாபகம் வந்ததே நண்பியே! இன்று நாள் அன்று போல் இன்பமாய் மலரவே என் வாழ்த்துக்கள் நண்பியே! தொல்லை இன்றித் துள்ளித் திரிந்த அந்தப் பள்ளிப் பிராயத்திலிருந்து இன்று நீவிர் வெகு நல்லவளாய், ஓர் வல்லவளாய், பெரும் நாட்டியத் தாரகையாய், நாடு போற்றும் நாட்டியப் பணிக்கெனவே தன் உடல், பொருள் ஆவியை முழுமையாக அர்ப்பணம் செய்த நல்லாசிரியராக, மூன்று சகாப்தங்களைக் கடந்து இன்று வெற்றி நடை போடவரும் இந்தக் காலவரையறை வரை உன்னை நன்கறிவேன் நான். காலம் கடுகதியெனப் பறப்பது பலரும் அறிந்ததே. உன்னை நீ அறிந்த காலம் முதல், என்னை நீ உணர்வாய். ''ஆறிலிருந்து அறுபது வரை'' உன் சகவாசம் என் கைவசம் என்று கூறும் அந்தக் கணம் கூட காலம் பறந்து செல்லும் வேகத்தில் வெகு தூரத்தில் இல்லை. உற்ற தோழிகளாக, உறுதுணையான நண்பர்களாக பஸ்பர அன்போடும், அன்னியோன்யத்துடனும் கழித்த அப்பசுமையான நாட்களையும் நினைவுகளையும் நாம் இருவருமே நன்கறிவோம். அதனை இன்று வரை நெஞ்சகத்தே சுகமாகச் சுமக்கின்றோம்.

''செயற்கரிய யாவுள நட்பின் - அது போல்
வினைக்கரிய யாவுள காப்பு''

முப்பது ஆண்டுகள் முழுமையாக பணிபுரிந்து நல்ல தரமான மாணவர்கள் வரமாகப் பெற்று, அந்தச் சிஷ்யைகள் அனைவரையும், சீருடன் சிருஷ்டித்து, உருவாக்கி அனுபவத்தில் முதிர்ந்து கனிந்த ஆசிரியத் திலகம் என்ற மனநிறைவுடனும், பெருமிதத்துடனும், அந்த ஆனந்தப் பரவசத்தை, மனதின் பூரிப்பை இன்று உனது குடும்பம் வெகு மாட்சியுடன் விழாக்கோலம் பூண்டு நீவிர் வெகு விமரிசையாகக் கோலாகலமாகக் கொண்டாடி மகிழும் இவ்வேளையில், நறுமணம் சேர்ப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**பா**லர் பராயத்திலிருந்து இன்று வரை என்னோடு உறவாடி மகிழ்ந்த இம்மங்கையை நன்கறிவேன். இவள் அன்பை யான் அறிவேன். நற்பண்பை நன்குணர்வேன். அவளது அடக்க சுபாவத்தை மனதிலே படம் பிடித்தேன். ஆற்றலை அறிந்திருந்தேன். ஆவலோடும், ஆசையோடும் அனுவித்தேன். மெய் சிலிர்த்து மெச்சினேன். பெரியோரைக் கனம் பண்ணும் குணம் என்றும் அவள் மனம் தன்னில் அகலாத பண்பு. அச்சம், மடம், நாணம் பயிற்பென்பது அவள் அணிகலன்கள். அவை அவளுக்குரித்தான நால்வகைச் சீர்வரிசை.

''தகுதற் பொருட்டன்று நட்டல் - மிகுதிக்க
மேற் சென்று இடித்தல் பொருட்டு''

வள்ளுவரின் வாசகத்தை நன்கறிந்த ராகினியும், அவளுக்கே உரித்தான தன் தனிப்பாணியில் ஓர் கனிந்த பார்வையுடன் கூடிய அவளது மெளனம் பல அர்த்தங்களுடன் எனக்குப் பதில் உரைக்கும். தனது அன்பு என்ற பாணத்தால் எனக்கென்று என்னையணைத்து ஆக்கிரமிக்கும் ஆற்றலுடையவள்.

ஒரு காலத்திலே நம் நாடு இலங்கை எப்படி விளங்கித் துலங்கியது என்பது உலகறிந்த உண்மை. Pearl of Indian Ocean என்றும் granery of the East எனவும் Paradise Island of the world என்றும் பொன் விளையும் பூமியாயும் நவரத்தின நாடாகவும் எத்தனையே சிறப்புப் பெயர்களைக் கொண்டு விமர்சிக்கப்டும் இலங்கைத் தீவின் மணிமகுடமெனத் திகழும்



யாழ்ப்பாடி பரிசு பெற்ற யாழ்ப்பாண நகரில் மாண்புமிகு மானிப்பாய் என்ற கிராமம் நெற்றித் திலகமென நிலவியது. மேதைகளும், கோதைகளும் தனவந்தர்களும் பெரும் வர்த்தகர்களும் ஏராளமாய் மலிந்து வாழ்ந்த இக்கிராமம் நாகரீகத்திற்கு பெயர் போனது. கறுவாத் தோட்டத்தை ஒப்புவமையாகக் கொண்டு கொழும்பு ''செவிண்'' என்று கூறுவர். மகாத்மா காந்தியின் புனித பாதம் பட்ட பூமியாய் மானிப்பாய் விளங்கியது. சேர். பொன். இராமநாதனும் அவரது வழித்தோன்றல்களும் வாழ்ந்த இடம், சேர்.பி.இராமநாதனின் முதல் மனைவி செல்லாச்சி அம்மாள் மானிப்பாயை பிறப்பிமாகக் கொண்டவர். இங்கு ஆன்மீகம் தலைசிறந்து தலைத்தோங்கியது. தந்தை கலை அரசு சொர்ணலிங்கத்தின் சொந்தவூர். கலை வளர்த்து அவர் வாழ்ந்து மடிந்த இடம். நவாலி மானிப்பாய் சோமசுந்தரப் புலவரும் அக்கிராமத்திற்குப் பெருமை சேர்த்தார்.வீரசிங்ம் அவர்களும் சுவாமி விபுலானந்த அடிகளும் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபர்களாகக் கடமையாற்றினார்கள். சிவஞான போதம் என்ற சைவ சித்தாந்த நூலை எழுதி வெளியிட்ட வித்துவான் க.ந.வேலன் அவர்களும் மானிப்பாயில் வாழ்ந்து சைவத்தையும் நற்றமிழ் மொழியையும் வளர்த்து அரும்பாடு பட்டார். இயல், இசை, வாரிதி யாழ். பிரம்ம ஸ்ரீ. வீரமணி ஐயர் அவர்கள் சங்கீத நடன ஆசிரியராக நீண்ட காலம் மானிப்பாய் மகளிர் மற்றும் இந்தக் கல்லூரியில் கற்றுத் தந்தார். இப்படியான மாமேதைகளால் உருவாக்கப்பட்டு அனுக்கிரகமும் ஆசீர்வாதமும் பெற்றவர்களே மானிப்பாய் வாழ்ந்திருக்கிறார்கள். இந்த வகையில் ராகினி, வினோதினியின் பரதநாட்டிய நிகழ்வுகள் காணாத மேடைகளும் விழாக்களும் அங்கு இருந்ததில்லை. ''காக்கைச் சிறகினிலே நந்தலாலா'' என்று அவர்கள் தமது பிஞ்சுப்பாதம் தூக்கி ஆடத் தொடங்கினால், அதை நோக்கி இருந்த ரசிகர் கூட்டத்துக் கால்களும் தாளமிட்டு அவர்கள் மனங்களும் ''தந்தனாத்தாளம் போட்டு' ஓர் நந்தவனத்து மயில்கள் போல மகிழ்ந்தாடும். இவரது சிற்றன்னை மகளான கிருசாந்தி. ஒரு பிரல நடன கலாஜோதி.

இவரது தாயார் மங்கர்க்யரசியும் எவரையும் ஏறெடுத்துப் பார்க்கக் கூச்ச சுபாவம் உடையவர். திரு அரசரத்தினம் அவர்கள் இவளது தந்தையார். மகாலட்சுமியான இவர்கள் பேத்தியார் ராசம்மாவையும் நன்கறிந்தேன். சுருண்ட கேசமும் பொன்நிற மேனியும் அழகான முக வசகீரமும் திடகாத்திரமான உடலமைப்பையும் கொண்டவர் இந்த அம்மையார். ஓர் இயற்கை அழகி இவளது மூத்த சகோதரி சந்திரா. சாந்த சொரூபமாக இன்றும் எனக்கு அவரை நினைவுண்டு. சந்திராவின் கணவர் ஈழத்தின் முதல் திரைப்பட படைப்பான நிர்மலாவின் கதாநாயகன். சந்திராவின் நிஜ நாயகன். இவரும் ராகினி - விநோதினி முன்னேற்றத்திற்கு உதவியவர். இவளது பெற்றோரின் தியாகமும் கனாவும், விடாமுயற்சியும் முதல் காரணிகள். இவர்களே இவள் வாழ்வின் அத்திவாரமும் இரு தூண்களுமாவார். திருமணத்திற்குப் பின் இவளது கணவர் ராஜகோபாலையே சாரும்.

ராஜகோபால் தம்பதியினரது ஏக புத்திரியும் சிரேஷ்ட புத்திரியுமான ஷர்மினியும் நாட்டியத்தில் பிரபலயமாகி மக்கள் மத்தியில் மற்றொரு ஆசிரியையாக நீங்காவிடம் பெற்றுள்ளார். ஷர்மினியின் கணவர் கண்ணன். ராஜகோபால் போலவே அவரது மருமகனும். ஏகபுத்திரன் ஷியாமும் பட்டம் பெற்றவன்.

**ரா**கினியும் நானும் ஆறுவயதிலிருந்து பதினாறு வயது வரை ஒரே வகுப்பிலே மானிப்பாய் மகளிர் கல்லூரியில் கல்வி பயின்றது மட்டுமின்றி, இருவருமே தாய்வழி உறவினர்கள் கூட. இந்த ஆடற்கலை ராகினியும் பாடற்கலை ரோகினியும் இருவருமே 'கல்லூரி ஒழுங்கை, மானிப்பாய்' என்ற ஒரே முகவரியைக் கொண்டிருந்து, கொண்டாடி மகிழ்ந்தோம்.

இதேபோல அவர்கள் புலம் பெயர்ந்து

இங்கிலாந்து வந்த பின்னர் தாம் லண்டனில் முதல் சென்ற அரங்கேற்றத்தில் என்னை ஓர் பாடகியாகச் சந்தித்த பெருமை பற்றி ராகினி என்னிடம் நினைவு படுத்துவாள். ராகினியின் பெற்றோர் என்னிடம் பிரியமாயும் எனது பெற்றோர் அவளுடன் வெகு பட்சத்துடனும் எதுவித பாரபட்சமின்றிப் பழகிக் கொள்வர். சுருக்கமான எனது சிறிய பெயர் ரோகினியை லண்டனில் ஆங்கிலேயர் எனது அலுவலகத்தில் 'ரோ' என்று அழைப்பாராயினும், அன்று இலங்கையில் இருந்து இன்று இங்கிலாந்து வரை எனது பெயரைச் சுருக்கி நறுக்கி அன்போடு இங்கிதமாக 'ரோகி' என்று கூப்பிட்ட ஒரே தமிழ்ப் பெண்மணி நண்பி ராகினியே. ஒரு காலத்தில் என் கானத்தின் மீது ரசனையும், காதலும் கொண்டவர்களில் ராகினியும் ஒருத்தி. ஒலி நாடாக்களையும் கருவிகளையும் எமது வீட்டிற்குக் காவி வந்து பாடல்களை ஒலிப்பதிவு செய்து அதனைத் தனது இல்லத்திலே உரத்த ஒலி அளவிலே இயக்கிக் கேட்டு இன்புற்றவள் என் அன்புத் தோழி. ராகினியின் தந்தையார் நல்ல உள்ளம் கொண்டவொரு உத்தம மனிதர். அவருடைய சிபாரிசுடனும், அறிமுகத்துடனும் இளவாலைத் திருக்குடும்பக் கன்னியர் மடக் கல்லூரியில் (Holy family Convent) பணியாற்றி மனம் நிறைந்த ஆனந்தத்தையும் அவரூடாகப் பெற்றிருந்தேன். அன்னாரது நினைவுகள் என்றும் என் நெஞ்சிலே நிலைத்திருக்கும். ராகினி தனது நாட்டியப் படிப்பைத் தொடர்வதற்காக அடையார் சென்னையில் உள்ள லக்ஷ்மணனின் கலாக்ஷேத்திராக் கல்லூரிக்குச் செல்லும்போது அவளை வழியனுப்பி வைப்பதற்காக அவளது பெற்றோருடன் பலாலி விமான நிலையத்திற்கு நானும் சென்றிருந்தேன். விமானம் இலேசாகப் பறந்து நீலவானிலே மறைந்தது. ஆனால் என் மனமோ கனத்தது.

''பழகிக் களித்த தோழர்களே பறந்து செல்கின்றோம்''

என்ற பாடல் வரிகள் எங்கிருந்தோ வந்து என் செவிகளில் விழுவது போல் ஓர் பிரம்மை. தனது பட்டப் படிப்பைத் திறம்பட முடித்துக் கொண்டும் மீண்டும் தாயகம் திரும்பிய ராகினிக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. இனிதே நிறைவேறியது. அவர்களது திருமண விருந்து உபசார வைபவத்தின் போது என்னைப் பாடும் படி கேட்டனர் மணப்பெண்ணும் மாப்பிள்ளையும். அந்த வேண்டுதலின் பிரகாரம் 'அதிசய ராகம்' என்ற திரைப்பட பாடலைப் பாடிய நினைவு பல வருடங்கள் பறந்தும் பசுமரத்தாணி போல் இன்னமும் மனதிலே பதிந்துள்ளது. நான் திருமணம் செய்து லண்டன் வந்து சேர்ந்து விட்டேன். எனது பிரிவால் வாடிய எனது தாயாருக்கு உறுதுணையாகத் தனது



ராகினியின் மகள் ஷர்மினியும், மருமகன் கண்ணனும்

குழந்தை கணவருடன் எனது வீட்டிலே குடியேறித் தனிமையில் இருந்த என் தாயாருடன் சில காலம் வசித்து வாழ்க்கை புரிந்தனர். எனது தாயானவளும் ராகினியில் ரோகினியைக் கண்டு மனம் ஆறுதல் கொண்டாள். சில காலம் செல்ல நாட்டிலே போர் நிலை எய்தியது. நிம்மதி குன்றியது. இந்தப் பதட்ட சூழ்நிலையில் பரிதவித்தனர் மக்கள். ராகினியும் அரசியல் தஞ்சம் கோரி ஐக்கிய ராட்சியம் வந்த போது பங்குப்பட்டுவந்த இவர்களைத் தடுத்து மறித்து முகாமில் இட்டனர். அந்த வேளையில் தொலைபேசியில் ராகினி என்னுடன் தொடர்பு கொண்டார்.

தன்னை வந்து சந்திக்க முடியுமா என்று வேண்டுதல் விடுத்தார். அதன் பிரகாரம் எனது கணவருடன் சென்று அவர்களைச் சந்தித்து ஆறுதல் கூறி தேறுதல் செய்தேன்.

நட்பிற்கு இலக்கணமாய் அமைந்த என் இனிய தோழி என்னை மகிழ்விக்கத் தனது பங்களிப்புகள் எத்தனையோ செய்துள்ளாள். எனது இல்லத்தில், ஒரு இனிதான விழாவின் போது, நாம் எவ்விதமான முன் எச்சரிக்கை கொடுத்துக் கோரிக்கை விடாதபோதும், தனது மகளை பாம்பு நடனம் ஆடவைத்து அங்கு வந்திருந்த அனைவரையும் வியக்க வைத்தாள். பார்க்க மிகவும் பரவசமாய் இருந்தது. இதைவிட எனது மகன் தன் இளமைப் பராயத்தில் பரத நாட்டியம் பயின்று ''குமர சம்பவம்'' என்ற நாட்டிய நாடகத்தில் முருகப் பெருமான் போல ஆடுவதற்கு என் வீட்டிற்கு வந்து அவனை அலங்கரித்து, ஒப்னை செய்து அதன் பின் அவ்விழாவிற்கும் கணவருடன் சமூகம் தந்து விழாவைச் சிறப்பித்தனர். தற்போது 'தீபம்' தொலைக்காட்சி சின்னத்திரைத் தொடர் நாடகத்தில் 'சித்ரா'வின் தாயார் விஜயா என்ற கதாபாத்திரமேற்று நான் நடிப்பதைப் பார்த்து தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு தனது மனப்பூர்வமான பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் கூறி, நண்பி எனும் வகையில் பெருமிதம் அடைவதைக் கூறிய போது அவளது மனதின் அந்த ஆனந்த நர்த்தனத்தைப் பரிபூரணமாய் மானசீகமாய் உணர்ந்து, அதை மனக் கண்களால் கண்டு கொண்டேன்.

*அவள் வாழ்க! அவள் கலை வாழ்க!*

*நமது நட்பின் நிலை வாழ்க!* ●



# நடனக்கலையில் மறுமலர்ச்சி



- -விஜயலட்சுமி ஆறுமுகசாமி (சங்கீத ஆசிரியை)



**மு**ப்பதாவது ஆண்டு விழாக்காணும் 'நாட்டியாலயா'வின் 'பரதசங்கமம்' நிகழ்ச்சி லண்டனில் பிரம்மாண்டமான அரங்கில் கோலாகலமாக 19-07-2008ல் நடைபெற இருப்பதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி.

சென்ற முப்பது ஆண்டுகளாக 'நாட்டியாலயா' நடனக் கல்லூரியை திறம்பட நடத்தி வரும் பிரபல கலைஞர் ஆசிரியை திருமதி ராகினி ராஜகோபாலின் சேவையை மனதாரப் பாராட்டுகின்றேன். இவரிடம் நடனம் பயின்று அரங்கேற்றம் கண்ட பலர் உலகெங்கும் சிறந்த நடனக் கலைஞர்களாகத் திகழ்ந்து வருகிறார்கள். இது இவரின் பெருமையை எடுத்துக்காட்டுகின்றது.

இருபத்தெட்டு வருடங்களுக்கு முன் நானும், திருமதி ராகினி ராஜகோபாலும் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஒரே காலத்தில் விசேட பயிற்சி பெற்றோம். இவருடைய ஆற்றல், தற்பெருமை இல்லாமல் எல்லோரிடமும் அன்பாகவும், பண்பாகவும், கலகலப்பாகவும் பழகும் தன்மை - எல்லாம் என்னை மிகவும் கவர்ந்தன. அன்று முதல் இன்று வரை நல்ல நண்பர்களாய்ப் பழகி வருகின்றோம்.

.

**ல**ண்டனில் நடைபெறும் பெரிய விழாக்களிலெல்லாம் 'நாட்டியாலயா'வின் நடன நிகழ்ச்சி முக்கிய இடம் பெறுவதைக் காணலாம். இதில் திருமதி ராகினி ராஜகோபால் புதிது புதிதாக நல்ல பல அம்சங்களைப் புகுத்தி நடனக் கலையில் ஓர் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி வருகிறார். புதுமை புகுத்தப்படாவிட்டால், அக்கலை மக்களை விட்டு அகன்றுவிடும். கூடுமானவரை பிறமொழிப் பாடல்களுக்கு நடனமாடுவதைத் தவிர்த்து, தாய் மொழிப்



ராகினி - ஷர்மினியுடன் பரதக் குழந்தைகள்

பாடல்களுக்கு முன்னுரிமை கொடுத்து வருகின்றார். நம் நாட்டின் நிலை அறிந்து மக்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்கும் வகையில் நிகழ்ச்சிகளை வழங்கி வருகின்றார். இதன்மூலம் நம்மக்களிடையே பெருமதிப்பு பெற்றுள்ளார்.

இவரைப் பாராட்டும் வேளையில் இவரது வெற்றிக்குப் பின்னால் இருக்கும் இவரது கணவர் ராஜகோபாலும் பாராட்டுக்குரியவர். நாட்டியாலயாவின் 'பரதசங்கமம்' வெற்றி பெறவும் ராகினியின் சேவை சிறப்பாகத் தொடரவும் என் இதயபூர்வமான வாழ்த்துக்கள். ●



# அற்புதமான நடன விருந்து



- - சி.செல்வராஜா LLB, LLM (London)
முன்னாள் மாநகர உறுப்பினர், பாராளுமன்ற வேட்பாளர்





'தே மதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தி வேண்டும்' என்ற பாரதியின் கனவை நனவாக்கும் வகையில் புலம் பெயர்ந்த மண்ணில் நமது தமிழ்க் கலைஞர்கள் நாடகம், நாட்டியம், சங்கீதம் என்று பல்வகைக் கலைத்துறைகளுக்கும் இங்கிலாந்தின் மேடைகளை எழில் பிடித்து வருகின்றனர். இந்த வகையில் தங்கை ராகினி ராஜாகோபால் ஆற்றி வரும் சேவை போற்றத்தக்கது. 'நாட்டியாலயா' என்ற தனது நிறுவனத்தின் மூலம் நடராஜப் பெருமானின் பேரருளைப் பெற்று நாட்டியக் கலையில் இமயத்தை எட்டி விட்ட ராகினி அவர்கள், பரதக் கலையையும், இந்நாட்டில் வாழும் நூற்றுக் கணக்கான சிறார்களுக்குப் படிப்பித்து, ஏராளமான நாட்டியங்களை மேடை ஏற்றி வந்துள்ளார். 'நாட்டியாலயா'வின் மேடையேற்றமான முதலாவது 'பூபாளராகங்கள்' நிகழ்வை பெக் தியேட்டரில் பார்த்தபோது, பிரமித்துப் போய் விட்டேன். தொடர்ந்து அவரது பிள்ளைகளின் நாட்டியங்களை பூபாளராகங்களில் தொடர்ச்சியாக ஒன்பது ஆண்டுகள் பார்த்து மகிழ்ந்து விட்டேன்.

அவரது மாணவிகளின் நடனங்களில் காணப்படும் லாவண்யம், இங்கிதங்கள், நடன அமைப்பு ஆகியன தேனுண்ட வண்டு போலப் பார்ப்போரை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தும். அந்த அருமையான இனிய நடன விருந்து அற்புதம்! அற்புதம்!

தமிழ் கலைகள் என்றால் எனக்கு உயிர். பல ஆண்டுகளுக்கு முன்பு பல கலை வித்துவான்கள் அடங்கிய தர்மஸ்தாபனம் ஒன்றை உருவாக்கி நான் தலைவராக இருந்தேன். பாட்டு, வயலின், மிருதங்கம், நடனம் போன்ற எல்லாவகைக் கலைகளையும் பிரசித்தி பெற்ற ஆசிரியர்கள் மூலம் கற்றுக் கொடுத்தோம். அந்தப் பணி தொடர்ந்து நடக்கிறது. இந்தியாவில் இருந்து சுதா ரகுநாதன், பிரியா சகோதரிகள் போன்றவர்களை இங்கு வரவழைத்து, விழாக்கள் நடத்தினோம்.

நான் கர்நாடக சங்கீதம் பயின்றவனல்ல. ஆனால் அதில் எனக்கு உயிர். அந்த எனது கலை வேட்கை தான், தங்கை ராகினியின் உன்னதமான நாட்டியங்கள் மீது பற்று ஏற்படுத்தியது. ஐரோப்பாவிலேயே சிறந்த நடன ஆசிரியை என்று போற்றப்படும் ராகினிக்கு விழா எடுக்க வேண்டும் என்று பல வருடங்களாக அவரது கணவரும், உற்ற நண்பருமான ராஜகோபால் அவர்களை வற்புறுத்தி வந்துள்ளேன். கடைசியாக இப்போது ராகினிக்கு விழா எடுக்க ஒப்புக் கொண்டது எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தந்தது. இந்த விழா சிறப்படைய எனது உளமார்ந்த வாழ்த்துக்கள்.

புலம் பெயர்ந்த தமிழ் மக்களுக்கு ராகினியின் பரதக்கலை சேவை தொடர வேண்டும். வாழ்த்துகிறேன்! ராகினியுடன் ராஜகோபால் இனிதே மகிழ்வாக வாழ வாழ்த்துகிறேன்! ●



# புனிதமான நட்பின் நாயகி



- -என். சூரியகுமாரன் (கனடா)



நடனத்துறையில் முப்பது ஆண்டு கால கௌரவத்தைப் பெறும் ராகினியின் கணவர் ராஜகோபாலுடன் எனக்கு முப்பத்தேழு ஆண்டுகள் நெருக்கம்.

யாழ்ப்பாணம் 'ஈழநாடு'வில்தான் இந்த நட்பு ஆரம்பமானது. நான் பிறந்த மண் பூநகரி நிருபராகவும், பின்னர் அலுவலக நிருபராகவும் பணியாற்றிய காலங்கள் மறக்க முடியாதவை. அப்போது ராஜகோபால் உதவி ஆசிரியராக அங்கு பணியாற்றிக் கொண்டிருந்தார். நான் எழுதுகிற செய்திகளை கூடுதலானவரை அவரிடம் கொடுப்பேன்.

'ஈழநாடு'வுக்கு முன்னால் உள்ள சிறு தேநீர் கடையில் போய் இருவரும் தேநீர் அருந்திக் கொண்டே 'பலதும் பத்தும்' பேசுவோம். இதன்பின் பொலிஸ் சேவையில் சேர்ந்து, தென்பகுதிக்குச் சென்று விட்டேன். அவ்வப்போது யாழ்ப்பாணம் போகும்போது, 'ஈழநாடு'வுக்குச் சென்று பழைய நட்பைப் பகிர்ந்து கொள்வேன். பொலிஸ் சேவையில் வெறுப்பு ஏற்பட, வெளிநாட்டுக் கப்பல் ஒன்றில் வேலை பெற்று உலகம் சுற்றினேன். கனடா துறைமுகத்தில் 1983ம் ஆண்டு இறங்கி, அங்கேயே தங்கிவிட்டேன். அப்போது, தனிமையில் இருக்கிறபோது பழைய நினைவுகள் வந்து போகும்.

ராஜகோபால் என்ற பத்திரிகையாளர் என் மனதில் வந்து போவார். பின்னர், அவர் கொழும்பு 'தினகரன்' நாளிதழில் பணியாற்றுவதை அறிந்தேன். அதன் பின் திருமணம் செய்து கொண்டதைக் கேள்விப்பட்டேன். ஆனால் சந்திக்க முடியவில்லை. யந்திரமயமான கனடா வாழ்வில், சொந்தத் தொழில், குடும்பம் என்று காலம் கழிந்தது. 97ம் ஆண்டு என்று நினைக்கிறேன். கனடாவில் பிரபல ஒலிபரப்பாளரும்,என் நெருங்கிய நண்பருமான ராஜ்குமாருடன் அவரது 'கீதவாணி' வானொலி நிலையத்தில் பேசிக் கொண்டிருந்தேன். அப்போது ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. "ராஜகோபால் அண்ணை இன்னும் கொஞ்ச நேரத்தில் பேட்டி எடுக்கப் போகிறேன் தயாராக இருங்கள்" என்று சொன்னது என் காதில்பட்டது.



"யார் 'ஈழநாடு' ராஜகோபாலா? அவர் எனக்கு மிக நெருக்கமானவர். அவர் தொலைபேசி நம்பரைத் தா" என்று ராஜ்குமாரிடம் கேட்டு வாங்கி, அவருடன் உடனேயே பேசினேன். பொக்கிஷம் கிடைத்த மாதிரிச் சந்தோஷம். அன்று இரவு லண்டனுக்குப் பயணமாகப் போவதாகவும் அடுத்த மாதம் தனது மனைவியுடன் வருவதாகவும், தன் கடைசிச் சகோதரி திருமதி டொலி வேலாயுதத்தைப் பார்க்க வந்ததாகவும் சொன்னார்.



விமான நிலையத்துக்கு அவரைப் போய்ச் சந்தித்தேன். கட்டித் தழுவினேன். தனது மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள் பற்றியெல்லாம் ஒரு சில நிமிடங்களில் பேசித்தள்ளிவிட்டார். மீண்டும் ஒரு தூய்மையான நட்புக் கிடைத்த ஆனந்தம் என் நெஞ்சில் கூத்தாடியது. குறிப்பிட்டபடி தனது மனைவி, பிள்ளைகளுடன் அடுத்தமாதம் வந்தார். வீட்டுக்குக் கூட்டிப் போய் என் குடும்பத்தை அறிமுகப்படுத்தினேன். கனடாவில் நிற்கிற நாட்களில் அனேகமாக ராஜகோபால் குடும்பத்தைச் சந்திப்பேன். ராகினி ஒரு சகோதரியாக மிக அன்பாக எங்களுடன் பழகினார். இதன் பின்னர் ஒவ்வொரு ஆண்டும் வருவார்கள். ராகினியுடன் வீட்டுக்கு வருவார். என் மனைவியுடன் அவர் நண்பியானார். எங்கள் மகனும் அவர்கள் மகனும் நண்பர்கள்.

கனடாவில் உள்ள அவரது சகோதரியும், கணவரும் எங்களுக்கு நெருக்கமான நண்பர்களானார்கள். லண்டனில் நடந்த 'புதினம்' விழாவில்தான் ராகினியின் நாட்டியத் திறமையைப் பார்த்து வியந்தேன். முன் வரிசையில் அமர்ந்து, அவரது பிள்ளைகளின் 2 மணி நேர நிகழ்ச்சியை ரசித்து பார்த்தேன். எனக்கு மிகவும் பிடித்திருந்தது. நாட்டிய நிகழ்ச்சியொன்றை முதல் தடவையாக இவ்வளவு நேரம் அமர்ந்து பார்த்தது எனக்கே வியப்பாக இருந்தது. தாய் மண்ணில் செய்த தொழிலையே ராஜகோபாலும் செய்கிறார். அதேபோன்று அவரது மனைவியும் செய்கிறார். வெளிநாட்டில் பல விதத்தில் பணம் சம்பாதிக்க வழி இருந்தும், இவர்கள் மட்டும் பணத்தை முழுக் குறிக்கோளாகக் கொள்ளாது, கலைப்பணி ஆற்றுவது பெருமைக்குரிய விஷயம்.



இந்த நிகழ்வுக்குப் பிறகு இவரது தங்கை டொலி-வேலாயுதம் தம்பதியின் 25 ஆண்டு திருமண விழாவுக்கு, அவர்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தும் வகையில், அந்த நேரத்தில், மண்டபத்துக்கு திடீர் விஜயம் செய்ய வேண்டும் என்று முடிவு எடுத்து, தொலைபேசியில் லண்டனிலிருந்து எனக்குச் சொன்னார். விமான நிலையத்துக்குச் சென்று அவர்களை கூட்டி வந்தேன். எங்களுடன் தங்கி, அடுத்த நாள் விழாவுக்குக் கூட்டிப் போய் சகோதரி குடும்பத்தை ஆச்சரியத்தில் ஆழ்த்தினோம்.

மிகச்சாதாரணமான ஒருவராக, மிகப் பண்புள்ளவராக, குடும்பத் தலைவியாக இருக்கும் ஒருவர், நடனக் கலைஞராகத் திகழ்வது எனக்கும், என் குடும்பத்துக்கும் பெரு மகிழ்ச்சியைத் தருகிறது. இப்படியான ஒருவர் ராஜகோபாலுக்கு மனைவியாகக் கிடைத்தது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. இந்த விழாவில் நான் நேரில் கலந்து கொள்ளப்போவதுடன், பிரதம விருந்தினராக எனது நெருங்கிய நண்பரான விநாயகா மிஷன்ஸ் இணைவேந்தர் டாக்டர் ஏ.எஸ்.கணேசன் கலந்து கொள்வதும் மேலும் மேலும் மகிழ்ச்சியை அளிக்கிறது.

நட்பு என்பது புனிதமானது. இப்படியானதுதான் ராஜ கோபால் குடும்பத்துடனான நட்பு. அந்த நட்பின் நாயகனுக்குக் கிடைத்த நாயகியை இதயத்தால் வாழ்த்துகிறேன்- என் மனைவி, பிள்ளைகளோடு சேர்ந்து.

வாழ்க வாழ்கவே 'நாட்டியாலயா'!●

# பெருமைக்குரிய நடன ஆசிரியை

- -எஸ்.யோகநாதன் (மிதுஸ்)





**ரா**கினி ராஜகோபால் அவர்களின் 'நாட்டியாலயா' நிறுவனத்தின் 30வது ஆண்டு விழா 1800 பேர் கூடும் பிரம்மாண்ட அரங்கம் Fair Field Hallல் நடக்கப் போகிறது என்பதைக் கேட்கும் போதே எவ்வளவு பெருமையாக இருக்கின்றது. நான் பெருமைப்படுவதன் காரணம், அவரும் கணவரும் எங்கள் குடும்ப நண்பர்கள். அதற்கும் மேல் என்னுடைய பிள்ளைகளின் குருவும் அவரே. என்னுடைய பிள்ளைகள் வர்ஷி, மிது இருவரும் 'நாட்டியாலயா'வின் மாணவிகள். அவருடைய பெருமைகளை இந்த விழாவின் மூலமாக பகிர்ந்து கொள்ள விளைகின்றேன்.

எங்கள் இரு குடும்பத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட நட்பு 23 வருடங்களிற்கும் மேற்பட்டது. இந்த 23 வருடங்களில் அவரினதும் நாட்டியாலயாவினதும் வளர்ச்சியைக் கண்டு வியந்திருக்கின்றேன். இன்று 'நாட்டியாலயா'வைப் பற்றியும், ராகினி ராஜகோபால் அவர்களைப் பற்றியும் நாட்டிய உலகில் ஐரோப்பாவில் தெரியாதவர்களே இருக்க முடியாது. எத்தனை அரங்கேற்றங்கள், எத்தனை நாட்டிய நிகழ்ச்சிகள், அவற்றிலும் தனக்கென்று ஓர் பாணி, கொள்கை. அதிலிருந்து அவர் என்றும் ஒரு சிறிது தடம் புரண்டதில்லை.

**15** வருடங்களிற்கு முன்பு எனது மகள் வர்ஷிக்கு பரதநாட்டியம் பழக்க வேண்டும் என்றபோது என் மனைவியின் மனதில் வந்தவர் ராகினி டீச்சர் அவர்கள். உடனே நான் நண்பர் ராஜகோபால் அவர்களை தொலைபேசியில் அழைக்கின்றேன். அடுத்த சில மணித்தியாலங்களில் டீச்சர் அவர்கள் எங்கள் வீடு வந்து என் மகளை தன் சிஷ்யையாக ஏற்றுக் கொள்கிறார். இந்தப் பெருந்தன்மை, எங்கள் நட்புக்கு தந்த மதிப்பு வேறு யாரிடம் வரும்?.

இன்றும் என்னுடைய இரு பிள்ளைகளும் அவருடைய மாணவிகள்தான். இருவரும் விரைவில் ராகினி டீச்சர் அவர்களால் அரங்கேற்றம் காண இருக்கின்றார்கள் என்பதில் பெருமையடைகின்றேன். ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஓர் பெண் இருப்பதாகச் சொல்வார்கள். ஆனால் இங்கே ஓர் பெண்ணின் வெற்றிக்குப் பின்னால் அவர் கணவர் 'புதினம்' ராஜகோபால் அவர்களை நான் பார்க்கின்றேன். அதுமட்டுமல்ல, தன்னுடைய மகள் ஷர்மினியையும் இன்று 'நாட்டியாலயா'வின் நடன ஆசிரியை ஆக்கி அழகு பார்த்திருக்கின்றார். அவருடைய குடும்பம் ஓர் கலைக்குடும்பம். அதுமட்டுமல்ல, இன்று 3வது தலைமுறையாக அவருடைய பேரன் யாதவனும் நாட்டியத்திலே கலக்கிக் கொண்டிருக்கின்றான். நான் செயலாளராக இருக்கும் நெல்லியடி சென்றல் பழைய மாணவர் நிகழ்ச்சியில் இடம்பெற்ற அந்தச் சிறுவனின் நடனத்தை ரசிக்காதவர்களே இல்லை. இதைவிட நாட்டியாலயாவின் வளர்ச்சிக்கு என்ன சான்று வேண்டும்?

லண்டனிலே, ஐரோப்பாவிலே பரத நாட்டியக்கலை என்கின்றபோது அங்கே முதலிடம் நிச்சயமாக ராகினி ராஜகோபால் அவர்களுக்குத் தான் இருக்கும். 'நாட்டியாலயா' மேலும் வளர வாழ்த்துகிறேன். ●





# ராகினி என்றால் அர்ப்பணிப்பு!



- வைத்திய கலாநிதி பி.ஆறுமுகராசா



தமிழ் உணர்வுள்ள பாடல்களுக்கு நடனங்களைப் பழக்கி, அதன் மூலம் எழுச்சியை ஏற்படுத்துவதில் வல்லவர், நடன ஆசிரியை ராகினி ராஜகோபால்.

விளங்காத மொழிகளில் பாடி வித்துவத்தைக் காட்டுவதில் யாருக்கு என்ன பிரயோசனம்? தமிழில் பாட வேண்டும். தமிழ் பாடல்களுக்கு நடனம் ஆட வேண்டும். அந்த வகையில் ராகினி ராஜகோபால் அவர்களை வெகுவாகப் பாராட்டலாம்!

இவரது மாணவிகளின் நடன நிகழ்ச்சிகள் லண்டனில் மட்டுமல்ல, ஐரோப்பா நாடுகளிலும் நடைபெற்றதாக அறிவேன். இவரது ஒரு சில நடன நிகழ்ச்சிகளைப் பார்த்து மகிழ்ந்திருக்கிறேன்.

தாயகத்தின் நிதியுதவிக்காக 'வெண்புறா' அமைப்பினர் நடத்திய நடனப் போட்டி நிகழ்வினை கடந்த ஆண்டு பார்த்தேன். வோல்தம்ஸ்ரோ நகர மண்டபத்தில் நடந்த இப்போட்டிகளில் கூடியளவு பரிசுகளை ராகினி ராஜகோபாலின் 'நாட்டியாலயா' நிறுவனமே தட்டிக் கொண்டது. ஒவ்வொரு பிரிவிலும் அவரது பிள்ளைகளின் நடனங்கள் விறுவிறுப்பாகவே அமைந்திருந்தன.

'வன்னி மண்ணிலே மயில் கூத்தாடுமா?...' என்ற பாடலுக்கு அவரது மாணவிகள் ஆடிய நடனம் பார்த்துக் கொண்டிருந்தவர்களை மௌனமாக ஆர்ப்பரிக்க வைத்துவிட்டது. எப்படித்தான் இந்த மாணவிகளை உணர்ச்சியோடு ஆடப் பழக்குகிறார்கள் என்று எனக்குள்ளேயே எண்ணிக் கொண்டேன். இதே போன்று இன்னும் சில பாடல்களுக்கு அந்த மாணவிகள் ஆடிய நடனங்களை இலகுவாக மறக்க முடியாமல் மனதில் பதிந்துள்ளன. அந்த விழாவில் எனது கையால் பரிசுகளை வழங்கக் கிடைத்ததை நினைக்கிறபோது, பெருமையாக இருக்கிறது.

'புதினம்' விழாவிலும் பல நடனங்களை வழங்கினார். அந்த நடனங்களை ரசித்தவர்களில் நானும் ஒருவன்.

நடனங்களை பழக்குகின்றபோது அது வெகு சுலபமாகப் புரியக் கூடியதாக இருக்க வேண்டும். இந்த வகையில் ராகினி ராஜகோபால் அவர்களுக்கு சாதாரண மக்களும் விரும்பக் கூடிய வகையில் நடனங்களைப் பழக்குகின்ற ஆற்றல் இருப்பதை அவரது பிள்ளைகள் ஆடிய நடனங்களிலிருந்து கண்டு கொண்டேன்.

லண்டனில் பெருமளவு நாட்டிய ஆசிரியைகள் இருக்கிறார்கள். ஆனால் அனுபவமும்-அர்ப்பணிப்பும் கொண்ட நடன ஆசிரியர்களை விரல் விட்டு எண்ணலாம். அவர்களில் முதன்மையானவர் ராகினி ராஜகோபால்.

குடும்பத்தினைக் கவனிக்கின்ற பொறுப்புகளை உதறித்தள்ளாமல் மிக பொறுப்போடு வாழ்கின்ற நல்ல குணமான பெண்மணியாகவும், அதே நேரத்தில் பிள்ளைகளுக்கு ஏற்ற பொறுப்புள்ள ஆசிரியையாகவும் அவர் இருப்பதை நான் நன்கு அறிவேன். நடனம் பயில்கின்ற பெண் பிள்ளைகள் பலர் படிப்பிலும் மிக உயர்ந்து இருப்பது எனக்கு நன்கு தெரியும். ராகினியிடம் பயின்ற சில பிள்ளைகள் டாக்டராக இப்போது இருக்கிறார்கள்; வழக்கறிஞர்களாக இருக்கிறார்கள்; கணக்காளர்களாக இருக்கிறார்கள். ஏனென்றால், நல்ல நினைவாற்றல் உள்ளவர்களால்தான் நன்கு நாட்டியம் ஆட முடியும்.

ஈழத்தில் 'நாட்டியாலயா' நிறுவனத்தை ஆரம்பித்து, இங்கிலாந்திலும் அந்த நிறுவனத்தைத் தொடர்ந்து நடத்தி வருகின்றதென்பது சுலபமான காரியமல்ல. நூற்றுக்கும் மேலான பிள்ளைகளை இன்று இவரது 'நாட்டியாலயா' பள்ளியில் கற்கிறார்கள் என்றால், அவர் மீது பெற்றோருக்கும் உள்ள நம்பிக்கைதான். அந்த நம்பிக்கை அவரது கெட்டிக்காரத்தனத்தில் கட்டி எழுப்பப்பட்டது.

இன்று 30வது ஆண்டினைக் கொண்டாடும் அவரது 'நாட்டியாலயா' 50வது ஆண்டினையும் கொண்டாட வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். இவர்களது சேவை என்றும் வளர வேண்டும், 'நாட்டியாலயா' மேலும் பல நன் மாணவர்களை உருவாக்க வேண்டும் என்றும் இறைவனை வேண்டுகிறேன். ●



# பரதக்கலையில் ஒளிரும் ஓர் வைரக்கல்

- க.செல்வநாயகம், (சட்டத்தரணி)

**நா**ட்டியாலயா நிறுவனர் திருமதி ராகினி இராஜகோபால் அவர்கள் நாடறிந்த நாட்டியத் தாரகை. 1972ம் ஆண்டு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் பல நூற்றுக்கணக்கான கலைப்பிரியர்களின் கரகோஷத்தோடு ஆரம்பமான அவரது பரத நாட்டிய அரங்கேற்றம் அத்துறை சார்ந்தோரால் மட்டுமல்லாமல், சாதாரண தமிழ் மக்களாலும் வெகுவாய் புகழப்பட்டது

அன்று கலைத்தாயோடு சங்கமித்த ராகினி தொடர்ந்து பல்வேறுபட்ட நடன நிகழ்ச்சிகளை இலங்கை வாழ் தமிழர்கள் மத்தியில் நடத்தி தன் தனித்திறமையை மென்மேலும் மெருகூட்டி வெளிக் கொணர்ந்தது மட்டுமல்லாமல் தனக்கென்று ஒரு ரசிகர் கூட்டமே உருவாகுமளவுக்குத் தன் நிலையை தமிழீழ மண்ணில் உயர்த்தினார்.

தமிழகம் சென்று பெரும் திறமையும் புகழும் பெற்ற பரதநாட்டியக் கலை வித்தகர்களிடம் பயிற்சி பெற்று தன் கலைத் திறனை வளர்த்து நாட்டியத்தின் விஷேட நுணுக்கங்களை ஆழ்ந்து கற்று தான் கற்ற கலையை அதன் பெருமையைப் பிறருக்கும் சொல்லித்தர வேண்டும், அந்தக் கலையை மங்காமல் மறக்காமல் என்றென்னும் எழுச்சி குன்றாமல் வளர்ச்சி பெற ஆவன செய்ய வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு 'நாட்டியாலயா' என்ற நிறுவனத்தை உருவாக்கி நாட்டு மக்களுக்கு கலைப்பணியாற்றி வந்தார்.

இலங்கையில் நடந்த கொடுங்கோல் ஆட்சியின் கொடுமைகளால் சொந்த மண்ணையும் சொந்தங்களையும் பிரிந்து உயிர்காக்கவென லண்டன் வந்த பல்லாயிரக்கணக்கான தமிழர்களில் ராகினியும் அவர் கணவர், என்றும் தனித்துவமாய் நிலைத்து நிற்கும் எழுத்தாளர் இராஜகோபால் அவர்களும் அடங்குவர்.

**ல**ண்டன் வந்தாலும் தன் உயிர் மூச்சான பரத நாட்டியக் கலையை ராகினியும், தன் எழுத்து, பத்திரிகைத்துறை என்ற தணியாத தாகத்தை இராஜகோபாலும் துளியளவேனும் மறக்காமல் ஐக்கிய இராச்சியத்தில் புலம் பெயர்ந்த மக்கள் மத்தியில் பலவேறுபட்ட பிரச்சினைகளையும் பொருளாதாரத் தடைகளையும் தாண்டி தங்கள் சேவைக்கு செயல்வடிவம் கொடுக்க வேண்டும் என்ற தீராத வேட்கையின் விளைவே "நாட்டியாலயா" லண்டன், "தமிழன்" வார இதழ் என்று சிலிர்த்தெழுந்தது அவர்கள் சேவை.

'தமிழன்' பத்திரிகைக்குப் பின்னர் 'ஈழகேசரி'யாகவும் புதினமாகவும் மாறி பிற பரிணாம வளர்ச்சியடைந்தாலும் 'நாட்டியாலயா' தொடர்ந்தும் லண்டன் வாழ் தமிழ் மக்களின் ஒருமித்த ஆதரவுடன் மிகச் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது.

**ரா**கினியின் புகழ் ஐக்கிய இராச்சியத்தில் மட்டுமல்ல, பலவேறு ஐரோப்பிய நாடுகளிலும் பெருமளவில் பரவியுள்ளது. 'நாட்டியாலயா' மூலம் ராகினி பல நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு பரத நாட்டியக் கலையைப் பயிற்றுவித்தது மாத்திரமின்றி ஏறக்குறைய 20



மாணவர்களுக்கு மேல் கடந்த 20 ஆண்டுகளில் பரத நாட்டிய அரங்கேற்றங்களை நடத்தி என்றென்றும் நினைவு கூறத்தக்க வகையில் மிகச் சிறப்பான கலைச் சேவையை செய்துள்ளார்.

பரதக் கலையில் ராகினி பெற்ற அறிவு, புலமை, திறமை அவரை ஒரு ஆளுமை பெற்ற நல்ல ஆசானாக நூற்றுக்கணக்கான மாணவர்கள் ஏற்றுக்கொள்ளவும், புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களும், தமிழீழத் தமிழர்களும் அவரை ஒரு புகழ் பெற்ற பரத நாட்டிய நர்த்தகியாக ஏற்றுக் கொள்ளவும் ஏதுவாக அவரின் திறமை அமைந்தது.

அவர் உண்மையில் பரத நாட்டியக் கலையில் சங்கமமாகி என்றும் ஒளிரும் ஓர் வைரக்கல் என்றால் அது மிகையாகாது!. ●

# ராகினியின் சாதனை

- இரத்தினம் கந்தசாமி, (முன்னாள் செய்தி ஆசிரியர் TTN, தீபம் T.V)





யாழ். குடாநாட்டில் பிறந்து கால் நூற்றாண்டுக்கு மேல் ஐரோப்பிய மண்ணில் பரத நாட்டிய துறையில் தம்மை அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்தி வரும் நடன மணி ராகினி ராஜகோபால், தமிழ் ஈழத்துக்குப் பெருமை சேர்க்கும் நர்த்தகிகளில் முதன்மையானவர்.

கொழும்பில் உயர்மட்டத் தமிழர்கள் மத்தியில், ஆடம்பர பொழுதுபோக்குக்காக தமது பிள்ளை நடனம் கற்பித்து அரங்கேற்றம் செய்து வந்த நாட்களில், நடனம் கற்று யாழ்பாணத்தில் அரங்கேறியவர்களில் ராகினி ராஜகோபாலும் ஒருவர்.

ஆறு தசாப்தங்கள் வாழ்ந்து விட்ட பின்னரான இன்றைய நாட்களில் மட்டுமல்லாது, எனது இளமைக் காலத்திலும் சினிமாவில் ஏனோ அதிக நாட்டம் இருக்கவில்லை. கர்நாடக சங்கீதம்- நடனம் ஆகிய கலைகளினால் ஈர்க்கப்பட்டு அன்று ராகினி ராஜகோபாலின் (ராகினி அரசரத்தினம்) நடன நிகழ்ச்சிகளை மெய் மறந்து ரசித்து மகிழ்ந்த நாட்களை இப்போது எண்ணிப் பார்க்கிறேன்.

யாழ்ப்பாணம் 'ஈழநாடு' தினசரியில் பணியாற்றிய காலத்தில் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் முதல் வரிசையில் இருந்து ராகினியின் நடன நிகழ்ச்சிகளை ரசித்திருக்கிறேன்.

ராகினி அரசரத்தினம், எனது நீண்ட கால நண்பரும் யாழ். ஈழநாடு பத்திரிக்கையின் ஆசிரிய பீடத்தில் என்னுடன் மூத்த ஆசிரியராகப் பணியாற்றியவருமான ஈ.கே. ராஜகோபாலின் வாழ்க்கை துணைவியானார்.

ராகினி அரசரத்தினம், குடும்பத் தலைவியாக- வாழ்க்கையின் அடுத்தபடிக்கு ராகினி ராஜகோபால் என்ற பெயருக்குச் சொந்தக்காரராகிய பின்னர், அவரது நடன நிகழ்ச்சிகளை நேரிலும் தொலைக்காட்சிகள் மற்றும் ஒளி நாடாக்கள் மூலம் பார்த்து ரசிக்கும் வாய்ப்பு கூடுதலாகவே கிடைத்தது.

ராஜகோபால்- ராகினி தம்பதிகளின் மகள் ஷர்மினியின் நடன அரங்கேற்றம் 1990 ஆண்டு ஆகஸ்ட் மாதம் லண்டனில் நடைபெற்றபோது, ராகினியின் வித்துவத் திறன் அங்கே பளிச்சிடப்பட்டது.

ஈழத்தில் இருந்து புலம் பெயர்ந்த நான் 1990 ஆண்டு பிரான்ஸ் சென்ற பின்னர், ராகினி ராஜகோபாலின் மிகப் பெரிய சாதனைக்காகவே முதல் தடவையாக லண்டன் பயணத்தை மேற்கொண்டிருந்தேன்.

11வது வயதில் அரங்கேற்றம் கண்ட ஷர்மினி ராஜகோபாலின் அரங்கேற்றத்தையே மிகப் பெரும் சாதனை என இங்கே குறிப்பிடுகிறேன்.

இந்த அரங்கேற்றத்துக்காகவே பிரான்சில் இருந்து லண்டன் வந்து நடன அரங்கேற்றத்தை - சிறந்த நடனநிகழ்ச்சியையே பார்த்த முழுமையான திருப்தியுடன் பாரிஸ் நகர் திரும்பினேன்.

ஷர்மினி ராஜகோபாலின் அரங்கேற்றத்திற்கு வந்திருந்த அனைவருமே 'புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?' என்ற பதிலுடன் கூடிய கேள்வியை கேட்டார்கள் என்பதை இன்று நினைத்தாலும் உளம் மகிழ்வடைகிறது.

தலைசிறந்த நடன மணியான ராகினி ராஜகோபால், தமது கலை வாரிசான தமது மகளையும் இந்தத் துறையில் சிறந்த நடன மணியாகவே உருவாகிருக்கிறார் -திறம்பட பார்த்துப் பார்த்துச் செதுக்கியிருக்கிறார் என்பதே உண்மை.

ராகினி ராஜகோபாலின் நூற்றுக்கு மேலான மாணவிகள் அவரது சிறந்த நர்த்தகிகளாக பிரபல்யம் பெற்று குருவின் பெருமைக்குச் சான்றாக மிளிர்க்கின்றனர் என்பதை நான் மட்டும் கூறவில்லை - பல்வேறு ஊடகங்களும் வெளிபடுத்தியிருக்கின்றன.

என்ன சொன்னாலும், ராகினி ஒரு சாதனையாளர். என் நெருங்கிய நண்பரின் மனைவியல்லவா! எனக்கும் லீலாவுக்கும் பெருமை தானே! ●

# வவுனியாவும், ராகினியும்



- வவுனியூர் இரா.உதயணன் (எழுத்தாளர்)

**தா**யகத்தின் நினைவலைகளோடு, தமிழ் உணர்வை புலம் பெயர்ந்த மண்ணில் தமிழ் கலைகள் ஊடாக ஊட்டுகிற நமது கலைஞர்களில் முன்னணி வகிப்பவர் நடன ஆசிரியை ராகினி ராஜகோபால்.

அவரது 30 ஆண்டு நாட்டியப் பணியின் நிறைவை லண்டனில் கொண்டாடுகிற இச்சமயத்தில், அவரைத் தெரிந்த கடந்த காலத்தை எண்ணிப் பார்க்கிறேன்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்குச் சிறிது நாட்கள் மேலோகத்தான் அவர்களுடன் பழக்கம் ஏற்பட்டது. வவுனியா கொன்வென்றில் அவர் நடன ஆசிரியையாக இருந்த காலத்தில் இருந்து அவரை நன்கறிவேன்.

அப்போது யாழ்ப்பாணம், 'ஈழநாடு' வில் அவரது கணவர் ராஜகோபால் பணியாற்றிக் கொண்டிருந்தார். நான் எழுத ஆரம்பித்த காலம். அப்பத்திரிகைக் காரியாலயத்தில் எனக்கு அறிமுகமான துணை ஆசிரியர் சசிபாரதி சு.சபாரத்தினம் அவர்களைச் சந்தித்து கதைகளைக் கொடுக்கப் போனேன். அங்கு உதவி ஆசிரியராக செய்திப் பகுதியில் இருந்த ராஜ கோபால் அவர்களை சசிபாரதி எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

சில நாட்களில் ராஜகோபால் எனது உள்ளத்தில் இடம் பிடித்துக் கொண்டு விட்டார். எதையுமே ஒளிவு மறைவின்றிப் பேசுகின்ற இவரது உள்ளத்தை எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

இந்தச் சமயத்தில்தான் ராஜகோபாலின் துணைவியாருக்கு வவுனியாவில் நியமனம் கிடைத்தது. கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை யில் மூன்றாண்டு பயிற்சியை முடித்துக் கொண்ட அவருக்கு வவுனியாவிலுள்ள கொன்வென்ரில் இடம் கிடைத்ததில் அவர்கள் இருவருக்கும் மன வருத்தம் தான்.

1983ம் ஆண்டு காலப் பகுதியில் நாட்டு நிலைமை மிக மோசமாக இருந்தது. இந்த நிலையில் வவுனியாவுக்குப் பயணம் செய்வதும், அங்கு தங்கிப் பாடசாலைக்குப் போவதும் பெரும் தலையிடியாக இருந்தது இருவருக்கும். இப்பொழுது கல்வி அமைச்சின் மேலதிக செயலாளராக இருக்கும் ராஜகோபாலின் நெருங்கிய நண்பர் உடுவை தில்லை நடராஜா அக்காலத்தில் வவுனியாவில் அரச சேவையில் உயர் அதிகாரியாக இருந்தார். என்னுடனும் தில்லையுடனும் தமது மனைவியின் வவுனியா நியமனத்தைப் பற்றிக்





கவலைப்பட்டார். எப்படியோ சில காலமாவது சேவையாற்றினால் யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் பெற்று விடலாம் என்று ஆறுதல் சொன்னோம்.

அதிர்ஷ்டவசமாக ராகினியின் மைத்துனி குடும்பம் வவுனியாவில் இருந்தார்கள். அவர்கள் வீட்டில் தங்குவதற்கு வசதி செய்து கொடுத்தார்கள். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை மாலையில் யாழ்ப்பாணத்திலிருந்து மினிவானில் புறப்பட்டு தம்பதியாக வருவார்கள். அன்று இரவு ராஜகோபால் என்னோடு அல்லது தில்லையுடன் பொழுதைக் கழிப்பார். அடுத்த நாள் அதிகாலை யாழ்ப்பாணம் போய் விடுவார். அலைச்சலும், சிரமங்களும் அவர்கள் இருவருக்கும் இருந்தாலும், எனக்கென்னவோ ராஜகோபாலைச் சந்தித்துப் பேசுவதில் மிகவும் சந்தோஷமாக இருந்தது.

வவுனியாவில் உள்ள எங்கள் உறவுகளின் குழந்தைகளும், நல்ல நாட்டிய ஆசிரியையிடம் பயில்வதற்குக் கிடைத்தவாய்ப்பை எண்ணி மகிழ்ந்தோம். கடந்த காலத்தை விட கடமை உணர்வோடு பயிற்றுவிக்கின்ற நடன ஆசிரியை தமது பிள்ளைகளுக்குக் கிடைத்தது பற்றிப் பெற்றோர்கள் பலர் பேசிக் கொள்வதைக் காதாரக் கேட்டு இருக்கிறேன்.

வவுனியா மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கிடையே நடந்த நடனப் போட்டியில் வவுனியா கொன்வெற் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது. இதனால் ராகினியைத் தம்மோடு வைத்துக் கொள்ள வேண்டும் என்பதில் அதிபர் சகோதரி அக்குவானஸ் மிக உறுதியாக இருந்தார். பெற்றோர்களும் விரும்பினார்கள்.

ஆனால் ராஜகோபாலும் ராகினியும் இடமாற்றம் பெற வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்கள். நீண்ட சுகயீன லீவுகளை ராகினி எடுத்துக் கொள்ள ஆரம்பித்தார். இதனால் பாடசாலை அதிபர் கடும் கோபம் கொண்டார். லீவு நேரத்தில் ராகினியின் சம்பளத்தைப் பாடசாலைக்குப் போய் எடுத்து யாழ்ப்பாணம் வரும் போது கொண்டு வரும்படி ராஜகோபால் கேட்டுக் கொண்டார். அப்படிப் போனபோதுதான் அதிபரின் கோபத்தைத் [illegible]ரிந்து கொண்டேன். நல்ல ஆசிரியை ஒருவரை இழந்து கொண்டிருப்பதை அவரது [illegible]லிருந்து உணர்ந்து கொண்டேன்.

இறுதியில் ராஜகோபால் [illegible] பெற்றார். ராகினியை அவர் ஊரில் உள்ள [illegible]ப்பாய் மகளிர் கல்லூரிக்கே கொண்டு வந்து சேர்த்து விட்டார். ஆனால் அந்தப் பாடசாலைக்கும் நிரந்தரமாக ராகினி கிடைக்கவில்லை என்பதை அறிந்து கொண்டேன்.

1985மே மாதம் ஒரு மதியப் பொழுது என்று நினைக்கிறேன். யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவரை அப்போது ரயில் சேவை இல்லை. ராஜகோபால் - ராகினியும் தங்கள 4 வயது ஷர்மினியுடனும் ஒரு வயது ஷியாமுடனும் எங்கள் வவுனியா ரயில் நிலையத்துக்கு வந்தார்கள். என் தந்தையார் ரயில் நிலைய அதிபர். அவர்களை வரவேற்று சாப்பாடு கொடுத்து கொழும்புக்கு அனுப்பி வைத்தோம்.

நானும் சில நாட்களில் ஓமானுக்கு வேலை பெற்றுச் சென்று விட்டேன். அங்கிருந்து லண்டனுக்கு எப்படியோ தொடர்பு கொண்டேன்.

லண்டனுக்கு வந்தேன். என் திருமணத்துக்கு ராஜகோபால் குடும்பத்தினர் முன்னின்றார்கள். நானும் குடும்பமானேன். லண்டன் யந்திர வாழ்வோடு போராடிக் கொண்டிருந்தாலும் - ராகினி ராஜகோபாலின் நடன நிகழ்ச்சிகளை அவ்வப்போது பார்த்து மகிழ்வோம். தாயகத்தின் உணர்வோடு அவர் நிகழ்வுகள் பரணி பாடுகின்றது. நம் மண்ணின் புகழ் பாடுகின்றது.

இன்று ராகினியின் நடனக் கலைக்கு 30 ஆண்டு. புலம் பெயர்ந்த மக்களை மகிழ்விக்கும் அவரது நடனக் கலை தொடரப் பிரார்த்திக்கிறோம். ●



# கடின உழைப்பின் அறுவடை!

- மாத்தளை ராஜலிங்கம் (எழுத்தாளர்)



கடந்த மாதம் ஒரு நாளில் மூத்தப் பத்திரிகையாளர் திரு.ராஜகோபாலுடன் தொலைப்பேசியில் பேசிக் கொண்டிருந்தேன். அப்போது அவர் 'நாட்டியாலயா'வுக்கு முப்பது ஆண்டு விழா நடத்தப்படவுள்ளதாக கூறினார். செய்தி எனக்கு இனிமையானதாகவும், மனதுக்கு மகிழ்வு தருவதாகவும் இருந்தது.

ராஜகோபால் குடும்பத்தவர்கள் எனக்கு நெருக்கமானவர்கள். அதுவும் லண்டனில் நான் வாழ்ந்த காலத்தில் அவரின் குடும்பத்தில் ஒருவனாக இருந்தவன்.

அந்தக் குடும்பத்துடன் இணைந்து நிற்கும் நிறுவனத்துக்கு விழா ஒன்று நடக்கிறதென்றால் நான் எப்படி மன மகிழ்வு கொள்ளாமல் இருக்க முடியும்?:

'நாட்டியாலயா'வின் நிறுவனர், நடத்துனர் திருமதி ராகினி ராஜகோபால் ஆவார்.

ஐரோப்பிய நாட்டில் குடியேறியவர்களில் பெரும்பாலானோர்கள் பொன்னையும், பொருளையும் சேர்த்துக் குவிப்பதில் ஆர்வம் கொண்டவர்களாக உள்ளார்கள். அவைகளை சேர்த்துக் குவிப்பதற்காக போராடிக் கொண்டிருப்பவர்களாக உள்ளார்கள்.

இந்நிலையில் பத்திரிகைத் துறைக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து அதனையே தனது உயிர்மூச்சாகக் கொண்டு வாழ்பவர் ராஜகோபால். அவரைப் போன்றே நாட்டியத்துக்காகவும், 'நாட்டியாலயா'வுக்கும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து, அதனையே தனது உயர் மூச்சாக கொண்டு வாழ்ந்துக் கொண்டிருப்பவர்தான் ராகினி ராஜகோபால். இது இவர்களுடன் நெருங்கிப் பழகுபவர்களுக்கு தெரிந்த சங்கதி மட்டுமல்ல; லண்டனில் வாழும் தமிழர்கள் அறிந்த விஷயம்.

'நாட்டியாலயா'வுக்கு விழா என்றால் அது ராகினி ராஜகோபால் அவர்களுக்கு எடுக்கப்படும் விழா தானே! அந்த விழா செய்தி அறிந்து அவர்களின் குடும்பத்தில் ஒருவனான நான் மன மகிழ்வு கொள்வது நியாயமானது தானே!

யாழ்ப்பாணத்தில் மானிப்பாயை பிறப்பிடமாக கொண்ட ராகினி ராஜகோபால் அங்கு அரசு பள்ளியில் நடன ஆசிரியையாக கடமைப்புரிந்தார்.

தனது சிறு வயதிலே நடனக் கலையில் ஆர்வம் கொண்ட அம்மையார் முறைப்படி அந்தக் கலையை கற்றார். அவரது நடன அரங்கேற்றம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் கட்டடக் கலைஞர் திரு.வி.எஸ்.துரைராஜா தலைமையில் நடைபெற்றது.

நான் யாழ்ப்பாணம் 'ஈழநாடு'வில் பணியாற்றியப் பொழுது ராஜகோபாலுடன் நெருக்கமானேன். அந்த நாட்களில் அம்மையார் இடை இடையே ஈழநாடு காரியாலயத்துக்கு வந்து போவதுண்டு. அவ்வேளையில் அவருக்கு நான் அறிமுகமானதை எண்ணிப் பார்க்கின்றேன்.

லண்டனிலிருந்து நான் திரும்பிய பின்பு இந்தியாவில் தமிழ்நாட்டில் வசித்து வருகின்றேன். ராஜகோபால் துணைவியாருடன் இந்தியா வரவுள்ளதாகவும், தமிழ்நாட்டில் தங்கியிருக்கும் வேளையில் எனது வீட்டுக்கு வரவுள்ளதாகவும் அறிந்தேன். அது எனது மனதுக்கு மகிழ்ச்சியை தந்தது. இருப்பினும் எனது மனதில் சிறு நெருடலும் உருவாகலாயிற்று.

கரடு, முரடான வழியில் பயணம்



செய்து விருத்தாசலம் வரும் அவர்களை வசதிகள் அற்ற எனது வீட்டில் எப்படித் தங்க வைப்பது என்பது தான் அந்த நெருடல். எனவே அவர்கள் எனது வீட்டுக்கு வரும் பொழுது, வசதிகளுடன் தங்குவதற்கு 'ஓட்டல்' ஏற்பாடு செய்தேன். இது குறித்து ராஜகோபாலுக்கு தொலைபேசியில் கூறினேன்.

அப்பொழுது அம்மையார் கூறியது: "ராஜலிங்கம் நாங்கள் விருத்தாசலம் வருவது உங்கள் வீட்டில் உங்கள் குடும்பத்துடன் தங்கியிருக்கத்தான். ஓட்டலில் தங்குவதற்கு அல்ல".

அவ்வாறே எனது விருத்தாசலம் வீட்டுக்கு வந்த அவர்கள் இரண்டு நாட்கள் எனது குடும்பத்துடன், இணைந்து குடும்பமாக தங்கியிருந்து சென்றது எனக்கு மட்டுமல்ல; எனது மனைவி, மகன் இவர்களுக்கும் பெரும் மன மகிழ்வு தந்ததை அறிவேன். ராஜகோபால் தம்பதிகளின் நட்பை நேசிக்கும் பண்புக்கு இதனை ஒரு எடுத்துக்காட்டாக கொள்கின்றேன்.

நான் லண்டனில் ராஜகோபாலின் மகள் ஷர்மினி கண்ணன் வீட்டில், அவரின் குடும்பத்தில் ஒருவராக இணைந்து வாழ்ந்த காலத்தில் அம்மையார் எவ்வித வேறுபாடும் இன்றி என்மீது காட்டிய தாய்மை பாசமானது எனது நெஞ்சத்தில் என்றும் நீங்கா நினைவுகளாக உள்ளன.

ஐரோப்பிய நாடுகளில் பல லட்சம் தமிழர்கள் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தமிழர்கள் மத்தியில் பழந்தமிழர் கலையான பரதக் கலை அழிந்துப் போய் விடுமோ? என்று நாட்டிய ஆர்வலர்கள் பயந்திருந்த வேளையில் இளமைத் துடிப்புடன் ராகினி ராஜகோபாலினால் தாயகத்தில் உருவாக்கப்பட்ட இந்த 'நாட்டியாலயா' நிறுவனம் இன்று முப்பதாவது ஆண்டு விழா காண்கின்றதென்றால் அது அம்மையாரின் கடின உழைப்பின் அறுவடை என்று தான் சொல்ல வேண்டும்.

லண்டனில் அரசு பள்ளியில் நடன ஆசிரியையாக அம்மையார் பணிபுரிகின்றார். வீட்டில் தனது துணைவரின் பத்திரிகை துறைக்கு அவரும் ஒத்தாசையாக இருப்பதுடன், நல்ல இல்லத்தரசியாகவும் உள்ளார். இந்த வேலைப் பளுவுக்கிடையிலும் சிற்றெறும்பின் சுறு சுறுப்புடன் 'நாட்டியாலயா'வின் வளர்ச்சிக்கு அவர் ஆற்றும் பணிகள் பல.

லண்டன் மாநகரில் அவ்வப்போது, தமிழ் நிகழ்ச்சிகள் நடக்கத் தவறுவதில்லை. இந்த அரங்குகளிலெல்லாம் ராகினி ராஜகோபாலின் நடன நிகழ்ச்சிகள் இடம் பெறவும் தவறுவதில்லை.

இவைத்தவிர சுவிட்சர்லாந்து, ஜெர்மன், பிரான்ஸ், டென்மார்க் போன்ற நாடுகளில் அம்மையாரின் தலைமையில் அரங்கேற்றங்களை நடத்துவதை பெருமையாக கருதி அழை[illegible]கள் வருவதையும் நான் அறிவேன். பல வேலைப் பளுக்களுக்கு மத்தியிலும் இங்கெல்லாம் சென்று தலைமை வகித்து நாட்டியாலயாவுக்கும் தனக்கும் பெருமை சேர்த்து வருபவர் ராகினி ராஜகோபால்.

ராஜகோபால் தம்பதிகளுக்கு இரண்டு பிள்ளைகள். மூத்தவர் ஷர்மினி, இளையவர் ஷியாம். ஷர்மினியின் கணவர் கண்ணன். இவர்களுக்கு இரண்டு பிள்ளைகள்.

தாயின் அரவணைப்பில் வளர்ந்த மகள் ஷர்மினி தாயிடமே முறையாக நடனக் கலையைப் பயின்று, அரங்கேற்றம் செய்யபட்டு சிறந்த நடன பயிற்சியாளராக உள்ளதுடன், சிறந்த வீணை இசையாளராகவும் உள்ளார். அம்மையாரின் வாரிசாக உள்ள இவர் தாயின் வழியிலேயே சென்று பெரும் பங்காற்றுவார் என்று இசை உலகுக்கோர் நம்பிக்கையுண்டு.

மகன் ஷியாம் தந்தை வழியில் சென்று அவரின் பத்திரிகை உலக வாரிசாக உருமாறாவிட்டாலும், தந்தை மனம் நோகாமல் வாழுகின்ற நல்லபிள்ளை என்பதை அறிவேன்.

ராஜகோபால் தம்பதிகள் லண்டன் தமிழர்கள் மத்தியில் புதிய அறிமுகம் அல்ல. சகல மட்டத்தில் வாழும் மக்களாலும் நன்கு அறியப்பட்டவர்கள். அதற்கு காரணம் அவர்கள் சார்ந்த துறைகளேயாகும். அத்துறைகளில் ஒன்றான 'நாட்டியாலயா'வுக்கு எடுக்கப்படும் இந்த முப்பதாவது ஆண்டு விழா நாட்டிய உலக வரலாற்றுக்கு அவசியமான ஒன்றே. விழா சிறப்படையும் என்பது நிச்சயம். வாழ்க! வாழ்க! ●



# இணைந்த கலையும் ஊடகமும்



- சிவனடியான் ஸ்ரீபதி (கலைக்காவலர்)

கணவர் ஊடகவியலாளர், மனைவி நடனக் கலைஞர். ராஜகோபாலின் பத்திரிகைப் பணியால் பல ஆயிரம் தமிழர்கள் பயன் பெறுகிறார்கள். தமிழீழ உணர்வை மக்களுக்கு ஏற்படுத்தும் நல்ல விஷயங்களைத் தாங்கி, காலம் தவறாது பத்திரிகையை வெளியிடுகிறார்.

தமிழன் என்றால், கல்தோன்றி, மண் தோன்றாக் காலத்தின் முன் தோன்றியவன் என்று பழம் பெருமை பேசிய காலத்தை மாற்றி, இன்று தமிழர்கள் உலகெங்கும் ஆற்றல் படைத்தவர்களாக உலக அரங்குகளில் வலம் வந்து கொண்டிருக்கிறார்கள்.

புகலிடத் தமிழர்கள் பலர் வெளிச்சத்திற்கு வந்திருக்கிறார்கள். அப்படியாக, லண்டனில் மிகப் பிரபலமான பரத நாட்டியக் கலைஞராகத் திகழ்பவர்தான் ராகினி ராஜகோபால்.

ஒவ்வொரு தமிழனும் தன் உயர்வுக்காக உழைக்கும்போது, தன்னுடைய சமுதாய முன்னேற்றத்திற்காகவும் பாடுபட வேண்டும். நூறு பேருக்கு உதவ முடியாவிட்டாலும், ஒரு தமிழன் இன்னொரு தமிழனுக்காவது உதவ வேண்டும் என்ற எண்ணமுள்ளவன். இந்த வகையில், தாயகத்தை விட்டு புலம் பெயர்ந்து லண்டன் வந்த பின்னரும் தானுண்டு, தன் வேலையுண்டு என்று இருந்து விடாமல், ராஜகோபால் - ராகினி தம்பதி, நூறு பேருக்கு அல்ல, குறிப்பாக ஈழத்தமிழ் சமூகத்துக்கே உதவிக்கொண்டு இருக்கிறார்கள்.

கணவர் ஊடகவியலாளர், மனைவி நடனக் கலைஞர். ராஜகோபாலின் பத்திரிகைப் பணியால் பல ஆயிரம் தமிழர்கள் பயன் பெறுகிறார்கள். தமிழீழ உணர்வை மக்களுக்கு ஏற்படுத்தும் நல்ல விஷயங்களைத் தாங்கி, காலம் தவறாது பத்திரிகையை வெளியிடுகிறார்.

ராகினி தன் நடனப் பணியினால் நூற்றுக்கணக்கான மாணவிகளுக்கு பணி செய்கிறார். ஆயிரக்கணக்கான மக்கள் பார்த்து மகிழ்கிறார்கள். தமிழீ உணர்வுள்ள நடனங்களை மேடையில் தன் சிறார்கள் மூலம் விளம்புகிறார். இதனால் தான் 1999க்களில் நான்




ஆசிரியராக இருந்து நடத்திய 'பயணம்' இதழில் இவ்விருவரது படங்களைப் பிரசுரித்து, அவர்களைப் பற்றி 'கலையும் காவியமும்' என்ற தலைப்பில் அட்டைப் படக் கட்டுரை வரைந்தேன்.

ராஜகோபால் - ராகினி தம்பதியின் நட்பு எப்படி ஏற்பட்டது என்று எண்ணிப் பார்க்கிறேன்.

**90ம்** ஆண்டின் பிற்பகுதியில் என்று நினைக்கிறேன்.

ஐரோப்பிய நாடுகளில், தான் எழுதிய 'வல்வெட்டித் துறையிலிருந்து அமெரிக்கா வரை கப்பலோட்டிய தமிழர்கள்' என்ற வரலாற்று நூலின் வெளியீட்டு விழாவை நடத்துவதற்காக ராஜகோபால் ஜெர்மனி வந்திருந்தார். நான் அப்பொழுது புனர்வாழ்வுக் கழக முக்கிய நிர்வாகியாக இருந்தேன். இப்போது லண்டனில் குடும்பத்தோடு வாழும் ராஜகோபாலின் உறவினரான பிரபாகரன் வீடு அப்போது 'கும்மாஸ்பாஸ்' என்ற இடத்தில்



**தமிழீழ விடுதலைப் பாடல்களுக்கு ஷர்மினி ஆடிய உணர்ச்சிகரமான நடனங்கள் அன்று கூடிய நூற்றுக்கணக்கான மக்களைக் கவர்ந்தது. இந்த நடனத்தை வெகு அழகாக நடன ஆசிரியை ராகினி பழக்கியிருந்தார். இவ்வளவு திறமைகள் அவரிடம் உள்ளதை அன்று கண்டு கொண்டேன்.**

இருந்தது. அங்குதான் தங்கியிருந்தார்கள். பிரபாகரன் தமிழர் புனர் வாழ்வுக் கழக செயலாளர், நானும் அவரும் இணைந்து ராஜகோபால் நூல் வெளியீட்டு விழாவை ஏற்பாடு செய்து நடத்தினோம். அங்கு முதல் தடவையாக, அவர்களது மகள் சிறுமி ஷர்மினி நடனமாடினார். தமிழீழ விடுதலைப் பாடல்களுக்கு அவர் ஆடிய உணர்ச்சிகரமான நடனங்கள் அன்று கூடிய நூற்றுக்கணக்கான மக்களைக் கவர்ந்தது. இந்த நடனத்தை வெகு அழகாக நடன ஆசிரியை ராகினி பழக்கியிருந்தார். இவ்வளவு திறமைகள் அவரிடம் உள்ளதை அன்று கண்டு கொண்டேன்.

அப்போது ராஜகோபால் நடத்திய 'தமிழன்' பத்திரியில் 'இழுபறி' ஏற்பட, அதனைத் தூக்கி எறிந்து விட்டு 'ஈழகேசரி' என்ற இரு முறைப் பத்திரிகையை நடத்தப் போவதை நானே ஜெர்மனியில் மேடையில் முதலாவதாக அறிவித்தேன்.

'ஈழகேசரி' ஐரோப்பிய நாடுகள் எல்லாம் அனுப் பப்பட்டன. விற்பனைப் பணத்தைச் சேர்ப்பதில் உதவினேன். எனக்கு ராஜகோபாலை நன்றாகவே பிடித்தது. அவருக்கு உதவ வேண்டும் என்று முடிவு செய்தேன். அடிக்கடி ஜெர்மனிக்கு எங்கள் தமிழ் மன்ற விழாவுக்கு அழைப்பேன். அவர் வருவார். ஓரிரு தடவைகள் துணைவியார், மகளுடன் வந்திருக்கிறார்.

ராஜகோபால் மீது உள்ள அன்பினால், இருதடவை அவரை அமெரிக்காவுக்கும், கனடாவுக்கும் கூட்டிச் சென்றுள்ளேன். எனது உயிரான (இப்போது அமரர்களாகிவிட்ட) சகோதரி மீராவும் அவர் கணவர் சதாவும் எங்களுடன் அப்போது வந்தார்கள். பத்திரிகையில் அமெரிக்கா, கனடா பயணத்தைப் பற்றி நிறையவே எழுதியிருக்கிறேன். ராஜகோபாலும் என்னைப் பற்றி நிறைய எழுதியுள்ளார். இந்தளவுக்கு இன்று வரை நீடிக்கின்ற அன்புக்குரிய குடும்பத்திலிருந்து ஒருவர் 30 ஆண்டு நிறைவைக் கொண்டாடுவது எனக்குப் பெருமையைத் தருகிறது.

நடன அரசியாக மட்டுமல்ல, சிறந்த இல்லத்தரசி ராகினி ராஜகோபால். தன் நடனப் பணியோடு குடும்பத்தை நிர்வகிப்பது இலகுவானதல்ல. ராஜகோபாலின் பத்திரிகைப் பணி தொடர்ந்து நடப்பதற்கு ராகினி அளிக்கின்ற முழு ஒத்துழைப்புத்தான் முக்கிய காரணம்.

ராகினியின் வளர்ச்சியில் அவர் கணவர் இருக்கிறார் என்று பலர் எண்ணலாம். அவர்கள் குடும்பத்தை நன்கு தெரிந்தவன். ராஜகோபால் பின்னணியில் நின்று நிறையவே உதவுகிறார் என்பது போலவே அவர் மனைவி ராகினியும் ராஜகோபாலின் வளர்ச்சியில் பின்னணியில் நின்று உதவுகிறார் என்பதும் உண்மை.

எனது நெருங்கிய, உள்ளத்தில் வாழும் நண்பன் ராஜகோபாலின் துணைவியார் ராகினியின் 30 ஆண்டு நிறைவுக்கு என் இதயப்பூர்வமான வாழ்த்துக்கள். ●



# பரதராகினி

– வைத்திய கலாநிதி எஸ்.தியாகராஜா

ஆங்கிகம் புவனம் யஸ்ய
வாஸிகம் சர்வ வாங்மயம்
ஆஹார்யம் சந்த்ர தாராதிதம்
நமஸ் வாஸ்திகம்

**சிவம்! சிவம்!! சிவம்!!!**



இன்று உலகம் முழுவதிலும் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் பிரபலமாக விளங்கும் பரதநாட்டியம் இந்திய உபகண்டத்தின் மிகப் புராதனமான கலை வடிவமாகும்.

இது வெறும் உடல் மட்டும் ஆடும் நடனமல்ல; உடலோடு உள்ளமும் உயிரும் இழைந்து நடமிடும் ஆத்ம நர்த்தனம். ''ஆதியந்தமில்லா பிரபஞ்சத்தை நாம் ஆராதிக்கும் அழகிய உருவமும், தோற்றமும் கொண்ட உடலினால் கொண்டாடித் துதிக்கும் கலை இது'' என்பார் அறிஞர் ஆனந்தா குமாரசாமி. (Art of Celebrating the Internal Universe through the celebration of the beauty of the Material body).

பாரம்பரியப் புகழ் கொண்ட பரத நாட்டியம் அதன் கவர்ச்சிக்கு - வசீகரத்திற்கு - மென்மைக்கு - எழிலுக்கு - லாவகத்திற்கு - நளினத்திற்கு - சிற்ப நிலைக்கு - சித்திர வடிவிற்கு - தாய்மைக்கு - தெய்வாம்சத்திற்கு - புகழ்பெற்ற அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய அற்புதக் கலை. நடனம் ஆடும் நர்த்தகியையும் நாட்டியத்தை மெய்மறந்து ரசிக்கும் பார்வையாளரையும், தன்னை மறந்த தெய்வப் பிரசன்னத்திற்கு அழைத்துச் செல்லும் வல்லமை இதற்கு உண்டு.

உலகில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட நடனச் சிற்பங்களில் பழமையானது சிந்து வெளிப்பள்ளத்தாக்கில் மொகஞ்சதாரோ அகழ்வுகளில் கண்டெடுக்கப்பட்ட வெண்கலச் சிலையாகும். திராவிட மக்களின் பாரம்பரியப் பண்பாட்டில் நாட்டியம் ஒரு முக்கிய இடம் வகித்ததிருந்ததை உலகிற்கு உறுதிப்படுத்தும் சின்னம் இந்தச் சிற்பம்.

வெப்பேற்று ஒளிக்கதிர் (THERMOLUMINI SCENCE) காலக்கணிப்பின்படி, இன்றைக்கு *5,500* ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கணிக்கப்பட்டிருக்கும் இச்சிற்பம் ஆரியர்கள் இந்திய மண்ணில் அடியெடுத்து வைப்பதற்கு *2000* ஆண்டுகள் முற்பட்டதாகும்.





புராதன காலத்தில் தெய்வ சந்நிதானத்தில் பெண்களின் நடனங்கள் நடைபெற்றதைச் சங்ககால இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. தெய்வ வழிபாட்டின் ஓர் அம்சமாக பண்டிகை காலங்களில் இளம் பெண்கள் ஆடும் குரவையாட்டம்; மன்றுகளில் நடப்பட்டிருந்த கற்தூண்களைச் (சிவலிங்க சின்னம்) சுற்றவர கைகளில் தீபங்கள் ஏந்திய வண்ணம் பெண்கள் ஆடும் கந்து நடனம்; கிராமங்களில் ஆடப்படும் கும்மி என்பன அக்கால நாட்டியத்தின் பல வகைகளாகும்.

இந்தியாவில் கோயில்கள் அமைத்து தெய்வ வழிபாடு ஆரம்பமானபின் அங்கே நடனமாடிய தேவதாஸிகளால் சாஸ்திரிய நடனம் பேணப்பட்டது. இந்த நடன மாதர்களோடு பக்க வாத்தியங்கள் இசைப்போர், பாடகர்கள் ஆதியோர் இக்கலையைப் பேணி வந்தனர்.

தமிழ் நாட்டில் சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் அரசுகள் நிறுவிக்கப்பட்ட பின் இந்த அரச சபைகளில் நாட்டியம் பிரபலமாகியது. அரச சபை நடனமாதர்கள் ராஜநர்த்தகிகள் என அழைக்கப்பட்டனர். சிலப்பதிகாரத்தில் அழகு மயில் மாதவியின் அரங்கேற்ற நடனமான 'தலைக்கோல் தானம்' சோழ மன்னன் முன்னிலையில் நடைபெறுவதை இளங்கோ அடிகள் அற்புதமாக விவரிக்கிறார்.

## பரத நாட்டியப் பாரம்பரியம்

**தெ**ன்னிந்திய சாஸ்திரிய நடனத்திற்குப் பரத நாட்டியம் என்னும் பெயர் ஏற்பட்டதற்கு இரு வகையான விளக்கங்கள் உள்ளன.

''பாவராக தாளம் சேர்ந்த பரதகலை இந்தப்

பாரிலுள்ளோர் என்றும் போற்றும் கலை''

என்ற பாடலின் படி பாவம் (Expression), ராகம் (Music, Melody), தாளம் (Rhythm) ஆகிய இந்நாட்டியத்தின் முப்பண்புகளின் முதல் எழுத்துக்களைக் கொண்டே 'பரத' என்ற சொல்

உருவாக்கப்பட்டது என்பது ஒரு வகை விளக்கம்.

கி.மு. இரண்டாம் நூற்றாண்டிற்கும், கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட ''நாட்டிய சாஸ்திரம்'' என்னும் நூலின் ஆசிரியர் பரத முனிவரென்றும், அவரால் உருவாக்கப்பட்ட சாஸ்திரியப் பண்புகளை உள்ளடக்கிய நாட்டியம் இதுவாதலால் பரத நாட்டியம் என்னும் பெயரைப் பெற்றது என்பது இன்னொரு விளக்கம்.

பரத நாட்டிய சாஸ்திரம் கூறும், நிர்த்த, நிருத்திய, நாட்டியப் பண்புகளைக் கொண்ட நடனங்கள் ஏதும் வட இந்தியாவில் பேணப்படுவதில்லை. தென்னகத்தில், குறிப்பாகத் தமிழ் நாட்டிலேயே பரதத்தின் தொன்மையான, சாஸ்திரிய சுத்தமான பண்புகள் பாரம்பரியமாக, தலைமுறை தலைமுறையாகப் பேணப்பட்டு வருவதை நோக்குமிடத்து 'நாட்டிய சாஸ்திரத்தை' எழுதிய பரத முனிவர் தமிழகத்தைச் சேர்ந்த பிராமணராகவே இருக்க முடியும் என்பது தென்னகத்தில் பிரபலமாக இருந்த இக்கலைவடிவத்தின் பண்புகளையே பரத முனிவர் சமஸ்கிருதத்தில் பதிவு செய்திருக்கிறார் என்பதும் - இன்றைய பல அறிஞர்களின் கருத்தாகும்.

பரத நாட்டியத்தின் தோற்றத்தைப் பற்றி பல வகையான புராணக் கதைகள் சிருஷ்டிக்கப்பட்டன. பிரம்மா ''நாட்டிய வேதம்'' என்கிற ஐந்தாவது வேதத்தை ஆக்கி அதைப் பரத முனிவருக்கு உபதேசித்து, அதை உலகில் பரப்பும்படி பணித்தார் என்கிறது ஒரு கதை.



தேவலோகத்தில் ஊர்வசி, ரம்பை ஆகியோர் ஆடிய நாட்டியத்தையே உலக மக்களுக்காக பரத முனிவர் அறிமுகம் செய்தார் என்கிறது இன்னொரு கதை.

சிவனின் மனைவியான பார்வதி இந்த நடனத்தை பானாசுரன் என்னும் அசுரனின் மகளான உஷாவிடமிருந்து கற்றுக் கொண்டார் என்கிறது மற்றொரு புராணக்கதை.



நடனக் கலையின் நாயகனான சிவன் பார்வதியுடன், ஆனந்தத் தாண்டவம், சந்தியா தாண்டவம், சாமர தாண்டவம், காளி தாண்டவம், உமா தாண்டவம், கௌரி தாண்டவம் ஆகிய நடனங்களையும் - செஞ்சடை விரிய, சிவந்த விழிகளில் தீக்கனல் பறக்க முப்புரங்களையும் எரித்த திரிபுர தாண்டவத்தையும் - உலகங்களின் அழிவின் போது ஊழித் தாண்டவத்தையும் - உலகில் வாழ் உயிர்கள் அனைத்தும் உய்யும் பொருட்டு ஆனந்தத் தாண்டவமாகிய நடராஜ நர்த்தனத்தையும் - ஆடவல்லானாகச் சித்தரிக்கப்படுகிறார்.

### தஞ்சாவூர் தந்த தவப்புதல்வர்:

பரத சாஸ்திர நாட்டிய நுட்பங்கள் பல நூற்றாண்டுக் காலமாக, தலைமுறை தலைமுறையாக தேவதாஸிகளாலேயே பேணப்பட்டு வந்தன. தெய்வங்களுக்காகத் தம்மை அர்ப்பணம் செய்துகொண்ட இம்மாதர்கள் தாய் - மகள் வழியாக இக்கலையின் நுட்பங்களைப் பயின்று ஆலய விழாக்களில் இந்த நாட்டியத்தை ஆடிவந்தார்கள்.

தமிழகத்தில் தஞ்சை மண்ணில்இந்த நாட்டியம் தெய்வக் கலையாகப் பயிலப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தது. இக் கலைக்குப் புத்துணர்வும், புது வடிவமும் கொடுத்தவர்களில் தஞ்சைச் சகோதரர்கள் என அழைக்கப்பட்ட சின்னையா, சிவானந்தம், பொன்னையா, வடிவேலு ஆகிய நால்வரும் முக்கியமானவர்கள் ஆவர்.



பரதக் கலையிலும், கர்நாடக இசையிலும் விற்பன்னர்களாக விளங்கிய இந்நால்வரும் சாஸ்திரிய நடனத்தின் அடிப்படை அசைவுகளைப் (அடவுகள்) பல பகுதிகளாகப் பிரித்து - சிறிது சிறிதாக முன்னேறி வரும் அபிநய அத்தியா



யங்களாகத்(CHAPTERS) தொகுத்தார்கள். இந்த அடவுகள் பின்னர் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு இசைக்கேற்றவாறு ஆடற்தொகுதி அமைப்புக்களாக (Chroeographed Sequences) உருவாக்கப்பட்டன.

இந்நாட்டிய வகைகளுக்கேற்ற கர்நாடக சங்கீத ராகங்களில் அமைந்த பாடல்களும் இச்சகோதரர்களால் இயற்றப்பட்டன. சங்கீத ராகமும், இசைத் தாளமும், நாட்டிய பாவமும் ஒருங்கிணைந்த ஓர் ஆக்க சக்தி (Creative Energy) பீறிட்டுப் பெருகும் கலையாக பரதம் உருவாக்கப்பட்டது.

பரத நாட்டிய அரங்குகளில் இன்று வரை இந்த தஞ்சைச் சகோதரர்களின் பாடல்களே ஜதி பிசகாது ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

இக்கலையைப் பயிற்றுவித்து, ஆடற்பகுதிகளைத் தொகுத்து அமைத்துக் கொடுப்போர் நட்டுவனார் என அழைக்கப்படுவர். இவர்களின் பணி நட்டுவாங்கம் எனப்படும்.

**ருக்மணி தேவி அருண்டேல்:**

**கோ**யில்களில் தேவதாஸிகளால் ஆடப்பெற்று வந்த பரதநாட்டியம் அன்றைய உயர் சமூகத்தினரானல் 'சதுராட்டம்' 'தேவடியாள் ஆட்டம்' 'நட்டுவிச்சி நடனம்' என்றெல்லாம் இழிவாகப் பேசப்பட்டு வந்த இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் -

இந்த நாட்டியத்தின் பழம் புகழையும், பாரம்பரிய பெருமையையும் இந்திய சமூகத்தினருக்கு எடுத்துக்காட்டி - இந்த நடனத்தின் கலைப் பொருளையும், தெய்வீகப் பண்பையும் அவர்களுக்கு உணர்த்தி- புராதன இந்திய ஆலயங்களில்காணப்படும் பரத நாட்டியச் சிற்பங்களின் அம்சங்களை எடுத்து விளக்கி ஏகப்பட்ட எதிர்ப்புகளுக்கு மத்தியல இந்த நாட்டியத்தை மேடையேற்றி- யாக சமூகத்தின் உயர்மட்ட மக்கள் அனைவரையும் இதை ஏற்றுக் கொள்ளும்படி செய்த பெருமைக்குரியவர் ருக்மணிதேவி ஆவார்.



**1904 ஆம்** ஆண்டில் பிப்ரவரி 29ம் தேதி மதுரையில் ஓர் உயர்குடிப் பிராமண குலத்தில் பிறந்தார் ருக்மணி தேவி. கல்விமானான அவரது தந்தையார் நீலகண்ட சாஸ்திரி எஞ்சினியராகப் பணிபுரிந்தார். தாயார் சேஷம்மாள் சங்கீத ஆர்வம் கொண்டவர். அன்னி பெசன்ட் அம்மையாரின் பிரமஞான இயக்கத்தில் ஈடுபாடு கொண்ட நீலகண்ட சாஸ்திரியார் வேலையிலிருந்து ஓய்வு பெற்றதும் சென்னையில் அடையார் பகுதியில் வீடு அமைத்து தனது குடும்பத்துடன் இடம் பெயர்ந்தார்.

இக்கால கட்டத்தில் ருக்மணி தேவி கலாச்சாரம், இசை, நாட்டியம், நாடகம் ஆகிய துறைகளில் அதீத ஈடுபாடு கொண்டார். 1920ம் ஆண்டில் வாரணாசி மத்திய இந்துக் கல்லூரியின் தலைமை ஆசிரியரான ஜோர்ஜ் அருண்டேல் என்பவரைக் காதல் திருமணம் செய்து கொண்டார்.

1928இல் பம்பாயில் பாலே (BALLET) நடனமாட வந்திருந்த பிரபல ரஷ்யக் கலைஞரான அன்னா பவ்லோவாவின் நடனத்தினால் ஈர்க்கப்பட்ட

ருக்மிணிதேவி அவரது குழுவினருடன் ஆஸ்திரேலியா சென்று பாலே நடனத்தையும் கற்றுக் கொண்டார்.

மீண்டும் இந்தியா திரும்பிய ருக்மணிதேவி தனது கணவரின் ஆதரவுடன் புராதன சாஸ்திரிய நடனத்தை புனருத்தாரணம் செய்யும் முயற்சியில் முழு நேரத்தையும் செலவிட்டார்.

1936 ஜனவரியில் தனது கணவருடன் சேர்ந்து சென்னை அடையார் பகுதியில் 'கலாக்ஷேத்திரா' என்கிற நாட்டிய, இசைப் பள்ளியை ருக்மணி தேவி ஆரம்பித்தார். இப்பள்ளியில் இந்தியாவின் பண்டைய குருகுல முறைப்படி நாட்டியம் கற்றுக் கொடுக்கப்பட்டது.

நாட்டிய ஆசிரியர்களாக தென்னகத்தின் சிறந்த நட்டுவனார்களைக் கண்டுபிடித்து - வயலின், தபேலா போன்ற இசைக் கருவிகளைப் புகுத்தி, தென்னிந்தியக் கோயில் சிற்பங்களில் காணப்படும் ஆடை, அணிகலன்களை அணிவித்து - மேடை ஒளியமைப்பைப் புதுமையாகச் செய்வித்து - 'சதிர் நாட்டியம்' என்ற பெயரைப் 'பரத நாட்டியம்' என மாற்றி - இந்த நாட்டிய இயலுக்குப் புது வாழ்வு கொடுத்தவர் ருக்மணி தேவியே.

அவர் ஸ்தாபித்த 'கலாக்ஷேத்திரா' கலாச்சாரப் பள்ளி பிரபலமாகி, பெரிய அளவில் வளர்ச்சி பெற்று, 1962இல் சென்னை திருவான்மியூரில் 100 ஏக்கர் நிலத்தில் கலாக்ஷேத்திரா பல்கலைக் கழகமாக உருவெடுத்தது. ராதா பேணியர், கமலா சட்டோபாத்தியா, யாமினி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் இக்கலாசாலையில் பயின்று பின்னர் உலகப் புகழ் பெற்ற நாட்டிய மணிகளாவர்.

1952, 1956ஆம் ஆண்டுகளில் ருக்மணி தேவி இந்திய பாராளுமன்ற ராஜ்ய சபை அங்கத்தினராகத் தெரிவு செய்யப்பட்டார். 1956இல் அவருக்கு 'பத்ம பூஷண்' பட்டம் கிடைத்தது. இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்து ஏகப்பட்ட நாட்டிய விருதுகளையும், அமெரிக்க வெயின் பல்கலைக் கழகத்தின் டாக்டர் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

ருக்மணி தேவி அருண்டேல் 24 பிப்ரவரி 1986இல் அவரது 82வது வயதில் சென்னையில் தனது இல்லத்தில் காலமானார். இன்றைய இந்தியாவை உருவாக்கிய முக்கியமான 100 பிரமுகர்களில் முன்னணியில் இருப்பவராக ''இந்தியா டுடே'' சஞ்சிகை அவரைக் குறிப்பிடுகிறது.



## பிரபல பரதம்

**கோ**யில்களில், திருவிழாக் காலங்களில் தேவதாஸிகளால் ஆடப்பட்டு வந்த பரத நாட்டியத்தை மேடைக்குக் கொண்டு வந்ததற்கு இருபதாம் நூற்றாண்டின் நாட்டிய விற்பன்னர்களான ருக்மணி தேவி அருண்டேல், பாலசரஸ்வதி, கிருஷ்ண ஐயர், உதய சங்கர் ஆகியோர் காரணமானார்கள்.

ஒரு காலத்தில் 'சதுராட்டம்' எனக் கேலியாகப் பேசப்பட்ட ஒரு கலையை சமூகத்தின் உயர் மட்டத்தில் உள்ள யாவராலும் ஏற்றுக் கொள்ளும்படி செய்ததற்கும், இந்தக் கலையை அகில உலக அளவில்பிரபலமடையச் செய்தமைக்கும் - இவர்களே காரணகர்த்தாக்களாவர்.

இந்தியத் திரைப்படங்களில் பரதநாட்டியத்தைப் பிரபலமடையச் செய்தமைக்கு தென்னிந்திய நாட்டிய நடிகைகள் காரணமானார்கள். ஒரு சிறிய கலாச்சார வட்டத்திற்குள் தேங்கிக் கிடந்த பரதக் கலையை இந்தியத் திரைப்படங்கள் ஜனரஞ்சகமாக ஆக்கி வைத்தன. தென்னிந்திய நடிகைகளில் குமாரி கமலா (கமலா லக்ஷ்மண்) பத்மினி, வைஜெயந்திமாலா மூவரும் பரதநாட்டிய பாணி நடனங்களைத் திரைப்படங்களில் பிரபலமாகச் செய்வதற்கு முக்கிய காரணமானார்கள். இவர்களின் நடனங்களைப் பார்ப்பதற்கென்றே ஒரு ரசிகர் கூட்டம் அரங்குகளை நிறைத்தது.

சிறு வயதிலேயே பேபி கமலா என்ற பெயரோடு 1943இல் 'கிஸ்மத்' 'ராமராஜ்யம்' ஆகிய இந்திப் படங்களில் நடனமாடிய கமலாவுக்குப் பெரும் புகழ் கிடைத்தது. 1947இல் குமாரி கமலாவின் 'நாம் இருவர்' திரைப்படத்தில் இடம் பெற்ற நடனங்கள் பெற்ற புகழைத்





தொடர்ந்து தமிழகமெங்கும் பரதநாட்டியம் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன. 1954இல் 'சோரி சோரி' இந்திப் படத்தில் மற்றுமொரு சிறப்பான பரத நாட்டியத்தை கமலா ஆடியிருந்தார். அவர் கடைசியாக நடனமாடிய 'கொஞ்சும் சலங்கை' பிரசித்தி பெற்றது.

1950ம் ஆண்டில் உதய சங்கரின் நாட்டியப் படமான 'கல்பனா'வில் பத்மினி தடம் பதித்தார். 1953இல் வெளிவந்த 'சிவ பக்தா' இந்திப் படத்தில் அற்புதமான அவரது இரு பரதநாட்டியங்கள் இடம் பெற்றன. மல்லிகா, மதுரை வீரன், மீண்ட சொர்க்கம், மன்னாதி மன்னன், குமார சம்பவம், திருவருட் செல்வர், தில்லானா மோகனாம்பாள் ஆகியன அவர் சிறப்பாக நடனமாடிய திரைப்படங்கள், அவர் மேடையேற்றிய நாட்டிய நாடகங்களில் 'ராமாயணம்' 'மகத நாட்டு மேரி' என்பன புகழ் பெற்றன.

1953ல் ஏவிஎம் வெளியிட்ட 'பெண்' படத்தில் வைஜெயந்திமாலாவின் பரத நாட்டியங்கள் பிரமாதமாக அமைந்திருந்தன. தொடர்ந்து 'நாகின்', 'யஸ்மின்', 'தேவதா', 'ஏக் ஜலக்', 'அம்ரபாலி', 'துனியா' ஆகிய இந்திப் படங்களிலும் 'வஞ்சிக் கோட்டை வாலிபன்', 'தேன் நிலவு' (காலையும் நீயே) ஆகிய தமிழ்ப் படங்களிலும் அவரது பரதநாட்டிய பாணி நடனங்கள் பிரசித்தி பெற்றன. அவர் மேடையேற்றிய ''ஆண்டாள் திருப்பாவை'' ''சகுந்தலை'' ஆகிய நாட்டிய நாடகங்கள் பெரும் புகழ் பெற்றன.

பிற்காலத்தில் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் பரத நாட்டியத்தை மேடைகளில் பிரபலமாக்கியவர்களில் பத்மா சுப்பிரமணியம், சித்ரா விக்னேஸ்வரன் இருவருக்கும் பெரும் பங்கு உண்டு.



1980களில் இலங்கையில் ஆரம்பித்த இனக் கொடுமைகள் ஈழத் தமிழர்களை உலகெங்கும் சிதறியோடச் செய்தன. ஏகப்பட்ட கொடுமைகளுக்கும், கொடூரங்களுக்கும், இறப்புகளுக்கும், இழப்புகளுக்கும், கவலைகளுக்கும், கண்ணீருக்கும் ஈடுகொடுத்து அவற்றினூடே துளிர்விட்டு, கிளைவிட்டு, விருட்சமாக வளர்ந்து நிற்கும் புலம் பெயர் தமிழர் சமுதாயம் இன்று பேணி வளர்க்கும் பண்புகளில் பரதக் கலையும் ஒன்று. உலக ரீதியாகப் பரதக் கலையைப் பிரபலமாக்கி வருபவர்களில் இன்று முன்னணியில் இருப்பவர்கள் இவர்களே.

### பரதப் பண்பியல்

**பரத** நாட்டியத்தின் மூன்று முக்கிய அம்சங்கள் நிர்த்தம், நிருத்தியம், நாட்டியம் என்பனவாம்.

**நிர்த்தம்** என்பது உடலின் சீர்ப்பிரமாண அசைவுகள்(Rhythmic Movements) தாளத்திற்கேற்ப கொடுக்கப்படும் உடலின் அசைவுகளும், அந்த அசைவுகளுக்கு கொடுக்கப்படும் உயிரும் நிர்த்தம் ஆகும்.

**நிருத்தியம்** என்பது உடல் அசைவுகளால் வெளிப்படுத்தப்படும் அங்க நிலைகள், அசைவுகள், தோற்றங்கள், தோரணைகள், பாவங்கள், முகக்குறிகள் (Expressions) என்பன.



**நாட்டியம்** என்பது நிர்த்தமும், நிருத்தியமும் இணைந்த நாடக (Drama) நிலை.

உடலின் அனைத்து உறுப்புகளுக்கும் நாட்டியத்தில் உபயோகிக்கப்படும். இவைகள் அங்கங்கள், பிரதியங்கங்கள், உபாங்கங்களாகப் பிரிக்கப்படுகின்றன.

நாட்டியத்தின் மிக முக்கியமான உறுப்புக்கள் அங்கங்களாகும். இவை தலை, கழுத்து, கைகள், மார்பு, இடுப்பு, புட்டம், கால்கள் என்பன.

தோள்கள்,

புஜங்கள், முழங்கை,மணிக்கட்டு, வயிறு, தொடைகள், கணுக்கால்கள் என்பன பிரதியங்கங்கள்.

கண்கள், இமைகள், புருவங்கள், நெற்றி, கன்னங்கள், மூக்கு, உதடுகள், பற்கள், பல் ஈறுகள், நாக்கு, நாடி, முகம் இவற்றோடு விரல்கள், உள்ளங்கை, பாதங்கள் யாவும் உபாங்களாகும்.

**அடவுகள்**: பாதங்களால் எடுத்து வைக்கப்படும் அடிகள் அடவுகள் எனப்படும், நாட்டிய சாஸ்திரத்தில் 120 அடவுகள் கூறப்பட்ட போதிலும், 70-80 அடவுகளே வழக்கில் உள்ளன. தஞ்சை சிதம்பரம் கோயில் சிற்பங்கள் 108 அடவுகளைக் காட்டி நிற்கின்றன.

**ஹஸ்த முத்திரைகள்**: கை விரல்களினாலும், கைகளினாலும், உள்ளங்கையினாலும் பிடிக்கப்படும் அபிநயங்கள் ஹஸ்த முத்திரைகள் எனப்படும். ஒரு பாவத்தையோ, பொருளையோ காட்டி நிற்கும் ஒவ்வொரு முத்திரைக்கும் ஒவ்வோர் அர்த்தம் உண்டு.

**அபிநயங்கள்**: எடுத்துக் கொண்ட பொருளின் கவிதை நயங்களை வெளிக்கொண்டு வரும் பாவங்களே அபிநயங்கள் எனப்படும். இந்த அபிநயங்களில் உடலின் சீர்ப்பிரமாண அசைவுகுளைக் காட்டிலும் முக பாவங்களுக்கே அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது.

**அங்கபிநயம்** என்பது கவிதைப் பொருளையும், அர்த்தங்களையும், நயங்களையும் உடலின் அங்கங்களான தலை, கைகள், கால்கள் ஆகியவற்றின் அசைவுகளால் வெளிப்படுத்துவது.

**வச்சிகபிநயம்** என்பது ஒரு கதையை முழுமையான நாட்டிய ரூபத்தில் கூறுவது.

**ஆகார்யம்** என்பது உடுத்தியிருக்கும் உடைகள், தலையலங்காரம், அணிந்திருக்கும் அணிகலன்கள் என்பவற்றால் எடுத்துக்கொண்ட பொருளை விளக்குவது.

**சத்வீகம்** என்பது பல தரப்பட்ட உணர்ச்சிகளை முக பாவங்களால் வெளிக் கொணர்வது. இதில் ஒன்பது வகையான உணர்ச்சிகள் - நவரசங்கள் கூறப்படுகின்றன. இவற்றை முக பாவங்களினால் வெளிப்படுத்துவதே அபிநயத்தின் முக்கிய நோக்கமாகும்.



சிருங்காரம் - காதல்
ஹாஸ்யம் - களிப்பு, மகிழ்ச்சி
வீரம் - துணிவு, மனோதிடம்
ரௌத்திரம் - கோபம்
பயங்கரம் - பயமுறுத்தல், அச்சம்
பீபத்ஸம் - வெறுப்பு
ஆத்பூதம் - அதிசயம், ஆச்சரியம்
கருணை - இரக்கம்
சாந்தம் - அமைதி.

பல அடவுகள் இணைந்த அசைவுகளே ஜதியாகும். ஜதிகளின் இறுதிநிலை **தீர்மானம்** எனப்படும். அடவுகளின் நுணுக்கச் சிறப்பான அசைவுகளை 'அங்கச் சுத்தம்' என்பார்கள்.

பரதத்தைப் பயின்று ஆளும் திறமை பெறுவதற்கு நீண்ட பயிற்சியும், மனக்குவித்தலும், அர்ப்பணமும் தேவை.(Practice, Concentration and dedication)

### பரத நாட்டிய அரங்கேற்றம்

பரத நாட்டியம் பயின்ற ஆடற் கலைஞர் பொதுமக்கள் மத்தியில் முதற்தடவையாக ஆடும். நாட்டிய நிகழ்வே அரங்கேற்றம் எனப்படும்.



